# பாட்டும் இசையும்

வித்வான்

ல. சண்முகசுந்தரம்

**கலைஞன் பதிப்பகம்**
10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017

Rs. 70.00

PATTUM ISAIYUM

*by*

VITHVAN LA. SANMUGASUNDARAM

First Edition 1999

*Published by*

KALAIGNAAN PATHIPAGAM
10 Kannadasan Salai
T. Nagar Chennai - 600 017

*Typeset by*

Saguram Graphics
Chennai - 24

*Printed at*

Sakthi Printers
Chennai - 21

# முகவுரை

மெய்யுணர்வு பெற்ற ஞானிகள் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குமட்டும் உரியவர்கள் இல்லை.

பலநாடுகளில் அவர்கள் அவதரிக்கிறார்கள். புத்தர், ஏசுநாதர், நபிநாயகம், மார்க்க அரேலியஸ், ராமகிருஷ்ண பரமஹம்சர், புனிதலுக், சாக்ரட்டீஸ், இப்படி எத்தனை எத்தனையோ ஞானியர்; உலகின் பல பாகங்கள் இவர்களின் அவதாரஸ்தலங்களாக மிளிர்கின்றன.

ஆனால் இந்தியாவில் - அதிலும் தமிழகம் ஒன்றில் தான் ஞானியர்கள் - வெறும் ஞானியர்களாக மட்டும் இல்லாமல் கவிஞர்களாக - தெய்வமாக் கவிஞர்களாகவே இருந்தார்கள்.

திருமூலர், காரைக்காலம்மையார், ஞானசம்பந்தர், அப்பர்சுவாமிகள், சுந்தரர். மாணிக்கவாசகர், நம்மாள்வார், பொய்கையாள்வார். ஆண்டாள், பெரியாள்வார், தொண்டரடிப் பொடியாள்வார், நக்கீரதேவர், கருவூர்த்தேவர், தாயுமானவர், பட்டிணத்தார், அருணகிரிநாதர், வள்ளலார், இப்படி எத்த னையோ அருளாளர்கள். அவ்வளவு பேரும் கவிஞர்கள் - மகா கவிஞர்கள்.

துக்காராம், துளிசிதாசர், மீராபாய் போன்ற பக்தர்களும் கவி பாடி இருக்கிறார்களல்லவா என்று கேட்கத்தோன்றும்.

துக்காராம் போன்றவர்களின் பக்தியிலோ, உறுதிப் பாட்டிலோ மஞ்சாடி கூடக்குறைவு கிடையாது. மேலோங்கி நிற்பவைதாம் அவர் தம் பக்தியும் அர்ப்பணிப்பும். ஆனால் அவர்கள் பாடிய பாடல்கள் அப்பர், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்றோர் பாடல்களை ஒத்தவை என்று சொல்ல முடியுமா? முடியாது, முடியவே முடியாது.

அப்பர் சுவாமிகள் போன்ற தமிழக அருளாளர் பாடியவை கவிகள். துக்காராம் போன்ற அருளாளர்கள் பாடியவை வண்ணம், சரபம், சிந்து, கண்ணி, போன்ற சந்தக் குழிப்புகள். அதாவது வெறும் பஜனைப் பாடல்கள் - நாமாவளி போன்ற தோத்திரப்பாடல்கள் தாம் அவை.

இனி, தமிழகம் நீங்கலாக இந்தியாவின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த அடியார்களாவது கண்ணி, சிந்து போன்ற பஜனைப் பாடல்கள் மூலம் பக்தியை வெளிப்படுத்தினார்கள். ஆனால் சீனா, ரஷ்யா, பர்சியா, அரேபியா, ஐரோப்பா. இங் கெல்லாம் தோன்றிய பக்தர்களோ பஜனைப் பாடல்கள் கூடப் பாடவில்லை.

தங்கள் அனுபவங்களையும், ஆனந்தபரவச நிலைகளை யும் இறைவனுடைய கட்டளைகள் என்று வசனத்தில் தான் சொன்னார்கள்.

ஆனாலும் அவர்கள் உண்மையை உணர்ந்த தீர்க்கதரிசி கள். தொல்காப்பியர் வாக்கில் சொல்வதாக இருந்தால் அவர்கள் நிறைமொழி மாந்தர்கள். அதனால் அவர்களுடைய

கட்டளைகள் உரைநடையாக இருந்தாலும் கவிதையைப் போலக் கணீர் கணீர் என்று ஒலிக்கின்றன.

சீரோடும் தாளச் சிறப்போடும் ஒவ்வொரு சொல்லும் மனம் திறந்து பேசுகின்றன.

"ஏசு நாதருடைய மலைமேல் பிரசங்கத்தை அதாவது பத்துக் கட்டளைகளை (புனிதலுக்கின் மொழி பெயர்ப்பில்) படிக்கிறபொழுது எனக்கு அவை கவிதையாகவே இருக் கின்றன. அவற்றைவிட உயர்ந்த கவிகளை நான் படித்த தில்லை" என்று ஜார்ஜ் பெர்னாட்ஷாவே சொல்கிறார்.

ஆனாலும் அவை உரைநடைதான் கவிதை இல்லை. அப்படியானால் தமிழகத்தைச் சேர்ந்த அருளாளர்கள் மட்டும் கவிஞர்களாக - கவிச்சக்கரவர்த்திகளாக கவிதா தேவி எழுந்தருளும் திருக்கோவில்களாகக் காட்சி தருகிறார்களே அதற்கு என்ன காரணம் என்று கேட்கத் தோன்றும்.

அதற்குரிய முழு முதல்காரணம் தமிழ்தான் அருளாளர் கள் (கவிஞர்கள்) துணைக்காரணந்தான். உண்மை அனுபவ மானது பக்தியாய் விளைவதற்கும் விளைந்து பூத்துச் சொரி வதற்குமே அடியார்கள் கருவியாக இருக்கிறார்கள். பக்தியைக் கவிகளாகப் பூத்துச் சொரிய வைப்பதோ தமிழ்தான்.

தமிழ்மொழியின் ஒவ்வொரு அணுவும் இசைமயமாக இருக்கின்றன. ஒவ்வொரு சொல்லும் இசையில் பூத்த நறு மலர்களாக உள்ளன. அதனால் சொல்லானது ஒன்றோ டொன்று தொடர்ந்து நடக்கும் பொழுதே அந்த இசையோடு தாளம், நடனம் எல்லாம் சேர்ந்து பேசுகின்றன.

தமிழே இசைமயமாகவும் நடனமயமாகவும் இருக்கிறது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை தமிழின் இயல் முழுவதும் இசை மயந்தான். நடன மயந்தான்.

அதனால் தான் தமிழை முத்தமிழ் என்று சொல்லி வந்துள்ளார்கள். உலகில் வேறு எந்த ஒரு மொழிக்கும் இது போன்ற அடை இருப்பதாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்தையோ, வடமொழியையோ, சீனம், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற எந்த மொழியையும் மூன்று என்னும் அடை மொழியோடு அன்றும் குறிப்பிட்டதில்லை. இன்றும் குறிப்பிடு வாரில்லை. பொருளோடு கூடிய அந்த அடைமொழி தமிழ் ஒன்றுக்குத்தான். வேறு எந்த மொழிக்கும் என்றும் பொருந்தி நிற்காது.

ஒருவர் - அவர் யாராக இருந்தாலும் சரி, உண்மையை நேருக்கு நேர் நின்று தரிசித்துவிட்டால் போதும். அதன் அழகில் ஈடுபட்டு மயங்கி நின்றால் போதும். உணர்ச்சியோடு ஒட்டி அனுபவித்தால் போதும்.

அவரை நாடித் தமிழானது ஓடிவரும். இசைப் பண்பை யும், தாளப்பண்பையும், இருகைகளிலும் ஏந்திய படியே தமிழானது அவரை நோக்கி ஓடிவரும்.

"என்னை உங்கள் வயமாக்குக. நான் உங்களுடைய உணர்ச்சியோடு உணர்ச்சியாகக் கலந்து கரைந்து மருவ அருள் பாலிப்பீராக" என்று அவரிடம் தமிழானது வரம் கேட்கும்.

வரமும் கிடைத்துவிடும். கிடைத்தவுடன் எதுகை என்றும், மோனை என்றும் அடி என்றும், சீரென்றும் துள்ளிக் குதிக்கும் தமிழ் குதித்துத் தாண்டவமே ஆடும் தமிழ்.

உணர்ச்சியோடும், அனுபவத்தோடும் சேர்ந்து கரைந்து அழகிய செய்யுளாகவே உருவெடுத்துவிடும் தமிழ்.

அதனால் தமிழுக்குக் கவி என்கிற புதுப் பிறவி கிடைத்து விடுகிறது. அப்படியே உணர்ச்சி மயமான உண்மையும் கவி என்கிற புதுப் பிறவி எடுத்துவிடுகிறது.

உண்மைதான் உணர்ச்சி, உணர்ச்சி தான் உண்மை.

எதுபற்றி வேண்டுமானாலும் இருக்கலாம் உண்மை.

தூயகாதல் பற்றியும் இருக்கலாம், கயமை பற்றியும் இருக்கலாம் கடவுளைப் பற்றியும் இருக்கலாம் போர்வீரன் பற்றியும் இருக்கலாம். பயந்தாங்கொள்ளி பற்றியும் இருக்கலாம்.

எதுபற்றி இருந்தாலும் சரி. உண்மையாக இருக்க வேண்டும். உணர்ச்சி மயமாக இருக்கவேண்டும்.

உணர்ச்சி மயமானவர்கள் தமிழர்கள். வாழ்க்கையை வெறும் பிழைப்புக்காக மட்டும் ஓட்டிக் கொண்டு போகிற வர்கள் அல்லர் தமிழர்கள்.

ஒவ்வொரு அம்சத்தையும் பொறுமையோடும், நன்றி யுணர்வோடும், விட்டுக்கொடுத்து இணைந்து செல்லும் அன்போடும் பண்போடும் வாழ்க்கையை அனுபவிக்கும் ஆனந்த உணர்ச்சி மிக்கவர்கள் தமிழர்கள். கரடுமுரடாக இருந்த வெறும் மண்ணை பொன்விளையும் விளை நிலமாக முதல் முதல் மாற்றியது தமிழர்கள் தாம்.

உண்ணும் உணவையும் உடுக்கும் உடையையும் செயல் (தொழில்) மூலம் உண்டாக்கியவர்கள் உலகிலேயே தமிழர்கள் தாம் முன்னோடிகள்.

தமிழகம் அப்படி ஒன்றும் வற்றாது நீர் கொழிக்கும் வள நாடு இல்லை. ஆனாலும் கடின உழைப்பாலும் நீரை வீணாக்காமல் பக்குவமாகப் பயன்படுத்திய திறத்தாலும், நீரை அங்கங்கே சேமித்து வைத்த சதுரப் பாட்டாலும் பயிர் பச்சைகளால் மண்ணைப் பொன்னாக்கிவிட்டார்கள் தமிழர்கள்.

பொன்னினும் மேலான பெண்ணாக - தெய்வப் பெண்ணா கவே கட்டாந்தரையான மண்ணை உருவாக்கி விட்டார்கள் தமிழர்கள்.

உலகத்தின் முதல் உழவன் தமிழன் தான். உலகத்தின் முதல் நிலம் விளை நிலம் தமிழகத்தில் தான்.

நெல், கரும்பு, வாழை, காய், கனி, பருப்பு, எண்ணெய், தவசம், வெற்றிலை, கீரை, மலர்(கள்) இப்படி ஆயிரம் ஆயிரம் ரத்தினங்களை உண்டாக்கிக் குவித்து விட்டான் தமிழன்.

பருத்தியையும் உற்பத்தி செய்துவிட்டான்.

ஏர், கொழு, கலப்பை, மண்வெட்டி, வண்டி, களைக் கொட்டு, வாளி, கயிறு என்றெல்லாம் கருவிகளை உண்டாக் கினான்.

மாடுகளை உறவாக்கி உபயோகப் படுத்தினான் மாடுகளின் சாணம், கோமயம் இவற்றைச் சேமித்துக் குப்பை என்று ஒன்றை உண்டாக்கினான்.

குப்பையை நிலத்துக்கு ஆகாரமாகக் கொடுத்தான். மாடுகளிடமிருந்து பாலைக்கறந்தான், தயிர், மோர், நெய்விளை வித்தான்.

ஆடுகளையும் ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டான். பருத்தியை நூலாக்கினான். வித விதமான ஆடைகளையே நூலிலிருந்து உண்டாக்கி விட்டான் தமிழன்.

உழவு (என்கிறவிவசாயம்) அதோடு நின்று விடவில்லை. அது நிலம் திருத்தல், உழல், விதைத்தல், நீர்பாய்ச்சல், எருவிடல், வேலிகட்டிப் பாதுகாத்தல், அறுவடை செய்தல். உணவாக உருவாக்கல், நூற்றல், நெய்தல் என்று ஒரு மாபெரும்

தொழிலாகவே உருவெடுத்துவிட்டது. அதுமட்டுமா, கொடுக்கல், வாங்கல் என்கிற வணிக நிலைக்கும் அதுவே மூலதனம் ஆகிவிட்டது.

இப்படியாக சமுதாயம் முழுவதையும் எப்பொழுதும் சுறுசுறுப்போடு இயக்கி வைத்த படி உழவு என்பது அமைந்தது.

தொடர்ந்து வேலை இருப்பது காரணமாகச் சேர்ந்து வாழும் நிலை தமிழர்களிடம் ஏற்பட்டது.

தாய், தந்தை, மகன். மருமகள், மனைவி, மகள், மருமகன், பேரன்மார், பேத்திமார் எல்லோரும் சேர்ந்து குடும்பம் நடத்துகிற நிலை ஏற்பட்டுவிட்டது.

குடும்பம் என்று ஏற்பட்ட உடனேயே ஒற்றுமை உணர்வு, ஒருமை உணர்ச்சி முளைவிட்டது. உறவில் நெருக்கம் ஏற்பட்டது. இறுக்கம் உண்டானது. அதனால் அன்பு என்பது தியாக சொரூபமாகவே ஒளிவீசியது.

என்ன தான் இறுக்கமாக இருந்தாலும், நெருக்கமாக உறவாடினாலும் பிரச்சனைகள் வரத்தான் செய்யும். ஆனாலும் குடும்பத்தைச் சிதைக்க முடியவில்லை பிரச்சனைகளால்.

பிரச்சனைகளால் குடும்பம் என்பது சிதறிவிடாத படி நிலைத்து நிற்பதற்காகவே இதயத்தில் பொறுமை என்பது ஊறியது. அடக்கம், பணிவு , எளிமை, இனிமை, முதலிய பண்புகளைப் பூத்துச் சொரிந்தது பொறுமை.

குடும்பம், குடும்ப ஒற்றுமை என்பது தான் உணர்ச்சிகளுக்கு ஊற்றுக்கண், மனிதன் (தமிழன்) தேடிக் கண்டுபிடித்த ஒளி ஊற்று ஒன்று உண்டென்றால் அது குடும்பப் பண்புதான்.

உணர்ச்சிகளுக்கு மட்டுமல்ல, கல்வி , கேள்வி, ஞானம் (நல்ல) பழக்க வழக்கம் எல்லாவற்றுக்கும் தாயகம் குடும்பந்தான்.

பயிரியல்(தாவரம்) உர இயல் (ரசாயனம்) பருவ இயல் (பௌதீகம்) மாடுகன்று (விலங்கு) இயல், வணிக இயல், தொழில் இயல், கணக்கியல், தேக இயல்(மருத்துவம்) மருந்தியல், உணவியல் ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலும் சராசரி மனிதனுக்கு எவ்வளவு எவ்வளவு அறிவு தேவையோ அவ்வளவையும் சொல்லிக் கொடுத்து விடுகிறது குடும்பம்.

புத்தகம், பாடத்திட்டம், ஆசிரியர், பாடம் நடத்தல் என்கிற முறையில் இல்லை. பெரியவர்களின் அனுபவத்தையும் பழக்க வழக்கங்களையும் வைத்தே குழந்தைகள் படித்துக் கொள்கிறார்கள்.

அதுமட்டுமா, இசை, நாடகம், கவி, ஓவியம், முதலிய நுண்கலைகளையும் குடும்பம் சொல்லிக் கொடுத்துவிடுகிறது ஒவ்வொருவருக்கும்.

குடும்ப ஒற்றுமையே தெரு ஒற்றுமைக்கும், ஊர் ஒற்றுமைக்கும், சமுதாய ஒற்றுமைக்கும் நாட்டு ஒற்றுமைக்கும் ஆதாரமாக விளங்குகிறது.

அசைக்க முடியாத கோட்டை என்றால் அது குடும்பந் தான். அந்தக்குடும்ப நலனிலிருந்து தான் நன்றி உணர்வு என்னும் தெய்வாம்சம் நிறைந்த பண்பு பிறந்து வளர்ந்தது.

தன்னைப் போலவே மற்றவர்களை மதிக்க வைத்தது நன்றி உணர்வுதான்.

மனிதர்களை மதிக்க வைத்தது என்றால் மனிதர்களின் செயல்களை - மனித வாழ்க்கையையே மதிக்கச் செய்தது நன்றி உணர்வு.

இல்லை என்றால் ஏர், கலைப்பை, கொழு தராசு இவை களை எல்லாம் தாய் தந்தையரை மதிப்பது போல் ஒவ்வொரு தமிழனும் இன்றும் மதிக்கிறானே அது ஏன்?

பசுவை, தாய் என்று போற்றுகிறான். காளையைத் தந்தை என்று (நந்தி என்றே) வணங்குகிறான். தேங்காய், பழம், புஷ்பம், சந்தனம், குங்குமம் இவைகளை எப்படிப் புனிதப் பொருள் களாகப் போற்றுகிறான் தமிழன்?

(குத்து) விளக்கை வெளிச்சம் கொடுக்கிற வெறும் வெண் கலக்கட்டி என்றா நினைக்கிறான்! தெய்வத்தை மதிப்பது போலல்லவா மதிக்கிறான் விளக்கை.

அதுமட்டுமா? கட்டாந்தரையான மண்ணை நிலமகள் என்றான் தமிழன். நீரையோ நீரரமகள் (அலைமகள்) என்றான், உழைப்புக்கு உயிராகிய ஆற்றலை, சக்தி என்றான், வானத்தை வான்மகள் என்றான், செல்வத்தைத் திருமகள் என்றான், அறிவை நாமகள் என்றும், கலைமகள் என்றும் போற்றினான்.

ஞாயிறு, திங்கள் முதலிய கோள்களை ஆண்பாலில் பகலோன், நிலவோன், பொன்னன்(புதன்) நீலன்(சனி) செவ்வாய், வியாழன் என்றெல்லாம் புகழ்ந்தான்.

கடவுளையே தன்னொத்த மனிதனாகவே பார்த்தான். மூக்கும், விழியும், கையும், காலும் உடைய உடலோடு நடமாடும் மனிதனாகவே பார்த்தான் கடவுளைத் தமிழன்.

தன்னைப் போலவே மனைவி, மக்கள், உற்றார், உறவின ரோடு வாழ்க்கை நடத்துகிறார் கடவுள் என்றும் பாவித்தான்.

பாவனையை அழகிய ஓவியங்களாக வடித்து வழி பட்டான். கல்யாணம், நலுங்கு, ஊஞ்சல், பள்ளியறை, ஊடல், கூடல், தூது, திருப்பள்ளி எழுச்சி என்றெல்லாம் தெய்வத்துக்கு விழாக்கள் எடுத்து வழிபட்டான் தமிழன்.

கோவில், கோபுரம், திருவிழா, தேர், முதலிய சடங்குகளை எல்லாம் வாழ்க்கையோடு வாழ்க்கையாகப் பரிமளிக்கச் செய்தான் தமிழன்.

இனி, மேலே குறிப்பிட்ட மரியாதை, பக்தி ஆகிய பணிவு டைமைக்கு மூலம் நன்றியுணர்வுதான். நன்றியுணர்வுக்குப் பிறப்பிடம் குடும்பமும், குடும்ப ஒற்றுமையுமே.

பொறையுடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, முதலிய பண்புகள் எல்லாம் கசிந்து கசிந்து பெருகுவதற்குக் குடும்பமே நிலைக்களன்.

சமுதாய உணர்ச்சி என்பது குடும்ப நலனிலிருந்து பிறந்து வளர்ந்து நி.லைத்து நிற்கிறது.

சமுதாய உணர்ச்சியானது ஆனந்த பரவசமாகப் பொங்கிப் பெருகுகிறது. அந்த உணர்ச்சியே இசையாக வடி வெடுக்கிறது.

சொற்களைக் குழைத்தும் பிசைந்தும் கனியவைக்கிறது இசை. அசை(முகவெட்டு) என்றும், சீர் (தாளம்) என்றும், அடி (நடை) என்றும், தொடை(அலங்கார ஒப்பனை) என்றும், மொழியை (தமிழை)யே நடனமயமாக்கிவிடுகிறது இசை.

சமுதாய உணர்ச்சியிலிருந்து பிறந்தது இசை. அது கவியை நோக்கி ஓடிவருகிறது. கவியாக உருவெடுக்கிறது.

கவியிலுள்ள நயங்களை - கவிஞர்களின் ஆனந்த அனுபவங்களை அப்படியே வாய் வைத்து உறிஞ்சி மாந்து கிறது இசை.

தாயின் மார்பில் வாய் வைத்துக் குழந்தையானது அமிர்தத்தை மாந்துவது போலவே கவியிலுள்ள ரசவர்ணங்களை - ஒளிகளை மாந்துகிறது இசை.

மாந்தி மாந்தி வனப்பும், பொலிவும் மிக்க புதுப்புதுச் சாயல்களை உண்டாக்கி வைத்துக் கொள்கிறது இசை.

ஆனந்தக் களிப்பில் தோகையை விரித்து ஆடும் மயில். அதுபோலவே கவியில் திளைத்து அதன் போக்குகளைப் பிடித்துக் காட்டுகிறபொழுது வனப்புமிக்க தன் சாயல்களை வெளிப்படுத்துகிறது இசை.

தெய்வகானம் என்றுபோற்றப்படுகிற அற்புத இசை தமிழகம் ஒன்றில் தான்.

அதற்கு மூலகாரணம் குடும்பம், அதில் விளைந்த உணர்ச்சிப் பெருக்குகள், பண்புநலன்கள் ஆகியவை தாம்.

தமிழ் மக்களின் சடங்குகள். திருவிழாக்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், நகை நட்டுகள், ஆடைவகைகள், உணவு முறைகள், பழக்கவழக்கங்கள், உபசரிப்புகள் ஆகியவற்றைப் பார்த்தாலே போதும்.

அழகுணர்ச்சியும், ஆனந்த பரவச நிலையும் தமிழர் களோடு பிறந்த உடன் பிறப்புகள் என்பது விளங்கும்.

இத்தனை பண்பாட்டோடும் அருங்குணங்களோடும் உருண்டு புரண்டு வந்தது தமிழிசை.

இசையும் பாட்டும் பெண்ணும் ஆணும் மாதிரி. கணவனும் மனைவியும் போல, சக்தியும் சிவனும் போல ஒன்றுபட்டு நிற்பன.

தமிழிசை தமிழ்ப்பாட்டையே நோக்கி நிற்கும். தமிழ்ப் பாடல்கள் தமிழிசையையே நோக்கியே நிற்கும்.

இரண்டும் ஒன்று சேர்ந்து அருளாளர்களை கவிஞர்களை நோக்கி நிற்கின்றன.

அதனால், தமிழகத்து அருளாளர்கள் எல்லோரும் கவிஞர்களாக விளங்கினார்கள். இசையும் கூத்தும் கை கோர்த்துத்தாண்டவமாடும் கவிச் சக்கரவர்த்திகளாகவே அருளாளர்கள் இருந்தார்கள்.

அப்பர், ஞானசம்பந்தர் முதலிய அருளாளர்களின் ஒரு சில கவியையும் சேக்கிழார் பாடிய சில பாடல் களையும் எடுத்துக் காட்டுகிறது பாட்டும் இசையும் என்னும் இந்நூல்.

சந்திரனை நோக்கி வானம், கன்றை நோக்கிப் பசு, பக்தனை நோக்கி இறைவன். குழந்தையை நோக்கித்தாய் என்பதுபோல பாடலை நோக்கி நிற்கிறது இசை.

ஆதி இசை தமிழிசை. பல பல நூற்றாண்டுகளாகப் பழுத்துக் கனிந்து தேன் சொட்டுகிறது தமிழிசையில்.

பாட்டென்றால் பாடுவதற்கு வாய்ப்பாக இருக்க வேண்டும். பாடுவதற்கு ஒத்துவர மாட்டேன் என்று சண்டித் தனம் பண்ணினால் அதுபாட்டன்று. அதைப் பாடல் என்று சொல்வது பாவம் (குற்றம்). அதாவது இழுக்கு.

அழுக்குமயமான அந்த இழுக்குப் பாடலைவிட உரை நடை எவ்வளவோ உயர்ந்தது என்கிறார் ஔவைப் பிராட்டியார்.

“இழுக்குடைய பாட்டிற்கு
இயல்நன்று.....”

என்பது அவருடைய தீர்ப்பாணை (இயல் - உரைநடை)

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் "பண் என்னாம் பாடற்கு இயல்பின்றேல்"என்று அடித்துச் சொல்லத் தானே செய்கிறார்.

இங்கே பண் என்றது பண் சுமந்த (பண்மயமான) பாடலை,

பாடல் என்றால் அது பாடுவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். தாளம், நடனம், நடை, எல்லாம் சேர்ந்து இசை மயமாக மேளம் கொலுக்கட்டி வரவேண்டும் பாடலில்.

பாடுவதற்கு ஏற்றபடி இல்லாமல் விஷயத்தை மட்டும் எதுகை மோனையில் கோத்து வாங்கி இருந்தால் அது தண்டத் தீவட்டிதான் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இனி தமிழ் மக்களின் வாழ்க்கையோடு - குடும்ப வாழ்க்கையோடு சேர்ந்து பிறந்தது தமிழ்மொழி. அந்தத் தமிழோடு தமிழாக ஒட்டிப் பிறந்தது தமிழிசை.

அப்படியானால் தமிழிசைக்கு வயது அதிகம். ஆயிரம், பல ஆயிரம் என்று ஆண்டு பல கடந்த மூதாட்டி தான் தமிழிசை. ஆனால் இன்றும் இளமை நலம் குன்றாத பருவ மங்கையாகவே இருக்கிறாள் தமிழிசை அரசி.

தமிழிசை தோன்றிப் பல ஆயிரம் ஆண்டுகளில் உலகில் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. மாற்றங் களும், வளர்ச்சிகளும் சமூகத்தில் ஏற்பட்டுள்ளன.

அந்த மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் தமிழிசையும் உட்பட்டே வந்திருக்கிறது.

அதனால் தமிழிசையின் உருவம் பல இடங்களில் அடையாளம் காணமுடியாதபடி இருக்கும். தோற்றத்தில்

மாறியே இருக்கும். ஆனாலும் உள்ளுக்குள் இருந்து முகம் காட்டுவது தமிழிசை தான்.

இது சம்பந்தமாக ஒரு எடுத்துக் காட்டு. இமயமலை யிலிருந்து பொதியை மலையை நோக்கி வருகிறார் அகத்தியர். வழியில் விந்தியமலை, வழிவிடமாட்டேன் என்று அகத்தி யரிடம் சண்டித்தனம் பண்ணியது.

அகத்தியருக்குக் கோபம் வந்தது. அப்படியே விந்திய மலையின் கழுத்தில் கையைப் போட்டார். ஒரு அழுத்து அழுத்தினார். அழுத்தின அழுத்தில் அதல பாதலத்துக்கே (நாகலோகத்துக்கே) இறங்கிவிட்டது விந்தம் எனும் நாகம்.

மலையின் கொட்டத்தையே அடக்கிய கம்பீரத்தில் அகத்தியர் எப்படி ஒய்யாரமாக நின்றார்? வலுவும் வனப்பும் மிக்க யானை (நாகம்) எனவே நின்றார்.

இந்த எக்களிப்பை உல்லாசமான சந்தத்தில் வைத்துக் காட்டுகிறார் கம்பர் எப்படி

**“நாகம் அது**
**நாகம் உற**
**நாகம் என**
**நின் றான்”**

என்று தான தன - தான தன - தான தன - தன்ன என்னும் சந்தத்தில் வைத்தே காட்டுகிறார்.

இதே சந்தம் - இதே கட்டளை - இதே இசைப்போக்கில்

**ஏறு மயில்**
**ஏறி விளை**
**யாடு முகம்**
**ஒன் றே**

என முன்னூறு ஆண்டுகள் கழித்து அருணகிரியாரின் பாடலிலும் எழுந்தருள்கிறது. அதுமட்டுமா,

தற்காலத்துத் திரைப்படப் பாடலிலும்

**“மாங்குயிலே - பூங்குயிலே**
**சேதி ஒண்ணு - கேளு”** என உருமாறி வருகிறதையும் நாம் பார்க்கிறோம். கம்பர் காலத்திருந்து இன்றைய கலிகாலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகம். இந்த ஆயிரம் ஆண்டுகளில் பாடல் உருவங்கள் மாறி இருந்தாலும் (தமிழின்) இசைப் பண்பு மாயவில்லை. அதன் அடிப்படை நிலை நிலைத்து நிற்கவே செய்கிறது.

இனி கம்பர் கையாண்ட இசைநிலை அவருக்குப் பல நூறு ஈண்டுகளுக்கு முன்பே தேவாரத்தில் பயின்று வந்தது தான்.

**அடியார் சிலம்பொலிகள்**
**ஆர்ப்பக்கண் டேன்**

என்னும் தேவாரப் பாடலைப் பண்ணோடும் கட்டளையோடும் பாடிப்பார்த்தால் கம்பர் கையாண்ட இசை மரபின் மூலம் தேவார இசைமுறை என்று தெரியும்.

மேலும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் தேவார காலத்துக்கு முன்பே இந்த பண் - ஆதார சுருதி பயின்று வந்திருப்பது தெரியும். உதாரணமாக, பிரிவு நிலையில் தவிக்கும் பெண்

**பகைபோன் றது துறை,**
**பரிவா யின குறி,**
**தகைஇழந் தது தோள்**

தலைசிறந் தது துயர்
புகைபரந் தது மெய்
பொறைஆ யிற்றே உயிர்''

என்று மறுகும் பழம் பாடல் பகுதியில் அந்தப் ப ழம் பண்ணின் ஆசு பேசவே செய்கிறது.

ஆகவே நமது தமிழிசை நம்மை விட்டு எங்கேயோ ஓடிப்போய் விட்டதே என்று பயப்படத்தேவை இல்லை. மஞ்சாடி கூடப்பழுதுபடாமல் தமிழிசை ஆரோக்கியமாகவே இருக்கிறது.

சங்ககாலத்துக்கு முந்தியகாலப் பாடல்களிலிருந்து இன்றையத் திரைப் படப் பாடல்கள் வரை அதன் (தமிழிசை யின்) ஆதிக்கந்தான். அவ்வளவிலும் கொலு வீற்றிருக்கிறது பண்ணும் திறமும்.

இப்படி அடிப்படை நிலை மாறாத - அழியாத்தன்மை தான் தமிழிசையின் ஆதார நிலையாகிய பண்(நிலை) நீர்மை.

பண்பு என்பதுக்கு மூலமந்திரமே பண் என்பது தானே! இனிக்கடைசியாக ஒரு வார்த்தை; அருளாளர்களின் பாடல் களைப் பாடிப் பாடித்தான் அனுபவிக்கவேண்டும். பாடப் பாடத்தான் பாடல்களிலிருந்து அமிர்தம் சுரக்கும். அது நம் மனப்புண்ணை ஆற்றிவிடும். தூய்மை பெறும் இதயம். அதன் எல்லைக்குள் தொல்லைகள் வாரா.

**வித்வான் ல. சண்முகசுந்தரம்**

# பதிப்புரை

உண்மையை தரிசித்த நெகிழ்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் முகிழ்த்த பாடல்கள் - நாயன்மார்கள், ஆழ்வார்கள் - அருளாளர்கள் அருளிச் செய்தவை.

வித்துவான் ல. சண்முகசுந்தரம். தென்காசிவாசி. ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுடன் நிழல்போல இருந்தவர். ரசிகமணியின் அருங்குணங்களை தன்மயமாகக் கொண்டவர்.

இவர் பாடல்களை ரசனையுடன் எடுத்துரைக்கும் போது பரவசம் பெருகும். ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைச் சுட்டிக் காட்டும்போது ஒளி உமிழ்வதைக் காணலாம்.

"பாட்டும் இசையும்" வாழ்க்கையை நேசிக்கவும், இசைபட வாழவும், இறை உணர்வால் ஊறித் திளைக்கவும், மனத்தை அன்புமயமாக, அன்றலர்ந்த பூபோல மென்மை யாக்கி கமழச் செய்கிறது.

**எம். நந்தன்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அப்பர் சுவாமிகள் | 21 |
| ஆளுடைய பிள்ளையார் திருஞான சம்பந்தர் | 46 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 80 |
| மாணிக்க வாசகரின் மாணிக்கப் பாடல்கள் | 103 |
| காரைக்காலம்மையார் | 111 |
| நக்கீர தேவ(நாயனா)ர் | 134 |
| சேரமான் பெருமாள் நாயனார் | 153 |
| திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் | 169 |
| திருமூலர் | 182 |
| பெரியாழ்வார் குழந்தையும் தெய்வமும் | 204 |
| ஆண்டாள் காதலில் கனியும் பக்தி | 223 |
| மதுரகவி ஆள்வார் கண்ணினுண் சிறுத்தாம்பு | 237 |
| பெரியபுராணம் போதிக்கும் சமத்துவம் | 245 |
| பெரியபுராணமும் கவிப்பண்பும் | 259 |
| பட்டிணத்தார் | 275 |

# பாட்டும் இசையும்

## I அப்பர் சுவாமிகள்

### 1

புத்த பகவான், இராமபிரான் போல அப்பர் சுவாமிகளும் ஓர் அவதார புருஷர்தான். அபூர்வமாகத்தான் இவர்கள் தோன்றுவார்கள். அது காரணமாக இவர்களுக்குத் தோன்றல் என்று பெயர்.

காலப் போக்கில் வழித் தோன்றல் - அதாவது மக்கள் (செல்வம்) என்னும் பொருளில் வந்து விட்டது தோன்றல் என்னும் பெயர்.

அப்பர் சுவாமிகள் அவதார புருஷர் என்றால் அவரை ராமபிரானைப் போல, புத்த பகவானைப் போலப் பாராட்ட வில்லையே ஏன் என்று கேட்கத் தோன்றும்.

பாராட்டிப் போற்றாமல் விட்டதற்குக் காரணம் 'தமிழகம் தான்.'

இப்படிச் சொல்வதால் தமிழகத்தை நாம் குறைத்து மதித்திடுவதாக எண்ணிவிட வேண்டாம்.

உலகில் பல நாடுகள் இருக்கின்றன. நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் இருக்கின்றன. அளவில் பெரிய பெரிய

நாடுகளாகவும், சிறிய மிகச் சிறிய நாடுகளாகவும் இருக்கின்றன.

இவற்றில் பல நாடுகளில் அருளாளர்களின் அவதாரம் என்பதே இல்லை. உலகம் தோன்றியது முதல் இதுவரை இல்லை. சில நாடுகளில்தான் அவதார புருஷர்கள் தோன்றி இருக்கிறார்கள்.

அவதார புருஷர்கள் தோன்றிய ஒரு சில நாடுகளில்கூட ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அவர்கள் தோன்றினார்கள்.

தமிழ்நாட்டில் மட்டும் ஒவ்வொரு கால கட்டத்திலும் அருளாளர்கள், உத்தமர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் இவர்கள் ஒரே நேரத்தில் பரவலாய் அவதரித்து அவதரித்து வாழ்ந்தார்கள்.

அப்பர் சுவாமிகள் காலத்தில் அப்பர் சுவாமிகள் மட்டுமல்ல. திருஞான சம்பந்தர், திருநீலநக்க நாயனார், கலிப்பகை நாயனார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், அப்பூதியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர் இப்படி எத்தனையோ அவதார புருஷர்கள் இருந்தார்கள்.

அத்தி பூத்தது போல் ஒருவர் மட்டுமே மகானாக ஒரு காலக்கட்டத்தில் இருந்தால் தெய்வமாக்கி வாழ்த்திப் போற்றலாம். ஒரே காலத்தில் ஒரே நாட்டில் பலர் அப்படி இருந்தால் யாரை வழிபட்டுப் போற்றுவது?

யாரை விடுவது? அப்பர், ஞானசம்பந்தர் ஆகியவர்களை மக்கள் மதித்தார்கள். உபசரித்தார்கள் அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றினார்கள். ஆனால் அவர்களையே தெய்வமாக்கி அதைப் பின்பற்றுவது என்று ஒரு மதத்தை உண்டாக்கவில்லை.

அப்பர் சுவாமிகள் தமிழகம் எங்கும் ஊர் ஊராகச் சென்றார். கோயில்தோறும் சென்றார்.

அவர் கூடவே அவருக்கு முன்னும் பின்னுமாக நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டுவந்தார்கள். அப்பர் சுவாமிகள் பாடிய பாடல்களை உரத்த குரலில் பாடிக் கொண்டே வழிபாடு செய்தார்கள். இடிந்து சிதைந்து போன ஆலயங்களை அவர் சொன்னபடி திருத்திச் செப்பனிட் டார்கள்.

ஆயிரக் கணக்கில் கோயில்களைக் கொண்டது தமிழகம்.

சமண பௌத்த மத வெறியர்களால் அத்தனை கோயில் களும் இருள் மூடிக் கிடந்தன.

நடப்பதற்கு ஒற்றையடிப் பாதைகூட இல்லாமல் புல்லும் புதரும் செடியும் கொடியுமாய் மண்டிக் கிடந்தன கோயில்கள்.

அத்தனை கோயில்களையும் துப்புரவு பண்ணினார் அப்பர் சுவாமிகள். காடுகளை அழித்தார். விசாலமான நடை பாதைகளை உண்டாக்கினார். நந்தவனங்களை வளர்த்தார். பசுமடங்களை கட்டினார். கல்வி நிலையங்களையும், மருத்துவ நிலையங்களையும் உண்டாக்கினார். அன்னக்கொடி நாட்டி அன்னதானம் நடத்தினார். தேர், திருவிழா, பூஜை, வழிபாடு, ஆடல், பாடல் எல்லாவற்றையும் எல்லாக் கோயில்களிலும் கொண்டு வந்து ஏற்படுத்திவிட்டார் அப்பர் சுவாமிகள்.

புரட்சி என்றால் அப்பர் சுவாமிகள் செய்த காரியந்தான் புரட்சி. சத்திய நெறி தவறாத தரும நெறி வழுவாத அற்புதப் புரட்சி அப்பர் சுவாமிகள் செய்த புரட்சி.

இனி, அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அதுவே ஒரு புரட்சிதான். சத்தியாகிரகப் புரட்சி தான்.

திருமுனைப்பாடி என்னும் நாட்டில், திருவாமூரில் பிறந்த வர், திருநாவுக்கரசர் என்னும் அப்பர் சுவாமிகள்.

அப்பருக்குப் பெற்றோரிட்ட பெயர் மருள்நீக்கியார். ஞானப் பிரகாசம் அல்லது ஞானஒளி என்பது இதன் கருத்து.

அப்பர் சுவாமிகளுக்கு ஒரு தமக்கையார். திலகவதியார் என்பது அவர் பெயர்.

மருள் நீக்கியாரைவிட ஏழெட்டு வயது மூத்தவராக இருக்க வேண்டும் திலகவதியார்.

மருள் நீக்கியார் பிறந்த ஒரு சில வருடங்களில் தாயும் தந்தையும் இறந்து போயினர். இளமையிலேயே தந்தையையும் தாயையும் இழந்து விட்டால் வாழ்க்கை ஏது? எதிர்காலம் ஏது? எல்லாம் சின்னாபின்னமாகச் சிதறிவிடும்.

பட்டகாலிலே படும் என்பது போல தமக்கையாருக்கு நேர்ந்த துயரம்.

கலிப்பகையர் என்னும் சிவநேசச் செல்வருக்கு திலகவதி யாரை திருமணம் செய்து வைக்க உறுதி பண்ணி இருந்தது.

திருமணம் நடப்பதற்கு முன்பே கலிப்பகையார் போரில் இறந்து விட்டார்.

தாங்க முடியுமா மனவேதனையை!

அனலில் பட்ட புழுப்போலத் துடித்து விட்டனர் திலகவதி யாரும் மருள் நீக்கியாரும்.

திருமுனைப்பாடி ஊரே - அந்த வட்டாரமே - இந்தக் கொடுமையைக் கேட்டு வேதனை தாங்காமல் அலறியது.

அடக்கமும் எளிமையும் நிறைந்த உத்தமப் பெண்மணி திலகவதியார். பக்தி, சீலம், பொறுமை தியாகம் ஆகிய அருங் குணங்களின் நிலையமாகத் திகழ்ந்தார்.

எரிமலை போலச் சுட்டுப் பொசுக்கும் துயரத்தை உள்ளடக்கிக் கொண்டு தம் சகோதரரை அன்போடும் பண் போடும் வளர்த்து வந்தார்.

மானுட வடிவில் நடமாடிய தெய்வப் பெண் என்றுதான் சொல்ல வேண்டும் திலகவதியாரை.

துயரத்தை மறைத்து மகிழ்ச்சியைக் காட்டி என்னதான் உபசரித்தாலும் தாயையும் தந்தையையும் இழந்து நிற்கும் தவிப்பு திருநாவுக்கரசின் உள்ளே கிடந்து தத்தளிக்கவே செய்தது.

தத்தளிப்பும் தவிப்பும் ஒரு பக்கம். இன்னொரு பக்கமோ கட்டுப்படுத்த முடியாத ஞான வேட்கை அறிவுப்பசி.

ராட்சச வெறியோடு கொழுந்துவிட்டு எரிந்தது. அறிவுப் பசி.

திருநாவுக்கரசின் மனம் தாய் தந்தையரைப் பற்றிய ஏக்கத்திலும், அது என்ன இது என்ன என்று அறியத் துடிக்கும் வேகத்திலும் சிக்கித் திணறியது.

திருநாவுக்கரசின் உள்ளத்தில் உதித்த கேள்விகளுக்கு உரிய விடைகளைப் பக்குவமாகச் சொல்லி அமைதிப்படுத்த அன்றைய வைச சமயத்தில் வாய்ப்பில்லை. அந்த அளவுக்குப் புறச்சமய ஆதிக்கத்தால் சீவனற்றுக் கிடந்தது சைவ சமயம்.

அதே நேரம் தமிழகத்தில் கொடி கட்டிப் பறந்தது சமண சமயம். துடிப்பு மிக்க இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும், இளைஞர்களின் மனசை அமைதிப்படுத்தவும் சமண சமயம் கட்டு திட்டமாகச் செயல்பட்டது.

சிந்தனா சக்தி உள்ள இளைஞர்களை வசப்படுத்தி மதம் மாற்ற வசீகரமான வழிகள் பலவற்றைக் கையாண்டது சமண மதம்.

திருநாவுக்கரசர் படிப்படியாக மனம் மாறினார். மதமே மாறிவிட்டார்.

ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் திருப்தி ஏற்பட்டது. ஆனாலும் குடும்ப நினைப்பு - தமக்கையாரின் அன்பு, யாதொரு

துணையுமின்றி அநாதையாக நிற்கும் அருமைச் சகோதரியின் நிலை எல்லாம் சேர்ந்து திருநாவுக்கரசை வாட்டியது.

அதுமட்டுமல்ல, சமணர்களின் ஆதிக்க வெறி – அரசியல் சூழ்ச்சி திருநாவுக்கரசுக்கு வெறுப்பைக் கொடுத்தது.

அன்பு, இரக்கம், உண்மை, நேர்மை என்று சமணர்கள் சொல்வதெல்லாம் வெறும் பித்தலாட்டம் என்பது விளங்கி விட்டது திருநாவுக்கரசுக்கு.

விபரம் தெரியாமல் இவர்கள் கையில் வந்து சிக்கி விட்டோமே என்று திருநாவுக்கரசர் தவித்தார்.

தமக்கையிடம் விழுந்து தன்னை மன்னிக்குமாறு கண்ணீர் விட்டுக் கதற வேண்டும்; அது கைகூடுமா என்று உருகினார்.

சமணர்களின் கபட நாடகத்தில் மதி மயங்கி நிற்கும் மக்களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று துடித்தார்.

"விபரம் தெரிந்து மக்கள் மானம் மரியாதையோடு வாழவேண்டும் அதுதான் என் பணி. என் பிறவிப் பயனே அது தான்" என்று உறுதி கொண்டார்.

நேரமும் பொழுதும் வந்தது. உணர்ச்சியைக் கட்டிப் போட்டிருந்த விலங்கு அறுபட்டது. விடுதலை பெற்று வெளியே வந்து விட்டார் திருநாவுக்கரசர்.

தங்கள் பிடியிலிருந்து நழுவிவிட்டாரே திருநாவுக்கரசர் என்னும் தருமசேனர் என்று ஆத்திரப்பட்டார்கள் சமணர்கள். துறவிகள்தான் – ஆனாலும் அவர்கள் உள்ளத்தில் கொலை வெறி தாண்டவமாடியது. எப்படியாவது தொலைத்துக் கட்டிவிட வேண்டும் அப்பர் சுவாமிகளை என்று செயலில் இறங்கினார்கள்.

அரசனும் சமணனாக இருந்ததால் கொடுமைக்கு மேல் கொடுமையைத் தொடர்ந்து செய்தார்கள். அவர்கள் பண்ணிய

அட்டூழியங்களை நினைத்தால் குடல் பதறும். சுண்ணாம்புக் காளவாயில் தள்ளி நீற வைத்தார்கள் என்று சொல்லத் தோன்றும். கல்லை உடலோடு சேர்த்துக்கட்டி நடுக்கடலில் கொண்டு போய்ப் போட்டு விட்டார்கள் என்றும் சொல்லத் தோன்றும். யானையின் காலால் தலையை இடற ஏவினார்கள் என்றும் சொல்லலாம்.

ஆனாலும் பதறவில்லை அப்பர் சுவாமிகள். அவர்கள் மேல் அனுதாபப்பட்டார். ஏன் இப்படித் தாறுமாறாக நடந்து கொள்கிறார்கள் அவர்கள் என்று வருத்தப்பட்டார். அதனால் அவர்களை எதிர்த்து அவர்களுடன் சண்டைப்போடவில்லை அப்பர் சுவாமிகள்.

நேரடியாகவே வன்முறையில் ஈடுபட்ட சமணர்கள் மறை முகமாகவும் செயல்பட்டனர். அன்பு பாராட்டி மரியாதை செய்வது போலப் பாவலாப் பண்ணினார்கள். ஆனால் உயிருக்கு உலை வைக்கும் வஞ்சகச் செயலை நடத்திக் கொண்டே இருந்தார்கள்.

பாலில் நஞ்சைக் கலந்து கொடுப்பது போல இருந்தது அவர்கள் இழிசெயல். படுக்கை அறையில் திருட்டுத்தனமாக பாம்பை விட்டுக் கொத்தும்படி செய்வது போலவும் இருந்தது அவர்கள் திருட்டுத்தனம்.

சமணர்களின் கொடுமை அதிகமாக அதிகமாக அப்பர் சுவாமிகளின் பொறுமை வளர்ந்தது. பக்தி பெருகியது. அருள் உயர்ந்தது. நம்பிக்கையோ வைரம் விளைந்தது போல விளைந்து உறுதிப் பட்டது.

நம்பிக்கை பெருகப் பெருகப் பயம் ஓடிவிட்டது.

பயமும் கவலையும் விலகிவிட்டால் இறைவன் நம்முடன் சேர்ந்து கூடவே இருப்பது தெரியும். பிறகு உடம்பு என்றோ,

உயிர் என்றோ, நான் என்றோ துண்டு துண்டாக எதுவும் இருக்காது.

எல்லாம் ஒன்று. அந்த ஒன்றுதான் நாம் என்று ஆகிவிடும்.

அப்பர் சுவாமிகள் அப்படி ஆகிவிட்டார். அதனால் அப்பர் சுவாமிகளின் வாக்கில் கலைமகள் வந்து அமர்ந்தாள். எண்ணத்தில் திருமகள் வந்து நிறைந்தாள். செயலில் மலை மகள் (சக்தி தேவி) வந்து திளைத்தாள்.

இப்படி ஒரு புரட்சியை வாழ்க்கையில் உளமாரச் செய்தவர் அப்பர் சுவாமிகள். சத்தியமும் கருணையும் சேர்ந்து நடத்திய புரட்சி இது.

*நாமார்க்கும் குடியல்வோம்*
*நமனை அஞ்சோம்,*
*நரகத்தில் இடர்ப்படோம்*
*நடலை அல்லோம்,*
*ஏமாப்போம், பிணி அறியோம்,*
*பணிவோம் அல்லோம்*
*இன்பமே அல்லாது*
*துன்பம் இல்லை*

ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் புரட்சிக் கொடியை எப்படி உயர உயரத் தூக்கிப் பிடிக்கிறார் அப்பர் சுவாமிகள் என்று பார்த்தீர்களா?

வானளாவிப் பறக்கிறது புரட்சிக் கொடி. வெறும் மண்ணாங் கட்டிகளாய்க் கிடந்த மக்களை சுதந்திர ஒளி வீசும் தங்கக் கட்டிகளாக உருவாக்கிய புரட்சி அது.

இனி வீடு, வாசல், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் கோயில், குளம், தேர், திருவிழா, நன்செய், புன்செய் இசை, நடனம் என்று பார்க்கும் இடம் எல்லாம் பரவசமாய்ப் பூத்துக் குலுங்குகிறது இவ்வுலகில்.

இத்தனை செல்வங்களுக்கும் நாயகன் மனிதன்தான்.

மனிதப் பிறவிக்கு நிகரான ஓர் அற்புதம் வேறு ஒன்றும் இல்லை. காரணம் மனிதன் உண்டாக்கிய செல்வங்கள் உன்னத மானவை.

இவ்வளவையும் விட்டு விட்டு என்னோடு வந்து சும்மா உட்கார்ந்திரு என்று இறைவனே கூப்பிட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டான் மனிதன்.

தப்பித் தவறி ஏற்றுக் கொண்டாலும் இங்குள்ள அனு பவங்களும் ஞாபகங்களும் வந்து கொண்டே இருக்கும். அதனால் சொர்க்கத்தில் நிம்மதியாக இருக்க முடியாது.

பழையபடி பூமியில் போய் மனிதப் பிறவி எடுத்து மெய்யுணர்வோடு ஆனந்தத்தில் திளைக்க வேண்டும் என்று உள்ளம் துடிக்கும்.

இந்த உண்மையை எப்படி அனுபவித்து ஆனந்திக்கிறார் அப்பர் சுவாமிகள் என்று பாருங்கள்.

*"மனிதப் பிறவியும்*
*வேண்டுவ தே இந்த*
*மாநிலத் தே"*

சொர்க்கத்தில் நடராஜர் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் நடராஜர் ஓவியம் உண்டா? வடித்து இழைத்த பூரண செளந்தர்யம் உண்டா? அரங்கம், நடனம், இசை, பாட்டு எல்லாம் இங்குதானே?

*குனித்த புருவமும்*
*கொவ்வைச் செவ்-வாயும்*
*குமிழ்சிரிப் பும்,*
*பனித்த சடையும்,*
*பவளம்போல் மேனியும்*
*பால்வெண் நீ றும்*

*இனித்தம் கசிய*
*எடுத்தபொற் பாதமும்*
*காணப்பெற் றால்*
*மனித்தப் பிறவியும்*
*வேண்டுவ தேஇந்த*
*மாநிலத் தே*

மனிதப் பிறவியின் உன்னதத்தை ‘மனித்தப்’ பிறவி என்று அழுத்திக் காட்டுகிறது.

மனிதனுடைய முகத்தையும் அவனுடைய செயலில் உள்ள திறத்தையும் பிரம்ம தேவன் கூட இப்படிக் காட்ட வில்லை. பளபளவென்று ஜொலிக்க அற்புதமாய்க் காட்டுகிறார் அப்பர் சுவாமிகள்.

## 2

**இ**னி, பொறுப்பின்மை என்பது ஒரு நோய். மேதாவிகள் என்று சொல்லக் கூடியவர்களைக் கூட இந்த நோய் விட்டு வைப்பதில்லை.

மனிதனை மதிக்கமாட்டார்கள். வாழ்க்கையை மதிக்க மாட்டார்கள். சர்வசக்திகளுக்கும் ஆதார நிலையமாகிய உடம்பைக் கூட மதிக்க மாட்டார்கள். எல்லாம் நிலையற்றவை என்பார்கள். சாதாரணம் என்பார்கள், பொய் என்றே சொல்லி விடுவார்கள்.

ஒரு சுண்டு விரலுக்கு இணையாக பத்துப் பதினைந்து சூப்பர் கம்ப்யூட்டர்களால் கூட செயல்பட முடியாது! கண்ணின் விந்தையை எடுத்துச் சொல்ல முடியுமா?

நாவிலிருந்து பெருங்குடல் வரை எத்தனை இடங்கள் அங்கங்கே தேன் ஊறுகிறது. நெய் (தைலம்) சுரக்கிறது. உமிழ்

நீர், கணையநீர், பித்த நீர் என்று பல பல அவதாரம் எடுத்துப் பெருகுகின்றன.

காய், கனி, குழம்பு, தயிர், அப்பளம் எல்லாவற்றையும் குழைத்துப் பிசைந்து கூழாக்கி விடுகின்றன.

நஞ்சென்றும் அமிர்தம் என்றும் இரண்டாகப் பிரிகின்றது.

நஞ்சானது கழிவுப் பொருளாக வெளியேறி விடுகிறது.

அமிர்தமோ ரத்தமாகிறது. பிறகு கண்ணென்றும் கை என்றும் முடி என்றும் நகம் என்றும் உண்டாகிறது. பிறகு புத்தியாகிறது. சுவையாக அவதரிக்கிறது ஆனந்தமாக மலர்கிறது.

எல்லாம் இந்த உடம்பில்தான். உடம்பைவிட உன்னதமானது உண்மையானது, நிலையானது வேறு என்ன இருக்கிறது.

இப்படி எத்தனையோ தத்துவங்கள் உடம்பில், இவ்வளவு விந்தைகளையும் செய்வது உடம்பு முழுவதும் நிறைந்திருக்கிற ஓர் அற்புதந்தான்.

பேரண்டம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கிறது அந்த அற்புதம்.

அற்புதம் விலகிவிட்டால் உடம்பு செயலற்றுவிடும். உடைந்த சட்டி பானை மாதிரி அப்புறப்படுத்தப்படும்.

சேர்ந்திருக்கிறவரை அது உண்மையாகத்தானே இருக்கிறது? அப்படி நிலைத்து உண்மையாக இருக்கிற ஒன்றை ஏமாத்துக்கச்ச சவடம் என்று சொல்வது பொறுப்பின்மைதானே.

*கடலின் நஞ்சமு(து)*
*உண்டவர் கைவிட்டால்*
*உடலி னாரும்ஓர்*
*ஊர்முனி பாண்டமே*

திருப்பாற் கடலில் எழுந்து வந்த ஆலகால விஷத்தை அள்ளி உண்டவர் சிவபெருமான். அமிர்தத்தை எடுத்தது போல நஞ்சை எடுத்து வாயில் போட்டார் பெருமான் அவர் தான் அற்புதம்.

## 3

இனி, பணக்காரன், ஏழை, அறிஞர், மூடர் என்னும் வேறு பாடு இல்லாமல் எல்லாரும் வாருங்கள் என்று கூப்பிடுகிறார் அப்பர் சுவாமிகள்.

சாதி, மத, இன வேறுபாடு இல்லாமல் எல்லாரும் ஒன்றா யிருந்து இறைவனை நினைந்து உருகுங்கள் என்கிறார்.

மனம் இளக இளக - கரையக் கரைய அதனுள் இறைவன் நிறைந்திருப்பது தெரியும். பிறகு சிக்கல் இல்லை. தொல்லை இல்லை. வேதனை இல்லை.

*ஒன்றி இருந்து*
*நினைமின்கள் உம் தமக்(கு)*
*ஊனம்இல் லை*

மிக்க நம்பிக்கையோடு சிவலிங்கத்தின் காலடியில் அமர்ந்து தியானம் பண்ணினான் மார்க்கண்டேயன்.

அங்கு வந்துவிட்டான் எமன், "என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய். பொடிப் பயலே! இதோ பார் பாசக் கயிறை" என்று எடுத்து வீசினான்.

வரம்பு மீறாதே என்று சிவபெருமான் எச்சரித்தும் பிரயோசனம் இல்லை. சட்டம் என்றால் சட்டம்தான் என்று தடித்தனமாக நடந்து கொண்டான் எமன்.

மார்க்கண்டேயன் கழுத்தை இறுக்க ஆரம்பித்துவிட்டது. பாசக்கயிறு. அவ்வளவுதான் லிங்கத்துக்குள்ளிருந்து ஒரு

துள்ளு துள்ளினார் சிவபெருமான். ஒரே பாய்ச்சல் ஒரே எற்று. எருமைக் கடாவோடு புழுதியில் உருண்டான் எமன்.

*கன்றிய காலனைக்*
*காலால் தடிந்தான்*
*அடியவர்க்கா*

நம்பிக்கை செலுத்துகிறவர்களை அப்படிக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பான் பெருமான்.

அப்பர் சுவாமிகள் சொல்கிறார் :

"மெய்யன்பர்களே! மறந்துவிடாதீர்கள்.

எல்லாரும் ஒற்றுமையாய் இருந்து வழிபடுங்கள்.

சிந்தனையைச் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்திப் பாருங்கள்.

துன்பமும் துயரமும் ஓடிவிடும்

துன்பம் ஒழிந்தால் மட்டும் போதாது இன்பம் பெருக வேண்டும். வாழ்க்கையே தேனாய்த் தித்திக்க வேண்டும்.

இதற்குரிய வழி கோயில், மூர்த்தி வழிபாடு, யாத்திரை (தேடிச்செல்லல்) ஆகிய நான்கும்தான்.

சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடும் பெருமானைத் தேடிப்போங்கள். அவன் ஆட்டத்தைக் கண்டு களியுங்கள்" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

*சென்று தொழுமின்கள்*
*தில்லையுள் சிற்றம்*
*பலத்துநட் டம்*

நீங்கள் அங்கு போனவுடன் உங்கள் தலையைக் கண்ட வுடனேயே பெருமானுக்கு உற்சாகம் வந்துவிடும்.

"இப்பொழுதுதான் வருகிறாயா? உன்னையல்லவா தேடிக் கொண்டிருக்கிறேன். என்னை விட்டு விட்டு எங்கே

போனாய்?" என்று ஆர்வம் பொங்கப் பொங்க கேட்பான் பெருமான். வாயால் அல்ல. அவன் பார்வையே அப்படி விசாரிக்கும்.

ஆசையோடு கட்டிப் பிடித்து அன்போடு தடவிக் கொடுக்கும் அந்த அருள் நோக்கு

**(கட்டளைக் கலித்துறை)**

*ஒன்றி இருந்து*
*நினைமின்கள் உம்தமக்கு*
*ஊனம்இல் லை;*
*கன்றிய காலனைக்*
*காலால் தடிந்தான்*
*அடியவர்க் கா;*
*சென்று தொழுமின்கள்*
*தில்லையுள் சிற்றம்*
*பலத்து நட் டம்;*
*என்றுவந் தாய் என்னும்*
*எம்பெரு மான்தன்*
*திருக்குறிப் பே*

*ஊனம் - நஷ்டம் - துன்பம். கன்றிய - ஆங்காரம் கொண்டு எழுந்த தடிந்தான் - எற்றி அடித்தான், நட்டம் - நடனம், திருக்குறிப்பு - கனிந்த பார்வை, அருள் நோக்கு.*

பாடலைப் பாடிக் கொண்டிருந்தால் போதும். பொன்னம் பலம் வந்து விடும். நடராஜமூர்த்தி வந்து விடுவார். வழிபாடு யாத்திரை எல்லாம் தானாக நடக்கும்.

அலட்டிக் கொள்ள வேண்டாம் நாம்.

மனிதனை நிமிர விடாமல் மடக்கி வைத்திருப்பது ஆணவம் ஒன்றுதான். அப்பர் சுவாமிகள் பாட்டு ஆண வத்தைக் கரைத்துவிடும்.

மண்டைக்குள் (மூளைக்குள்) இருக்கிற நஞ்சு (கொழுப்பு - ஆணவம்) கரையக் கரைய கெட்டது தொலையும் நல்லது விளையும்.

சோதனை எல்லாம் சாதனைகளாக மாறும். கல்லைக் கட்டிக் கடலில் விட்டாலும் அது தெப்பக் கட்டையாக மிதக்கும். மிதித்து நசுக்கும்படி ஏவிவிட்ட கொலை யானையைக் கூட கும்பிடு போட்டு ஒதுங்கச் செய்யும்.

சுண்ணாம்புக் காளவாயில் தாமரைக் காடாகக் குளிரும். பாம்பின் விஷம் ரத்தத்தில் ஏறாது.

அப்பர் சுவாமிகளின் பாடல்களை அனுபவித்த பக்தர் தம் அனுபவத்தை இப்படிச் சொல்கிறார்:

*தலையின் நஞ்சமு*
*தாக விளையுமே*
*தழல் கொள் நீறு*
*தடாகம தாகுமே,*
*கொலைசெய் யானை*
*குனிந்து பணியுமே*
*கோள ராவின்*
*கொடுவிடம் தீருமே,*
*கலைகொள் வேத*
*வனம்பதி தன்னிலே*
*கதவு தானும்*
*கடுகத் திறக்குமே,*
*அலைகொள் வாரியுள்*
*கல்லும் மிதக்குமே*
*அப்பர செப்பும்*
*அருந்தமிழ்ப் பாடலே*

*கோளரா - கொடிய விஷப்பாம்பு; கலை கொள்வேத வனம்பதி - பக்தர்களும் சித்தர்களும் நிறைந்த வேதாரண்யம் என்னும் ஊர்.*

# 4

**இ**னி வேறொரு பாடல்

எல்லாம் இருக்கிறது மனிதனிடம். நாடு, வீடு, உணவு, உடை, மனைவி, மக்கள், கல்வி, புகழ் ஒன்றுக்கும் குறை வில்லை மனிதனிடம்.

ஆனால் அத்தனைக்கும் அடிமையாய் இருக்கிறான். விடுதலை பெற முடியவில்லை. மனிதனால்.

வெளிச்சம் இல்லை. இருட்டுத்தான். கும்மிருட்டுத்தான். தடவித் தடவி காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான் மனிதன்.

சுதந்திரம் பெற்றுத் துள்ளி விளையாட வேண்டுமானால் பேரொளி மயமான ஒரு ஒளிக் கீற்று வரவேண்டும்.

ஒன்றிரண்டு பேர்களுக்கு அந்த ஒளி வந்து நிற்கும். தூக்கத்தைக் கலைத்து விடும். வழிகாட்டி அழைத்துக் கொண்டு போகும்.

சுதந்திரம் பெற்று விடுகிறார்கள் அவர்கள்.

இது ஓர் அடிப்படையான உண்மை.

அரிய பெரிய அனுபவம் இது.

அப்பர் சுவாமிகள் இந்த அனுபவத்தை நாடக இயலில் வைத்து அற்புதமாய்க் காட்டுகிறார்.

எப்படி என்று பாருங்கள்.

பருவ நங்கை ஒருத்தி. அவள் தன் தோழியின் தோள் பிடித்து நாடியைத் தடவி பாதி வெட்கத்தோடும் பாதி உல்லாசத்தோடும் சொல்கிறாள்.

எப்படி?

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன். தூக்கத்தில் என் படுக்கையின் பக்கத்திலேயே திடுதிப்பென்று நின்றார் ஒருவர். 'யாரையா நீர்' என்று படபடப்போடு கேட்டேன்.

'பயப்படாதே! உன்னை அழைத்துக் கொண்டு போகத் தான் நான் வந்திருக்கிறேன்' என்று கள்ளம் கபடம் இல்லாமல் சிரித்துக் கொண்டே சொன்னார்.

வெட்கம் வந்துவிட்டது எனக்கு. அப்படியே தலையைக் கவிழ்த்தேன்.

அவ்வளவுதான் என் இடுப்பைச் சுற்றிக் கையைப் போட்டார். அணைத்தப்படியே நடக்க ஆரம்பித்துவிட்டார்.

அவர் தோளை இறுகப் பற்றி ஓட்டமும் நடையுமாக நானும் தொடர்ந்தேன்!

பொல்லாத ஆசாமியடி அவர்! கண்ணை மூடி விழிப்பதற்குள் தட்டிக் கொண்டு வந்து விட்டார் என்னை. திருவாய் மூருக்கே (அவர் அரண்மனைக்கே) அழைத்து வந்துவிட்டார் என்னை.

கணப் பொழுதில் விடுதலை கிடைத்து விட்டது எனக்கு!

இனிப்பாடல்

*தான தன்ன*
*தனனா தனதன்ன*
*தஞ்சே கண்டேன்*
*தரிக்கிலா(து) யாரென்றேன்.*
*அஞ்சேல் உன்னை*
*அழைக்கவந் தேன்என்றார்;*
*உஞ்சேன் என்றுகந்*
*தேஎழுந்து ஓட்டந்தேன்;*
*வஞ்சே வல்லரே*
*வாய்மூர் அடிகளே!*

*தஞ்சே கண்டேன் - திடுக்கிட்டுப் பார்த்தேன்;தரிக்கிலாது பளிச்சென்று, வேகமாக. அஞ்சேல் - பயப்படாதே; உஞ்சேன் என்று உகந்து - தப்பித்தோம் பிழைத்தோம் என்று நினைத்த மாத்திரத்தில்*

*ஒரு வேகம் வந்தது; ஓட்டந்தேன் - அப்படியே அவர் பின் ஓடி வந்து விட்டேன்; வஞ்சே - வஞ்சிக் கொடி போன்ற தோழிப் பெண்ணே!; வஞ்சேவல்லர் - தந்திரம் மிக்க பெரிய கில்லாடி! யார்? வாய்மூர் அடிகள் - திருவாய்மூரில் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் பெருமான். நம் பெருமான்!*

இப்படி ஒரு பாடல் வர வேண்டும் என்றால் சும்மா வந்து விடாது. தமிழும் தமிழ் மக்களும் தொடர்ந்து செய்த தவத்தின் பலன்தான் பாடல்.

இப்படி எத்தனையோ பாடல்கள். அதில் ஒரு பாடல்.

# 5

**தி**ருவாய்மூரில் எழுந்தருளி இருக்கும் பெருமானைப் பார்த்தால் புது மாப்பிள்ளை மாதிரி தோரணையாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

ஆனால் எனக்கு ஓர் ஆண்டிப் பண்டாரம் மாதிரிதான் தெரிகிறார்.

சுற்றிக் கட்டிய கயிறும் கோவணமும்தான் உடை, சடை முடி; அதில் பாம்பு. குட்டி நிலா, இனி காளை மாடு. கையில் பயங்கரமான சூலாயுதம். இப்படித்தான் தெரிகிறது எனக்கு.

இனி ஊன்றிப் பார்த்தால் அதில் பேரண்டமே தெரிகிறது. அது முழுவதும் பெருமானாகவே தெரிகிறது. ஒவ்வொரு அணுவிலும் அணுவுக்குள் அணுவிலும் அவர் நடனந்தான்.

அவருடைய பார்வையைத் தீட்சையாகப் பெற்று ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு பொருளாக எழுந்து வருகின்றன.

தங்கம் என்றும் இரும்பு என்றும் புல் என்றும் மரம் என்றும் புழு என்றும் மனிதன் என்றும் எழுந்து வருகின்றன.

பெருமானின் ஆனந்த நடனத்தைக் கண்டு அடியார்கள் துள்ளி மகிழ்வது போல ஒவ்வொரு வஸ்துவும் சலங்கை கட்டித் துள்ளி விளையாடுகின்றன.

பெரிய பெரிய நட்சத்திர வட்டங்கள் (அரவம் - அதாவது பாம்பு) ஆடும் சடைக்குள் ஒளிகின்றன. குட்டி நிலாவும் சேர்ந்து மறைகிறது. கொடி ஆடுகிறது. சகலசக்திகளுக்கும் ஆதாரமான பேராற்றல் காளையாய் எழுந்து வாகனமாய் நிற்கிறது.

எல்லாம் சிவபுரமாய்த் தெரிகிறது எனக்கு. அடியார் களின் ஆரவாரமே என் செவியில் விழுகிறது.

இனி, பாடல்:

*அடியார் சிலம்பொலிகள்*
*ஆர்ப்பக் கண்டேன்*
*அவ்வர்க்கே ஈந்த*
*கருணைகண் டேன்,*
*முடியார் சடையின் மேல்*
*அரவம் மூழ்க*
*மூரிப் பிறைபோய்*
*மறையக்கண் டேன்,*
*கொடியார் அதனின் மேல்*
*இடபம் கண்டேன்*
*கோவணமும் ஞா ணும்*
*குலாவக்கண் டேன்,*
*வடிவாரும் மூவிலைவேல்*
*இடக்கை கண்டேன்*
*வாய்மூர் அடிகளைநான்*
*கண்டஆ றே!*

*முடியார்சடை - தலை முடியில் விழுந்த சடை. அரவம் நட்சத்திரவட்டம், சடை அத்தனை வியாபகம். கொடியார் கொடி நாலடியார் என்பது போலச் சிறப்பு நோக்கி வந்தது. 'ஆர்' இடபம் - காளை. ஞாண் - அரை (ஞாண்) கயிறு.*

அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, ஊஞ்சல், பள்ளியறை, திருப்பள்ளியெழுச்சி என்று விதவிதமாகப் பார்க்கிறார்கள் பலர்.

ஆனால் எனக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்!

"வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே!" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

# 6

இனி, எல்லாம் வல்ல - முழுமுதற் கடவுளை ஆடல் வல்லானாக நடராஜ மூர்த்தியாக வழிபட்டு வருகிறோம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த வழிபாட்டு முறை.

இடையறாது தொடர்ந்து நடக்கும் இந்த நடனத்தில் அடிப்படையான விஞ்ஞான உண்மைகள் உள்ளன என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். பிரபஞ்ச ரகஸ்யமே இந்த நடனத்துள் இருக்கிறது என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

இதுவரை கண்டு தெளிந்த விஞ்ஞான நுட்பங்களுக்கு மட்டுமல்ல. இனிவர இருக்கிற அதிசயம் அதிசயமான விஞ்ஞானப் பண்புகளுக்கும் இந்த நடனந்தான் மூல மந்திரம் என்று சொல்கிறார்கள்.

விஞ்ஞானிகள் சொல்கிறதைக் கேட்கக் கேட்க நமக்குப் பெருமிதம் உண்டாகிறது.

நிமிர்ந்து விறைப்பாகவே உட்காருகிறோம். ஏதோ இனந் தெரியாத ஓர் இறுமாப்பு. அசட்டுத்தனமாக ஒரு செருக்கு.

அதனால் எப்பொழுதும் போலக் கல்லுளிமங்கனாகவே இருக்கிறோம்.

உண்மையை உணர்ந்து அனுபவிக்க முடியவில்லை உருகிக் கரைந்து உண்மையோடு கலந்து பரிமளிக்க முடியவில்லை.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவுகள் கொட்டேசன் கொடுக்கப் பயன்படுகின்றன. ஆனால் அவை அப்படியே நிற்கின்றன. நாமும் இப்படியே நிற்கின்றோம்.

காரைக்கால் அம்மையார், மாணிக்கவாசகர், அப்பர் சுவாமிகள் போன்றவர்களோ உண்மையைக் கண்ட உடன் புளகாங்கிதம் அடைந்தார்கள். உச்சிமேல் கை வைத்தார்கள். கும்பிட்டார்கள். கூத்தாடினார்கள். அவர்களுடைய அனுபவமும், ஆனந்தமும் கண்ணீராய்க் கொட்டியது. ஆனந்தக் கண்ணீராய்ப் பொழிந்தது. இல்லையென்றால்

*ஆட எடுத்திட்ட*
*பாதம் அன் றோநம்மை*
*ஆட்கொண்ட தே*

என்னும் அருள்வாக்கு உதித்து வருமா?

தன்னை மறந்து மேலும் மேலும் இந்த அருள்வாக்கைச் சொல்லிப் பாருங்கள்

*தில்லையுள் சிற்றம்*
*பலத்துநட் டம்*
*ஆட எடுத்திட்ட*
*பாதம்அன் றோநம்மை*
*ஆட்கொண்ட தே*

என்று சொல்லிப் பாருங்கள்

விஞ்ஞானிகளுக்கெல்லாம் மேலான உயர்ந்த விஞ்ஞானி பிரம்மா. அவரைவிட மிகப் பெரிய விஞ்ஞானி திருமால்.

ஆனாலும் அந்த இரண்டு பேருமே உண்மையின் அடிப் படை நிலை தெரியவில்லையே என்று தவித்தார்கள். ஒரு

தடவையாவது அதைப் பார்த்துவிட வேண்டுமே என்று ஊழி ஊழி காலம் தவம் பண்ணினார்கள்.

வந்துவிட்டது அவர்கள் மேல் இரக்கம் இறைவனுக்கு நடனத்துக்காக காலைத் தூக்கிவைக்கும் நிலையை மெள்ள மெள்ள எடுத்து வைத்து, அதன் மூலம் காட்டினாராம் பெருமான்.

*நாரணன் நான்முகன்*
*தேட எடுத்தது*
*தில்லையுள் சிற்றம்*
*பலத்துநட் டம்*
*ஆட எடுத்திட்ட*
*பாதம்அன் றோநம்மை*
*ஆட்கொண் டதே*

என்று சேர்த்துப் பாடிப் பாருங்கள்.

இனி, எமனுக்குப் புத்தி புகட்ட அவனைத் தரையில் உருட்டியதும், அந்தத் திருவடிதான். ஒரே மிதியில் சந்திரன் கொழுப்பை அடக்கியதும் அதே திருவடிதான்.

*பாடலின் முழு உருவம்*

*சாட எடுத்தது*
*தக்கன்தன் வேள்வியில்*
*சந்திர னை,*
*வீட எடுத்தது*
*காலனை, நாரணன்*
*நான்முக னும்*
*தேட எடுத்தது*
*தில்லையுள் சிற்றம்*
*பலத்துநட் டம்*
*ஆட எடுத்திட்ட*
*பாதம் அன் றோநம்மை*
*ஆட்கொண்ட தே.*

சீருக்குச் சீர் நிறுத்தி நிதானமாகத் தொடர்ந்து பாடி அனுபவிக்க வேண்டும். நமக்கும் ஆனந்தக் கண்ணீர் வரும்.

வராவிட்டாலும் குற்றம் இல்லை. அப்பர் சுவாமிகளிட மிருந்து வரும் ஆனந்தக் கண்ணீர் வழியாகப் பார்த்தால் போதும். நடனம் அப்படியே தெரியும். ஆனந்த நடனமே கண்முன் நடக்கும்.

## 7

**க**டைசியாக ஒரு பாட்டு

உணர்ச்சியோடு பார்த்துவிட்டால் போதும். உண்மைக்குப் பின்னால் இருப்பது எது என்று அறியத் தேட்டம் வரும். பொதுவாக அது வருவதில்லை. தேட்டம் இருந்தால் அதை நினைத்து மனம் ஏங்கும், தவிக்கும்.

கன்றை நினைத்து பசு கதறுவது போல மனம் கதறும்.

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயம். அப்பர் சுவமிகள் அங்கு வந்தார்.

கோயிலைப் பார்த்தார். கோபுரத்தைப் பார்த்தார், மூர்த்தியைப் பார்த்தார். பக்த கோடிகள், வழிபாடு எல்லாவற்றை யும் பார்த்தார்.

மனதுள் கிடந்த தவிப்புக்கு வேகம் வந்து விட்டது.

“ஏகாம்பரநாதனே! உன்னை நம்பி எவ்வளவு தூரம் வந்து விட்டேன் நான். திருவாமூர் எங்கே. காஞ்சிபுரம் எங்கே? உன்னைத் தவிர வேறு யார் எனக்கு ஆதரவு. இதன் பிறகும் என்னைத் தனியாக வைத்திருக்க உனக்கு எப்படி நினைப்பு வந்தது?” என்று கதறுகிறார் அப்பர் சுவாமிகள்.

*திருஒற்றி யூரா,*
*திருவாலா வாயா,*
*திருவாரூ ரா!*

*ஒருபற் றிலாமையும்*
*கண்டிரங் காய்கச்சி*
*ஏகம்ப னே!*

இதற்கு முன் எத்தனை இடத்தில் உமக்கு விண்ணப்பம் கொடுத்து இருக்கிறேன். ஒற்றியூர், மதுரை, திருவாரூர் இப்படி எத்தனை இடம்?

அதற்கும் முன்னாலே, உருத்தெரியாத காலம் முதல் கொண்டே

*கரு உற்ற நாள்முத*
*லாகஉன் பாதமே*
*காண்பதற் கு;*
*உருகிற்றென் உள்ளமும்*
*நானும் கிடந்தலைந்(து)*
*எய்த் தொழிந் தேன்;*
*திருஒற்றி யூரா!*
*திவால வாயா!*
*திருவாரூரா!*
*ஒருபற்(று) இலாமையும்*
*கண்டிரங் காய்கச்சி*
*ஏகம்ப னே!*

அற்புதமான பாடல். இப்படி ஒரு பாடலா? ஆயிரம் ஆயிரம் பாடல்கள்.

அப்பர் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் அவதார புருஷர்கள்தான்!

இது போன்ற கவிகள். உலகில் வேறு எங்குமே இல்லை. பாடி அனுபவிக்க வேண்டும் நாம்.

விவசாயம், வியாபாரம், உத்யோகம், சம்பளம், வரவு, செலவென்று பல பிரவர்த்திகள் நமக்கு உண்டு.

அவற்றோடு இந்தப் பாசுரங்களைப் படித்து இன்புறுவதும் ஒரு பிரவர்த்திதான்.

நாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும்.

படிக்காமல் அனுபவிக்காமல் ஒதுங்கினால் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாதது போன்ற அவல நிலைதான்.

அந்த நிலை நம்மவர்களுக்கு வரவே செய்யாது. வரவும் கூடாது.

இதுவே தமிழர்களின் பிரார்த்தனை.

# II ஆளுடைய பிள்ளையார் திருஞான சம்பந்தர்

## 1

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சோழவள நாட்டில் சீர்காழி என்னும் திருப்பதியில் அவதரித்தார் திருஞான சம்பந்தர்.

தந்தையார் பெயர் சிவபாத ஹி(இ)ருதயர். தாயார் பெயர் பகவதி.

தாய் தந்தையர் பெயரைப் பார்த்தாலே குலம் வேதியர் குலம் என்பது தெரிகிறது. பூஜை, மந்திரம், யாகம், பாராயணம் என்று வைதீகத்தோடும் சமஸ்கிருதத்தோடும் தோய்ந்து கிடக்கிற குடும்பம் என்றும் தெரிகிறது.

தமிழகத்தில் சோழவள நாட்டில் (தஞ்சை மாவட்டம்) மட்டும் வட இந்தியாவிலிருந்து வந்த பிராமணர்கள் பெரும் பாலோர் தங்கள் தனித்தன்மையை இறுகப் பற்றிக் கொண்டு தொடர்ந்து வாழ்ந்தனர்.

அவர்களுக்கு வடமன் என்று பெயர்.

தமிழ் மக்களிடமிருந்து பல பழக்க வழக்கங்களை குறிப்பாக உணவில் சைவ நெறியை ஏற்று கைக்கொண்டு வாழ்ந்தார்கள்.

கோயில், மூர்த்தி வழிபாடு, இசை, நடனம், பாடல், நந்தவனம், பசுமடம், மேளம், திருமணம், கொலு, உணவு என பல பழக்கங்களைத் தமிழர்களிடமிருந்து ஏற்று அதன்படி ஒழுகினார்கள்.

ஆனாலும் யாகம், பாராயணம், சமஸ்கிருதம், காயத்திரி, உபநயனம், முதலியவற்றை அவர்கள் விடவில்லை.

வடமன் வடமனாகவே தனித்திருந்தார்கள்.

தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கையில் இணைத்துக் கொண்டே அவற்றை அலட்சியம் பண்ணி ஒதுக்குகிற கூட்டத்தில் - சுத்த வைதீகமான பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர்தான் ஞானசம்பந்தர்.

இனி, தேவாமிர்தம் யார் சாப்பிட்டாலும் இனிப்பாகத் தானிருக்கும். அதே போல வேப்பங்காயை யார் சாப்பிட்டா லும் கசப்பாகத்தான் இருக்கும்.

ஆனால் வேப்பங்காய் தேன்போல் இனிக்கிறது. தேவாமிர்தம் கற்றாழையாய்க் கசக்கிறது! எங்கள் வாத்தியார் அப்படித்தான் சொல்லச் சொல்லி இருக்கிறார். எங்கள் மதத்தில் அப்படித்தான் எழுதி இருக்கிறது என்று தடாலடி பண்ணினால் அதைக் கிறுக்கு என்றுதான் சொல்ல வேண்டும்.

கிறுக்குத்தானே என்று சாதாரணமாக அதை விட்டு விடவும் கூடாது.

மூளை கலங்கியோ, குழம்பியோ உண்டாகிற கிறுக்கு வேறு.

பொய் என்று தெரிந்தும் அதை மெய் என்று சாதிக்கும் கிறுக்கு வேறு. வெறும் மதத்துக்கும், வறட்டு தத்துவங் களுக்கும் அடிமையாகி அந்த அடிமைத்தனத்தையே ஆனந்தம் என்று தம்பட்டம் அடிக்கும் அகம்பாவம் வேறு.

ஆணவமும் அகம்பாவமும் நிறைந்த இந்த கிறுக்கு பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யே உருவாகி நடமாடக் கூடியது. அதனால் இதை முளையிலே கிள்ளியெறிய வேண்டும். கிள்ளி எறியாவிட்டால் தொற்று நோய் போல் சமுதாயம் முழுவதையும் கிறுக்காக்கிவிடும்.

ஆனால் இந்தப் பொய்யை அகம்பாவத்தை, கிறுக்கைக் கிள்ளி எறிவது எளிதான செயல் அன்று. சாதாரண மனிதர் களால் முடியாது. தெய்வப் பிறவி என்று சொல்கிறார்களே அப்படி ஓர் அவதாரம் எடுத்து வரும் அருளாளனால்தான் முடியும்.

அருளாளர்களுக்கெல்லாம் அருளாளராக விளங்கியவர் ஆளுடைய பிள்ளையார் என்னும் ஞான சம்பந்தர்.

“உணர்ச்சியே இல்லாமல் மந்திரங்களை ஜபித்துக் கொண்டு வீண் பொழுது போக்குகிறீர்களே அதில் என்னத்தைக் காண்பீர்கள்? இதோ இந்தத் தமிழ்ப் பாட்டைப் பாடிப் பாருங்கள். உள்ளம் உருகும். உண்மை தகதகவென்று ஜொலிக்கும். ஆனந்தம் பெருகும். பொய் ஓடும். நம்பிக்கை வரும். வாழ்க்கை மணக்கும். ருசியாகவும் இருக்கும்.

இப்படி ஆயிரம் ஆயிரம் பாடல்கள் தமிழில் பூத்துக் குலுங்குகின்றன. இவற்றை விட்டுவிட்டு சமஷ்கிருதம் சுலோகம், பாராயணம் என்று ஏன் வேஷம்?'' என்றார் சம்பந்தர்.

வெறும் வெற்று முழக்கமில்லை, பாடல்களைப் பாடியே காட்டினார். கேட்பவர்கள் எல்லாம் தம்மை மறந்து ஆடி மகிழ்ந்தார்கள். அப்படி உருகி ஓடியது மக்களின் உள்ளம். கண்ணுக்குத் தெரியாத இசையும், தாளமும், நேருக்கு நேராக வந்து நின்றன. கையால் தொட்டுப் பார்க்கும்படி அப்படி ஒட்டி

வந்து நின்றன. இசையும் நடனமும். அந்த இசையோடும் நடனத்தோடும் பக்தர்களின் உருகிய உள்ளமும் கூடிக் குலாவின. குதித்துக் குதித்து ஆடின.

அப்படியொரு புரட்சியை அகப்புரட்சியை நடத்தி வெற்றி கண்டவர் ஆளுடைய பிள்ளையார். அது மட்டுமா? கோயில், கோபுரம், மூர்த்தி, வழிபாடு என்றால் கண்ணுக்குக் குளுமை, மனசுக்குக் குளுமை. பார்க்கப் பார்க்க நெஞ்சிலுள்ள அழுக்கெல்லாம் கரையும். தூண்டா விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் மனம்.

அலங்காரம், அபிஷேகம், ஆராதனை, பாட்டு, நாதசுரம், பக்தர்களின் பரவசம், வாழ்த்தொலி ஆகியவற்றை அனுப விக்க அனுபவிக்க மனிதப் பிறவியின் மகோன்னத நிலை இன்னதென்று தெரியும்.

பல திறப்பட்ட மக்களோடு பழக்கம் ஏற்படும். மனிதர் களோடு பழகி ருசி கண்டுவிட்டால் பிறகு அதை மறக்க முடியுமா?

மனித உறவு வளர வளர அன்பு ஊறும். பொறை உடைமை என்பது பூத்து மணக்கும். ஒருவருக்கொருவர் உற்ற துணையாக இருக்க அருளுணர்வு சுரக்கும்.

அது மட்டுமா? பேரண்டம் முழுவதும், அணுவுக்குள் அணுவாய் நிறைந்து நிற்கும் பரம் பொருளை நம் கட் புலனுக்குள் வைத்தே காட்டிவிடும்.

நினைத்தால் போதும் நம் எதிரில் வந்து நிற்பான் பெருமான். போகும் இடமெல்லாம் நம்மைத் தொடர்ந்து நம் கூடவே வருவான்.

அவனைத் தொட்டு உறவாடலாம். மல்லுக்கட்டலாம். உருண்டு புரண்டு அவனோடு விளையாடலாம். அவ்வளவும்

செய்து விடுகிறது. மூர்த்தி வழிபாடு. கோயில், கோபுரம் பாட்டு, நாதசுரம், ஆட்டம், பக்தகோடி தேர், திருவிழா.

இப்படி ஆனந்தச் சுரங்கமாய் இருக்கின்றது தமிழ்ப் பண்பாடு.

இதை மதிக்கமாட்டேன். தீயை வளர்த்து, வட்டம் போட்டு உட்கார்ந்து மந்திரங்களைப் போட்டுத்தான் உருட்டுவேன். அதில் நெய்யை விடுவேன். கையை விரிப்பேன். வேண்டா ததை நெருப்பில் போட வேண்டும். வேண்டியதை என் கையில் போட வேண்டும்!

இதுதான் மதம். இதுதான் கடவுள் இட்ட கட்டளை என்றால் அது அறிவோடு ஒட்டுமா?

ஆனாலும் நாம் எல்லோரும் இந்த மூடத்தனத்திலேயே உழன்று கொண்டிருந்தோம்.

நாம் என்றால் யார்? நம்முடைய மூதாதையர்கள்தாம்.

பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டன்மார் என்கிற கணக்கில் நம் முன்னோர் பலர் கோயிலிருந்தும், அதில் மூர்த்தி வீற்றிருந்தும், பாட்டிருந்தும், மனிதர்களிருந்தும், விழாக்களி ருந்தும் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.

கண்ணை மூடிக் கொண்டு ஒன்றும் புலப்படாமல் சமர்ப்பியாமி சமர்ப்பியாமி என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆளுடைய பிள்ளையார் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். வருந்தினார். ஏமாற்றுகிறவர்களை விட்டுவிட்டு ஏமாறுகிற அப்பாவிகளை நோக்கி உருகினார்.

உள்ளம் உருக உருக வீராவேசமே வந்தது பிள்ளை யாருக்கு.

"என் பின்னால் வாருங்கள். கோயிலுக்குள் வாருங்கள். பெருமானைப் பாருங்கள். பாடல்களை அனுபவியுங்கள். பக்தர்களோடு உறவாடுங்கள்.

"பெருமான் உங்களைப் பார்ப்பான். ஆவலோடு பார்ப்பான் புன்முறுவல் பூப்பான். நீங்கள் சொல்வதைக் காது கொடுத்து கேட்பான்!"

"உங்கள் கூடவே வீட்டுக்கு வந்து விடுவான். உங்கள் உள்ளத்தையே வீடாக வைத்து அமர்ந்து விடுவான். வாருங்கள் கோவிலுக்கு" என்று அழைத்தார்.

அழகிய பண்களில் தம் அனுபவங்களையும் ஆனந்த உணர்ச்சிகளையும் குழைத்துக் குழைத்து தேன் சொட்ட - ஆண்டவனே தாளம் போட்டுச் சீருக்குச் சீர் நின்று கூத்தாடும் படியாகப் பாடல்களைப் பாடிப்பாடி அமைத்தார்.

மக்கள் எல்லாரும் அவர் பின் போனார்கள்.

ஆளுடைய பிள்ளையார் அவதரித்த சீர்காழியில் மட்டுமல்ல தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஊர்களுக்குச் சென்று கோயிலை வலம் வந்தார் ஆளுடைய பிள்ளையார். கோபுரத்தைக் கை யெடுத்துக் கும்பிட்டார். தலவிருட்சத்தை தொட்டுக் கண்களில் வைத்து உருகினார்.

அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, பாட்டு, பக்தர்கள் அவர்களுடைய பரவசம், இப்படிப்பட்ட மேளதாள முழக்கத்தோடு ஆனந்தத் தாண்டவம் ஆடும் பெருமானைக் கண்ணாரக் கண்டார்.

அன்பர்கள் எல்லாருமே ஞானசம்பந்தர் போல பெருமானைக் கண்டு களித்தார்கள்.

இப்படி ஒரு மகத்தான புரட்சியைச் செய்தவர் ஆளுடைய பிள்ளையார். அதுவும் இளம் வயதிலேயே வாலிபப் பருவத்திலேயே புரட்சி செய்தவர் ஆளுடைய பிள்ளையார்.

உலகத்தில் எத்தனையோ புரட்சிகள் உள்ளன. எத்தனையோ பேர் அதைச் செய்துள்ளனர். பெரும்பாலான புரட்சிகளில் அழிவுகள் தாம் நிறைய இருக்கும். வேறு சில புரட்சிகளில் முரட்டுத்தனமும், பயமும் எரிச்சலும், கசப்பும், கொடுமையுமே மேலோங்கி இருக்கும்.

ஆனால் ஆளுடைய பிள்ளையார் செய்த புரட்சியில் அழிவில்லை. ஆக்கந்தான் உண்டு. எல்லாரும் நன்றாக வாழ, எல்லாரும் பொய்யிலிருந்து விடுபட, அப்படி ஒரு மங்களமான புரட்சியை நடத்தினார் ஞானசம்பந்தர்.

ஆளுடைய பிள்ளையார் நடத்திய புரட்சி அருள்ப் புரட்சி.

ஆளுடைய பிள்ளையார் என்ற அந்தத் தெய்வநாயகன் இல்லையென்றால் நாம் எல்லாரும் இப்பொழுது சமணர்களாக இருப்போம். பௌத்தர்களாக இருப்போம்.

நம்முடைய கோயில்கள் எல்லாம் சமண.. பௌத்த சந்நியாசிகளின் மடங்களாகவே இருக்கும். இல்லை காவல் நிலையம், சிறைச்சாலை போன்ற அரசு அலுவலகங்களாகக் கூட இருக்கலாம்.

உணர்ச்சியானது செறிந்து, செறிந்து பழுத்துத் தேன் சொட்டும் நமது இசை, நடனம், பாடல்கள், ஓவியம், சிற்பம், பழக்கவழக்கம், பண்பாடு எல்லாமே அழிந்து போயிருக்கும்.

நம் நாட்டையே மொட்டையடித்து நிர்வாணம் ஆக்க நயவஞ்சகமாகப் போரிட்ட சமண - பௌத்தத்தி

லிருந்து நாட்டை மீட்டுத் தந்த பெருமான் ஆளுடைய பிள்ளையார்.

கோயில் வழிபாட்டுக்காக - ஊர் ஊராகத் தமிழகம் முழுவதும் சென்றார் ஆளுடைய பிள்ளையார். அவருடன் அடியார் கூட்டமும் தொடர்ந்து போனது.

வழியெல்லாம் பாட்டுத்தான். சம்மந்தர் தாளம் போட்டுப் பாட அதை வாங்கி அடியார் கூட்டம் பாடும். இப்படித் தமிழகம் முழுவதுமே பூத்துக் குலுங்கியது.

சமணர்களும், பௌத்தர்களும் தமிழகம் முழுவதும் பரவி இருந்தார்கள். வலுவாகவே காலுன்றிப் பரவி இருந்தார்கள்.

பாண்டிய, பல்லவ அரசுகளையும் அவர்கள் வளைத்து மடக்கிக் கைக்குள் போட்டுக் கொண்டவர்கள்.

அதனால் அட்டூழியமும் பண்ணினார்கள். திருட்டுத்தனமாக மக்களை மதம் மாற்றினார்கள். மாறாதவர்களுக்கு இடையூறு செய்தார்கள்.

கோயில்களில் பூஜை, வழிபாடு நடைபெற விடாமல் தடுத்தார்கள்.

பல கோயில்கள் இடிந்து சிதலமாயின. பல கோயில்கள் ஆள் நடமாட்டம் இல்லாமல் செடி கொடிகள் காடாய் வளர்ந்து மண்டிக் கிடந்தன. பெரும்பாலான கோயில்கள் இருண்டே கிடந்தன.

பல கோயில்களில் அடைத்த கதவு பல வருடங்களாகத் திறக்கவேயில்லை.

ஆனாலும் எல்லாக் கோயில்களுக்கும் ஆளுடைய பிள்ளையார் போகிறார். பாடிக்கொண்டே போகிறார். பக்த கோடிகளும் பாடிக்கொண்டே பின்தொடர்ந்து போயினர்.

விளக்கேற்றிக் கல்லும் கனிந்துருக இறைவனை நோக்கிக் கேள்விகள் கேட்டும் விண்ணப்பித்தும் பாடிப் பரவுகிறார் ஞானசம்பந்தர்.

ஆளுடைய பிள்ளையாரின் ஏக்கமும், தவிப்பும், நம்பிக்கையும், விரதமும் மக்களைத் தட்டியெழுப்பின. சைவர்களுக்கு உற்சாகம் பொங்கியது. சமண பௌத்தத்தில் நுழைந்தவர்கள் மெள்ள மெள்ள சைவத்தை நோக்கி வந்தனர்.

அப்படி வந்தவர்களைக் கொண்டே கோயிலைச் சுற்றி மூடிக் கிடந்த காடுகளை அழித்தார். நந்தவனம் அமைத்தார். பசுமடம் ஏற்படுத்தினார். இடிந்த பகுதிகளைப் புதிதாகக் கட்டினார். குருக்களை நியமித்து வழிபாடுகளையும் நெறி முறைகளையும் வகுத்து ஏற்பாடுகள் செய்தார்.

தேரோட்டம், திருவிழா, மோர்ப்பந்தல், அன்னதானம் எல்லாம் கோயிலை நோக்கி வந்தன. ஜெக ஜோதியாய் பிரகாசித்தன. கோயில்களும் கோபுரங்களும் வழிபாடும்.

சமணர்களாலும் பௌத்தர்களாலும் இதை எப்படித் தாங்க முடியும்.

சம்பந்தரிடம் வந்து விதண்டா வாதம் பண்ணினார்கள். ஒன்றும் எடுபடவில்லை.

வஞ்சகமான முறையில் தொல்லைகள் கொடுத்தனர். அவற்றை எல்லாம் பொறுமையாலும் புன்முறுவலாலும் வென்றுவிட்டார் ஞானசம்பந்தர்.

மதவெறி அரசியல் அதிகாரம் இரண்டும் சமண பௌத்தர் களிடம் உச்சத்தில் இருந்தன. அதனால் கொலை பாதகமான செயலில் கூட அவர்கள் ஈடுபட்டனர்.

அவ்வளவையும் பொறுமையாகவே தாங்கி அவர்களை முறியடித்தார் சம்பந்தர்.

பாட்டு, இசை, தாளம், மூன்றும்தான் சம்பந்தருடைய ஆயுதங்கள்.

தமிழகமே இந்த மூன்றின் குடை நிழலில் ஒன்று திரண்டது. பொங்கி எழுந்தது.

சம்பந்தருக்குப் பின்னாலிருக்கும் பலத்தைப் பார்த்தார் கள். சம்பந்தர் காட்டும் பொறுமை, அடக்கம், தவம் இவற்றை யும் பார்த்தார்கள்.

இதற்கும் மேலே சம்பந்தரிடம் விளையாடினால் ஆபத்திலிருந்து தப்ப முடியாது என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது.

அப்படியே நழுவி ஒதுங்கி விட்டார்கள் சமண பௌத்தர்கள்.

இப்படியும் ஒரு ஞானப்புரட்சியை நடத்தினார் ஆளுடைய பிள்ளையார்.

தமிழகம் முழுவதும் அவர் சுற்றிவரும் போது பசியால் வாடுபவர்களுக்கு உணவு கொடுத்தார். நோயால் வாடுபவர் களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டிக் குணப் படுத்தினார். ஒதுக்கப்பட்டவர்களை எல்லாம் அரவணைத்தார். அவர்களுக்கு ஆதரவு கொடுத்து வாழ்வளித்தார்.

ஜாதி வெறியையும் கொடுமையையும் வேரோடு களைந்தார். அது பற்றி அவர் பிரசங்கம் பண்ணவில்லை. செயலில் காட்டினார்.

யாழ்ப்பாணர் என்னும் ஒதுக்கப்பட்ட இனத்தார் ஒருவரை அந்தணர்களும் மதித்து உபசரிக்கும்படி தன் அருமை உடன்பிறப்பாக ஏற்று கூடவே வைத்துக் கொண்டார். ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அந்தணர் குலத்தில் பிறந்த ஒருவர் பாணர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரைத்

தோழமை பூண்டு உறவாடினார். மதித்தார் உபசரித்தார் என்றால் அதைவிட வேறு என்ன திருத்தம் இருக்கிறது? செம்மையில் எல்லாம் மேலான செம்மை அல்லவா இது!

ஒரு நிகழ்ச்சியில் மட்டுமல்ல. ஒரு நேரத்தில் மட்டுமல்ல வாழ்நாள் முழுவதும் உயிருக்குயிராக மதித்து உபசரித்தார் பாணரை.

பெற்றோர்களுக்கு இது ஒத்து வராது. உற்றார்கள் இதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பதெல்லாம் சம்பந்தருக்குத் தெரியும். ஆனால் அது பற்றிக் கவலைப்படவில்லை சம்பந்தர்.

'உண்மை உணர்ச்சி' இப்படித்தான் இருக்கும். உண்மைக்காக எல்லாவற்றையும் மனம் உவந்து அர்ப் பணிப்பதில் இருக்கிறது உண்மை உணர்ச்சி.

சமண பௌத்த ஆதிக்கத்திலிருந்து சைவத்தை மீட்டது. உணவுப் பஞ்சத்தை நீக்க உதவியது. கோயில்களையும் வழிபாட்டு முறைகளையும் மறுபடி ஏற்படுத்தியது.

ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்டியது. நோயாளி களுக்கு ஆறுதல் கூறி உதவியது. பல இன்னல்களை ஏற்று லட்சியத்தை நிறைவேற்றியது. இப்படி எத்தனை எத்தனையோ அற்புதங்கள் சம்பந்தரின் வாழ்க்கையில்.

அவ்வளவிலும் சத்திய வேட்கை என்கிற ஒன்று இழையோடிக் கொண்டிருக்கிறது. உண்மைதான். மாசற்ற உண்மைதான் சம்பந்தரின் வாழ்க்கை.

இந்த உண்மை உண்ர்ச்சியும் கோவில்களும் பாடல்களும் ஆகிய மூன்றுமே கண்கண்ட தெய்வம் என்கிற தெளிவை உறுதியை சம்பந்தருக்குக் கொடுத்தன.

கோயில், பாடல், இசை, மூன்றும் வேறு வேறல்ல, மூன்றும் ஒன்றுதான். இந்த மூன்றில் தான் இறைவன் கொலுவிருக்கிறான் என்பதைக் கண்டவர் சம்பந்தர்.

இறைவன் மட்டுமல்ல தமிழ் மக்கள் அவ்வளவு பேரும் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நிலைத்து நிற்கிறது மேலே சொன்ன மூன்றில்தான்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் அவ்வளவு பேரும் வாழ்ந்த வாழ்க்கை அவர்களின் ஆசை, கனவு, வெற்றி, தோல்வி, தொழில், வளம், பண்பாடு, உணர்ச்சி, நம்பிக்கை, கலை, பக்தி எல்லாமே இந்த மூன்றிலும்தான் உள்ளன என்பதும் சம்பந்தப் பெருமாளுக்கு நேராகவே தெரிந்தன.

சமுதாயப் பண்பு முற்றி விளைய விளைய அது பாடலாக உருவெடுக்கும். உணர்ச்சிகள் விம்மிப் புடைத்துப் பூரித்து நிற்கும் பாடலில்.

அந்தப் பூரிப்பும் ஜொலிப்புமே நடனமாக உரு வெடுக்கும்.

பாடலோடும் நடனத்தோடும் இசையானது உறவாடி உறவாடி அவற்றிலுள்ள உணர்ச்சிகளைப் பிழிந்து ரசமாகத் தன்னுள் ஊறவைக்கும்.

இசை என்றால் தமிழிசை ஒன்றுதான். காரணம் கலைப் பண்போடு கூடிய கவி தமிழில் மட்டுந்தான். அதற்குக் காரணம் தமிழர்களின் வாழ்க்கை, வளம், பண்பாடு, பக்தி.

அதாவது கோயில், வழிபாடு, மூர்த்தி.

இந்த உண்மையைக் கண்ட மாத்திரத்தில் சரிதான். விஷயம் விளங்கிவிட்டது. அவ்வளவுதான். வேறென்ன வேண்டும் என்கிற திருப்தியில் திண்ணையில் உட்கார்ந்து வியாக்யானம் பண்ணிக் கொண்டா இருந்தார் சம்பந்தப் பெருமான்?

மக்கள் சமுதாயத்துள் துள்ளிப் பாய்ந்தார். வாருங்கள் கோயிலுக்குள், பாருங்கள் எம் பெருமானை என்று அவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு போனார்.

தம் ஆனந்த பரவச உணர்ச்சிகளை எல்லாம் இசைக் குள்ளும் தாளத்துக்குள்ளும் ஊறப்போட்டார். தெய்வத் திருப் பாடல்களாகச் சொரிந்தார்.

உலக மக்கள் அவ்வளவு பேருக்காகவும் சொரிந்தார் இல்லையென்றால்

"*நாளும் இன்னிசையால் தமிழ்பாடும்*
*ஞானசம்பந்தன்*"

என்று தன்னை இனம் காட்ட முடியுமா?

இசையோடு பாடல்களைப் பாடினால்தான் அல்லல் அகலும், ஆனந்தம் பொங்கும் என்று விளக்க முடியுமா?

என் பாடல்களே அத்தாட்சி. அதைப்பாடி அனுபவி யுங்கள். நான் சொல்வதுதான் உண்மை என்று உங்களுக்குத் தெரியும் என்று சொல்ல முடியுமா?

அப்படி ஒரு தெள்ளத் தெளிந்த உறுதி அல்லவா பக்தி! அதுவல்லவா உண்மை உணர்ச்சி!

இது சம்பந்தமாக ஆளுடைய பிள்ளையார் பாடல்களில் சிலவற்றைப் பார்த்தாலே போதும்.

திருவெண்காடு என்னும் பழம்பதிக்குப் போனார் சம்பந்தர். கோயிலுக்குப் போனார். மூர்த்தியைப் பார்த்தார். பார்க்கப் பார்க்க உள்ளம் உருகியது.

"எங்கும் நிறைந்த பரம்பொருளல்லவா; பேரண்டம் முழுவதும் நீக்கமற நிறைந்த அருட்சுடரல்லவா; இந்த ஊருக்குள் இந்தக் கோவிலுக்குள் அப்பாவி போல வந்து அமர்ந்திருக்கிறது!"என்கிற உண்மை மனசில் உதிக்க உதிக்க

அப்படியே தத்ரூபமாக மெய்யப்பனாக - சத்திய மூர்த்தியாக, சம்பந்தருக்குக் காட்சி கொடுக்கிறான் பெருமான்.

ஆனந்த பரவசத்தில் கரைகிறார் சம்பந்தர்.

அது எப்படிப் பாடலாய் - இசைப் பாடலாய் உருவெடுத்து வருகிறதென்று பாருங்கள்.

*கண்காட்டும் நுதலானும்*
*கனல்காட்டும் கையானும்*
*பெண்காட்டும் உருவானும்*
*பிறைகாட்டும் சடையானும்*
*பண்காட்டும் இசையானும்*
*பயிர்காட்டும் புனல்நின்ற*
*வெண்காட்டில் உறைவானும்*
*மெய்காட்டி அருள்வானே!*

*கண்காட்டும் நுதல் - நெற்றிக் கண்ணை உடைய பெருமான். கனல் - நெருப்பு, ஆணவத்தைப் பொசுக்கும் தீ. பெண்காட்டும் உரு - உமையொரு பாகம். பிறை - சந்திரன் பண்காட்டும் இசை தித்திக்கும் பண்கள் (ராகங்கள்) புனல் நீர்.*

மெய்காட்டி அருள்வான் - அன்பர்கள் நினைத்தவுடன் அவர்கள் முன் தோன்றி அவர்களிடம் தன்னை ஒப்படைத்து விடுவான் பெருமான்.

அற்புதமான பாடல், பாடப்பாட ஒளிபிறக்கும். பொய் கலைந்து மறைந்து விடும். உண்மையானது. எங்கும் ஒரே தன்மைத்தாய் நிறைந்து நிற்கிற வியாபகம் தெரியும்.

பேரண்டம் முழுவதும் அவன் ஒருவன்தான். அவனே அவ்வளவாகவும் நிறைந்திருக்கிறான் என்கிற உண்மை தெரிந்த பின்பும், ஏதோ, நாம் மட்டும்தனி என்பது போன்ற ஒரு நினைப்பு - அறியாமை இருக்கும்.

பாடலைப் பாடப்பாட அந்த மயக்கமும் ஓடி விடும். உடல், பொருள், ஆவி எல்லாம் அவன்தான் என்னும் உண்மை - பேருண்மை தெரியும்.

மெய் காட்டி அருள்வான் பெருமான்.

இனி பாட வேண்டும் என்கிற நினைப்பு இருந்தால் அற்புதமாய்ப் பாட இடம் கொடுக்கும் பாட்டு.

*தானான தனனான*
*தனனான தானான*

என்று ஒரு சந்தத்தை வைத்துக் கொண்டு நிறுத்தி அவசரப்படாமல் மனம் ஒன்றிப் பாடலைப் பார்த்தாலே போதும். பாட வந்துவிடும்.

பாடலுக்குள்ளேயே ராகம் கிடக்கிறது. தாளம் கிடக்கிறது. நடை, விந்நியாசம், சங்கதி எல்லாமே பாட்டுக்குள் கிடக்கின்றன.

பொறுமை இருந்தால் போதும். நம் உணர்ச்சிக்குள் புகுந்து நிறைந்து விடும் அவை. பாடலோடு தம்மைச் சேர்த்து எங்களைப் பாடிக் காட்டுக; பாடிக் காட்டுக என்று நம்மை நெருக்கும் அவை.

சங்கதி, பிரிக்கா, ஏற்றம், ராகம், தாளம், நெளிவு, சுளிவு எல்லாம் வெளியில் கிடப்பதாக நினைக்கக் கூடாது. அவற்றை எல்லாம் சேகரித்து பாடலில் இணைக்க வேண்டுமே என்றும் தயங்கக் கூடாது. பாடலோடு பாடலாய் அவை கிடக்கின்றன. பாடவேண்டும் என்று ஆசைதான் வரவேண்டும். அதுவும் வந்துவிடும். அதற்கு இது பாட்டுத்தான் என்கிற புத்தி இருந்தாலே போதும்.

மெய்காட்டி அருளும் பாட்டு.

இனி, உண்மையானது சகல அம்சங்களிலும் பிரகாசிக்க வேண்டும். அதற்காக எப்போதும் பொய்யை விரட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

பொய்யை விரட்ட விரட்டத்தான் உண்மைக்கு ஊக்கம். உறுதி.

இதையே லட்சியமாகக் கொண்டு சமுதாயம் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது.

*"நெய்யொரு திரிஒக்கச்*
*செய்யானைச் சேர்வார்க்கு;*
*பொய்யாத உள்ளமே*
*மெய்யாதல் வேண்டுமே"*

லட்சியத்தை இப்படி அப்போதைக்கப்போது பிரகடனம் பண்ணி வந்திருக்கிறது சமுதாயம்.

ஆனால் பொய்யோ மிகமிகத் தந்திரம் நிறைந்தது. நரியை விடத் தந்திரம் மிக்கது. எவ்வளவு உசாராய் இருந்தாலும் எப்படியோ நுழைந்து விடும் பொய். இது சம்பந்தமாக ஒரு விஷயம்.

பரம் பொருளோடு ஒன்றுவதற்கு இல்லறம் ஒத்து வராது. மனைவி, மக்கள், சுகம் இவை காரணமாக அன்பும் பாசமும் பெருகிக்கொண்டே போகும். அப்படி உணர்ச்சியானது இந்தப் பக்கமே வலுப்பட்டுக்கொண்டு போனால் பிறகு கடவுளை எப்படிப் பார்க்க முடியும்.

பார்க்க வேண்டும் என்றால் குடும்ப வாழ்க்கை கூடாது, சந்நியாசந்தான் ஏற்றது.

இப்படி ஒரு அசட்டுத்தனம் பொய் எப்படியோ சமுதாயத்துள் நுழைந்து விட்டது. சமணமும் பௌத்தமும் அந்தப் பொய்க்கு எண்ணெய் ஊற்றி வளர்த்தன.

என்னடா இது ஆபத்தாய் போய் விட்டதே என்று இறைவனே திகைத்துவிட்டார். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே என்று கலங்கிவிட்டார்.

சரி சரி இதற்கு ஒரே ஒரு வழிதான். நாமே இல்லற நயத்தைச் செயலில் காட்டிவிட வேண்டியதுதான்.

மனைவி மக்களோடு அன்பாக, உணர்ச்சி பூர்வமாக இருப்பதுதான் மெய்மை. அதுதான் வீடுபேறு என்பதை நாமே நடத்திக் காட்டிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து விட்டார் பெருமான்.

அதற்காகவே சிவன், சக்தி என்று இரண்டு உருவங்களாக (விகிர்தனாக) மாறினார்.

உமையொரு பாகனாய் அம்மையப்பனாய் கோயில் தோறும் வந்து உட்கார்ந்து கொண்டார். திருவையாற்றுக் கோயிலிலும் அப்படியே கணவனும் மனைவியுமாக குடும்ப வாழ்க்கை நடத்தினார்.

ஆடல், பாடல் என்று ஒரே களிப்பில் ஜாம், ஜாம் என்று நடக்கிறது இறைவனுடைய குடிப்பிறப்பும் வாழ்க்கையும்!

இந்த உண்மை எப்படிப் பாடலாய் உருவெடுத்து வருகிறதென்று பாருங்கள்.

*"வேந்தாகி விண்ணவர்க்கும்*
*மண்ணவர்க்கும் நெறிகாட்டும்*
*விகிர்தன் ஆகி,*
*பூந்தமா நறும்கொன்றை*
*சடைக்கணிந்த புண்ணியனார்*
*நண்ணும்கோ யில்;*
*காந்தார இசை அமைத்துக்*
*காரிகையார் பண்பாடக்*
*கவினார்வீ தித்*

*தீம்தாம் என்(று) அரங்கேறிச்*
*சேயிழையார் நடம்ஆடும்*
*திருவையா றே''*

வெங்காயத்தின் தோலை நேற்றுத்தான் உரித்து விட்டோமே இன்றைக்கு ஏன் உரிக்க வேண்டும் என்று விட்டு விட முடியுமா?

மாறி மாறி உரிக்க வேண்டியதுதான். பொய்யின் தோலையும் அப்படியே தொடர்ந்து உரித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

இறைவனுக்கு விரோதமானது இல்லறம் என்று எப்படி எளிதாய் ஏமாற்றிவிட்டது பொய்.

பலபேரை மயக்கிப் பைத்தியமாக்கி விட்டதே பொய். சந்நியாச மயக்கம் என்கிற பொய்யிடம் விழிப்போடிருக்க வேண்டும். தொடர்ந்து செயல்பட்ட வண்ணமாகவே இருக்க வேண்டும். அதாவது பொய்யின் வாலை ஒட்ட நறுக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் உண்மையானது உள்ளத்தில் காலூன்றி நிற்கும்.

பாடலாகவும் இசையாகவும் கண்முன் வந்து நிற்கும். கோயிலென்றும், கோபுரம் என்றும், திருக்கல்யாணம் என்றும், திருப்பள்ளி எழுச்சி என்றும் வாழ்க்கையாகவும் கலையாகவும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் உண்மை. பேருண்மையாகிய பரம்பொருள்.

இனி ஆகாய கங்கையைச் சடையின் ஒரு ரோமத்தில் அடைத்து வைத்திருக்கிறார் பெருமான். பிரமாண்டமான நட்சத்திர வட்டங்களையே சிறு சிறு மலர்களாக அந்தச் சடையில் சொருகி இருக்கிறார்.

சர்வ வியாபகமாய் நிறைந்து நிற்கும் பெருமானை குறிப்பிட்ட ஒரு உருவத்தில் பார்க்க முடியாது. உருவமே இல்லாத அருவம் என்றுதான் இறைவனை நினைக்கத் தோன்றும்.

ஆனாலும் கோயில், பாடல், இசை என்று அவதாரம் எடுத்துத் தரிசனம் கொடுக்கிறான் பெருமான்.

உணர்ச்சிமயமாக உள்ளே உள்ளே கசிகிறான். கசியக் கசிய வெளியே கண்குளிரக் காட்சி தருகிறான்.

இது சம்பந்தமாக ஒரு பழம் பாடல்

தான தான
தனன தான

*ஒருவான் யாறு*
*ஒருச டாடவி*
***பெருநா கமே***
***பூணும்பெ ருமான்***
***அருவா யினான்***
***ஆயினும் அன்பர்க்கு***
***உருவா யினான்***
*உள்ளத்தின் உள்ளே*

*வான்யாறு - ஆகாய கங்கை, சடாடவி - காடு போன்ற சடை சடைக்காடு. அடவி - காடு, நாகம் - கோடி சூரியப் பிரகாசமான பாம்பு, அதாவது பல கோடி நட்சத்திரங்கள் ஒரு தொகுதியாய் வான வெளியில் கிடக்கிற பிரமாண்டமான வட்டம். நட்சத்திர வட்டம்.*

இதைப் பாலாறு என்று சொல்வது மரபு. 'மில்க்கிவே' என்று அழைப்பது வானியல் வழக்கு.

எங்கும் நிறைந்த நீர் என்னும் தத்துவம் சடைக்குள் கிடந்து திமுறுகிறது. நட்சத்திர வட்டம் என்னும் பாலாறுகளோ

அங்கங்கே சடைக்கு முடிச்சுப் போட்டு வெளியிலிருந்து சடையை அலங்கரிக்கிறது.

அப்படி ஒரு திருவோலக்கக் காட்சி பெருமானிடம். அந்தக் காட்சியோடு எழுந்தருளி நிற்கிறார் பாடலில், இசையில் கோயிலில்

எல்லாம் பக்தர்களின் கண்களுக்குத்தான் அதுவும் பொய்யை விரட்டி விரட்டி மெய்யில் திளைக்கிற பொழுது தான்.

இனி மூர்த்தியைக் கண் கொண்டு பார்க்கப் பார்க்க அதாவது அடிக்கடி சந்திப்பதால் இறைவனோடு பழக்கம் உண்டாகும்.

பழகப் பழகக் கூச்சம் விலகும் அவன் வேறு, நான் வேறு என்கிற வேற்றுமை விலகிவிடும். பிறகு ஒரே கும்மாளம்தான் கேலியும் கிண்டலுமாகவே வரும் பேச்சு. எப்படி என்று பார்ப்போம்.

திருக்கோலக்கா அழகான ஊர். நீர் வளமும் நில வளமும் நிறைந்த செழிப்பான ஊர்.

ஊரை ஒட்டி பெரிய பொய்கை. நீர் நிரம்பித் ததும்பும் தாமரைக் குளம்.

பெண்கள் - வயதுக்கு வந்த இளம் குமரிகள்கூட அங்கு வந்துதான் நீராடுவார்கள்.

நீராட நீராட அப்படியொரு சுகம் கொடுக்கும் தாமரைப் பொய்கை.

குளக்கரையை ஒட்டி ஒரு கோயில். அதில் எழுந்தருளி குளத்தைப் பார்த்தபடியே அருள் பாலித்து வீற்றிருக்கிறார் பெருமான்.

அலங்காரம் தோரணை எதுவுமே இல்லாமல் வெறும் கோவணாண்டியாய் சிக்கு விழுந்த சடையோடும், அதில் சூடி

இருக்கும் வெள்ளெருக்கம் பூவோடும் அமர்ந்திருக்கிறார் பெருமான்.

அள்ளி அள்ளிச் சாம்பலை வேறு பூசி இருக்கிறார். சரியான கோமாளிக் கோலம். இந்த அதிசயத்தைப் பார்த்து விட்டார் ஆளுடைய பிள்ளையார். திகைத்துப் போனார்.

“ஐயையோ! இது என்ன அநியாயம். பெண்கள் நீராடும் இடத்தில் இப்படியா நிற்பது! கொஞ்சம்கூட வெட்கமாக இல்லை உமக்கு!

பெருமானே! முக்காலே மூன்று வீசம் நிர்வாணத்தில் நிற்க உமக்கு வெட்கமாக இல்லை!'' இப்படிக் கேட்டுக் கடகட வென்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

வயிறு குலுங்க குலுங்கச் சிரிக்கிறார். சிரிப்பு நிற்க மாட்டேன் என்கிறது.

*இனிப்பாடல்*

*மடையில் வாளை*
*பாய மாத*
*ரார்*
*குடையும் பொய்கைக்*
*கோலக் காவு*
*ளான்,*
*சடையும் பூவும்*
*சாம்பல் பூச்சும்*
*கீழ்*
*உடையும் கொண்ட*
*உருவம் என்கொ*
*லோ!*

*வாளை - மீன்கள், குடையும் - நீராடும், மூழ்கி மூழ்கிக் குளிக்கும், சாம்பல் பூச்சு - திருநீற்றுப் பூச்சு. கீழ்உடை - கோவணம்,*

கோயில் இல்லையென்றால், மூர்த்தி இல்லை யென்றால் இப்படி உருண்டு புரண்டு விளையாட முடியுமா பரம் பொருளோடு!

கட்டிப் பிடித்து மல்லுக்கட்டி விளையாட விளையாட அல்லவா பாட்டு வரும்.

பாட்டிருந்தால்தானே அதில் நடந்து நடந்து ராகத்துக்கு நடை வரும். மிடுக்கு வரும்.

சஞ்சாரம் என்றும் விந்நியாசம் என்றும் தாளம் என்றும் ராகத்தில் உருவம் உண்டாகும்.

இசையோடு கூடிய இந்தப் பாடல்கள்தான் இறைவனுக்கு அபிஷேகம், பாலாபிஷேகமும் பன்னீர் அபிஷேகமும் பாடல்தான்.

கண்கொள்ளாக் காட்சியாய் இறைவனை அலங்கரிப்பது இத்தகைய பாடல்கள்தான். ஆராதனையும் பாடல்கள்தான்.

சேவிக்க வரும் பக்தர்களை எல்லாம் உருக்கி விடும் பாடல். இறைவனை உருக்குவது மாதிரியே பக்தர்களையும் உருக்கிவிடும் பாடல்.

பாடல்களை நாதசுரம் வாங்கி வாசிக்க வாசிக்க இசை யானது பாடலைப் பிழிந்து தேனாய் வடித்துவிடும். பிறகு சந்நிதானத்தை எப்படி மறப்பார்கள் பக்தர்கள்.

மூர்த்தி, பாட்டு, நாதசுரம் என்று தொடர்ந்து வந்த வண்ணமாகவே இருக்கும். பக்தர்களின் உள்ளத்தில்.

வீடுவந்த பிறகும் சாப்பிடும் போதும், தூங்கும்போதும் கூட அந்த அந்த உருவங்கள் கண்முன் வந்து நிற்கும்.

ஒன்று மறந்தால் இன்னொன்று வந்து அதை ஞாபகப் படுத்திவிடும்.

இவ்வளவுக்கும் மசியாத கல்லுளிமங்கன் ஒருவன் இருக்கிறான் என்றால் அவன் பழிபாவத்துக்கு அஞ்சாத சண்டாளன். பஞ்சமாபாதகன்.

அவனை வீட்டு வாசலில் ஏறவிடக் கூடாது இதை எப்படிச் சுட்டிக் காட்டுகிறது பாட்டு!

*கல்லா நெஞ்சின்*
*நில்லான் 'நாமம்'*
*சொல்லா தாரொடு*
*அல்லோம் நாமே.*

இனி; கோயில் இருக்கும் இடத்தில் நடமாடினாலே போதும். கோபுரத்தைப் பார்த்தாலே போதும்.

திருவிழாவிலும் கூட்டத்திலும் சேர்ந்து கலந்து திரிந்தாலே போதும்.

காந்தமும் காந்தமும் ஒட்டுவதற்கு முனைவது போல் அழகையும் ஆனந்தத்தையும் நாடித் தவிக்கும் மனம்.

உச்சிமுதல் உள்ளங்கால் முடிய தேகம் முழுவதும் மனம் முழுவதும் அணுவுக்கு அணுமூடி மறைத்திருக்கும் திரை - அறியாமை - பொய் மெள்ள மெள்ளக் கலையும்.

உண்மை கொஞ்சம் கொஞ்சமாகக் கண் திறந்து பார்க்கும்.

மயிலாடுதுறைக்கு (மாயவரத்துக்கு) வந்து சம்பந்தப் பெருமான் அதில் காலடி வைத்தாரோ இல்லையோ புளகாங்கிதம் பொங்கிவிட்டது.

காரணம் யாருக்குத் தெரியும்?

எத்தனை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எத்தனை எத்தனை லட்சோபலட்சம் மக்கள் நடமாடிய இடம் அது?

எத்தனை கோடி கரங்கள் கோபுரத்தை நோக்கி உச்சிமேல் வைத்துக் குவிந்தன. எத்தனை கோடி கண்கள் ஆனந்தத்தைக் கண்ணீராய் கரைத்துக் கொட்டின.

*இனிப்பாடல்*

*ஊனத்(து) இருள்*
*நீங்கிட வேண்டில்,*
*ஞானம் பொருள்*
*கொண்டிட வேண்டில்*
*தேன்ஒத் தினி-*
*யான் அமரும்சீர்*
*வானின் மயி*
*லாடு து றையே!*

*ஊனத்து இருள் - ஆணவம், உடலோடு ஒட்டிப் பிறந்த ஆணவம். ஞானப் பொருள் - உண்மை ஒளி. தேன்ஒத்து இனியான் - தேன் போலத் தித்திக்கும் இறைவன். வானின் - மேகத்தைப் பார்த்து மயில் ஆடுதுறை - உல்லாசம் கொண்டு மயில்கள் நடனமாடும் ஊர் மயிலாடுதுறை.*

சொல்லுக்குச் சொல் அசைக்கு அசை. சீருக்குச் சீர் கணீர் கணீர் என்று தாளம் கேட்க வேண்டும்.

அவசரப்படாமல் நிறுத்தி நிதானமாகப் பாடினால் பாடலுக்கு உள்ளே தாளம் ஒலிக்கும்.

பாடலின் நாடித்துடிப்பு அதுதான்.

அது செவியில் விழுந்தால் போதும் பரம்பொருளே பாடலுக்குள்ளிருந்து வெளிப்படுவார். ஆனந்த நடனம் ஆடிய படியே காட்சி கொடுப்பார்.

# 2

இனி படித்தவர், படியாதவர், ஆண், பெண், ஏழை, பணக்காரன், இளைஞர், வயதானவர் என்கிற பேதம் இல்லாமல் எல்லாரையும் மனிதர்களாக மதித்தார் ஆளுடைய பிள்ளையார்.

மக்களின் உணர்ச்சிகளை ஒவ்வொரு உணர்ச்சிகயையும் அவற்றின் நாடி நரம்பு ஒவ்வொன்றையும் தெய்வத்தை மதிப்பதுபோல மதித்தார் பிள்ளையார் - ஞானசம்பந்தப் பிள்ளையார்.

பேதம் இல்லாமல் ஒன்றாய்க் காணுகிற காட்சிதான் ஞானம். ஞானத்தோடு உறவு கொண்டாடுகிற சம்பந்தமும் அதுதான்.

பாவாடை கட்டி முற்றத்திலும் தெருவிலும் தோழி களுடன் விளையாடி கொண்டிருந்த பேதை - சின்னஞ்சிறிய பேதைப் பெண் திருமணம் ஆனவுடன் எப்படிப் பொறுப்பு மிக்க தலைவி (குடும்பத்தலைவி) ஆகிவிடுகிறாள்.

ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டால் போதும் அணு அணுவாக அவள் தேகம் முழுவதையும் இதயம் முழுவதை யும் உருக்கி கருணையைப் பிழிந்து கொட்டி விடுகிறது தாய்மை.

குழந்தையை உயிருக்கு உயிராக வளர்க்கிறாள். உடலை மட்டுமல்ல. உள்ளத்தை, உணர்ச்சியை, பண்பாட்டை, கல்வியை ஒழுக்கத்தை எல்லாவற்றையுமே குழந்தையினி டத்துப் பூத்துக் குலுங்கும்படி வளர்க்கிறாள் தாய்.

பொறை உடைமை, அருள், தியாகம், ஞானம், வீரம் என்றெல்லாம் சொல்கிறோமே இவை எல்லாம் எங்கே இருக்கின்றன. எங்கே உதிக்கின்றன.

உல்லாசத்துக்குள்ளும் கண்ணீருக்குள்ளும், அமிர்தப் பாலுக்குள்ளும், கண்டிப்புக்குள்ளும் தாய்மையைப் பொதிந்து வைத்துக் கொண்டே பெண்மையைப் பாதுகாத்து வளர்க்கிறாளே தாய். அந்தத் தாய் என்னும் சன்னிதானத்தி லிருந்துதான் அத்தனையும் உதிக்கின்றன.

குழந்தை வளர வளர அன்போடு கட்டுப்பாடும், கண்டிப்பும் சேர்ந்து கைக்கோத்தபடி வளரும் தாயிடம்!

விதவிதமாகக் கோபம் வரும். அப்படியே எரிச்சல் வரும், வியப்பு வரும், சிரிப்பு வரும், அருவருப்புக் கூட வந்து விடும். குழந்தையின் சிறப்பு நோக்கிப் பெருமிதம் பொங்கும். அது தடுமாறத் தடுமாற சோகம் பழுத்துக் கண்ணீராய் ஒழுகும்.

நவரசங்களும் தாயிடமிருந்து ஜொலிக்கும். சூரியப் பிரகாசம், நட்சத்திரப் பிரகாசம், ஞானப் பிரகாசம் எதுவும் தாயின் உணர்ச்சிப் பிரகாசத்தின் முன் நிற்க முடியாது.

வயதுக்கு வந்த தன் பெண் குழந்தையை எப்படிக் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்கிறாள் தாய்.

பெண்ணின் ஒவ்வொரு அசைவையும், ஒவ்வொரு போக்கையும், ஒவ்வொரு சொல்லையும், ஏன் ஒவ்வொரு பார்வையையுமே மனசால் வாங்குவாள் தாய். உணர்ச்சியில் வைத்து ஒவ்வொன்றையும் உரசி உரசிப் பார்ப்பாள். உள்ளே உள்ளே என்ன இருக்கிறது என்று மோப்பம் பிடிப்பாள். தடத்தையையே கண்டுபிடித்து விடுவாள் தாய்.

அதனால் பருவ மங்கைக்கு கட்டுப்பாடு இறுக்கும். கண்டிப்பு நெருக்கும். காவல் கண்காணிப்பு எல்லாம் வரும்.

சில சமயம் மகள் மேல் எரிச்சல் கூடி வசவில் இறங்கி விடுவாள் தாய். மகளுக்குத் தெரியப்பட்டினி கிடப்பாள். விதியை நொந்து புலம்புவாள். "உனக்கு ஏன் இடைஞ்சலா

நான் இருக்க வேண்டும். பச்சை நாவி (விஷம்)யைத் தின்று நான் செத்து தொலைகிறேன். உன் இஷ்டப்படி நீ எப்படி அலைய வேண்டுமோ அப்படி அலைந்து தொலை!'' என்று மயங்குவாள்.

இவ்வளவையும் சமாளித்து ஒன்றுமே தெரியாதது போல பாவலாப் பண்ணி நடந்து கொள்வாள் பெண். அது மட்டுமல்ல, அவள் பழகுகிற பையனோடு ஒழுங்காகப் பழகிக் கொண்டுதான் இருப்பாள் பெண்.

ஒரு கட்டத்தில் இனியும் தாயோடு இருந்து காலம் தள்ள முடியாது என்கிற முடிவுக்கு வருகிறாள் பெண். பையனின் கையை இறுகப் பற்றியபடியே இரவோடு இரவாகக் கிளம்பிப் போய்விடுகிறாள்.

விடிந்ததும் விடியாததுமாக எழுகிறாள் தாய். மகளைத் தேடுகிறாள்; பரபரக்கிறாள், பயப்படுகிறாள், கண்ணீர் விட்டு கதறுகிறாள்.

மகள் மேலிருந்த கோபம் எல்லாம் கொஞ்சம் கொஞ்ச மாக விலகுகிறது. பரிவே உண்டாகி விடுகிறது.

"அவளை என்னபாடு படுத்திவிட்டேன் பாதகத்தி! ஒருநாள் ஒரு பொழுதாவது அவளை நிம்மதியாக இருக்க விட்டேனா? என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறாள்.

புது மாப்பிளையும் புதுப் பொண்ணுமாக வாசலில் வந்து இறங்க மாட்டார்களா என்று தவிக்கிறாள். அப்படி வந்து சேர்வார்களா என்று ஏங்குகிறாள்.

தாய்மையின் இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பைப் பார்க்கிறார் ஞானசம்பந்தர்.

அவர் பார்த்த தாய் ஒரு தீவிரமான சைவ பக்தை என்று தெரிகிறது.

"மயிலாப்பூரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பெருமானே என் மகளுக்கு ஆசை காட்டி என்னை மோசம் பண்ணிவிட்டான் என்று சோர்ந்து துவள்கிறாள்"

அது போகட்டும் இன்று குரு பூஜை. சிவனடியார்களுக்கு வீட்டில் விருந்து.

விருந்தினர்கள் வந்து விட்டால் இலையைப் போடுவாள்; தண்ணீர் கொண்டு வந்து வைப்பாள்; காய்கறிகளை நான் பரிமாறும்போது சாதத்தை எடுத்துக் கொண்டுவந்து வைப்பாள்.

யார் யார் எதை எதைப் பிரியமாகச் சாப்பிடுகிறார்கள் என்று கவனிப்பாள் அதை அதை அவரவர்களுக்கு எடுத்து வைப்பாள்.

வேலை என்றால் போதும். உற்சாகமாகச் செய்வாள். பம்பரமாகச் சுற்றிச் சுற்றி பணிவிடை செய்வாள் பெண்.

இன்று குரு பூஜை என்று தெரிந்தால் அவள் வந்து விடுவாள். இன்றுதான சிவனடியார்களுக்கு விருந்து என்பது அவள் ஞாபகத்துக்கு வருமா? இப்படித் தவிக்கிறாள் தாய்.

அப்படியொரு தாய் தவிப்பதாக சம்பந்தப் பெருமானுக்கு ஒரு மனக்காட்சி. நாடகக் காட்சி.

அந்தக் காட்சியும் அனுபவமும் வைரம் விளைந்தது போலக் கவியாய் விளைந்து வருகிறது.

"நற்றாயிரங்கள் - சுரம் போக்கு' என்னும் நாடகத் துறையைச் சேர்ந்தது பாட்டு - இசைப்பாட்டு.

*மட்டிட்ட புன்னையங்*
*கானல் வளமயி*
*லைக்*
*கட்டிட்டம் கொண்டான்*
*கபாலீச்சு ரம் அமர்ந்*
*தான்*

*ஒட்டிட்ட பண்பின்*
*உருத்திர பல்கணைத்*
*தார்க்(கு)*
*அட்டிட்டல் காணாதே*
*போதியோ பூம்பா*
*வாய்*

*மட்டிட்ட - கமகம என்று மணக்கும்,; புன்னை அம்கானல் - புன்னை மரங்கள் பூத்து நெருங்கிய கடற்கரை; ஈர மணலோடு கூடிய சுகமான இடம்;*

*வளமயில் - பெண். கட்டு இட்டம் கொண்டான் - வசக்கிக் கையில் போட்டு கொண்டான்; கபாலீச்சரம் அமர்ந்தான்; மயிலாப்பூரில் கோவில் கொண்ட கபாலீசுவரன். ஒட்டிட்ட ஒத்த உணர்ச்சியோடு கூடிய உருத்திர பல் கணத்தார் சிவநெறியில் பல பிரிவுகளைச் சேர்ந்த அடியார் திருக்கூட்டம்; அட்டு இட்டல் - சமைத்து விருந்து படைக்கும் இந்த ஆனந்தத்தை காணாதே போதியோ - பார்க்க மனம் வரவில்லையா? மறந்து எங்கே போய் கொண்டிருக்கிறாய்; பூம்பாவாய் - அருமை மகளே எங்கே போய் விட்டாய் நீ? எப்படி மறந்தாய் இந்த அற்புதத் திருநாளை!*

பிரித்துக் காட்டி இருக்கிற முறையில் பாடலைப் பாடிப் பார்க்க வேண்டும். பாட்டில் அவசரம் காட்டக் கூடாது. பொறுமைதான் முக்கியம்.

## 3

இனி, உண்மையை (கடவுளை)க் கண்டு அதனோடு திளைப்பதில் தான் நிம்மதி. காரணம் :

மனிதன் இளைப்பாறுவதற்கும் ஒதுங்குவதற்கும் அது ஒன்றுதான் இடம்.

உண்மையைக் (கடவுளை) கண்டு தெளிய ஒரு வழி வேண்டுமே.

மனித மனத்தில் உதிக்கும் உணர்ச்சிகள்தான் கையில் விளக்கைப் பிடித்துக் கொண்டு வழிகாட்டியபடியே போகும்.

பின் தொடர்ந்து நாம் வருகிறோமா என்பதைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே அந்த உணர்ச்சிகள் அடிமேல் அடிவைத்து நடக்கும்.

தொடர்ந்து போனால் உண்மையின் (இறைவன்) சந்நி தானத்திற்கே கொண்டு போய் விட்டுவிடும். உணர்ச்சிகளும், அந்த உணர்ச்சிகள் உருவெடுத்த கலை களுமே உண்மையை (இறைவனை) காட்டும் சாதனம்.

ஞானசம்பந்தப்பெருமான் இந்தச் சாதனங்களைப் பெற்றவர். குறைவறப் பெற்றவர்.

பெற்றது மட்டுமல்ல, இந்தச் சாதனங்களுக்கே கூர்மை யும், வலுவும், பிரகாசமும் கொடுத்து அவற்றுக்கு உற்சாகம் ஊட்டியவர் ஆளுடைய பிள்ளையார்.

சம்பந்தப் பெருமானுக்கு மட்டும் உண்மையைக் கண்டுணரும் திருவருட்பேறு கிடைத்துள்ளது. அதுபோல மற்றவர்களுக்கு ஏன் அது கிடைக்கவில்லை.

கோடான கோடி மக்களில் ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் அது ஏன் கிடைக்க வேண்டும்.

இப்படிக் கேட்கத் தோன்றும். இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல நமக்குத் தெரியாது.

இதற்குப் பதிலுரைக்கும் பக்குவம் மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது.

ஆனால் ஒரு கருத்தைச் சொல்லலாம்.

அதாவது, பள்ளிக்கூடம் (குருகுலம்) படிப்பு (உபதேசம்) பாடம் (சாத்திரம்) தேர்வு (சோதனை) இவை ஒன்றுக்கும் கட்டுப்படவில்லை ஞானசம்பந்தர்.

இவற்றை தூக்கித்தூர எரிந்து விட்டார் ஞான சம்பந்தர்.

கோவில், கோபுரம், பாட்டு, நாதசுரம், தாளம், இசை, மூர்த்தி, வழிபாடு, மக்கள், வாழ்க்கை, உணர்ச்சி, மரங்கள், புஷ்பங்கள், பறவைகள், விலங்குகள் இவற்றையும் இவை போன்றவற்றையுமே ஞானசம்பந்தர் பார்த்தார்.

மனம் ஒன்றிப் பார்த்தார். நேருக்கு நேராகப் பார்த்தார்.

ஒவ்வொன்றும் இறைவன் கொலுவீற்றிருக்கும் சந்நிதான மாகவே அவருக்கு இருந்தன.

ஒவ்வொன்றிலும் ஆயிரம் ஆயிரம் தத்துவங்கள் நின்று அப்படியும் இப்படியும் செயல்படுகின்ற அற்புதத்தைப் பார்த்தார்.

குழந்தை பார்த்து அனுபவிப்பது போலவே ஒவ்வொரு அதிசயத்தையும் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார். அவர் (பிள்ளையார்) குழந்தைதானே! ஆளுடைய பிள்ளையார் தானே!

நமக்கும் ஞானசம்பந்தப் பெருமானுக்கும் அடிப் படையில் வேறுபாடுகள் பலபல இருக்கலாம். அவற்றில் இந்த ஒன்றுதான் நமக்குத் தெரிந்தது.

உணர்வில்லாத அறிவும் படிப்பும் பிழைப்புக்கு உப காரமாக இருக்கலாம். வாழ்க்கைக்கு உபகாரம் பண்ணலாம். ஆனால் இதயத்தை உணர்ச்சியை, பண்பாட்டை, கலை நலன்களை எல்லாவற்றுக்கும் மேலாக உண்மையை எப்படி அமுக்கி அதல பாதாளத்திற்கே தள்ளி விடுகின்றது. அக்கல்வி என்பது ஞானசம்பந்தருக்கு மட்டுமே தெரிந்தது. ஏனைய அருளாளர்கள் சிலருக்கும் தெரிந்தது.

நமக்குத் தெரியாமலே போய்விட்டது. இதை ஒரு புராணக் கதையில் வைத்துக் காட்டுகிறார் பிள்ளையார்.

சனகாதி முனிவர்கள் நால்வர். சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர்கள். சகல விபரங்களும் அவர்களுக்கு அத்துபடி. அதனால் நிம்மதி மட்டும் அவர்களிடம் இல்லை. ஆனந்தம் இன்னதென்று தெரியாமல் போய்விட்டது அவர்களுக்கு.

சிவபெருமானிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். நாலு வரியில் சொல்லிவிடலாம். ஆனால் பேச்சுக் கொடுத்தால் விஷயத்தைத் தும்புதும்பாய்ப் பிய்த்து எறிந்து விடுவார்கள் முனிவர்கள் என்பது பெருமானுக்குத் தெரியும்.

வார்த்தைகளைப் போட்டு வித்தை அடிப்பதில் அப்படி ஒரு வெறி முனிவர்களுக்கு.

அதனால் விளக்கத்தை வார்த்தைகளால் சொல்லவில்லை பெருமான். சொன்னால் இந்த ஜென்மத்தில் புரியாது அவர் களுக்கு.

வண்டி வண்டியாய் அல்லவா சாஸ்திரங்கள், வியாக் யானங்கள், விரிவுரைகள், பொழிப்புரைகள், இலக்கண விளக்கங்கள், மறுப்புகள், மறுப்புக்கு மறுப்புகள் என்று மண்டைக்குள் அடைந்து கிடக்கின்றன அவர்களிடம்.

நூலாம் படை படர்ந்து மூடியது மாதிரி நூல்கள் அவர்கள் மூளையை மூடி மறைத்து விட்டன.

பிறகு என்ன செய்தார் பெருமான்?

ஆலமரத்து நிழலில் நான்கு பேரையும் உட்காரச் சொன்னார் பெருமான்.

இலை, பூ, காய், பழம், வித்து, வேர், விழுது, மரநிழல் ஒவ்வொன்றையும் அதனுள் நிகழும் அற்புதங்களையும் பார்க்கும்படி வைத்துவிட்டார் சிவபெருமான்.

ஐந்தே நிமிடத்தில் நூலாம்படை முழுவதும் ஒட்டடை அடிக்கப்பட்டுவிட்டது முனிவர்களுக்கு.

இதை அனுபவிக்கும் குழந்தை ஞானசம்பந்தரோ,

சேய்ஞலூரில் எழுந்தளியிருக்கும் பெருமானிடம் கேட்கிறார்,

"முனிவர்களிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் தத்தவங்களை எல்லாம் விளக்கினீரே அது எப்படி?" என்று கேட்கிறார்.

*இனிப்பாடல்*

*'நூல்அ டைந்த*
*கொள்கை யாலே*
*நுன் அடி கூடுதற்*
*கு*
*மால்அ டைந்த*
*நால்வர் கேட்க*
*மாற்றமே சொல்லிடா*
*மல்*
*ஆல்அ டைந்த*
*நீழல் மேவி*
*அருமறை சொன்னதென்*
*ன?*
*சேல்அ டைந்த*
*தண்க ழனிச்*
*சேய்ஞலூர் மேயவ*
*னே!*

*நுன்அடி - உன் திருவருளை, அடி, அருள்.*

*நீழல் - நிழல், சேல் - மீன்.*

அற்புதமான பாடல், தமிழ், பண்பாடு, கலை, கோயில் வழிபாடு எல்லாவற்றையும் மீட்டுத்தந்த பிள்ளையார் - ஞான சம்பந்தப் பிள்ளையார் இது போன்ற பாடல்களில் கொலு வீற்றிருக்கிறார். எல்லோரும் கண்டு களிக்கலாம்.

# III சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## 1

சுந்தர மூர்த்தி சுவாமிகளும் ஓர் அவதார புருஷர்தான். ராமபிரான் போலவோ, புத்த பகவான் போலவோ. சுந்தரர் அவதாரம் அமையவில்லை.

கிருஷ்ண பகவான் போன்ற கோகுல கிருஷ்ணன் போன்ற அவதாரம்தான் சுந்தரமூர்த்தி நாயனாரின் அவதாரம்.

சுந்தரமூர்த்தி நாயனார் எது பற்றியும் அலட்டிக் கொள்ள மாட்டார். எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்னும் நம்பிக்கை உடையவர். அனாவசியமாக நாம் போய் குறுக்கிடாமல் இருந்தால் போதும். ஒன்றும் பிசகாது. இப்படி ஒரு நம்பிக்கை உடையவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

பயம் என்பது அவர் பக்த்தில் வராது. கவலை என்பதும் அப்படிதான். எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பார். அப்படி ஓர் உல்லாசமான போக்குடையவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன் திருநாவலூர் என்னும் ஊரில் பிறந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தந்தையார் பெயர் சடையனார். தாயார் பெயர் இசைஞானியார்.

சடையன், சடையப்பன் என்றால் ஆடல் வல்லானாகிய நடராஜமூர்த்தியை சிவபெருமானைக் குறிக்கும்.

தாயின்பெயர், தந்தையின் பெயரை வைத்துப்பார்க்கும் போது சுந்தரமூர்த்தி நாயனாரின் பரம்பரை இசைத்துறையைப் பேணி வளர்த்த பெரிய குடும்பம் என்று தெரிகிறது.

பக்தி வழிபாடு, மெய்யுணர்வு நிரம்பிய குடும்பம் சுந்தர மூர்த்தி நாயனாரின் குடும்பம். அதோடு பாட்டு, இசை வாத்தியம், தாளம் முதலிய அருங்கலைகளும் செழித்து வளர்ந்து வந்துள்ளது அந்தக் குடும்பத்தில்.

பல தலைமுறைகளாகவே கலைஞானமும் மெய்ஞ் ஞானமும் நிரம்பிய பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்ந்து வந்திருக்கிறார்கள் தாய் தந்தையர், பாட்டன், பூட்டன் என்ற முன்னோர்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்தது அந்தணர் குலத்தில்.

அந்தணர் என்றால் ஆதி சைவர். நாம் இப்பொழுது நினைக்கிற பிராமணர் இல்லை.

சைவ மக்களில் ஒரு பிரிவினர். பூசை, வழிபாடு முதலிய கோவில் காரியங்களையே செய்து வந்தனர். அவர்களைக் குருக்கள் அல்லது அந்தணர் என்று சொல்வார்கள்.

இன்னொரு பிரிவினர் சமய சம்பந்தமான தத்துவ ஆராய்ச்சி பண்ணினர். மற்றவர்களுக்கு அது பற்றிய விளக்கம் கொடுத்தனர்.

அவர்களுக்குத் தேசிகர் என்று பெயர். மற்றொரு பிரிவினர் கோயில்களில் பாடுகிறவர்கள். இவர்களுக்கு ஓதுவார் என்று பெயர்.

சைவ மக்களில் இந்த மூன்று பிரிவினர் மட்டும் சிறுபான்மையினர் ஏனைய பெரும்பான்மைச் சைவர்கள் விவசாயம் வணிகம், உத்யோகம் என்று வாழ்ந்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனார் குருக்கள் மரபினர். அதாவது அந்தணர் மரபு.

கோயிலோடு, அதிலும் மூர்த்தியோடு சம்பந்தப் பட்டவர்கள் இவர்கள் மட்டுமே. அதனால் இவர்களுக்கு சமுதாயத்தில் மரியாதையும் மதிப்பும் அதிகம். ஆதிசைவர் என்னும் பெயரிலேயே அந்த அந்தஸ்து இருக்கிறது.

கோயில் காரியம் -அதுவும் மூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, பூசை ஆகிய காரியங்களிலேயே இவர்கள் இருந்ததால் 'எப்போதும் திருமேனி தீண்டுவார்' என்ற உயர்ந்த பட்டம் இவர்களுக்கு.

பட்டம் மட்டுமா? தேவாரம், இசை, நடனம், மேளம், தாளம், ஓவியம், சிற்பம், ஆகமம் முதலிய கலைகளில் மிக்க ஈடுபாடும் அனுபவமும் இவர்களுக்கு வந்துவிட்டன.

பள்ளிக்கூடம் போய்ப்படிக்காமலேயே அனுபவத்தின் மூலம் கலை உணர்வும் மெய்யுணர்வும் பெற்றவர்கள் இவர்கள்.

பக்தி, கலை அனுபவம், நல்ல பழக்க வழக்கம் என்று இருந்ததால் இவர்கள் முகத்தில் எப்போதும் ஒரு களை ஒளி இருந்தது. வரையறுக்கப்பட்ட சுத்தமான உணவு, நல்ல எண்ணம், நேர்மையான செயல், என்றிருந்தால் உடம்பும் காத்திரமாக இருக்கும்.

அதனால் அழகாகவும் ஓங்கு தாங்காகவும் இவர்கள் இருந்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பெற்றோரிட்ட பெயர் ஆரூர் நம்பி.

சுந்தரமூர்த்தி நாயனார் ஆறு ஏழு வயதுப் பையனாக இருக்கும் பொழுது அவருடைய அழகில் ஈடுபட்ட நரசிங்க முனையர் என்னும் அரசன் இவரை அரண்மனையில் கொண்டு போய் வளர்த்தான்.

வாலிபப் பருவம்வரை அரண்மனையில்தான் வளர்ந்தார். பிறகு திருமணம் செய்ய வேண்டிய நிலையில் தான் அரண்மனையிலிருந்து வெளியே வந்தார் நம்பி ஆரூரர்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணம் செய்யப் பெண் பார்த்தார்கள் பெற்றோர்.

முகூர்த்த நாளும் வந்தது. உற்றார் உறவினர் கூடினர். திருமணம் நடைபெறும் நேரத்தில் தடங்கல் ஏற்பட்டது.

திருமணமே நின்றுபோனது.

சிலபெருமானே மாறுவேடம் போட்டு வந்து கல்யாணத் தைத் தடுத்துவிட்டார் என்று ஒரு வரலாறு.

சுந்தரமூர்த்தி நாயனார் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அந்த ஆசையிலேயே காலத்தைக் கழித்து விடுவார். அழகிய இனிய தெய்வப் பாடல்கள் தமக்குக் கிடைக்காது என்று சிவபெருமான் திட்டம் போட்டு வேலை செய்தார் என்பது அந்த வரலாறு.

நாடக நயத்தோடு எழுதப்பட்டிக்கிறது வரலாறு.

குலமுறை நெறியோடு நடைபெற இருந்த சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணத்தைத் தடுத்தாட் கொண்டார் சிவ பெருமான்.

காரணம் என்ன? தேன் சொட்டும் பாடல்களைச் சுந்தரர் தம்மீது பாட வேண்டும். அவற்றைக் கேட்டு அனுபவிக்க வேண்டும்.

தமிழும் தமிழ்ப் பண்பாடும் மேலும் உரம் பெற வேண்டும். இந்த ஆசை தான்.

ஆனால் திருவாரூரைச் சேர்ந்த பரவை நாச்சியார் மேல் காதல் கொள்கிறார் சுந்தரர். பரவையாரோடு சேர்ந்து வாழத் துடியாய்த் துடிக்கிறார்.

ஆனால் பரவையார் எளிதில் இசையவில்லை. இடம் கொடுக்கவில்லை.

மோக வெறியில் சிக்கிப் பாடுவதையே விட்டுவிட்டார் சுந்தரர்.

பெருமானுக்குப் பாட்டுத்தானே முக்கியம்.

சுந்தரருக்காகப் பரவையாரிடம் பெருமானே தூது செல்கிறார். சிபாரிசு பண்ணுகிறார். இணங்கி சேர்ந்து வாழ் கிறார்கள் இருவரும்.

பிறகு பாட்டு மளமளவென்று வருகிறது சுந்தரருக்கு. பரவையார் நாடகக் கணிகை.

சில ஆண்டுகள் கழித்து திருவொற்றியூர் போகிறார். அங்கு சங்கிலியார் என்னும் பெண்ணைக் கோயிலில் பார்க்கிறார்.

ஆசை வந்து விடுகிறது. அந்தப் பெண்ணையும் ஆளாக்கிக் கொள்ள முனைகிறார். காரியம் கை கூடுவதாக இல்லை. சோர்ந்து விடுகிறார் சுந்தரர்.

பாட்டும் நின்று விடுகிறது.

ஓடி வருகிறார் சிவபெருமான். சங்கிலியாரிடம் தாஜா பண்ணிச் சேர்ந்து வாழ வைக்கிறார்.

சங்கிலியார் வேளாளர் குலம்.

முதல் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்திய பெருமான் பிறகு இரண்டு கல்யாணம் செய்து வைக்கிறார் சுந்தரருக்கு.

அந்த இரண்டு பெண்களிடமும் சிவபெருமான் கெஞ்சி னார். கூத்தாடினார். 'சலாம்'கூடப் போட்டுத் தொலைத்தார்.

ஏன் இப்படி ஒரு நாடகம் ஆட வேண்டும் பெருமான்? விளங்க மாட்டேன் என்கிறது.

பாடல்கள் பாடாத முறுக்கான வாலிபப் பருவம். அதில் நடக்க இருக்கிறது திருமணம். மாப்பிள்ளைக் கோலத்தில் வந்து பெண்ணின் கரம் பற்றும் நேரம்.

எப்பேர்ப்பட்ட நேரம் அது மனிதப்பிறவியில் அது போன்ற நல்ல நேரம் வேறு உண்டா?

ஆனால் திருமணமே நின்று விட்டது. ஆனந்தத்தின் தலையில் இடியே விழுந்துவிட்டது.

வீராதி வீரனானாலும் தாங்க முடியாத வேதனை அது.

ஆனால் அதையே தாங்கிக் கொண்டார் சுந்தரர். அணு வளவு வேதனை கூட அவருக்கு ஏற்படவில்லை.

அப்படி ஒரு சம்பவமே அவர் நினைவில் ஒட்டவில்லை. அந்த அளவுக்கு கலகலப்பான உணர்ச்சியோடு பக்தியில் திளைத்தார். பரவசத்தில் மூழ்கினார். பாடல்களாயச் சொரிந்தார்.

இந்த ஒரு நிலை வந்த பிறகும் பரவையார் மேல் ஏன் மோகம் வர வேண்டும். மீள முடியாத மோக வெறியில் சிக்கி ஏன் தள்ளாடித் தவிக்க வேண்டும்?

அது மட்டுமா? பரவையார் இருக்கும்போதே சங்கிலியார் மேல் ஒரு நாட்டம் - கிறுக்குப் பிடிக்கிற அளவுக்கு ஒரு நாட்டம் ஏன் வர வேண்டும்?

எல்லாம் வேடிக்கைதான்.

ஒன்றும் விளங்கமாட்டேன் என்கிறது நமக்கு.

திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் போல, சுந்தர மூர்த்தி நாயனாரும் ஓர் அவதார புருஷர்தான்.

அவதார புருஷர் மட்டுமல்ல, அவர்களைப் போல இவரும் புரட்சிக்காரர்தான்.

சம்பந்தர், அப்பர் சுவாமிகள் இருவரும் வாழ்க்கையில் புரட்சியை ஏற்படுத்தி பக்திமயமாய் மலர வைத்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனாரோ பக்தியில் புரட்சியை உண்டு பண்ணி அதை வாழ்க்கையாக மலர வைத்து விட்டார். இந்தப் புரட்சியின் வேகத்தையும் ஊக்கத்தையும் அவர் பாடல்களி லேயே காணலாம்.

சம்பந்தர், அப்பர் சுவாமிகள் பாடல்களும் தேவாரம்தான். சுந்தர மூர்த்தி நாயனார் பாடல்களும் தேவாரம்தான்.

அவர்கள் பாடல்களிலும் நம்பிக்கையும் வழிபாடுமே விஷயம். இவருடைய பாடல்களிலும் விஷயம் அதுதான்.

ஆனால் விஷயத்தை எடுக்கிறதும், கொண்டு போகிறதும் அவர்களிடம் ஒரு மாதிரியாக இருக்கும்.

தாட்சண்யம், கண்டிப்பு இரண்டையும் கொண்டு ஒரு போக்கில் நெளிந்தும் வளைந்தும் அவர்கள் விருப்பம் வரும்.

ஆனால் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் அப்படி இல்லை. ஈட்டி பாய்ந்தது போல நேருக்கு நேர் வந்து பாயும் அவருடைய விருப்பம்.

தாட்சண்யம், சமரசம், பேரம் ஒன்றுக்கும் இடம் கொடுக்க மாட்டார் சுந்தரர்.

வெட்டொன்று துண்டிரெண்டு என்று விழும்.

சுந்தரரின் கருத்தில் எப்படிப் புரட்சியானது விம்மிப் புடைக்கிறதோ அப்படியே அவருடைய பாடல் அமைப்பிலும் புரட்சியானது புடைத்து விம்மும்.

அவர் பாடல்கள் விருத்தம் கட்டளைக் கலித்துறை போன்ற பூர்வமான பாவினங்கள்தான், ஆனாலும் எடுத்த எடுப்பிலேயே நாட்டியப் பதங்கள் போலவும் கீர்த்தனைகள் போலவும் துள்ளி எழுந்து பேசும் அவை.

இசையின் பல்வேறு வகைப்பட்ட நடைகள், போக்குகள், பாய்ச்சல்கள், பம்மல்கள், அவ்வளவும் சுந்தரர் பாடல்களில் நடனமாடிக் கொண்டு வரும்.

கண்ணைக் கவரும் புதிய புதிய நிற(வர்ண)ங்கள் ஒலி இன்ப(ரச)ங்கள் இவை சுந்தரர் கையாளும் ஓசையிலும் தாளத்திலும் ததும்பும்.

ஒரு பாட்டையாவது எடுத்துப் பாடிப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் நயமும் வேகமும் தெரியும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்கள் காலத்தில் சமணமும் பௌத்தமும் தமிழகத்தை அடக்கி வைத்திருந்தன. அதனால் சம்பந்தரும் அப்பரும் போராடினார்கள். வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து போராடினார்கள்.

மக்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் பின் திரண்டது.

தமிழகமே ஒன்றாய் நின்று சமண-பௌத்த ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டது.

ஆரவாரம், தடபுடல், வெற்றுரை, பொய் முதலிய பித்தலாட்டங்களுக்கு அங்கு இடமே இல்லை.

யாரும் யாருக்கும் புதிராகவோ, மர்மமாகவோ இல்லை. பேச்சு, செயல், யோசனை எல்லாமே நேர்மையாக இருந்தன.

சம்பந்தர், அப்பர் ஆகிய இருவர் தலைமையின் காரணமாக சமயம் விடுதலை பெற்றது. தமிழகம். கோயில், வழிபாடு, தேர், திருவிழா, இசை, நடனம், பக்தி எல்லாவற்றிலும் விடுதலை பெற்று விட்டன தமிழகம்.

தமிழர்கள் சுதந்திரமாகவும் சௌகர்யமாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

இருநூறு வருடகாலம் அப்படி ஒரு சௌகர்யத்தில் தடைப்படாமல் வாழ்ந்ததால் அதுவே சமய உலகில் பல கோளாறுகளுக்கு இடம் கொடுத்து விட்டது.

வழிபாடு தேய்ந்தது. சடங்குகள் தலைநிமிர்ந்தன. பாடல்கள் ஒதுங்கின, ‘பாராயணங்கள் எழுந்தன. மெய் யுணர்வு மங்கியது. பொய்யுரை பெருகியது. எங்கு பார்த்தாலும் வியாக்யானம், தர்க்கம், சித்து விளையாட்டு, கண்கட்டி வித்தை என்று பண்பாடு சீரழிந்தது.

பக்திக்குப் பதிலாக மத ஆதிக்கம் மேலோங்கி நின்றது.

அன்னிய மதப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற சிவ வழிபாடு, சொந்த நாட்டாரிடம் சிக்கித் தவித்தது.

மதத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் சித்தாந்த வேதாந்தப் பண்டிதர்களின் அட்டகாசத்தைத் தாங்க முடியவில்லை.

உண்மையான பக்தர்கள் திணறினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் உண்மையான பக்தர். அதனால் அவரும் திணறினார்.

அன்பில் கரைந்து அருளில் திளைக்க வேண்டிய பக்தி இப்படி வழக்காடு மன்றத்திலும், பட்டி மன்றத்திலும் வந்து நிற்கிறதே என்று ஆற்றாமைப்பட்டார் சுந்தரர். அதனால் கோபம் வந்து விட்டது சுந்தரருக்கு.

பக்தியையே கூண்டில் ஏற்றி குறுக்கு விசாரணை நடத்துகிற வழக்கறிஞர்களாவும், தீர்ப்பு வழங்குகிற நீதிபதிகளாகவும் வேஷம் போடுகிற போலிப் பண்டிதர்களிடம் கேட்கிறார் சுந்தரர். கோபாவேஷம் கிண்டலும் கேலியுமாய் வருகிறது.

"அடியார்க்கு அடியவன் இறைவன், அன்பில் விளையும் ஆரமுது இறைவன். ஞானக் கொழுந்து என்றால் அவன்தான்.

புலவர் சிகாமணிகளே அப்பேர்ப்பட்ட மெய்ப் பொருளை நம்மால் ஏமாற்ற முடியுமா? என்று கேட்கிறார் சுந்தரர். மேலும் கேட்கிறார் சுந்தரர்.

தாஜாப் பண்ணுகிற தோரணையில் ஒரு வாழ்த்துப்பா இயற்றிப் பாடி விட்டால் ஏமாந்து விடுவாரா பெருமான்?

உண்மையோடு ஒட்டாமல் வெறும் புள்ளி விபரம் (புத்தி) கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்வாரா?

எதுபொய், எதுமெய் என்று பகுத்துணரத் தெரியாதவரா பெருமான்?

எது சொன்னாலும் சரிசரி என்று ஏற்றுக்கொள்கிற அப்பாவிதானா அவர்?

கொஞ்சம் எனக்கு விளக்கிச் சொல்லுங்கள் பண்டிதர் களே! உங்களைப் போல மெத்தப் படித்தவன் அல்லன் நான்!"

*இனிப்பாடல்*

தான தன்னன
  தன்ன தன்னன
    தான தன்னன
      தான தன்

*வந்து சொல்லுமின்*
  *மூட னேனுக்கு*
    *வல்ல வா நினைந்(து)*
      *ஏத்து வீர்!*

*வந்(து)அ சாயினை*
  *அறிவ ரோ? தம்மை*
    *வாழ்த்தி னார்கட்கு*
      *நல்ல ரோ?*

*புந்தி யால் உரை*
  *கொள்வ ரோ? மற்றும்*
    *பொய்யில் மெய்உரைத்(து)*
      *ஆள்வ ரோ?*

*அன் றி யேமிக*
*அறவ ரோ? எமக்(கு)*
*அடிக ளாகிய*
*அடிக ளே!*

*வல்லவா நினைத்து ஏத்துவீர் - அறிவாளி என்றால் நான் தான் என்று நினைத்துக் கொண்டு நாமாவளி பாடித் திரிகிற வித்வான்களே!*

*வந்து சொல்லுமின் (எனக்கு) - விளங்கும்படி சொல்லுங்கள். மூடனேனுக்கு - உங்களைப் போல நான் படிப்பாளி இல்லை. அதனால் எனக்கு புரியும்படி- மனசில் படும்படிச் சொல்லுங்கள். புந்தியால் உரைகொள்வரோ-வெறும் புத்தியிலிருந்து மட்டும் வருகிற கருத்தை-உணர்ச்சியோடு ஒட்டாத கருத்தை அவர் ஏற்றுக்கொள்வாரா? பொய்யில் மெய் உரைத்து ஆள்வரோ - இது வெறும் புனைந்துரை (பொய்). இது தான் உண்மை என்று பகுத்துணர்ந்து பார்க்க மாட்டாரா பெருமான்? பார்த்துவிட்டு சும்மாவா இருப்பார் அவர்? பொய்யை விட்டுத் தொலை. உண்மையைப்பிடி இப்படியென்றால் வா. இல்லை யென்றால் ஓடு என்று சொல்ல மாட்டாரா?*

***குறிப்பு :*** அற்புதமான பாடல். பாடலை நினைத்தாலே போதும். தாளமும் இசையும் கைகோத்து ஆடும்.

## 2

**இ**னி இன்னொரு பாடல்

போலியும் பித்தலாட்டமும் பக்தியிலேயே ஊடுருவி விட்டால் பிறகு மிச்சம் என்ன இருக்கிறது?

நடை, உடை, பாவனை, எல்லாவற்றிலும் பித்தலாட்டந் தானே கொடி கட்டிப் பறக்கும்?

பிறகு மானமாவது மரியாதையாவது?

பணத்துக்குத்தான் பக்தி.

பதி, பசு, பாசம் என்று தடபுடல் பண்ணுவதெல்லாம் ரூபாய் அணா பைசாவை மனதில் நிறுத்த முழங்குகிற முழக்கந் தான்.

அன்பு, காதல், நட்பு அவ்வளவையும் பணம் என்கிற கண்ணாடியைப் போட்டுக் கொண்டுதான் மனிதன் பார்ப்பான். வெறும் கண்ணால் பார்த்தால் ஒன்றும் அவனுக்குப் பார்வையில் விழாது.

தேவைக்கு மேலே பணம் என்னத்துக்கு என்று யோசிக்க மாட்டேன் என்கிறான் மனிதன்.

தேவையானவற்றை உழைத்துத்தான் பெற வேண்டும் என்பது விளங்கிவிட்டால் போதும்.

தேவைக்கு அதிகமாக இருக்கிறதை இல்லாதவர் களுக்குக் கொடுத்து விடுவான்.

பிறகு தேவைக்கு மேலே சேர்த்துக் குவிக்கப் புத்தி போகுமா?

தெளிவும் உறுதியும் இருந்தால் போதும். உணவும் உடையும் தேவை. அதைவிட முக்கியமான தேவை நிம்மதி என்பது விளங்கும்.

சோற்றுக்கும் துணிக்குமா பஞ்சம். செல்வக் களஞ்சிய மாகிய இந்த உலகில் வேண்டிய மட்டும் உண்டு அவை.

அதனால் பயத்தை விடுங்கள். அடிமைப் புத்தியை உதறி எறியுங்கள். விடுதலை பெறுங்கள் என்று முழங்குகிறார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

*இனிப் பாடல்*

தான தன்னன
தன்ன தன்னன

தான தன்னன
தான தன்
*தம்மை யே புகழ்ந்(து)*
*இச்சை பேசி னும்*
*சார்வி னும் ஒன் றும்*
*தருகிலாப்*
*பொய்மை யாளரைப்*
*பாடா தேஎந்தை*
*புகலூர் பாடுமின்*
*புலவீர் காள்!*
*இம்மை யேநறும்*
*பூவும் நீரும் கொண்டு*
*ஏத்த லாம் இடர்*
*களைய லாம்.*
*அம்மை யாம்சிவ*
*லோகம் ஆள்வதற்(கு)*
*யா தும் ஐயுற(வு)*
*இல்லையே.*

தம்மைப் புகழ்ந்து இச்சை பேசினும் - கற்பக விருட்சமே காமதேனுவே கண்கண்ட தெய்வமே என்று என்ன புளுகு புளுகினாலும் சரி.

சார்வினும் போற்றிப் பாராட்டுவதோடு நிற்காமல் அவர்களைப் போலவே நடை உடைபாவனைகளை ஏற்று வேஷம் போட்டாலும் சரி. ஒன்றும் தருகிலாப் புன்மையாளர். எதிர்பார்த்த அளவுக்குக் கொடுக்காமல் கருமித் தனம் பண்ணும் அற்பர்கள். இம்மையே-இந்த வாழ்க்கையில் பூவுக்குப் பஞ்சமா? தண்ணீருக்குப் பஞ்சமா? பெருமானும்

இருக்கத்தானே செய்கிறார்! இடர் களையலாம்; துன்பம் நீக்கி ஆனந்தமாக வாழ முடியும். அம்மையாம் சிவலோகம் - கடைசி லட்சியமாகக் கருதும் பரமபதம்.

அற்புதமான பாட்டு.

கடவுளை மறந்துவிட்டு பணக்காரனையே நினைத்துக் கொண்டிருக்கிறாயே வெட்கமாக இல்லையா உனக்கு என்று கேட்கிறார் சுந்தரர்.

சம்பந்தரும் அப்பரும் அன்னியர்களை எதிர்த்துப் போராடினார்கள். வெற்றி பெற்றார்கள்.

சுந்தரருக்கு அன்னியர்களை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஏற்படவில்லை. ஆனால் சொந்தமானவர் களையே எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அறியாமை என்றால் அறியாமைதான். அதில் சொந்தம் என்றோ அன்னியம் என்றோ பாகுபாடு இல்லை.

சமயம், பக்தி, வழிபாடு இவற்றில் தேவை இல்லாத சிக்கல்களைக் கொண்டு வந்து புகுத்தி குழப்பம் செய்தவர் களை எதிர்த்துப் போரிட்டார்; வெற்றிக் கொடி நாட்டினார் சுந்தரர்.

சுந்தரர் பெற்ற ஆன்மிக வெற்றி ஞான வெற்றி கொடி வீசிப் பறக்கிறது பாடல்களில்.

சுந்தரமூர்த்தி நாயனார் செய்த காரியங்கள் பல பல இருக்கலாம். ஒவ்வொன்றும் திருப்பணிதான்.

ஆனால் அவற்றை நேருக்கு நேரான வரலாறுகளாக குறித்து வைக்கவில்லை.

கல்யாணம், தடை, காதல், தூது, குடும்பச் சிக்கல் இப்படிச் சில விபரங்கள் இருக்கின்றன. ஆனால் சமய வழிபாட்டில் அவர் நடத்திய புரட்சி பற்றி விபரங்கள் இல்லை.

அரசர்களின் திருப்பணிகள், கொடை, வெற்றி முதலிய வற்றை கல்வெட்டுக்களாய்ப் பொறித்து வைத்துள்ளனர்.

அதே போல சுந்தரர் போன்ற மகான்களின் திருப் பணிகளையும் கல்வெட்டுக்களாய்ப் பொறித்து வைத்திருக்க வேண்டும்.

கல்வெட்டில் பொறித்து வைக்க வில்லை என்றாலும் தாளத்திலும் இசையிலும் பொதிந்து வைத்து நடனமாடிக் காட்டுகிறது தமிழ் - சுந்தரரின் சுந்தரத்தமிழ்.

*வந்து சொல்லுமின்*
*மூட னேனுக்கு*
*வல்ல வாநினைந்து*
*ஏத்து வீர்!*

என்பதையும்,

*பொய்மை யாளரைப்*
*புகலா தேஎந்தை*
*புகலூர் பாடுமின்*
*புலவீர் காள்*

என்பதையும் மாறி மாறிப் பாடிப் பாருங்கள். அதில், வரலாறானது நிலை பெற்று நிற்பது தெரியும்.

இனி, சுந்தரருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் அற்புதமான இசை ஓவியங்கள். நடன ஆலயங்கள்.

*வந்து சொல்லுமின்*
*மூட னேனுக்கு*

என்பதைப் பல்லவியாக வைத்து வளைத்து, வளைத்துப் பாடுங்கள்.

ராகம், தாளம், சுரம் எல்லாம் வந்து விடும்.

பாட்டுக்குள்ளேயே பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம் இருப்பது தெரியும்.

இசைப்பா, நடனப்பா என்பவை எல்லாம் விருத்தம் முதலிய தமிழ்ப் பாடல்களின் வாரிசுகள் தானே!

## 3

இனி, பக்தி என்பது அப்போதைக்கப் போது கடையில் வாங்குகிற சரக்கல்ல.

இதயத்தில் எப்பொழுதும் ஊறிக் கொண்டே இருப்பது தான் பக்தி. உடம்பில் ரத்தம் ஊறுவதுபோல இதயத்துள் ஊறிக் கொண்டே இருக்கும் பக்தி.

திருச்சியை ஒட்டி இருக்கிற திருவானைக்காவுக்கு சுந்தரர் வந்தார்.

கோயில், கோபுரம், மூர்த்தி, பக்தி, பரவசம், மேளதாள முழக்கம் ஆகியவற்றைப் பார்த்தார்.

பரவசத்தில் திளைத்தார். அனுபவிக்க அனுபவிக்க பக்தியானது எழுந்து நிற்கிறது. இசையோடும் தாளத்தோடும் கைக்கோர்த்தபடி தமிழில் வந்து தாண்டவம் ஆடுகிறது அந்த பக்தி.

*இனி பாடல்*

தான தன்ன தான
    தனன தனனன தான
*விண்ணின் மாமதி சூடி*
    *விலையில் கலனணி விமலன்,*
*பண்ணின் நேர்மொழிமங் கை*
    *பங்கி னன்பசுஉகந் தே றி*

*அண்ண லாகிய ஆனைக்*
*காவுடை ஆதியை நாளும்*
*எண்ணு மா று வல்லார் கள்*
*எம்மையும் ஆளுடை யா ரே!*

*விண் - ஆகாயம். மதி - பிறைச்சந்திரன். விலையில் கலன் - நட்சத்திரங்கள் பண்ணின் நேர்மொழி மங்கை - இனிய ராகமாகவே ஒலிக்கும் குரல்வளம் கொண்ட உமாதேவி. பசு உகந்து ஏறி - உயிருக்கு உயிரான இறைவன். பசு - உயிர்.*

இறைவனுக்கு வாகனமும் சிம்மாசனமும் உயிர்தான். அண்ணலாகிய ஆனைக்கா - ஒப்பற்ற சிறப்புமிக்க திருவானைக்கா.

இறுதி இல்லாதபடி எங்கும் ஒரே தன்மைத்தாய் நிறைந்து கிடக்கிறது கடவுள் தத்துவம்.

அப்படி, இப்படி என்று சுட்டிக்காட்டியோ, விபரம் கொடுத்தோ விளக்க முடியாது கடவுள் தத்துவத்தை.

அப்படியானால் நீளம் இவ்வளவு, அகலம் இவ்வளவு, ஆழம் இவ்வளவு என்று அளந்து காட்டமுடியுமா அதை.

பெண்ணின் நெற்றியில் ஒரு திலகத்தை வைத்தால் போதும். நெற்றியின் வனப்பு, பொலிவு, பெருமை அவ்வளவும் அப்படியே தெரியும்.

அந்த மாதிரியான ஒரு அடையாளத்தை குறியீட்டை வைத்துத்தான் வியாபகத்தைக் காட்டமுடியும்.

இறைவனுடைய தலையில் சொருகும் சிரிய மலர்தான் சந்திரன். நட்சத்திர வட்டங்களே அவனுக்கு மோதிரம், காப்பு, தோடு முதலிய அணிகலன்கள் என்று சொன்னால் போதும் அந்த வியாபகம் கண்முன் வந்து நிற்கும்.

# 4

இனி, ஆட்டு மந்தை மாட்டு மந்தை மாதிரி, குழந்தை களைத் திரட்டிக் கொண்டு வந்து ஓர் இடத்தில் அவர்களை அடைப்பதும். அதைப் பள்ளிக் கூடம் என்று சொல்வதும் வெள்ளைக்காரன் வந்த பிறகுதான்.

புத்தகங்களில் உள்ளனவற்றை பாடம் பண்ண வைப்பது. பிறகு அதையே ஒப்புவிக்கச் சொல்வது இவையே கல்வி என்று ஆகிவிட்டது.

சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் இந்தப் பழக்கம் இல்லை.

அனுபவசாலிகளின் நல்லுரைகளைக் கேட்பதும், சிந்திப்பதும், தெளிவதுமே படிப்பாக இருந்தது.

இசை, நடனம், பாட்டு, ஓவியம், கோயில், வழிபாடு எல்லாம் இயல்பாக வந்தன.

கல்லாத கலை என்று பெயர் இவற்றுக்கு.

உடலுழைப்பால் தேகம் காத்திரமாக இருந்தது. நல்ல பழக்க வழக்கங்களால் மனம் ஆனந்தமாக நிறைந்திருந்தது.

இவ்வளவும் ஆரம்பப்பள்ளிதான். மேல் படிப்பு என்று சொல்கிற உயர் தரக் கல்வியோ சுற்றுப் பிரயாணத்தில் இருந்தது. நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை அடிக்கடி பிரயாணம் செய்து கொண்டே இருந்தார்கள் பலர்.

கோயில், வழிபாடு, நீராடல் என்று சொல்லிக் கொண்டு சுற்றிக் கொண்டே இருந்தார்கள்.

மலை, கடல், ஆறு, அருவி, நகரம், அரண்மனை, திருவிழா ஆகியவற்றை மட்டுமல்ல அவர்கள் பார்த்து அனுபவித்தது.

பலவகைப்பட்ட மக்கள், அவர்களுடைய காரியங்கள், பழக்க வழக்கங்கள் உணர்ச்சிகள், செயல்கள், அனுபவங்கள். விவசாயம், முயற்சி, வெற்றி தோல்வி எல்லாவற்றையும் பார்த்தார்கள்; சிந்தித்தார்கள்; அனுபவித்தார்கள்.

நேருக்கு நேராகக் கண்டு தெளிந்த இந்த அனுபவங்கள் தாம் உயர்தரக் கல்வி ஞானக் கல்வியாக இருந்தது.

இந்த ஞானக் கல்வியை மற்றவர்களுக்கு வழங்கிய படியே இருந்தனர். உண்மையான வேள்வி என்றால் இந்த ஞானதான வேள்விதான்.

சுந்தரமூர்த்தி நாயனார் காரியமும் ஞானதான வேள்வி தான்.

தமிழகம் முழுவதும் மாறி மாறிச் சுற்றி வந்தவர் சுந்தரர்.

ஏன், இந்தியா முழுவதும், இமயமலையின் உச்சி யிலிருந்து குமரி முனையின் கடலடிவரை அவர் பாதங்கள் தொட்டு உணர்ந்தவைதான்.

திருவாரூருக்கு அடிக்கடி வருவார். சுந்தரர், வந்து தங்கவும் செய்வார்.

பக்தர்கள் கூட்டம் கூட்டமாகவே வருவார்கள் திருவாரூருக்கு. அவர்களுடைய ஈடுபாட்டைப் பார்த்து உருகுவார் சுந்தரர்.

பூங்கோயில், கமலாலயம், ஆழித்தேர், கோபுரம் ஒவ் வொன்றும் பக்தர்களின் உள்ளங்களைப் பிசைந்து குழைத்தன.

ஆனந்தக் கண்ணீர் விட்டுச் சொரிந்தனர் அடியார்கள்.

இனி மேளதாள முழக்கத்தோடும் ஆடல் பாடலோடும் தியாகேசப் பெருமானுக்கு நடைபெறும் அலங்காரங்களையும் அபிஷேகங்களையும் பார்த்தவர்களால் அதை மறக்க முடியுமா?

ஆராதனையும் அதைக் கண்டு எழும் அடியார்களின் ஆரவாரங்களும் முழக்கங்களும் மோக வெறியையே உண்டாக்கிவிடும்.

திருவிழா எப்பொழுது வரும், திருவாரூர் எப்போது போவோம் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்த வண்ண மாகவே இருப்பார்கள்.

பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த ஆடவர் பெண்டிர் எல்லாருமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

திருவாரூர்த் தியாகேசுவரப் பெருமானின் கோலாகல மான திருவிழாவைப் பார்த்த குழந்தைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

திருவிழாவை நினைத்தால் தூங்க முடியுமா?

சாப்பாடு மேல் மனம் போகுமா?

சாப்பாடு இல்லை, தூக்கமும் இல்லை என்றால் தேகம் மெலியத்தான் செய்யும். அடிக்கடி ஆடை அவிழும், வளையல் கூட கழலும்.

குழந்தைகளுக்கு மட்டுமா, வயதானவர்கள் கதையும் அப்படித்தான்.

அதுதானே பக்தி, அது தானே காதல்.

கிளிகளிடமும், மைனாக்களிடமும் நிலைமையைச் சொல்லி உதவ வேண்டுகிறாள் வயது வந்த ஒரு பெண்.

*இனிப் பாடல்*

தானான தன்னன்னா
தானான தன்னன்னா

*பறக்கும்எம் கிள்ளைகாள்!*
*பாடும்எம் பூவைகாள்!*

*அறக்கண்ண னத்தகும்*
*அடிகள்ஆ ரூரரை*
*மறக்ககில்லாமையும்,*
*வளைகள் நில் லாமையும்.*
*உறக்கம்இல் லாமையும்,*
*உரைக்கவல் லீர்களோ!*

*(பறக்கும் எம்)*

*கிள்ளை - கிளி. பூவை - நாகணவாப்புள். அறக்கண் - தருமம் (கருணை) கொலுவீற்றிருக்கும் அருள் நோக்கு. மறக்க கில்லாமையும் - மறக்க முடியாமல் தவிக்கிற என் தவிப்பை. உரைக்கவல்லீர்களோ - போய்ச் சொல்ல மாட்டீர்களா?*

இசைக்கும் நடனத்துக்கும் வாய்ப்பான பாடல்.

காதலும் பக்தியும் கைக் கோத்து ஓவியமாய் எழுந்து நிற்கின்றன பாடலில். பக்தியானது முற்றிவிளைந்து விட்டால் அது காதலாக மணக்கும். தன்னை அப்படியே அர்ப்பணித்து விட உருகிக் கரைகிற பொழுதோ பக்தியானது காதலாய் கசியும்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தி காதல் வெறி கொண்டு தவிக்கிறது.

## 5

**க**டைசியாக ஒரு பாட்டு. திருவாரூரைச் சுற்றி வளமான கரும்புத் தோட்டங்கள்.

நன்றாக முற்றி விளைந்து விட்டன கரும்பு.

அப்படிக் கொழுத்துப் போய் முற்றி விளைந்து விட்டன கரும்பு.

இந்த நிலையில் கரும்புகள் ஒடிந்தால் சாறு பெருகும்; வாய்க்கால் வழி ஓடும். பக்கத்து வயலில் கூட பாயும்.

கரும்புத் தோட்டங்களுக்கு இடையே பெரிய பெரிய வரப்புகள். வாய்க்கால் நீரில் ஓடும் மீன்களைக் குறிவைத்து அங்கங்கே வாய்க்கால் கரையில்- வரப்பில் நிற்கின்றன. கொக்கு (குருகுகள்).

எதோ அரவம் (சத்தம்) கேட்டது. பதறிவிட்டன குருகுகள். கலைந்து சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விட்டன.

அவசரத்தில் கொக்குகளின் இறகுகள் கரும்பில் வேகமாக மோதின.

கரும்புகள் ஒடிந்து சாறாய்க் கக்கின.

பூம்புனல் மட்டுமா? கருப்பஞ்சாறும் சேர்ந்து பாய்கிறது வயலில்.

இனி திருவாரூர் திருவிழாவுக்குத் தாயும் மகளும் பக்கத்து ஊரிலிருந்து வந்தார்கள். தியாகேசப் பெருமானைத் தாயின் கையைப் பற்றியபடியே கண்குளிரக் கண்டாள் பெண்.

கோடி சூர்யப் பிரகாசமாய் ஜொலித்தார் பெருமான்.

பெண்ணின் மனசை விட்டு அகலவில்லை காட்சி.

தாயும் மகளும் ஊருக்கு வந்துவிட்டார்கள் மறுபடியும் எப்போது கண்டு களிப்போம் இந்தக் காட்சியை என்று திணறுகிறாள் பெண்.

அதனால் ஆற்றாமை ஏற்படத்தானே செய்யும். அதே கிளிகளிடமும் மைனாக்களிடமும் சொல்லி முறையிடுவதாகப் பாட்டு.

தான தான
தானன தானன

*குருகு பாயக்*
*கொழுங்கரும்(பு) உடைந்த சா(று)*
*அருகு பாய்வயல்*
*அந்தண்ஆர் ஊரைப்*
*பருகும்ஆ றும், பணிந்(து)*
*ஏத்தும்ஆ றும், கசிந்(து)*
*உருகும்ஆ றும் இவை*
*உரைக்கவல் லீர்களோ*

*(பறக்கும்எம்)*

பாடிக் கொண்டே இருக்கலாம் பாடப்பாட இனிக்கும்.

ஐம்பது வருடங்களுக்கு முன் கற்றவர் கல்லாதவர் எல்லார் நாவிலும் பாடல் வீற்றிருக்கும்.

'பித்தா பிறை சூடி பொன்னார் மேனியனே' என்று கணீர் கணீர் என்று ஒலிக்கும்.

எப்படியோ தேய்ந்து மறைகிறது தெய்வத்தீந் தமிழ்.

முற்றும் மறைந்து போவதற்கு முன் அதைக் காப்பது தமிழர்களாகிய நம் கடமை.

## IV மாணிக்க வாசகரின் மாணிக்கப் பாடல்கள்

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்னும் முது மொழிக்கு ஏற்ப கல் நெஞ்சையும் கரைத்து உருக்கிவிடும். மாணிக்க வாசகப் பெருமான் அருளிய திரு வாசகப் பாடல்கள்.

பன்னிரு திருமுறை என்னும் சைவ சமய ஞானக் களஞ்சியத்தில் திருவாசகம் எட்டாவது திருமுறையாக இடம் பெற்றுள்ளது.

மாணிக்கவாசகர் உண்மையான பக்தர், உணர்ச்சி மயமான பக்தர். அவர் தன்னை உணர்ந்தவர். நாம் யார்? எங்கிருந்து வந்தோம், எங்கு போகிறோம் ஏன் வந்தோம் என்னும் கேள்விகளைத் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டு அவற்றுக்கு விடை கண்டு தெளிந்த உத்தமஞானி.

தன்னை உணர்ந்தது போலவே உலகம், மக்கள், வாழ்க்கை, உணர்ச்சி ஆகிய எல்லாவற்றையும் உற்று நோக்கி உணர்ந்து பார்த்தார். உற்றார், உறவினர், கல்வி, முயற்சி, ஆகிய எல்லா அம்சங்களையும் ஊடுருவிப் பார்த்தார்.

---

12.12.1996 - ல் **தென்கிழக்கு ஆசிய ஒலிபரப்புக்காகப் தூத்துக்குடி வானொலியில் பேசியது.**

ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதத்தில் ஒளி வீசின. அத்தனையும் இறைவனுடைய திருவிளையாடலாகவே இருப்பதை அறிந்தார். அப்படியே அதிசயப்பட்டார். அந்த அதிசயமே அற்புதமான பாடல்களாக வருகின்றன.

உண்மையான பக்தியே உணர்ச்சி மயமாக உருவெடுத்துப் பாடலாக வருவதால் திருவாசகப் பாடல்கள் தெய்வ மந்திரங்கள் என்று போற்றப்படுகின்றன. பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திரங்கள்தான்.

இனி, மனிதர்களாகிய நாம் திடுதிப்பென்று உண்டாகி விடவில்லை. இப்பொழுது நாம் இருக்கிற கோலத்திலேயே ஆதியிலிருந்து வந்து விடவில்லை நாம்.

எப்படி எப்படியோ இயற்கையோடும், நியதியோடும் உருண்டு புரண்டு உருமாறி உருமாறி வந்திருக்கிறோம்.

நாம் எப்படி வந்தோம் என்பதை மாணிக்க வாசகப் பெருமான் சொல்கிறார்.

தன்னை வைத்தே சொல்கிறார்.

இதோ பாருங்கள்.

*புல்லாகிப் பூண்டாய்*
*புழுவ ாய் மரமாகி,*
*பல்விருகம் ஆகிப்,*
*பறவையாய்ப், பாம்பாகிக்,*
*கல்லா மனிதராய்ப்*
*பேயாக் கணங்களாய்ச்*
*செல்லாஅ நின்றஇத்*
*தாவர சங்கமத்துள்,*
*எல்லாப் பிறப்பும்*
*பிறந்திளைத்தேன், எம்பெருமான்!*

உயிர்க்குலத்தின் கருவாசல் தாவரம்தான். சாதாரணப் பாசி தான் மரம் செடி கொடி என்று வந்தது. பிறகு புழு, பூச்சி, ஊர்வன, பறப்பன, நடப்பன என்றெல்லாம் வளர்ந்தன. பிறகு மூளை வளர்ச்சியடையாத மானுட இனம் அதாவது கல்லா மனிதர், பிறகு முரட்டு இனம் (பேய்), வேட்டையாடும் கூட்டம் (கணம்) இப்படிப் படிப்படியாக வந்தது. கடைசியில்தான் அறிவுள்ள மனிதனாக பகுத்தறிவுள்ள மனிதனாக உயர்ந்தது.

இந்தப் பரிணாம நெறி பற்றி நியதிதத்துவம் பற்றி ஆராய்ந்து பார்க்கும் நிபுணர்கள் பரிணாமவளர்ச்சி என்று பெயர் சூட்டி விபரம் சொல்லி இருக்கிறார்கள். பரிணாம வளர்ச்சி என்று பெயர் சூட்டப்பட்டுள்ள விஞ்ஞானப் போக்கு இருநூறு வருடங்களுக்குள் உண்டானது தான்.

ஆனால் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே மாணிக்கவாசகர் அந்தப் பரிணாம நெறி பற்றி சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லி இருக்கிறார். நான்கு கோடுகளில் ஒரு மலையோ, கடலோ, யானையோ, மரமோ, சித்திரத்தில் எழுந்து வருவது போல ஐந்தே ஐந்து வரிகளில் ஒரு மாபெரும் வரலாற்றை - மனித வரலாற்றை - உயிர்க்குலத்தின் வளர்ச்சியைச் சித்தரித்துக் காட்டி விடுகிறார், மாணிக்க வாசகர்.

அதுவும் அற்புதமான கவியில் சந்தமும் தாளமும் கைகோத்துத் தாண்டவமாடும் கவியில் எளிமையாகவும் இனிமையாகவும் விளக்கிக் காட்டுகிறார் மாணிக்க வாசகப் பெருமான்.

மேலும் மாணிக்க வாசகர் வெறும் ஜடமாக இருக்கிற உடம்பு, கண், மூக்கு, கை, கால், மண்டை, நெஞ்சு என்னும் அங்கங்கள், ரத்தம், சதை, எலும்பு, நரம்பு, என்னும் தாதுக்கள் எல்லாம் ஒன்றாக நின்று செயல்படுகிற அற்புதத்தைப் பார்த்துப் பார்த்து வியப்படைகிறார்.

எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளால் அல்லவா இந்த ஊன் மயமான பிண்டம் பேசுகிறது, யோசிக்கிறது,

ஓடுகிறது, எழுதுகிறது, மகிழ்கிறது, ஆடுகிறது என்று வியப் படைகிறார்.

மாணிக்கவாசகரின் வியப்பு

"*ஊனன நாடகம் ஆட்டுவித்தவா*

*உருகிநா னுனைப் பருக வைத்தவா*"

என்னும் அமுதவாக்காய் எழுந்து வருகின்றது.

மாணிக்கவாசகரின் பக்தி விஞ்ஞான மயமானது. அப்படி ஒரு மெய்ஞ் ஞானியாக விளங்குகிறார் மாணிக்க வாசகர்.

நம் உடம்பில் ஆயிரக் கணக்கான தத்துவங்கள் ஒன்றாய் நின்று செயல்படுகின்றன. ஒரு கண்டு விரல் செய்கிற காரியத்தை எந்தக் கம்ப்யூட்டராலும் செய்ய முடியாது. நம் கண்ணை எடுத்துக் கொண்டால் கருவிழியின் மத்தியில் ஊசி நுழைய முடியாத துவாரம் அதனுள் மாகடல் போகிறது. வானம் போகிறது. பூமி போகிறது. அவ்வளவையும் உடனுக்குடன் அடையாளம் கண்டு தெளிகிறது. அதற்கேற்ற படி செயல்படுகிறது.

கண்ணைப் போல இன்னும் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் இந்த எண் சாண் உடம்பில்.

இத்தனைக்கும் நாமா காரணம்? நம் மண்டையில் முளைக்கிற ரோமத்தைக் கூட நம்மால் உண்டாக்க முடியுமா? எல்லாம் இறைவனுடைய அருள்.

இப்படி உண்மையை உணர உணர பக்தியாக மலரும். மாணிக்க வாசகர் பக்தி உண்மையிலிருந்து உணர்ச்சி மயமாக ஊறிய பக்தி.

இந்த உடம்பையே இறைவன் எழுந்தருளிக் கொலு வீற்றிருக்கும் கோயில் என்கிறார். மாணிக்கவாசகர்.

எப்படி என்று பாருங்கள்!

*புன்புலால் யாக்கை*
*புரைபுரை கனியப்*
*பொன்னெடும் கோயிலாப்*
*புகுந் தென்*
*என்பெலாம் உருக்கி*
*எளிமையாய் ஆண்ட*
*ஈசனே! மாசிலா*
*மணி யே!*
*துன்பமாம் பிறப்பை*
*இறப்பொடு மயக்காம்*
*தொடக்கெலாம் அறுத்தநல்*
*சோ தீ!*
*இன்பமே உன்னைச்*
*சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவது*
*இனி யே.*

அற்புதமான பாடல். மாணிக்க வாசகர் கண்ட அற்புதத்தைத் தமிழ் அற்புதமாக வாங்கிக் கவியாய்ப் பரிமளிக்கிறது.

இனி குழந்தை இந்தப் பேனாதான் வேண்டும் என்று ஒரு பேனாவைக் காட்டி அடம் பிடிக்கும். அது கிடைக்கா விட்டால் சாப்பாடு கூட வேண்டாம் என்று தட்டி விடும்.

பட்டுச் சொக்காய் எனக்கு வேண்டாம் என்று தூரத்தில் எறியும். புத்தகம் சிலேட்டு முதலியவற்றைக் கூட எட்டி வீசி விடும்.

எல்லாம் தற்காலிகமானது தான். நிரந்தரம் இல்லை. பேனாவைக் காட்டினவுடன் கொஞ்சம் கொடுத்து வாங்கியவுடன் சரியாய்ப் போய் விடும்

பிறகு சாப்பிடும், சொக்காயைப் போட்டுக் கொள்ளும், புத்தகம் சிலேட்டை எல்லாம் பைக்குள் ஒழுங்காக அடுக்கி வைக்கும்.

ஞானிகளின் நிலையும் குழந்தைகளின் நிலை மாதிரி தான்.

இறைவனுடைய லீலா விநோதங்களைக் காண வேண்டும் என்னும் ஆனந்தத்தில் பரபரப்பான ஆத்திரத்தில் மற்றவற்றை ஒதுக்கி விடுவார்கள். சாப்பாட்டையே மறந்து விடு வார்கள். தூக்கம் ஓடி விடும். இந்த நிலையில் ஊர், விவகாரம், தெருச்சண்டை, சம்பந்தி உபசரிப்பு. உறவினர் வீட்டுத் திருமணம் பற்றி எல்லாம் எப்படி நினைப்பு வரும்?

நினைப்பு வந்தாலும் அவைகளை ஒதுக்கி வைத்து விடுவார்கள் உண்மையைக் கண்டு ஆனந்த பரவசத்தில் தான் திளைப்பார்கள் இந்தச் சிக்கலில் காலை விட மாட்டார்கள்.

இனி அந்தக் காரியம் முடிந்து உலக நிலைக்கு திரும்பும் பொழுது வீடு, வாசல், உற்றார், உறவினர், நண்பர் ஆகிய எல்லாம் வந்து ஒட்டிக் கொள்ளும்.

இந்த அரிய மனோ இயல் எப்படிக் கவியாய் மாணிக்க வாசகரிடமிருந்து வருகிறதென்று பாருங்கள்.

*உற்றாரை யான்வேண் டேன்,*
*ஊர் வேண்டேன், பேர்வேண்டேன்,*
*கற்றாரை யான் வேண்டேன்,*
*கற்பனவும் இனி அமையும்!*
*குற்றால நாதன்தன்*
*குரைகழற்கே ஆளாகிக்*
*கற்றாவின் மனம்போலக்*
*கசிந்துருக வேண்டுவனே!*

வேண்டேன் வேண்டேன் என்பது இறைவனோடு உணர்ச்சிமயமாக ஒன்றுகிற பொழுதுதான். மற்றப்படியான

நேரங்களில் எல்லாவற்றையும் - உற்றார் உறவினர்களை எல்லாம் மதித்து அனுபவிக்கிறவர் தான் மாணிக்க வாசகர்.

ஒருவர் நல்லரசிகர், கவியில் திளைத்து அனுபவிக்கிறவர் தான். ஆனால் கோர்ட்டுக்குப் போகிற அவசரம். அன்று தான் கடைசி வாய்தா. பத்து நிமிடத்துக்குள் போய்ச் சேர வேண்டும். அந்த நேரம் பார்த்து புலவர் ஒருவர் வருகிறார் "பார்த்தீர்களா! கம்பர் கவியின் நயத்தை!" என்று பாடலை அவிழ்த்து விட ஆரம்பிக்கிறார். அப்பொழுது ரசிகரால் ரசிக்க முடியுமா?

ரசிகர் கவியை உதறி விட்டு ஓடத் தானே செய்வார்?

அந்த நேரத்துக்கு அது தான் சரி.

மாணிக்க வாசகரின் நிலையும் அது தான்.

உற்றாரை யான் வேண்டேன்......

இனி மாணிக்கவாசகர் ஒரு புரட்சியாளர்.

ஆன்மிகப் புரட்சி தான் அவருடைய புரட்சி.

அந்தப் புரட்சி எப்படிப் பாடலாய் வருகிறதென்று பாருங்கள். மாயை என்னும் படையை அடித்து நொறுக்கு வோம். பேரானந்தம் என்னும் பதியைக் கைக் கொள்வோம். வாளேந்துங்கள். பறையை அடியுங்கள், குதிரை ஏறுங்கள். குடையைப் பிடியுங்கள். கவசம் பூணுங்கள் என்கிறார். மணிவாசகப் பெருமான். எந்த வாள்...?

*ஞானவாள் ஏந்தும், ஐயர்*
*நாதப் பறைஅறை மின்*
*மானமா ஏறும் ஐயர்*
*மதிவெண் குடை கவிமின்*
*ஆனநீற் றுக்கவசம்*
*அடையப் புகுமின்கள்;*
*வானஊர் கொள்வோம் நாம்*
*மாயப்படை வாராமே!*

அற்புதமான பாடல்.

மாணிக்க வாசகர் மாசுமறுவற்ற ஞானி. மெய்ஞ் ஞானிகளுக்கெல்லாம் அவர் சக்கரவர்த்தி. விஞ்ஞான மயமான மெய்ஞ்ஞானி அவர். அவர் பாடல்கள் நம்மனக் கவலையை விரட்டி அடிக்கும் மாமருந்து. அமிர்த மயமான தேன்தான் ஒவ்வொரு வரியும். கல்கண்டாய் கரையும் ஒவ்வொரு சொல்லும்.

இனிக் கடைசியாக ஒரு பாட்டு.

உடம்பின் ஒவ்வோர் அணுவையும் பிசைந்து குழைத்துத் தேனூறவைத்தான் இறைவன். உடம்பையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளினான் இறைவன்.

இனிப் பாடல்.

*இன்பம் பெருக்கி*
*இருளகற்றி எஞ்ஞான்றும்*
*துன்பம் தொடரா*
*வகை அருளி - அன்பமைத்துச்*
*சீரார் பெருந்துறையான்*
*என்னுடைய சிந்தையையே*
*ஊராகக் கொண்டான்*
*உவந்து.*

மூடத்தனம் கூடாது. (இருளகற்றி) ஞானத்தோடு வாழ வேண்டும். துன்பமே இல்லாமல் இன்பமயமாக நான் வாழ வேண்டும். அதற்காக மூலதனமாக அன்பை என்னோடு இணைத்து வைத்து விட்டான். (அன்பு அமைத்து) இறைவன் என்கிறார் மாணிக்க வாசகர்.

காணாதனவற்றை எல்லாம் காட்டுவிக்கிற மகான் தான் மாணிக்க வாசக சுவாமிகள்.

# V காரைக் காலம்மையார்

காரைக்காலம்மையார் வாழ்க்கை கரடு முரடானது. கல் நெஞ்சையும் கரைத்து விடும் அம்மையாரின் வாழ்க்கை. தியாகமும் கருணையும் கை கோத்துத் தாண்டவமாடுகின்றன, அம்மையாரின் வாழ்க்கையில்.

அந்த அற்புதத்தை அனுபவித்து மனம் நெகிழ்ந்திருக் கிறார்கள். அந்த நெகிழ்ச்சி அழகிய கதை போல முன்னோர் களால் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

எப்படி என்று பார்ப்போம்.

காரைக்காலில் - நாகப்பட்டிணத்தை ஒட்டியுள்ள சிறு துறை முகப் பட்டிணத்தில் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு தனவந்தருக்கு மகளாகப் பிறந்தவர் புனிதவதி (காரைக்காலம்மை)யார்.

தனவந்தருக்கு வேறு குழந்தை இல்லை. அதனால் மிக்க செல்லமாய் வளர்ந்த பெண்மணி புனிதவதி.

பெண்களுக்கே உரிய இரக்கமும் பரிவும் அம்மை யாரிடம் செழிப்பாய் இருந்தன. அவருடைய வளமான செல்வம் அந்த அற்புதப் பண்புகளை வளர்த்தன; ஒடுக்க வில்லை.

தனவந்தர் வீட்டுக்கு அடிக்கடி சிவனடியார்கள் வருவார்கள். அவர்களை வர வேற்று உபசரிப்பார் தனவந்தர்.

கடவுள் தத்துவத்தைப் பற்றி அனுபவ பூர்வமாக சிவனடி யார்கள் விளக்குவார்கள். அழகிய திருப்பாடல்களைப் பாடி உருகுவார்கள். தனவந்தர் அப்படியே அதில் ஈடுபட்டுக் கரைவார்.

அருமைக் கண்மணி புனிதவதியாரும் இந்தக் காட்சியைப் பார்த்து அப்படியே ஈடுபட்டு விட்டார்.

கண்கண்ட தெய்வம் சிவனடியார்கள் தாம் என்று மதித்து வழிபட்டார் அம்மையார்.

வயது வந்த பருவ மங்கையானவுடன் பரம தத்தன் என்னும் பெரும் பணக்கார இளைஞனுக்கும் அம்மை யாருக்கும் திருமணம் நடந்தது.

பரமதத்தன் பணக்காரன் தான். நல்லவன் தான். ஆனாலும் வியாபாரி. எதையும் வரவென்ன, செலவென்ன என்று கணக்குப் போட்டுத்தான் பார்ப்பான். ஒருவேளைச் சாப்பாட்டைக் கூடக் கணக்குப் போட்டுத்தான் பார்ப்பான். பிரயோசனம் இல்லை என்றால் ஒரு குவளைத் தண்ணீரைக் கூட அவனால் தாங்க முடியாது.

பாவம் அவன் ஒரு வணிகன். புனிதவதியாரோ ஒரு பெண். அன்பும் ஆதரவும் நிறைந்த பெண்.

வியாபாரியின் மனைவிதான். ஆனால் புனிதவதியார் வியாபாரி அல்ல. பெண், பெண்ணே தான்.

புனிதவதியாரின் வரவேற்பு, உபசரிப்பு, விருந்து, பக்தி, கருணை எல்லாம் பரமதத்தனுக்கு எரிச்சலை உண்டாக்கின. அதனால் அம்மையாரை நாலா வழிகளிலும் நெருக்கி இம்சைப்படுத்தினான் பரமதத்தன்.

என்ன செய்வாள் அப்பாவிப்பெண்! பதினாறு வயது அல்லது பதினேழு வயதுள்ள இள நங்கை. மலரினும் மெல்லிய உள்ளம். அமிழ்தினும் இனிய கருணை.

கொடிய வேங்கைப் புலிபோல எந்த நேரத்திலும் பாய்ந்து தன் உணர்ச்சிகளைத் தும்பு தும்பாய்க் கிழித்தெறியும் பரம தத்தனைத் திருத்த முடியவில்லை. கரும்பாறையை வளைக்க முடியுமா?

என்ன செய்வாள் அப்பாவிப்பெண்? நொந்து நொந்து செத்தாள். வாடி வதங்கினாள். அவருடைய இளமை, அழகு, லட்சுமிதேவி கொலு வீற்றிருக்கும் முகக்களை, குளுமை எல்லாம் வற்றி உலர்ந்து விட்டன.

குளிப்பில்லை முழுக்கில்லை; வேளா வேளைக்கு ஒழுங்கான சாப்பாடில்லை; தூக்கம் இல்லை, அப்படியே பைத்தியம் பிடித்தவர் போல பரக்க பரக்க விழித்தார் பதறினார் அலறினார்.

வெளிப் பார்வைக்கு இப்படிப் பேய் பிடித்தவர் போலத் தோன்றினாலும் உள்ளே இருக்கிற பக்தி சுடர் விட்டுப் பிரகாசிக்கவே செய்தது. தகதக என்று ஞான ஒளி வீசிப் பிரகாசித்தது.

காரைக்காலம்மையாருடைய பக்தி, கனிவு, பரவசம் எல்லாம் ஒன்றாய் நின்று அழகிய பாடல்களாய் உரு வெடுத்தன.

காரைக்காலம்மையார் வாழ்க்கை ஒரு கரடு முரடான நிலைதானே! இந்த முரண்பாட்டை அனுபவித்தவர்கள், "தம் அழகிய திரு உருவத்தைக் களைந்தெறிந்து விட்டு அம்மையார் பேயுருவம் பூண்டார்." என்று சொன்னார்கள். பரிவிலிருந்தும் பாடல்களை அனுபவித்த பக்தியிலிருந்தும் வந்த சொல் அது. அனுபவித்துச் சொன்ன கதைதான் அது. நாடகத் துறையில் வைத்து ஒரு சுழட்டுச் சுழட்டிச் சொன்னால்

நன்கு அனுபவிப் பார்கள் என்கிற நல்ல எண்ணத்தில் சொன்னார்கள். ஆனால்.

'கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டது' என்று சொல்வார் களே அப்படி ஆகிவிட்டது நாடக உத்தி.

காரைக் காலம்மையார் பேயும் இல்லை பிசாசும் இல்லை. ஆனால் பேயின் கையில் அகப்பட்ட ஒரு பெண்ணோ ஆணோ என்ன பாடுபடும்? அப்படிச் சங்கடப்பட்டார் காரைக் காலம்மையார். தொட்டுத் தாலி கட்டிய கணவனே சொந்த மனைவியை அந்தப் பாடு படுத்தினான்.

உலகம் கொடுமையானது தான்.

அனலில் வெந்து வெந்து பளபளக்கும் தங்கத்தைப் போல கொடுமையில் விழுந்து விழுந்து திணறும் காரைக் காலம்மையாரின் ஞானம் எப்படி கவியாய் ஜொலிக்கிறது என்று பாருங்கள்.

எல்லாம் கடவுள் மயம் என்று தெரிந்து விட்டால் போதும். பிறகு, இன்பம், துன்பம் என்றெல்லாம் வேற்றுமை இருக்காது.

உண்மையை நேருக்கு நேராகப் பார்க்கிறவர்கள் ஞானிகள். காரைக்காலம்மையாரோ ஞானம் பழுத்துக் கனிந்த அருள் ஒளி.

உலகம் என்றால் அதில் எத்தனையோ லாப நஷ்டங்கள் இருக்கும். தொல்லைகளும் இருக்கும்.

கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று கண்டவர்களுக்கு தொல்லை ஒன்று இருக்கவா செய்யும்? இந்தத் தொல்லையிலிருந்து எனக்கு பாதுபாப்புக் கொடும் என்று வரம் கேட்கவா செய்வார்கள்?

பள்ளத்தை நோக்கித் தண்ணீர் எப்பொழுதும் ஓடிக் கொண்டே இருக்கும். அப்படி பக்தர்களின் மனம் இறைவனை அனுபவித்துக் கொண்டே இருக்கும்.

கடவுள் நமக்கு எது கொடுத்தார். எதை எதைக் கொடுக்கவில்லை என்று கணக்குப் போடாது. தெள்ளத் தெளித்த இந்த உறுதி எப்படிக் கவியாய் எழுந்து வருகிறது என்று பாருங்கள்.

*இடர்களையா ரேனும்,*
*எமக்கிரங்கா ரேனும்,*
*படரும் நெறிபணியா*
*ரேனும், - சுடர் உருவில்*
*என்பறாக் கோலத்(து)*
*எரியாடும் எம்மானார்க்(கு)*
*அன்பறா என்நெஞ்(சு)*
*அறி*

*(இடர் - துன்பம். எமக்கு இரங்காரெனும் - என்னிடம் கருணை காட்டாவிட்டாலும், படரும் நெறி பணியார் ஏனும் - என்னோடு நீ பழக வேண்டும் என்றால் இப்படி இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற குறிப்புக் கொடுக்காவிட்டாலும், அதாவது பராமுகமாக இருந்தாலும். என் நெஞ்சு அன்பு அறா - என் உணர்ச்சியும் ஆவலும் அவரை நோக்கியே இருக்கும்; மாறவே மாறாது.*

*சுடர் உருவில் - ஒளி மயமானவர் பெருமான். என்பு அறா கோலம் - எலும்புதான் அவருக்கு மாலை. அதைக் கழற்ற மாட்டார். எரியாடும் எம்மான் - ஆணவத்தைப் பொசுக்குவதற்காக தீப் பந்தத்தை ஏந்தி ஆவேசம் கொண்டு ஆடுவார் பெருமான்.)*

*குறிப்பு :* நாயகனைப் பற்றிய சந்தேகம் நாயகிக்கு வரும். அதனால் ஆத்திரமும் வரும். பேச்சும் கொஞ்சம் காரசாரமாக வந்து விழும். ஆனால் வேறொருவர் தன் நாய கனைப் பற்றி குறை கூறினால் அதைத் தாங்காது நாயகியின் உள்ளம்.

"அவரைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர் எப்படி இருந்தாலும் சரி. எனக்கு அவர்தான் தஞ்சம்" என்று சொல்லிவிடுவாள் நாயகி.

அப்படி சொல்கிறார் காரைக்காலம்மையார்.

*இடர்களையா ரேனும்*
*எமக்கிரங்கா ரேனும்*
*படரும் நெறிபணியா*
*ரேனும் சுடர்உருவில்*
*என்பறாக் கோலத்(து)*
*எரியாடும் எம்மானார்க்(கு)*
*அன்பறா என்நெஞ்(சு)*
*அறி*

இனி வேறொரு பாடல்.

கடவுள் எங்கே இருக்கிறார் என்று அதட்டினால் ஒரு இடத்திலும் தெரியமாட்டார். பேரண்டம் முழுவதும் தேடினாலும் சரி, தன்னைக் காட்டமாட்டார். அணு அணுவாய்ப் பார்த்தாலும் பார்க்க முடியாது கடவுளை.

இனி, எங்கும் இருக்கிறார் கடவுள். அவரைத் தவிர வேறு என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை. எல்லாம் அவர் தான். நானும் அவர்தான். என் உடல், உயிர், உணர்வு எல்லாம் அவர் தான்.

நான் என்பது இல்லை. எல்லாம் அவர்தான் என்று வாலை மடக்கி வைத்தால் எங்கும் அவரைப் பார்க்கலாம். அவரையே பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

காரைக்காலம்மையார் உண்மையைக் கண்டவர். அவர் கண்ட உண்மை அவரைக் கரைத்து விட்டது. கடவுள் மய மாகவே கரைத்து விட்டது.

அடடா! பெருமான் என்னோடல்லவா இருக்கிறான்! எவ்வளவு சுலபமாய்ப் போய்விட்டது காரியம் என்று துள்ளி மகிழ்கிறார் அம்மையார்.

*இன் று நமக்(கு) எளிதே!*
*மூஏழ் உலகங்கள்*
*ஆவானைக் கா ணும்*
*அறிவு (இன் று நமக் கெளிதே)*

இனி படைக்கும் தெய்வமாகிய பிரம்மா (நான்முகன்) காக்கும் தெய்வமாகிய திருமால் இரண்டுபேரும் கொஞ்சம் திமிர் பிடித்து அலைந்தார்கள்.

நான் இல்லை என்றால் ஒரு இலைகூட உண்டாக முடியாது என்றான் நான்முகன். நான் இல்லை என்றால் ஒரு எறும்பு கூட வாழமுடியாது என்றார் திருமால்.

யார் பெரியவர் என்ற வழக்கு சிவபெருமானிடம் வந்தது.

பெருமான் சொன்னார்; "என் முடியை ஒருவர் தேடிப் போக வேண்டும். அடியை ஒருவர் தேடிப் போக வேண்டும். பார்த்து விட்டு முதலில் திரும்புகிறவர் தான் பெரியவர்" என்று.

அன்னப் பட்சியாக மாறி நான்முகன் மேலே மேலே போனான். பன்றியாக மாறி தோண்டித் தோண்டி கீழே போனார் திருமால் .

ஊழி ஊழி காலமாகியும் ஒன்றும் புலப்படவில்லை. இரு வரும் திரும்பி வந்தார்கள். வெறுங்கையோடு வந்து நின்றார்கள்.

எங்களிடம் ஒன்றும் இல்லை. எல்லாம் உம்முடைய அருள்தான் என்று சாஷ்டாங்கமாக விழுந்தார்கள்.

கொஞ்சம் தரிசனம் கிடைத்தது.

ஆணவம் இருக்கிறவரை திமிர் ஒன்றுதான் இருக்கும். ஆணவம் கழலக் கழல தெய்வ ஒளியாய்ப் பொலியும்.

இந்த உண்மை எப்படி எக்களிப்போடு வருகிறது என்று பாருங்கள் மாலுக்கும்..... அளப்பரியன் ஆனனன்.

*இன் று நமக்கெளிதே!*
*மா லுக்கும் நான் முகற்கும்*
*அன் றங்(கு) அளப்பரியன்*
*ஆனானை - என்றென் றும்*
*மூவா மதியானை*
*மூ வேழ் உலகங்கள்*
*ஆவானைக் கா ணும்*
*அறிவு*

*(அளிப்பரியன் ஆ னான் - கணக்கு வழக்குகளைத் தாண்டி தீண்டு உயர்ந்தவன் சிவபெருமான். மூவாமதி - இளம் (பிறைச்) சந்திரன்; காணும் அறிவு - கண்டு அனுபவிக்கும் பேறு)*

***குறிப்பு*** : அற்புதமான பாட்டு. பாடப்பாட அம்மையார் நம்முன் வந்து நிற்பார். அவர் பின்னால் கடவுளும் வந்து நிற்பார். அப்படியே நம் உணர்ச்சியோடு உணர்ச்சியாயச் சேர்ந்து விடுவார்கள் அவர்கள்.

இனி வேறொரு பாடல்.

கரையில் நின்று பார்க்கிறோம். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரே தண்ணீர். பூமியை அப்படியே வளைத்து மடக்கிக் கும்மாளம் போட்டுக் குதிக்கிறது சமுத்திரம். வானமே கவிந்து வந்து நீரோடு நீராய் சங்கமித்து விட்டது போல இருக்கிறது.

மலை மலையாய் எழும்புகின்றன அலைகள். அவை வேகமாக ஓடி வருகின்றன. கரையில் மோதுகின்றன. மடங்கிப் பின் வாங்குகின்றன.

கண்ணுக்கு இனிய காட்சிதான். பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறோம். ஆனால் நம் பக்கத்தில் ஒருவர் இருக்கிறார். அவர் பரக்கப் பரக்க நம்மைப் பார்க்கிறார்.

ஏன் இப்படி என்று நாம் அதிசயப்படுகிறோம். அவருக்குப் புரியவில்லை. சுற்று முற்றும் பார்க்கிறார். அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை.

என்ன விஷேசம் என்று கேட்கிறார். விபரத்தைச் சொல்கிறோம். அவருடைய மண்டைக்குள் ஏற மாட்டேன் என்கிறது சமுத்திரம்.

“என்ன அதிசயத்தைப் பார்த்தீர்கள்? வெறும் தண்ணீர்! அதுவும் உப்புத் தண்ணீர்! நம்மூர் ஏரியை விடப் பெரிய ஏரி! என்று ஒரேடியாய் சொல்லி விடுகிறார் அவர்.

எப்படி இருக்கும் நமக்கு?

கடலைவிட மனுசன் அதிசயமாகத் தெரிவார்.

இனி, பேரண்டம் முழுவதும் கடவுள்தான். அவர் அருள் தான். திருவருள்தான். அதைப் பார்த்துப் பார்த்து அனுபவிக் கிறார் அம்மையார். கூடவே இருக்கிறார்களே பலர். அவர் களால் அப்படிப் பார்க்க முடிந்ததா?

“நமக்கு இப்படித் தெளிவாய்த் தெரிகிற ஒன்று மற்றவர் களுக்கு ஏன் தெரியவில்லை? அணுவளவு கூடத் தெரிய வில்லையே ஏன்? என்று யோசிக்கிறார் அம்மையார். ஒன்றும் விளங்க மாட்டேன் என்கிறது அவருக்கு.

பிடிபடவில்லை என்கிற தீர்மானத்துக்கு வந்ததும் ஓர் உற்சாகம் வருகிறது. அந்த உற்சாகம் கிண்டலும் கேலியுமாய் வருகிறது.

எப்படி?

“எங்கும் நிறைந்த இறைவனை நாம்தான் சுருட்டி மடக்கி நமக்குள் வைத்துக் கொண்டோமே? அப்படி மறைத்து வைத்த பொருள் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?” என்று குதித் தோடி வருகிறது கிண்டல்.

இனிப்பாடல்.

*ஆர்வல்லார் காண*
*அரன் அவனை அன்பென்னும்*
*போர்வை அதனாலே*
*போர்த்தமைத்து - சீர்வல்ல*
*தாயத்தால் நாமும்*
*தனிநெஞ்சின் உள்ளடைத்து*
*மாயத்தால் வைத்தோம்*
*மறைத்து.*

*(ஆர்வல்லார் காண அரன் அவனை - ஒருவராலும் பார்க்க முடியாது எம்பெருமானை ஏன்? அன்பென்னும் போர்வை அதனால் போர்த்து அமைத்து - பக்தியால் அவனை வசப்படுத்தி. சீர்வல்ல தாயத்தால் - நெருங்கிய உறவால் தனி நெஞ்சின் உள்ளமைத்து மாயத்தால் வைத்தோம் - அவனையே எண்ணி எண்ணித் தவிக்கும் உணர்ச்சிக்குள் வைத்துப் பொதிந்து விட்டோம். (தாயம் உரிமை மாயம் - ரகசியம்) பிறகு யாரால் பார்க்க முடியும்?*

*குறிப்பு :* நம்மிடம் ஸ்தூலமாய் இருக்கிறது உண்மை. ஆனால் மற்றவர்களுக்கு அணுவளவு கூடத் தெரியவில்லை. என்ன விநோதம் இது என்னும் அதிசயமானது; நாடகம், வேடிக்கை, நையாண்டி இவற்றோடு சேர்ந்து தமிழில் விளையாடுகிறது. அதுதான் கவி.

இனியொரு பாடல்.

உண்மையைப் பார்த்த உடனேயே பொய் நகர்ந்து விடும். பொய்யானது கலையக் கலைய உண்மையினிடத்து ஆர்வம் பெருகும். உறவு ஏற்படும்.

உறவு வளர வளர முதலில் தன்னிடத்தில் உள்ள ஒவ்வொன்றையும் அதனிடம் அர்ப்பணிக்க வைக்கும்

வேற்றுமை விலகி ஒன்று என்கிற நிலைக்கு உறவு வருகிறபொழுது தன்னையே அர்ப்பணிக்க வைக்கும்.

குழந்தையினிடத்து தாய் எப்படி தன்னை அர்ப்பணித்து விடுகிறாளோ அப்படி அர்ப்பணிக்க வைத்துவிடும் உறவு.

எல்லாம் அன்பின் செயல். அன்பு எப்படி வரும்?

உண்மையைப் பார்த்தவுடனேயே உள்ளத்தில் அன்பு ஊறிவிடும்.

உண்மைதான் அன்புக்குப் பிறப்பிடம்.

காரைக்காலம்மையார் உண்மையைக் கண்டு விட்டார். அப்படியே நிலையாய் நிலைத்து விட்டது அவர் இதயத்தில் உண்மை.

அன்பு ஊறுகிறது; ஆர்வம் பெருக்கெடுக்கிறது தன்னிடம் உள்ளவற்றை அர்ப்பணிக்கிறார். பிறகு தான் என்பது ஏது என்று பட்டு விடுகிறது. தன்னையே அர்ப்பணித்து விடுகிறார்.

அப்புறம் என்ன இருக்கிறது. ஒன்றுமே இல்லை. ஆனாலும் சும்மா இருக்க முடியவில்லை.

ஒரு புஷ்பத்தைப் பறித்தாவது அவனுக்குச் சார்த்த வேண்டும். ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்தாவது அவன் திருமேனியைத் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும். அவன் சந்நிதானத்தின் முற்றத்தில் நீர் தெளித்து ஒரு கோலமாவது போட வேண்டும்.

இல்லை என்றால் என்னவோ போல இருக்கிறது. அம்மையார் சொல்கிறார். உனக்குப் பணிவிடை செய்கிற பாக்கியம் ஒன்று போதும். மோட்சம் மோட்சம் என்கிறார்களே! அது எனக்குத் தேவை இல்லை.

இனிப் பாடல்

*கண்டெந்தை என்றிறைஞ்சிக்*
*கைப்பணியான் செய்வேனேல்*
*அண்டம் பெறினும்*
*அதுவேண்டேன்; துண்டம்சேர்*

*விண் ஆளும் திங்களாய்!*
*மிக்குலகம் ஏழி னுக்கும்*
*கண்ணாளா! ஈதேன்*
*கருத்து.*

*(கைப்பணி - உடலுழைப்பு, அண்டம் - மோட்சம், துண்டம் சேர் (விண் ஆளும்) திங்களாய் - பிறைச்சந்திரனை - வானில் உலவும் பிறைச் சந்திரனை தலையில் சூடி வைத்திருக்கும் பெருமானே! கண்ணாளா நாயகனே! ஈது என் கருத்து - இது தான் என் முடிவு. உனக்குப் பணிவிடை செய்ய வேண்டும். மோட்சம் கூட எனக்குத் தேவை இல்லை. உன்னைப் பார்த்துப் பார்த்து உனக்கு நான் பணிவிடை செய்ய வேண்டும்)*

*குறிப்பு :* ஞானத்திலும் வழிப்பாட்டிலும் அப்படி இருக்கிறது ஆனந்தம்.

இன்னொரு பாடலைப் பார்ப்போம்.

பொய் விலகினால் போதும். பயம் ஓடிவிடும். உண்மை யானது தொனிக்கத் தொனிக்க ஊக்கம் பெருகும்; ஆனந்த மயந்தான்.

காரைக்காலக்காலம்மையார் அப்படி ஓர் ஆனந்தக் களிப்பில் நிற்கிறார். அவருடைய தெளிவு எத்துணை உறுதியாய் இருக்கிறது என்று பாருங்கள்.

நான் என்று ஒன்று இருந்தால் அல்லவா, ‘பிறக்கிறது’ 'இறக்கிறது' என்று இருக்கும்.

நான் என்று ஒன்று இருந்தால் அல்லவா செயல் இருக்கும்? அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்று சொல்ல முடியும்?

எல்லாம் அவனுடைய அருள். திருவருள் என்று தெரிந்த பின், மரணபயமோ(காலன்) பிறவித் துன்பமோ(நரகம்) நல்வினை, தீவினையோ, அவற்றின் பலனோ ஒன்றுமே இல்லை எல்லாம் ஓடி விட்டன. ஒழிந்தே போயின.

மிச்சம் அவனொருவன்தான்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று ஆகாயக் கோட்டைகளையும் சுட்டுப் பொசுக்கினானே பெருமாள். அவன் ஒருவன் தான் மிச்சம்.

அப்படியானால் தொல்லைக்கு இடம் ஏது?

*காலனையும் வென்றோம்*
*கடுநரகம் கைகழன்றோம்*
*மேலை இருவினையை*
*வேரறுத்தோம்; கோல*
*அரணார் அவிந்தழிய*
*அந்தீ அம்(பு) எய்தான்*
*சரணார விந்தங்கள்*
*சார்ந்து.*

*(கோல அரணார் - அழகிய கோட்டைகள், அரண் - கோட்டை. ஆர் என்பது நையாண்டிக்காக வரும் ஓர் ஒட்டு. அம் தீ அம்பு நெருப்பாகிய பாணம். அதுவும் புன்முறுவலில் பூத்த நெருப்பு. சரண் அரவிந்தங்கள். தாமரை மலர் போன்ற திருவடிகள். அதாவது திருவருள் நிழல்)*

*குறிப்பு:* வென்றோம், கழன்றோம், வேரறுத்தோம் என்று எழுந்து நின்று வெற்றி விழாக் கொண்டாடுகிறது தமிழ் உண்மையைக் கண்ட உற்சாகம் (வெறி) என்றால் அதுதானே!

நீட்ஸே, சோப்பனேர் இருவரும் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த சிறந்த சிந்தனையாளர்கள்.

ஜெர்மனியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதம், உபநிஷதம், பகவத் கீதை, காவியம், புராணங்கள் ஆகியவற்றை படித்தவர்கள். அதனால் இந்தியாவின் மேல் அவர்களுக்கு மரியாதை அதிகம்.

இவர்களில் சோப்பனேர் என்பவர் சொல்கிறார்.

"என்னுடைய வாழ்க்கைக்கு விளக்கம் கொடுத்தது இந்தியர்களின் தெளிந்த அனுபவஞானந்தான். அதேபோல மரணத்தைப் பற்றிய பயத்தை விலக்கியதும் அதே ஞான ஒளிதான். இப்படியாக இம்மைக்கு ஓர் ஆறுதலையும் மறுமைக்கு ஒரு நம்பிக்கையையும் கொடுத்தது இந்தியர் கண்ட உண்மை விளக்கம்" என்று.

சோப்பனோர் தேவாரம் படித்ததில்லை. திருவாசகம் படித்ததில்லை. ஆழ்வார்கள் பாடலோ, கம்பர் பாடலோ அவருக்குத் தெரியாது. காரைக்காலம்மையார் பாடலும் அவர் படித்ததில்லை.

இவர்களுடைய பாடல்களை படிக்காமலே இப்படிப் பாராட்டியவர் அவற்றையெல்லாம் படித்திருந்தால் எப்படி எப்படிப் பாராட்டி இருப்பாரோ!

இனி வேறொரு பாடல்.

உண்மை தெரிகிறவரைக்கும் தைர்யம் இருக்காது. பயந்தான் இருக்கும். அதனால் வார்த்தை ஒழுங்காய் வராது.

ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் அதை முடிக்கத் தெரியாது. என்னென்னவோ வந்து நுழையும். எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போகும் அதை.

அடியும் தெரியாது, முடியும் தெரியாது. அந்தரத்தில் மிதக்கும் விஷயம்.

இனி, உண்மை தெரிந்துவிட்டால் போதும், வார்த்தைகள் குதித்துக் கொண்டு வரும். கேலியும், கிண்டலும், சிரிப்பும் விளையாட்டுமாய்க் கும்மியடித்துக் கொண்டு வந்து விழும் வார்த்தைகள்.

விஷயத்தை எடுப்பதும் தெரியாது. தொடுப்பதும் தெரியாது, முடிப்பதும் தெரியாது அப்படி அப்படி உருவப் பொலிவோடு கலைக் கோயிலாய் வந்து நிற்கும் ஒவ்வொரு கருத்தும், ஒவ்வொரு அனுபவமும். இனி காரக்காலம்மை

யாரிடம் எப்படிக் கலகலவென்று தமிழ் பேசுகிறது என்று பாருங்கள்.

இறைவனைப் பார்த்துக் கேட்கிறார்.

பெருமானே! நீர் தானே அண்ட பிண்ட சராசரம் அவ்வளவும். தண்ணீரும் நீர்தான், நெருப்பும் நீர்தான். நெருப்பில் வெந்து நீறுகிற பொடியும் நீர் தான். பசுவும் நீர்தான். பாலும் பாலுக்குள் இருக்கிற நெய்யும் எல்லாமும் நீர் ஒருவரேதான்.

அப்படி இருக்க ராவணன் மட்டும் அன்னியன் ஆகி விடுவானா?

கைலை மலையை அவன் ஒரு புரட்டுப் புரட்டினான். அப்பொழுது ஏன் அவனுடைய தலையும் தோளும் நெரிய உமது பாதத்தை அழுத்தி ஊன்றினீர்!

இனிப்பாடல்.

*அடித்தலத்தின் அன்றரக்கன்*
*ஐந்நான்கு தோளும்*
*முடித்தலமும் தான்முரித்த*
*ஆறென்! - முடித்தலத்தில்*
*ஆறாடி, ஆறா*
*அனலாடி அவ்வ னலின்*
*நீறாடி நெய்யாடி,*
*நீ.*

*அரக்கன் - ராவணன், ஐந்நான்கு தோள் - ராவணனுக்கு தலை பத்தென்றால் தோள் இருபது தானே இருக்க வேண்டும். ஐந்நான்கு-இருபது. முடித்தலம் - மணிமுடி தரித்த தலை. முரித்த ஆறு என்-ஏன் அவற்றை நெரிக்க வேண்டும். முடித்தலத்தின் ஆறு ஆடி - தலையில் நீரை வைத்துச் சுமந்து கொண்டிருக்கிற பெருமானே. அனலாடி - கையில் தீயை ஏந்தியவனே, நீறாடி*

*வெந்த சாம்பலைப் பூசும் நாயகனே, நெய்யாடி - பசுவின் பாலிலும் நெய்யிலும் நீராடும் சதுரனே!*

வித்தியாசமே இல்லாமல் எங்கெங்கோ நிறைந்த நீ, ஏன், ராவணனை மட்டும் வித்தியாசமாகப் பார்க்க வேண்டும்?

*குறிப்பு :* அருமையான பாடல். இப்படி எல்லாம் உல்லாசமும் எக்களிப்பும் நிறைந்த பெருமாட்டியை பேய் என்று சொல்வது பாவம். கொடிய பாவம்.

இனி விருந்து ஒன்று நடந்தது. அதில் பாயசம் பரிமாறினார்கள். மிக்க ருசியாய் இருந்தது பாயசம். உண்டு மகிழ்ந்தவர்களால் மறக்க முடியவில்லை பாயசத்தை.

அமிர்தமாய் இருந்தது பாயசம்! தேவாமிர்தம் என்றால் இதுதான்! உண்ண உண்ணத் திகட்டவே இல்லை. இப்பொழுது நினைத்தாலும் நாக்கில் நீர் ஊறுகிறது! இன்னொரு தடவை அது மாதிரி கிடைக்குமா? தேவர்களுக்குத் தெரிந்தால் பாயசம் வைத்தவனை கூட்டிக் கொண்டுபோய் விடுவார்கள்.

இப்படி எல்லாம் விதம் விதமாகப் பாராட்டுகள் வரும்.

அரிசி இவ்வளவென்றால் பால் இவ்வளவு. பால் இவ்வளவு என்றால் நெய் இவ்வளவு. சர்க்கரையும், முந்திரிப் பருப்பும், ஏலக்காயும் இவ்வளவு போட வேண்டும்.

அப்படிப் போட்டு இறக்கினால் அது பாயசம் என்று யாராவது இலக்கணம் சொல்வார்களா?

அம்மையாரும் இலக்கணம் சொல்லமாட்டார்கள்.

செம்பவள மலைபோல எதிரில் வந்து நிற்கிறான் பெருமான். அவனை எப்படி அணு அணுவாய் அனுபவிக் கிறார் அம்மையார் என்று பாருங்கள்.

*காலையே போன் றிலங்கும்*
*மேனி; கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும்*
*வெண்ணீ று;- மாலையின் மின்*

*தாங்குருவே போலும்*
*சடைக்கற்றை; மற்றவற்கு*
*வீங்கிருளே போலும்*
*மிடறு*

*(காலையே போன்று இலங்கும் மேனி - உதய சூரியன் போல செக்க சிவந்ததுமேனி. கடும் பகலின் வேலை - உச்சிக் காலத்து பகல் வெளிச்சம் போல, வெண்நீறு - திருநீறு இருக்கிறது. மாலையில் மின் தாங்கு உரு போலும் சடைக்கற்றை-மின்னல் பலவற்றை ஒரு கோர்வையாய் கட்டிப் போட்டால் எப்படி பளிச் பளிச் என்று ஒளி அடிக்கும். அப்படி ஒளிருமாம் பெருமானின் செஞ்சடை இனி, அவர் கழுத்திலிருக்கும் நீல வண்ணம் ஓரே மை இருட்டுப் போலத்தான்)*

*குறிப்பு :* விதவிதமான ஒளிப் பிழம்புகளோடு இருளும் கலந்து கிடப்பது ஓர் அழகுதான். நிலவில் காட்டு வழி நடக்கிறவர்கள் ஒளியும் இருளும் திட்டுத் திட்டாய்க் கிடப்பதை அனுபவிப்பார்கள்.

இனி வேறொரு பாடல்.

எப்பொழுதும் உண்மையில் ஒன்றித் திளைக்கிறவர் அம்மையார்.

பேரண்டம் முழுவதும் சக்திமயமாய் இருக்கிறது. சக்தி ஒன்றுதான். அதுதான் கோடான கோடி உருவங்களாய் தோன்றுகின்றது. தோன்றித் தோன்றி மறைகின்றது.

சக்தி தான் பொருள். பொருள்தான் சக்தி. ஒன்றே ஒன்று தான். அது இரண்டாகத் தெரிகிறது.

இந்த அற்புதத்தை அம்மையப்பனாக, உமையொரு பாகனாகப் பார்த்து அனுபவிக்கிறார் புனிதவதியார்.

முழு முதல் பொருளாகிய பெருமானோடு சக்திமயமான உமையம்மை சேர்ந்தே இருக்கிறான்.

என்னதான் சேர்ந்திருந்தாலும் இடை இடையே பிணக்குகள் ஏற்படத்தான் செய்கின்றன.

முதலில் பொருட்படுத்த மாட்டார் பெருமான். ஆனால் நேரம் ஆக அவரால் அம்மையின் ஊடலைத் தாங்க முடியாது.

காலைப் பிடிப்பார். கையைப் பிடிப்பார். கெஞ்சுவார், மன்னிப்புக் கேட்பார், கும்பிடுவார், கூத்தாடுவார்.

கடைசியில் உமையம்மையின் திருவடிகளை எடுத்து - செம்பஞ்சுக் குழம்பு பூசிய திருவடிகளைத் தொட்டு எடுத்து தன் தலை மேல் வைத்தே வேண்டுவார்.

இயல்பாகவே அவர் சடைமுடி சிவப்பு. இப்பொழுது அன்னையின் பாதம் பட்டதால் மேலும் சிவந்து கனிகிறது செம்மை.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

*சிலம் படியாள் ஊடலைத்*
*தான்தவிர்ப்பான் வேண்டி*
*சிலம்படியின் செவ்வரக்கம்*
*சேர்த்தி - நலம்பெற்(று)*
*எதிராய செக்கரினும்*
*செங்கோலம் செய்தான்.*
*முதிரா மதியான்*
*முடிக்கு*

*(சிலம்பு அடியாள் - உமையம்மை; காலில் சிலம்பணிந்த உமை. தவிர்ப்பான் வேண்டி - நீக்க எண்ணி. முடிக்கு எதிராய் செக்கரினும் செங்கோலம் செய்தாள் - சடையின் சிவப்புக்கு போட்டியாக இருந்தது அம்மையின் திருவடிச்சிவப்பு. அதையும் சேர்த்துக் கொண்டு விட்டான் இப்பொழுது முதி ராமதியான் - இளமதி சூடிய பெருமான்)*

*குறிப்பு :* வாழ்க்கையை எத்தனை அன்போடு பார்க்கிறார் காரைக்காலம்மையார். அப்பொழுது தானே அதன் அழகு தெரியும்.

பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த பிற்ளையை கையில் எடுத்து தாயானவள் எப்படி ஆசையோடு பார்ப்பாளோ அப்படி ஆசையோடு வாழ்க்கையைப் பார்க்கிறார் அம்மையார்.

பார்க்கப் பார்க்க வாழ்க்கையின் மணம் ருசி எல்லாம் வெளிப்படுகின்றன. அவை அப்படியே கவியில் கிடக்கின்றன.

இனி மற்றொரு பாடல்.

ஆணவத்தைச் சுட்டுப் பொசுக்குவது தான் இறைவனின் செயல். இதை அவன் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறான்.

இதை உருவகப்படுத்திச் சொன்ன கதைதான் நடு இரவில் சுடுகாட்டில் பேய்களோடு தீப்பந்தம் ஏந்தி இறைவன் ஆடுகிறான் என்பது.

காரைக்காலம்மையாரும் உருவகத்தை நன்றாக அனுபவிக்கிறார்.

அனுபவம் மனசிலேயே நின்று விடுகிறது. மேலும் மேலும் மனசை அது அழுத்துகிறது.

மறக்க முடியவில்லை காட்சியை.

சட்டென்று ஒரு நினைப்பு வருகிறது. 'அடடா! நடுச் சாமத்தில் சுடு காட்டில் போய் ‘திம், திம்’ என்று குதிக்கிறானே பெருமான்! உமையம்மையும் கூடவே (ஒரு பாகத்தில்) இருக்கத்தானே செய்கிறாள்! எப்படித் தாங்கும் இதை அந்தச் சின்னஞ்சிறு பெண்ணுள்ளம்'

இப்படி ஒரு பரிவு வந்து விடுகிறது அம்மையாருக்கு.

அது தமிழோடு சேர்ந்து பேசுகிறது.

எப்படி?

"பெருமானே! நீ ஆடப்போகும் போது அந்தப் பச்சிளங் கொடியை விட்டு விடும். அந்த இடத்துக்கு அவள் வேண்டாம்!"

இப்படி வாதாடுகிறார் அம்மையார்.

*குழலார் திருப்புறத்துக்*
*கோல்வளையைப் பாகத்(து)*
*எழிலாக வைத்தேக*
*வேண்டா:- கழல் ஆர்ப்பப்*
*பேர் இரவில் ஈமப்*
*பெருங்காட்டில் பேயோடும்*
*ஆர் அழலாய் நீ ஆடும்*
*அங்கு.*

*(திருப்புறம்-முதுகு. குழல் - சடை போட்ட கூந்தல்; அப்படியானால் சிறு பெண்தானே உமாதேவி. கோல்வளை - வளையலணிந்த உமையை எழிலாக பாகத்து வைத்து, ஏக வேண்டா - இடது பாகத்தில் வைத்துக் கொண்டு ஜம்பமாக போக வேண்டாம். எங்கு? ஆர் அழலாய் - நெருப்புருவமான இறைவனே! கழல் ஆர்ப்ப - வீரக்கழ ல் ஆரவாரிக்க. சுடு காட்டில் பேய்களுடன் கூடி நடு இரவில் ஆடப்போவாயே! அங்கு, அவள் உடன் வர வேண்டாம்)*

இனிக் கடைசியாக ஒரு பாட்டு.

உண்மை என்று ஒன்று இருக்கிறது. உண்மையை உணர்த்த அடையாளம் என்கிற ஒன்றும் இருக்கிறது.

உண்மையைவிட அதன் அடையாளமானது பழகு வதற்குத் ஏதுவாக இருக்கும். அதனால் மனமானது எப் பொழுதும் அடையாளத்தைக் கண்முன் நிறுத்தி பார்த்துக் கொண்டே இருக்கும்.

அதனால் உண்மையானது மெல்ல மெல்ல நழுவி விடும். அடையாளமே நிலைத்து நிற்கும்.

சடங்குகள் தானே வாழ்க்கையில் நிலைத்து நிற்கின்றன.

ஆனால் காலப்போக்கில் அடையாளமே உண்மை என்று படும். உண்மையோ வெறும் அடையாளம் போலத் தோன்றிவிடும்.

மன இயலில் இது ஓர் அதிசயந்தான்.

இனி, கடவுள் தத்துவம் சர்வ வியாபகமாய் ஒரே தன்மைத் தாய் நிறைந்து நிற்கிறது.

நீளம், உயரம், அகலம் என்கிற கணக்கெல்லாம் அதனிடம் செல்லாது. அல்லளவையும் கடந்தது கடவுள் தத்துவம்.

ஆனாலும் நம் உள்ளம் பற்றி நிற்க சில அடையாளம் கொடுத்துக் காட்டி இருக்கிறது சர்வ வியாபகத்தை.

எப்படி?

இறைவனின் தலையில் சந்திரனை வைத்தும், மேகங் களை அவன் சடை என்றும், நட்சத்திர வட்டங்களை அவன் கழுத்தில் பூணும் சர்ப்பாரணம் என்றும் வகை வகையாய்க் காட்டி இருக்கிறது.

எல்லாம் அடையாளங்கள் தாம்.

ஆனாலும் அடையாளமே மனசில் நிற்கிறது. சர்வ வியாபகம் என்னும் பேருண்மை ஒதுங்கிப் பின்னால் போய் விடுகிறது.

காரைக்காலம்மையாருக்கும் இதுதான் அனுபவம்.

எப்போதும் இறைவன் ஞாபகந்தான் அம்மையாருக்கு. கங்கை, பிறை, பாம்பு, அப்படி அப்படியே பெருமானோடும் (பெருமான் சடை முடியோடு) சேர்ந்து நிற்கின்றன.

ஒரு நாள் இரவு வானத்தை ஏறிட்டுப் பார்க்கிறார். பிறைச்சந்திரன் மேற்கே ஓர் ஓரமாய்ச் சாய்ந்து கிடக்கிறான். கருமேகங்கள் திரண்டு வானையே வளைக்க முன்னேறுவது

போல் இருக்கிறது. கருநாகம் போல் இருள். அதில் பாம்பின் படம் போல நட்சத்திரங்கள் இவ்வளவும் தெரிகின்றன.

அம்மையாருக்கு ஒரே வியப்பு.

"என்ன இது? இந்த ஆகாயம் பெருமானின் சடை முடியைப் போலல்லவா இருக்கிறது!

ஓகோ! பெருமானின் சடைமுடி விரிந்து பரந்த ஆகாயத்துக்கு ஓர் அடையாளந்தான்" என்று வியக்கிறார்.

வியப்பு எப்படிப் பாடலாய் உருவெடுக்கிறது என்றுப் பாருங்கள்.

*கலங்கு புனல்கங்கை*
*ஊடாட வாளும்*
*இலங்கு மதிஇயங்க*
*வாலும்,- நலங்கொள்*
*பரிசுடையாய்! நீள்முடிமேல்*
*பாம்பியங்க வாலும்*
*விரிசடையாம் காணில்*
*விசும்பு*

*(நலம் கொள் பரிசு உடையாய் - சகல வளங்களுக்கும் நாயகனே! விசும்புயாம் காணில்-ஆகாயத்தை நான் பார்த்தபொழுது, விரிசடையாம்- உன் விரிந்து பரந்த சடைகள் போலவே தோன்றின. என்ன அதிசயம் இது!)*

*குறிப்பு :* அற்புதமான பாட்டு. பாடப்பாடத் தான் உண்மை துலங்கும். பழகியதை வைத்துத் தானே பழகாததைப் பிடிக்க வேண்டும்.

பாடல்களைப் பாடிக்கொண்டே இருக்க வேண்டும். பாட்பபாட உடம்பில் உள்ள நோய்கள் ஒவ்வொன்றாய் கழன்று ஓடிவிடும். மனசில் அங்கங்கே விழுந்த வெட்டுக் குத்துக்கள், காயங்கள் எல்லாம் ஆறிவிடும். எரிச்சல், பொறாமை, வெறுப்பு முதலிய விஷங்களை முறித்துவிடும் பாடல்கள்.

பாவம் தொலையும். புண்ணியம் பெருகும் என்று சொல்வ தெல்லாம் மேலே குறிப்பிட்டதை நோக்கித்தான்.

இனி, வாழ்க்கை என்று ஒன்று, அது ஒன்றே ஒன்றுதான். ஆனாலும் அதில் தனித்னிச் சாயல்கள் உண்டு.

ஒரு கூட்டத்தில் ஆயிரம் பேர் இருந்தால் அந்த ஆயிரம் பேருக்கும் முகச்சாயல் தனித்தனியாக இருக்கும். அப்படியே மனச் சாயலும் தனித்தனிப் போக்கில் இருக்கும்.

எல்லாரையும் போலவே அம்மையார் பிறந்தார், மறைந்தார். ஆனால் அவருடைய நோக்கங்களிலும், செயல்களிலும், சம்பவங் களிலும் வீறிட்டுப் பொங்குகிற தனித்த ஆவலும் வேகமும் இருந்தன. அவற்றைப் பாடல்கள் கையில் எடுத்துக் காட்டுகிறது.

பாடல்கள் காட்டுகிறதைப் பார்க்க வேண்டும்.

கட்டுக் கதைகளை விட்டு விட வேண்டும்.

# VI நக்கீர தேவ(நாயனா)ர்

## 1

நக்கீரர் என்பது பெயர். தேவர் என்பது பட்டம்.

நாயனார், ஆழ்வார், அடிகள், பெருமாள் என்பன அருளாளருக்குரிய பட்டங்கள்.

அதுபோலவே அருளாளருக்குரிய பட்டம் தேவர் தஞ்சைப் பெரிய கோவிலில் லிங்கத்தை ஆவுடை யாரில் பொருத்தி வைத்தவர். கருவூர்த் தேவர் என்னும் அருளாளர்.

காலப்போக்கில் தேவர் என்பது அரசர் 'குறுநில வேந்தர்' (ஜமீன்தார்) பெரிய பண்ணையார் போன்றவர்களுக்கும் பட்டமாக வந்தது.

அருளாளர்கள் உலக மக்களுக்குப் பாதுகாவலாக இருப்பது போல மன்னர்களும் நாட்டு மக்களுக்குப் பாது காவலாக இருக்கிறார்கள்.

அதனால் மன்னர்களுக்கும் தேவர் என்கிற பட்டம் வந்தது. குலோத்துங்கதேவர், சோழதேவர், ராஜேந்திரதேவர் என்றெல்லாம் வந்தது.

திருத்தக்கத் தேவர் என்பவர் சிந்தாமணியை இயற்றிய வர். அவரும் ஒரு குறுநில மன்னர்தான். இனி, தேவர் என்னும் பட்டம் போக மிச்சம் இருப்பது நக்கீரர் என்னும் பெயரே.

ஆயிரம் வருடங்களுக்கு முன் தமிழகத்தில் தமிழர்களின் பெயர், சாத்தன், கொற்றன், பூதன், பேயன், சேந்தன், நலன், கபிலர், பரணர், மூலர், மாடன், வெள்ளி, பொன்னன், மகிழ்நன், பொருப்பன், துறைவன், காளை, விடலை, கண்ணன், வேலன், வில்லி, அறிவன், கணியன் என்று இருந்தன.

கீரன் என்கிற பெயரும் பெரு வழக்காய் இருந்தது. கீரனோடு 'ந' சேர்ந்து நக்கீரன் என்று ஆகிவிட்டது.

'ந'என்பது உயர்வைக் குறிக்கும் மரியாதைக் குறிப்பு.

கீரன் என்கிற பெயரில் ஆயிரக்கணக்கானவர் இருந் திருக்கலாம். பல்வேறு காலங்களில் பல்லாயிரக்கணக்கில் இருந்திருக்கலாம்.

தற்போது நிலைத்து நிற்கும் கீரன்மார் மூன்று நான்கு பேர்தான்.

சங்ககாலத்தில் சங்கப்புலவர்களோடு சங்கப் பலகையில் வீற்றிருந்த கீரன் ஒருவர்.

மதுரைக்கணக்காயளர் மகன் நக்கீரன் என்றும் இவரைக் குறிப்பிடுவார்கள்.

இரண்டாவது கீரர் திருமுருகாற்றுப் படை பாடியவர்.

இவரும் கிட்டத்தட்ட சங்க காலத்தை ஒட்டிய காலத்தவ ரென்றே தெரிகிறது. இவருக்கும் நக்கீரர் என்றே பெயர்.

அதன் பின்வருகிறவர் கீரன், என்றும் நிற்கவில்லை, நக்கீரர் என்றும் நிற்கவில்லை.

நக்கீரதேவர் என்றே நிற்கிறார் இன்றளவும் நிற்கிறார்.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அவதரித்த அருளாளர் இந்த நக்கீர தேவர்.

உண்மையை - பொய்ம்மை கலவாத மாசற்ற உண்மையை ஐயம் திரி பறக்கண்டவர் நக்கீரதேவர்.

கண்டது மட்டுமல்ல அதில் ஈடுபட்டுக் கரைந்தவர். நான் என்பது அணுவளவு கூட இல்லாதபடி உண்மையோடு உண்மையாய்க் கரைந்து ஒன்றானவர்.

அதனால் தான் நக்கீரர் - நக்கீரதேவர் என்று போற்றப் பட்டார்.

நக்கீர தேவர் பற்றிய வேறு வரலாறு ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி, காரெட்டு, திருவலஞ் சுழி மும்மணிக்கோவை ஆகிய மூன்று நூல்களை இயற்றி உள்ளார்.

இயற்றி உள்ளார் என்பது உபசார வழக்குத்தான்.

நக்கீரதேவர் அனுபவங்களும் மெய்யுணர்வுகளும் அற்புதக் காட்சிகளாக உருவெடுத்தன. பாடல்களாக அவதரித்தன.

அப்படி எடுத்த உருக்களை - இசையும் நடனமும் கொஞ்சி விளையாடும் தெய்வப் பாடல்களைப் பின் வந்தவர்கள் அனுபவித்தார்கள்.

அனுபவத்தை வைத்து பாடல்களைக் கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி என்றும், காரெட்டு என்றும், திருவலஞ்சுழி மும்மணிக்கோவை என்று தொகுத்தும் வகுத்தும் பெயரிட்டு தனித்தனி நூலாக்கினார்கள்.

இப்படி அனுபவித்துப் பார்ப்பதுதான் உண்மை.

இனி, கைலைபாதி காளத்தி பாதியிலிருந்து சில பாடல்களை பார்க்கலாம்.

தன்னிடம் உதவிபெற்று முன்னேறுகிற ஒருவன் தனக்கு நிகராகத் தன் னுடைய தகுதி அளவுக்கு முன்னேறி வருகிறான் என்றால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது மனிதனால்.

தனக்குரிய மரியாதை தனது உதவியைப் பெறு பவனுக்கும் வருகிறதென்றால் தாங்குவானா மனிதன்?

இனி, தனக்கும் மேலே-தன்னையும் தாண்டி முன்னேறு கிறான் - தன்னுடைய ஆள் எனறால் துடித்துவிடமாட்டானா மனிதன்.

பெற்ற பிள்ளையைப் கூட தன்னுடைய துறையில் தனக்கும் மேலே பெயரெடுக்கச் சம்மதிக்கமாட்டான் மனிதன்.

அப்படி இருக்க மற்றவர்களை விட்டு வைப்பானா?

ஆனாலும் தெய்வாம்சம் நிறைந்த புண்ணிய சீலர் தியாக மூர்த்திகள் ஒன்றிரண்டு பேர் இம்மண்ணுலகில் எதிர்பாரா வகையில் நடமாடுவதுண்டு.

அவர்கள் தாம் வேறு, மற்றவர்கள் வேறு என்று பிரித்துப் பார்க்கமாட்டார்கள்.

தமக்குக் கிடைக்கிற பேறு முழுவதும் தம்மைச் சேர்ந்தவர் களுக்குக் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவார்கள்.

எண்ணுவது மட்டுமல்ல முயல்வார்கள்.

தம்மைச் சேர்ந்தவர்களுக்குப் பேறு பெருகப் பெருக ஆனந்தம் அடைவார்கள்.

அதுமட்டுமா தமக்குரிய பெரும் பேறுகளைக் கூட தம்மைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கி விடுவார்கள்.

இந்த அற்புதத்தை நம்முடைய காலத்தில் நம் கண்களால் கண்டு களிக்கத்தானே செய்தோம்.

ஜவஹர்லால் நேரு, ராஜேந்திரபிரசாத், வல்லபாய் படேல், அபுல்கலாம் ஆசாத், ராஜாஜி போன்றவர்கள் அரியணை ஏறி அரசோச்ச, அவர்களுக்கு அரசபோகத்தை வழங்கிவிட்டு கட்டிய துணியோடும் கைப்பிடிக் கம்போடும் நவகாளியை நோக்கிப் போகவில்லையா காந்திமகான்?

இந்தக் காட்சியை மனதில் வைத்துக் கொண்டு பாடலை பார்க்கவேண்டும்.

மண்ணுலகில் உள்ள அரச செல்வங்கள் என்ன, வானுல கில் உள்ள போகபோக்கியங்கள் என்ன, எல்லாவற்றையும்

அடியார்கள் அனுபவிக்க வழங்கி விட்டானாம் பெருமான். வழங்கிவிட்டு கையில் திருவோடு ஏந்தி பலிவாங்கி நடமாடு கிறானாம் பெருமான்.

அதிசயம் என்றால் இதுவல்லவா அதிசயம்! இதைவிட வேறு என்ன அதிசயம் இருக்கமுடியும்? பாருங்கள் இந்த அற்புதத்தை; அதிசயத்தை! என்கிறார் நக்கீரதேவர்.

இனிப்பாடல் - வெண்பா

*இருந்தவா காணீர்!*
*இது என்ன மாயம்*
*அருந்தண் கயிலாயத்(து)*
*அண்ணல்-; வருந்திப்போய்*
*தான்நாளும் பிச்சை*
*புகும்போலும்! தன்னடியார்*
*வான்ஆள மண்ஆள*
*வைத்து.*

*இருந்தவாகாணீர் - கேட்டீர்களாடி கதையை! இது என்ன மாயம்? அதிசய (மாய)மாக இருக்கிறதே! அருந்தண் கயிலாயத்து அண்ணல் - சிவபெருமான். பிச்சைபுகும் போலும் - பிச்சை எடுத்தல்லவா சாப்பிடுகிறாராம். அடியாரை ஆளவைத்து அடியவர்களுக்கு சகலவற்றையும் கொடுத்துவிட்டு.*

அதிசய பாவம் குதித்துக்கொண்டு ஓடிவருகிறது பாடலில்.

'இருந்தவா காணீர் இது என்ன மாயம்! என்று இரண்டு கையையும் வைத்துத் தட்டுகிறது அப்படியே மூக்கின் மேல் ஒரு கையை வைத்து அபிநயம் பிடித்துக் காட்டுகிறது அதிசயத்தைத் தமிழ்.

நக்கீரதேவரின் பாடல்களைப் பாடிப்பாடி நெடுகிலும் அனுபவித்து வந்தார்கள் முன்னோர்கள்.

அனுபவம் பெருகப் பெருக ஆனந்தத்தில் விதவிதமான கதைகள் பிறந்து வந்தன.

கண்ணு மூக்குத் தெரியாமலேயே மயங்கி ஓட ஆரம்பித்து விட்டன கதைகள்.

அவற்றில் ஒன்று.

சங்க கால நக்கீரரே - மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரே கைலைபாதி காளத்தி பாதியைப் பாடினார் என்பது.

அதுவும் எதற்காகப் பாடினாராம்.

நாடக உருவெடுத்து வருகிறது கதை.

தருமி என்கிற ஏழைப்பிராமணனுக்கு ஒரு பாட்டெழுதிக் கொடுத்தார் சொக்கலிங்கப் பெருமான்.

'பாண்டியனிடம் பாடலைக் காட்டு, அவன் பொன்னும் பொருளும் கொடுப்பான்' என்று தருமியை அனுப்பினார். பாடலைப் பாண்டியன் மூலம் பார்த்த நக்கீரர் இதில் பொருட் குற்றம் இருக்கிறது என்று தருமியை விரட்டி விடுகிறார்.

தருமிக்காகச் சொக்கலிங்கப் பெருமானே புலவர் வேடம் தாங்கி சங்கப்புலவர்கள் பக்கம் வருகிறார்.

"இந்தப் பாடலுக்குக் குற்றம் சொன்னது யார்?" என்று புலவர்களைப் பார்த்துக் கேட்கிறார் சொக்கலிங்கர்.

"நான்தான்" என்கிறார் நக்கீரர்.

"என்ன குற்றம் இதில்?" என்கிறார் பெருமான்.

"பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் கிடையாது. ஆனால் உ ண்டு என்று பாடலில் வருகிறது. அது தவறு" என்கிறார் கீரனார்.

"அப்படியா? உமையம்மையின் கூந்தலுக்கு?" - என்கிறார் பெருமான்.

"அதற்கும் அப்படித்தான்!" என்கிறார் நக்கீரர்.

சொக்கலிங்கப் பெருமானுக்கு கோபம் வந்தது. வெறியாகவே வந்தது கோபம்.

நக்கீரன் மேல் வசவில் இறங்கிவிட்டார் பெருமான். சங்கறுக்கிற பயல் என்றே திட்டிவிட்டார்.

"எனக்காவது பெயருக்கு ஒரு சாதி இருக்கிறது உமக்கு அது கூட இல்லையே!

சாதி கெட்ட சங்கரனுக்குக் கோபம் வேறு கேடா? என்று கேட்டு விட்டார் நக்கீரதேவர். அவ்வளவுதான் சிவபெருமானுக்கு அவமானமாகப் பேய்விட்டது. உடனே யாரடா நீ என்று தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினார்.

"நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று ஒரே போடாய்ப் போட்டு விட்டார் கீரனார்.

ஆனல் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட அனல் கீரனைச் சுட்டுப் பொசுக்கியது.

கொதிப்புத் தாங்கமாட்டாமல் பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார். அப்பொழுதும் உடம்பெல்லாம் வெந்து கொதித்தது.

அலறினார் கீரனார்.

சங்கப் புலவர்கள் முறையிட்டார்கள்.

பெருமானுக்குக் கோபம் தணிந்தது.

"புத்தி வந்து நம்மைப் போற்றிப் பாடினால் அருள் பாவிப்போம்" என்றார் பெருமான்.

பெருமானின் கோபம் தணிந்து மனம் குளிர நக்கீரர் குளத்துள் இருந்து பாடியது கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி.

இப்படிப் போகிறது கதை.

கதையில் நாடக நயம் இருக்கிறது. ஆனால் சங்கப் புலவர் நக்கீரருக்கும் கயிலைபாதி காளத்திபாதிக்கும் சம்பந்தமே இல்லை.

சங்கப் புலவர் பாடிய சங்கப் பாடல் ஒன்றையும் கைலை பாதி காளத்தி பாதியினுள்ள வெண்பா ஒன்றையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பள்ளிக் கூடத்துப் பையனே சொல்லிவிடுவான் இது வேறு, அது வேறு என்று.

இனி, கயிலை பாதி காளத்தி பாதியிலிருந்து இன்னொரு பாடல்.

## 2

நில உலகில் நடமாடும் பிராணிகளில் யானை போல வலுவான பெரிய பிராணி ஒன்றும் இல்லை.

மலை போன்ற கரும்பாறையையே மத்தகம் என்றும் தும்பிக்கை என்றும் காலென்றும் மேலென்றும் செதுக்கி நடமாட விட்டது போலிருக்கும் யானை.

ஆனால் யானை என்னும் இரண்டெழுத்துச் சொல்லை எடுத்துக் கொண்டால் கால் அங்குல நீளம் கூடத்தேறாது.

அந்தச் சின்னஞ்சிறு சொல்லுக்குள் பிரமாண்டமான யானை நிறைந்து நிற்கிறது. யானையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை யானை என்னும் வார்த்தையில். அப்படி நிறைந்து நிற்கிறது யானை.

இனி சிற்றெறும்பு என்று ஒரு சொல்.

சிற்றெறும்பின் நீளம் சிறியது. சொல்லின் நீளம் பெரியது. ஆனாலும் அந்தச் சொல் முழுவதும் நீக்கமற நிறைந்து முட்டி ததும்புகிறது சிற்றெறும்பு.

இப்படியாகச் சொல்லும் பொருளும் இரண்டறக் கலந்து ஒன்றாய் நிற்கின்றது.

அதுபோலவே உடம்பு முழுவதும் உயிர் பரந்து நிறைந்திருக்கிறது. அணுவளவு இடம்கூட வெற்றிடம் என்று இல்லை.

மலரில் மணமும் அப்படியே நிறைந்து நிற்கிறது.

கடவுள் தத்துவமும் அப்படித்தான்.

பேரண்டம் முழுவதும் இறுதி இல்லாதபடி எங்கும் ஒரே தன்மையாய் முட்டித்த தும்பி நிறைந்து நிற்கிறது. அந்தத் திருவருள் (நியதி தவிர வேறு ஒன்றும் இல்லை)

நக்கீர தேவருடைய அனுபவம் - மெய்யுணர்வு படிப் படியாக உருப்பெற்று கவி(உருப்படி)யாக எழுந்து வருகிற அற்புதத்தைப் பாருங்கள்.

*உரையும் பொருளும்,*
*உடலும் உயிரும்,*
*விரையும் மலரும்போல்*
*விம்மிப் புரை இன்றிச்*
*சென்றவா றெங்கும்*
*திருக்கயிலை எம்பெருமான்*
*நின்றவா றன்றோ*
*நெறி!*

*உரை - வார்த்தை விரை - மணம், புரைஇன்றி - இடைவெளி இல்லாதபடி. சென்ற ஆறு எங்கும் - போகப் போக எல்லா இடத்தும் அண்டம் அணு எங்குமே. நின்ற ஆறு அன்றோ - நிறைந்த நிற்கும் அற்புதம் அல்லவா. நெறி - நியதி தத்துவம். இறையருள்.*

உண்மை என்றால் இதுதான் உண்மை. சட்டம் (காஸ்மிக்லா) என்றால் இது தான் சட்டம்.

திருவருள் ஒன்று தான். வேறு எதுவும் இல்லை.

பாடலை வளைத்து வளைத்துப் பாடவேண்டும்.

கடவுளே பாடலாக அவதாரம் எடுக்கிறார் என்று சொல் வார்கள்.

இப்படிப்பட்ட தெய்வமாக் கவிகளில் இசையானது தானே வந்து படியும். படிந்து தாயின் மடுவில் வாய் வைத்து

அமிர்தத்தை உறிஞ்சும் குழந்தை போல, பாடலில் உள்ள ரசங்களை பிழிந்தெடுக்கும் இசை.

அப்படி எடுத்த ரசங்களைப் புதிய புதிய சாயல்களில் வர்ணங்களாகக் கொட்டும் இசை.

பிறகு அடிமேல் அடி எடுத்து வைத்து நடைபழகும் வலசாரி, இடசாரி என்றெல்லாம் சஞ்சாரம் பண்ணும்.

உருவம் இல்லாத இசை தோடி என்றும் சங்கராபரணம் என்றும் உருவம் பெறுகிற முறை இதுதான்.

கவிதான் இசைக்குத் தாயகம்.

இனி இன்னொரு பாடல்.

## 3

கடவுள் தான் உண்மை என்று பலவருடங்களாகச் சொல்லி வந்தார் மகாத்மாகாந்தி.

திடுதிப்பென்று உண்மைதான் கடவுள் என்று மாற்றிப் போட்டுச் சொன்னார் காந்திமகான்.

விநோபா முதலிய தவசீலர்கள் ஏன் இப்படி வாக்கியத் தைத் திருப்பிப் போட்டீர்கள் என்று கேட்டார்கள்.

காந்தி மகான் சொன்னார்.

'பலருக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை. கடவுள்தான் உண்மை என்றால் கடவுள் மேலிருக்கிற கோபத்தில் உண்மையைப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால், உண்மை என்கிற சொல்மேல் யாருக்கும் வெறுப்பு இல்லை.

அதனால் உண்மையே கடவுள் என்றால் உண்மையைப் பார்க்க முயற்சிப்பார்கள்.

மெல்ல மெல்லக் கடவுள் மேலுள்ள பயமும் அவர் களுக்கு விலகும்''

இப்படிச் சொல்லிவிட்டுக் கொஞ்சம் இடைவெளி கொடுத்தார் காந்திமகான். பிறகு,

“நான் பனியா(வியாபாரி). அதனால் எதிலும் லாபம் என்ன என்றுதான் பார்ப்பேன்” என்று முடித்தார். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

உண்மை, சத்தியம், பேருண்மை, வாய்மை, மெய்மை, நிரந்தர உண்மை என்று நீட்டி முழக்கலாம்.

ஆனால் எளிதில் கண்டுவிட முடியுமா உண்மையை கண்டாலும் அதை உணர்ச்சியோடு உணர்ச்சியாக வைத்துக் கலக்க முடியுமா?

விண்ணுக்கும் மண்ணுக்கும் பேச்சில் வித்தை யடிக்கலாம், வேதாந்தம் சித்தாந்தம் என்று முழங்கலாம். அப்படி முட்டி மோதி உச்சத்தில் நிற்பவர்கள் கூட, புளியோ தரையில் கொஞ்சம் உப்புக் குறைந்திருந்தால் போதும். பதினாறு கோணங்களில் எட்டுத் திசைகளில் வலித்துக் காட்டும் அவர்கள் முகம்.

உண்மைக்கும் புத்திக்கும் உள்ள உறவு அவ்வளவுதான். இனி, உண்மை என்று தனியாக ஒன்றும் இல்லை. வாழ்க்கை யின் ஒவ்வொரு அணுவிலும் அது இருக்கிறது.

பேச்சு, நினைப்பு, செயல் எல்லாவற்றிலும் நிறைந்திருக் கிறது உண்மை.

பேரண்டம் முழுவதும் அதுதான்.

ஆனால் அதை அம்சம் அம்சமாக, அணு, அணுவாக ஆவலோடு தொடர்ந்து பார்த்து வர வேண்டும். அனுபவிக்க வேண்டும். ஈடுபட வேண்டும்.

உருகிக் கரைந்து விட வேண்டும் அதில்.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், பகைவர், வேலைக்காரன், தலைவன், வெற்றி, தோல்வி, இல்லறம், துறவறம், லாபம், நஷ்டம், உடல், உயிர், உணர்ச்சி, பயிர், பச்சை,

பூச்சி, புழு, கலை, பண்பாடு, மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் அஞ்ஞானம் எல்லாவற்றிலும் கிடக்கிறது உண்மை. அவ்வளவும் ஒன்றுதான். வேறு வேறல்ல என்கிற தெளிவு வர வேண்டும். அப்பொழுது தான் உண்மை முளைவிடும்.

படிப்படியாகத் தெரிய எவ்வளவு அனுபவம் வேண்டும், பக்குவம் வேண்டும், தெளிவு வேண்டும் உறுதிவேண்டும்!

தெரிவதற்கே இவ்வளவும்.

அதில் ஒன்றி நிற்பதற்கோ...விளக்குவதற்கு வார்த்தையே இல்லை.

நான்வேறு, இறைவன் வேறு என்று இல்லை.

எல்லாம் ஒன்றுதான். கடவுள் தத்துவமே தான் என்பது விளங்கினாலும் கண்ணை மூடி விழிக்கிற நேரத்துக்குள் தெளிவு கலைந்து விடுமாம்.

மனைவியைக் கொண்டு வந்து காட்டி. மக்களைக் கொண்டு வந்து காட்டி, கற்ற கல்வியைக் கொண்டு வந்து காட்டி, அதில் கொண்ட அல்லது கண்ட கொள்கையைக் கொண்டு வந்து காட்டி உறுதியைச் சிதற அடித்து விடுவானாம் பெருமான்.

எனக்கா தெரியாது இது. நான் சொன்ன மந்திரந்தானே இது? என்று இறுமாக்கும்படி மனிதனை ஒரு தட்டுத் தட்டி விளையாடுவானாம் இறைவன்.

இதுதான் அவனுடைய திருவிளையாடல். அது இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.

*இனிப் பாடல்*

*யான்என் று　　தான் என் று*
*இரண்டில்லை　　என்பதனை*
*யான்என் றும்　　கொண்டிருப்பன்*
*ஆனாலும்:-　　தேன் உண்டு*

*அளிகள்தாம் பாடும்*
*அகன்கயிலை மேயான்*
*தெளிகொடான் மாயங்கள்*
*செய்து.*

*அளிகள் - வண்டுகள் தெளிகொடான் - தெளிவில் நிலைத்து நிற்க விடமாட்டான் யார்? அகன் கயிலைமே யான் - விரிந்து பரந்த கைலையங்கிரிக்கு நாயகனான சிவபெருமான் மாயங்கள் செய்துஏதாவது ஒரு வழியில் நம்மைப் பொறி கலங்க வைத்து அதைப் பிடித்துத் தொங்க வைத்து விடுவான்.*

பலே பலே ஆசாமிதான் எம்பெருமான்.

அற்புதமான பாடல். பாடப்பாட இதயத்தில் ஒளி ஊறும், ஒன்றி உணர்ந்து பாடலைப் பாடிப்பாடி அனுபவிக்க வேண்டும் அதுபோதும்.

தர்க்கம், நியாயம்,வியாகரணம், பதி, பசு, பாசம், சித்தாந்தம், வேதாந்தம் ஆகிய தொந்தரவுக்கு ஆளாக வேண்டியதில்லை.

## 4

இனி இன்னொரு பாட்டு.

சாதாரண மனிதனுக்கும் ஞானிக்கும் வேறுபாடு ஒரு காரியத்தில்தான்.

சாதாரண மனிதன் மரணம் மரணம் என்று அது ஒன்றையே நினைத்து பயப்படுகிறான்.

பயப்படுவது வெளியில் தெரியக் கூடாதே என்று அதை விடப் பயப்படுகிறான்.

அதற்காகவே எதை எடுத்தாலும் தடபுடல் பண்ணுகிறான்,

ஏன் மரணத்தை நினைத்து பயப்படுகிறான்.?

காரணம் இதுதான்.

எந்தச் செயலிலும் ஈடுபாடு இல்லை மனிதனுக்கு. செய்து தொலைக்க வேண்டி இருக்கிறதே என்று பொய் வேஷம் போட்டே ஒவ்வொரு செயலையும் செய்கிறான்.

பொய்யும் பித்தலாட்டமும் வயிற்றைக் கலக்குகிறது. மனசைக் குழப்புகிறது.

பயந்து பயந்து சாகிறான் மனிதன்.

சான்றோர்கள், அருளாளர்கள், உண்மைக்கு உற்ற துணையாக விளங்கும் மெய்ம்மையாளர்கள் எதையும் ஆர்வத்தோடு செய்வார்கள்.

ஆவலோடு மனம் ஒன்றிச் செய்வார்கள். செயலின் ஒவ்வொரு அம்சத்திலும் அவர்களுக்கு ஆனந்தம் உண்டாகும்.

மரணத்தைப் பற்றிய நினைப்பு வந்து அவர்களைத் தொந்தரவு பண்ணாது.

நண்பர்கள் பத்துப் பேர் நாளைச் சாப்பிட வருகிறார்கள்.

சாப்பாடு தயார் பண்ண வேண்டும் என்று மனைவியிடம் கணவன் சொன்னான்.

மனைவி எவ்வளவு ஆர்வத்தோடு சமையலில் ஈடுபடுகிறாள்.

அவள் மனதில் நிற்பதெல்லாம் அவியல், பொரியல் பச்சடி, கூட்டு, குழம்பு, ரசம், அப்பளம், பாயசம், வடை, தயிர், நெய், இப்படித்தான்.

அடுப்பு, காய், அரிசி, புளி, வற்றல், வாழை இலை, பருப்பு, தாளிதம், கறிவேப்பிலை, கொத்தமல்லி இப்படித்தான்.

ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபாடும் ஆர்வமும் பொங்கப் பொங்க ஆனந்தம் சுரக்கிறது பெண்ணுக்கு.

இன்னும் நாற்பது நாற்பத்து ஐந்து வருடங்களுக்குள் இறந்து விடுவோமே, அப்பொழுது ஒன்றையும் கையில் எடுத்துக் கொண்டு போக முடியாதே! எங்கு போவோம்,

என்ன ஆவோம் என்று பயந்து பயந்தா சமையல் செய்வாள் பெண்?

விருந்தினர், விருந்து, சாப்பாடு, மணம், ருசி இவைதாம் பெண்ணின் மனதில் நிற்கும். மற்றவற்றுக்கு அங்கு இடம் இல்லை.

உலக நன்மைக்காக ஆர்வத்தோடு செயல்படுகிறவர்கள் உள்ளத்தில் செயல்களும் ஈடுபாடுமே இருக்கும். வேறு எதற்கும் அங்கு இடம் இல்லை.

ஆனாலும் மரணத்துக்குப் பயந்து நொந்து துவள்கிறவர் களைப் பார்க்கிறார்கள். அவர்கள் மேல் பரிவு உண்டாகிறது இவர்களுக்கு.

அவர்களை நோக்கிச் சொல்வதுதான்.

'மரணம் நிச்சயம் என்று பயந்து பயந்து சாகிறாயே மனமே!

மரணம் நிச்சயம் என்றால் அதற்குள் முடிந்த அளவுக்கு நல்ல காரியங்களைச் செய்யவேண்டியது தானே!

அது இது என்று தியாகம் பண்ணாவிட்டாலும். எல்லாம் இறைவன் செயல்தான் என்று நினைக்கவுமா முடியவில்லை உனக்கு?

முதலில் அவனை நினை. பிறகு நம்பிக்கைவரும். பயம் விலகும். கவலையை விடு.

இப்படி வருகிறது பாட்டு

*கணக்கிட்டுக் கொண்டிருக்கும்*
*காலனார் நம்மை*
*வணக்கி வலைப்படா*
*முன்னம் - பிணக்கின்றிக்*
*காலத்தால் நெஞ்சே!*
*கயிலாயம் மேவிய நீள்*
*சூலத்தான் என்றே*
*தொழு.*

*(கணக்கிட்டுக் கொண்டு இருக்கும் காலனார் - வாழ்நாளின் வரவு . செலவுக்கணக்கு காலக் கடவுளிடம் இருக்கிறது. அதில் கண்ணும் கருத்துமாக இருப்பார் அவர்.*

*நம்மை வணக்கி வலைப்படா முன்னம்- நாள் கணக்கு முடிந்தவுடன் ஒரே பாய்ச்சலில் துள்ளி வருவார். எந்த பேரத்துக்கும் இடம் கிடையாது. வளைத்து மடக்கிக் கைக்குள் போட்டு விடுவார் நம்மை. அது வருவதற்குள்.*

*காலத்தால்-கைகால் திடமாக இருக்கிற பொழுதே. பேச்சு அடிபடுவதன் முன், புத்தி சிதறுவதற்கு முன்பே! பிணக்கு இன்றி - குழப்பம் இல்லாமல் தெளிவாக கயிலாயம் மேவிய - கயிலையில் கொலுவிருக்கும். நீள் சூலத்தான் என்றே தொழு. பெரிய சூலப்படை ஏந்திய பெருமானே அவ்வளவும் என்று நம்பு. நம்பி வணங்கு)*

பாடலைப் பாட உற்சாகம் பெருகும் - வாழ்க்கையில் உறுதி என்ன, மணம் என்ன என்பது தெரியும்.

ஊக்கம் உண்டாகும். பயம் ஓடும்.

# 5

**இ**னி நக்கீரதேவர் பாடிய திருவலஞ்சுழி மும்மணிக் கோவையிலிருந்து ஒரு பாடல்.

காதல் என்றால் அது கல்லைப் பிசைந்து கனி ஆக்குகிற காரியந்தான்.

இதயத்தை உருக்கிக் கருணைமயமாகக் கரைக்கும் காதல் தன்னையே அர்ப்பணித்து விடும்படி செய்யும் காதல்.

காதல் என்றால் பக்தி மயமாக இருக்கும். பக்தி என்றால் அது காதல் மயமாகவே இருக்கும்.

காதலும் பக்தியும் மணவறையில் அமர்ந்திருக்கும் பெண்ணும் மாப்பிள்ளையும் மாதிரி.

அருளாளர்களின் அருள் செயல் ஒவ்வொன்றும் காதல் கசிந்து தேன் சொட்டும் பக்தியாகப் பரிமளிக்கும்.

இனி, தஞ்சை மாவட்டத்தில் காவிரி ஆறு மடங்கிச் சுழித்து ஓடுகிற இடம் திருவலஞ்சுழி.

திருவலஞ்சுழியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பொருமான் மேல் ஆசை கொண்டாள் ஒரு பெண். காதல் வெறிக்கே ஆளாகிவிட்டாள் பெண்.

மோக வெறியில் வேறு யோசனைக்கே மனதில் இடம் இருக்காது.

காதலன் பற்றிய ஒரே நினைப்பாகத்தான் இருக்கும் அதனால் பகல் கனவில் திளைக்கும் மனம்.

அடிக்கடி காதலன் வருவது போலத் தோன்றும். வந்த வுடன் ஊடுவது போல இருக்கும். ஊடலில் நாணிக் கோணி நழுவுவது போலவே இருக்கும்.

இந்தக் கனவை நனவென்று மயங்க வைத்து விடும் மனம்.

அப்படி மயக்கத்துக்கு ஆளான பெண் தோழியிடம் சொல்வதாக விஷயம்.

எல்லாம் நாடகந்தான்.

“உள்கட்டில் படுத்துத் தூங்கும் நேரம். யாரோ ஒருவர். பெரிய பணக்காரப் பிரபு மாதிரி இருந்தார். ஆனால் பிச்சைக்கு வந்தவர் போல இருந்தது அவர் நடிப்பு.

என்னடா இது அரைப் பத்தியமாகவல்லவா இருக்கிறார் என்று நினைத்தேன்.

"யாரய்யா நீர்? வீட்டுக்குள் என்ன வேலை உமக்கு? ஏன் வந்தீர்?" என்று படபடப்போடு கேட்டேன்.

ஆனால் அவரிடம் படபடப்பே இல்லை.

புன்முறுவல் பூத்தார், நிதானமாகச் சொன்னார்.

"ஆம், பொருள் தெரிய முடியாத வேதம் (ஞானம்) தான் எமது இடம்" என்றார்.

"ஆ! என்ன இது!" என்று ஒருகணம் திகைத்தேன்.

என்னுடைய திகைப்பைப் பார்த்து பழைய படியும் புன்முறுவல் பூத்தார். அவர்.

"திருவலஞ்சுழி தான் குடியிருக்கும் ஊர்" என்றார்.

அப்படியா என்று மயங்கினேன். மயக்கத்தில் கண்ணி மைகள் மூடின மூடிய இமைகள் திறப்பதற்குள் ஆசாமி மறைந்து விட்டார்.

ஆத்திரத்தோடு அங்கும் இங்கும் தேடிப் பார்த்தேன். ஆசாமி இல்லை.

சிறிது நேரம் கழித்துக் கைையைப் பார்த்தால் போட்டிருந்த வளையல்களையும் காணோம்''

*இனிப் பாடல்*

*பொருள்தக்கீர்! சில்பலிக்கென்(று)*
*இல்புகுந்தீ ரேனும்*
*மருள்தக்கீர்! யாதும்ஊர்*
*என்றேன்-; மருள்தக்க*
*மாமறையம் என்றார்,*
*வலஞ்சுழிநம் வாழ்வென்றார்,*
*தாம் மறைந்தார்; காணேன்கைச்*
*சங்கு!*

*பொருள் தக்கீர் - பார்த்தால் ஜமீன்தார் போல இருக்கிறீரே? லட்ச ரூபாய்க்குக் கூட ஜாமீன் கொடுக்கலாமே உமக்கு. சில்பலிக்கு என்று இல் புகுந்தீர் - இத்தனை தோரணை உள்ள நீரா பிச்சைப் பாத்திரத்தோடு வீட்டுள் வருவது? மருள்தக்கீர் - ஏதாவது அரை குறைப்பைத்தியமா உமக்கு? மருள் - மயக்கம் புத்திபேதலிப்பு. யாது உம் ஊர் என்றேன் - எந்தப் பக்கத்து ஆள்நீர் என்று கேட்டேன்.*

*மருள் தக்க மாமறையம் என்றார் - மயக்கம் ஊட்டும் வேதம் எமது இடம் என்றார்.*

*வலஞ்சுழி நம் வாழ்வு என்றார் - திருவலஞ்சுழியில் தான் குடி இருக்கிறோம் என்றார். அவ்வளவு தான். தாம் மறைந்தார் - என்னடா இது என்று யோசிப்பதற்குள்ளேயே மாயமாய் மறைந்து விட்டார். காணேன் கைச் சங்கு - போகிறவர் சும்மாவா போனார். என் வளையல்களையும் கழற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டார்.*

அற்புதமான பாட்டு. பக்தியின் உச்சத்தைக் காட்டுகிறது பாடல்.

அதற்காகவே காதல் துறையில் வைத்து நாடகம் போட்டுக் காட்டுகிறது தமிழ்.

பாத்திரம் பேச்சு, உணர்ச்சி மூன்றும் கைகோத்துக் கணகணவென்று பேசுகின்றன. ஓவியத்துக்கும் நடனத்துக்கும் வாய்ப்பான பாடல்.

ஆயிரத்தைந்நூறு வருடங்கள் ஆன பின்பும் இப் பொழுது மலர்ந்த செந்தாமரை மலராக இருக்கிறது பாட்டு.

எல்லாம் தமிழ் செய்கிற அற்புதம்.

# VII சேரமான் பெருமாள் நாயனார்

## 1

இன்றைய கேரளத்தின் - அன்றைய சேர நாட்டின், வட பகுதியை ஆண்டமன்னர் சேரமான்.

கள்ளிக் கோட்டை, தலைச்சேரி, மலப்புரம், மாஹி, காசர் கோடு இப்படிப் பல வட்டங்களைக் கொண்டது சேரமான் ஆண்ட பிரதேசம்.

சேரமான் பெருமானுக்கு உயிருக்குயிரான தோழர் சுந்தர மூர்த்தி நாயனார் தான். அவர் சோழவள நாட்டைச் சேர்ந்தவர்.

இனி, கடவுள் தத்துவத்தை அனுபவித்துத் திளைக்கிறவர் சேரமான் பெருமாள் நாயனார்.

உண்மை விரிய விரிய, பொய் (ஆணவ மயக்கம்) ஒடுங்கஒடுங்க ஆனந்தமானது தன்னுள்ளேயே ஊறுகிற அற்புதத்தை அனுபவித்தவர் அவர்.

சேரமான் பெருமாளின் இதயத்தோடு இதயமாக-நினைப்பு முழுவதும் மருவி நிறைந்து விட்டான் இறைவன்.

அப்படியே உடல் தத்துவம் முழுவதும் அணுஅணுவாக இறைவன் புகுந்து நிறைவது போலிருக்கிறது சேரமான் பெருமானுக்கு.

அப்படியானால் உணர்ச்சி முழுவதுமே இறைவன் மயந்தானே சேரமான் பெருமானுக்கு! சேரமான் பெரு மானுடைய ஆனந்த பரவசம்.

*என்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் ஆகிய(து)*
*இறைவனுக் கே*

என்று குதித்துக் கும்மாளம்போடுகிறது.

நூற்றுக்கு நூறு என்னைப் போலல்லவா இருக்கிறான் இறைவன் என்று மயங்குகிறார் சேரமான்.

இனி, அவனுடைய திருமேனியோ உருக்கி விட்ட பொன் போல ஒளிர்கிறது. தங்கமலையே தான் அவன் மேனி.

*பொன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மேனி*

தங்கமலையின் சிகரங்களில் கற்றை கற்றையாக மின்னல்கள் சேர்ந்து கிடந்தால் எப்படி இருக்கும் அப்படி இருக்கின்றனவாம் அவன் தோள் மேல் விழுந்து புரளும் சடைகள்!

*புரிந்திலங்கு*
*மின்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் வீழ்சடை.*

சரி, அவன் ஏறிப் போகிற காளையோ எப்பொழுதும் அவன் முன்னாலேயே தயாராக நிற்கும். சில வேளை முன்னங்கால் பின் பக்கமாகவும் பின்னங்கால்களை முன் பக்கமாகவும் நீட்டிப் படுத்தும் கிடக்கும்.

எப்படி இருந்தாலும் சரி சகல சக்திகளுக்கும் ஆதார மாகிய அந்தக் காளை மகாமேரு மலைபோலக் கம்பீரமாகவே இருக்கும். மால்விடை அல்லவா அந்தக் காளை!

*மேருவெற்பின்*
*தன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மால்விடை*

எது எப்படி இருந்தாலும் சரி, அவனுடைய நடை உடை, பாவனை, எண்ணம், பேச்சு, செயல் எல்லாம் என்னைப் போலத்தான்!

இனிப் பாடலின் முழு உருவம்

*பொன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மேனி,*
*புரிந்தலங் கு*
*மின்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் வீழ்சடை,*
*மேருவெற் பின்*
*தன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மால்விடை;*
*தன்னைக்கண் ட*
*என்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் ஆகிய(து)*
*ஈசனுக் கே!*

அற்புதமான பாடல் நாவைவிட்டு இறங்காது பாட்டு. பாடிக் கொண்டே இருக்க வேண்டியது தான். பாடப்பாட நாவில் தேனூறும்.

பாடல்களுக்கு-அதுவும் தமிழ்ப் பாடல்களுக்கு அளவிட முடியாத மந்திர சக்தி இருக்கிறதே, அதற்குரிய காரணம் யாது என்பதை விளக்கிக் காட்டுகிறது சேரமான் பெருமானின் பாட்டு.

சேரமான் பெருமாள் பாடிய பாடல்களின் தொகுதிக்கு பொன்வண்ணத் தந்தாதி என்று பெயர். அது பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

## 2

இனி, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். இளம் மங்கை.

படித்துக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு கம்பெனியில் வேலை கிடைத்து விட்டது அவளுக்கு.

ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்துதான் பேருந்தில் ஏறி அலுவலகம் போவாள். அதே போலத் தான் அலுவலகத்தி லிருந்து வீட்டுக்கு வரும் பொழுதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலி ருந்தே பேருந்தில் ஏறிவருவாள்.

வீட்டுக்குத் திரும்பி வருகிற பேருந்து நிலையத்தில் தற் செயலாக ஓர் இளைஞனும் அதே பேருந்துக்காக நின்று கொண்டிருந்தான்.

அவனை இவள் பார்த்தாள். அவனும் இவளைப் பார்த்தான். இருவர் பார்வையிலும் கூச்சம் நிறைந்த ஆர்வம் இருந்தது.

இறங்கிப் போகிற பொழுதும் ஒருவரை ஒருவர் நாணத் தோடும் ஆசையோடும் பார்த்துப் பார்த்துப் போனார்கள்.

அதன் பிறகு அவனுக்காக அவள் காத்து நிற்பாள். அவளுக்காக அவனும் காத்து நிற்பான்.

பழக்கம் முதிர்ந்து முதிர்ந்து காதலாகவே வந்து விட்டது. சாதி, மதம், அந்தஸ்து, நிறம், தகுதி எதுவும் குறுக்கே நிற்க முடியவில்லை. அவ்வளவும் சுக்கல் சுக்கலாய் நொறுங்கி விட்டன.

பெண்ணின் சிநேகிதிகள் சொல்லிப் பார்த்தார்கள். “போயும் போயும் இவனையா பிடிப்பாய். அவன் வெறும் அசடுடி! உன்னுடைய திறமை என்ன, படிப்பென்ன, அழகென்ன? விட்டுத்தொலை அவனை” என்றெல்லாம் தடுத்துப் பார்த்தார்கள்.

ஒன்றும் எடுபடவில்லை.

உற்றார், உறவினர், தாய், தந்தை, உடன் பிறப்புகள் எவ்வளவோ முறையிட்டுப் பார்த்தார்கள். அசையவில்லை பெண்.

அவ்வளவையும் உதறி எறிந்து விட்டு காதலனுடைய தோளைப் பிடித்தாள். மார்பில் சாய்ந்தாள். தன்னையே அவனிடம் அர்ப்பணித்து விட்டாள்.

அன்புக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதைக் காட்ட இது ஒன்று போதாதா?. அன்பையும் அதன் வல்லமையையும் அடிக்கடி நேருக்கு நேராக நாம் பார்க்கத்தானே செய்கிறோம். பார்க்கிறோமே தவிர அதிசயப்படுகிறோமா ஆனாலும் கலையில்-கவியில் அது வரும் பொழுது மட்டும் என்ன அதிசயம்' இது என்று வியக்கிறோம்.

காரணம் என்ன?

அன்புக்கும் அதன் மகத்துவத்துக்கும் புதுப்பிறவி யையே கொடுத்து விடுகிறது கலை - கவி.

சேரமான் பெருமாள் நாயனார் அன்பு மயமானவர். பக்தி மயமானவர். அதனால் காதலாய்க் கரைந்து விடுகிறார். கரைந்து கரைந்து இறைவனோடு-நாயகனோடு திளைக்கிறார்.

இதை ஒரு பெண்ணின்-காதல் வயப்பட்ட பெண்ணின் நிலையில் வைத்து அனுபவிக்கிறார்.

அனுபவம் எப்படிப் பாடலாய் உருவெடுத்து வருகிறது என்று பாருங்கள்.

*ஈசனைக் காணப்*
*பலியொடு செல்ல,எற்*
*றே! இவள் ஓர்*
*பேயனைக் காமுறு*
*பிச்சிகொ(ல்) லாம்என்ற*
*பேதையர் முன்*
*தாய்எனை ஈர்ப்பத்,*
*தமியேன் தளர, அத்*
*தாழ்சடை யோன்*
*'வாஎனைப் புல்ல'என்*
*றான்;இமை விண்டன*
*வாட்கண்க ளே*

*பலிகொடு செல்ல - அன்பு ஒன்றையே பற்றுக் கோடாக வைத்து நான் போக. எற்றே இவள் ஒரு பேயனைக் காமுறு பிச்சி கொல் என்ற பேதையர்முன் - பைத்தியகாரன் மேலல்லவா ஆசை வந்து விட்டது இவளுக்கு! சரியான கிறுக்குத் தான் என்று நையாண்டி பேசும் கூட்டத்துக்கு முன்பாகவே.*

தாய் எனை ஈர்ப்ப - எங்கே போகிறாய் நில்' என்று என் கையைப் பிடித்துக் கரகரவென்று அன்னை இழுத்தாள்.

வா எனைப் புல்ல என்றான் - பயப்படாதே, நான் இருக்கிறேன். ஓடி வா என்றான் அவன்.

விண்டன வாட் கண்கள் - விழித்துப் பார்த்தேன்.

கனவென்றால் இதுவல்லவா கனவு. என்ன சுகம், என்ன ஆனந்தம்! அடடா, மறக்கமுடியுமா! என்று மயங்குகிறாள் பெண்.

## 3

**இ**னி, காதல் வயப்பட்ட உள்ளங்கள் இரண்டும் தவி யாய்த் தவிக்கும். ஏங்கும். ஒன்றை ஒன்று கட்டி அணைக்கத் துடியாய்த் துடிக்கும்.

ஏக்கத்துக்குள்ளும் துடிப்புக்குள்ளும் வேகம் மேலும் மேலும் ஏறிக் கொண்டே போகும். ஆவேசமும் அப்படித் தான்.

சம்பந்தமே இல்லாத எத்தனையோ காரியங்கள் இப்பொழுது கண்முன் வந்து நிற்கும். தொடர்பில்லாதவற்றைக் கூட ஒன்றோ டொன்றைச் சேர்த்து வைத்து முடிச்சுப் போட்டுப் பார்க்கும். அவிழ்க்கும், பிறகு முடியும்.

கிறுக்கோ என்று நினைக்கத் தோன்றும். ஆனால் கிறுக்கு ஒன்றும் இல்லை.

எல்லாம் காதல் தான், காதலின் வெறிதான். இனி, சிவ பெருமான் மார்பில் கொன்றை மலர் மாலை போட்டிருக்கிறார். தலையில் கங்கையைப் பொதிந்து வைத்திருக்கிறார். சிவ பெருமானுடைய போக்கும், நடவடிக்கைகளும் சில சமயம் கிறுக்குத்தனமாகக் கூட இருக்கும்.

அப்படிப்பட்ட ஆசாமியை நம்பிப் பிரியம் வைத்த பெண்களுக்கும் நிலைமை அப்படித்தானே. பெருமான் மேல் காதல் வயப்பட்டுத் தவிக்கும் பெண்ணின் வெறி எப்படி என்று பாருங்கள்.

பைத்தியக்காரமனமே, அவனிடம் உன்னால் ஒன்றுமே பெற முடியவில்லையே? கொங்கையும், கண்ணும், உணர்ச்சி யுமே சமர்த்து. நீ வெறும் அசடு! என்பதாக விஷயம்.

*செப்பன கொங்கைக்குத்*
*தேமலர்க் கொன்றை*
*நிறம்பணித் தான்,*

*மைப்புரை கண்ணுக்கு*
*வார்புனல் கங்கைவைத்*
*தான்,மனத் துக்குஇங்கு*

*ஒப்பன இல்லா*
*ஒளிகிளர் உன்மத்த*
*மும்அமைத் தான்;*

*அப்பனை நெஞ்சமே!*
*நீஎன் பெறா துநின்(று)*
*ஆர்க்கின்ற தே*

காதலில் காரியம் கைகூடுகிறவரை தவிப்புத்தான் கலக்கந்தான் பயமும் கூடத்தான்.

சாப்பாடு, தூக்கம் ஆகியவற்றை முறைப்படி ஏற்றுக் கொள்ளாது உடம்பு. அதனால் மெலிந்து வெளுத்துப் போகும் தேகம். கொன்றை மலர் போல வட்டவட்டமாக பொற்காசு போல தேமல் உடம்பில் விழும்.

கண்ணீர் ஆறாகப் பெருகும். உணர்ச்சியோ தறிகெட்டுச் சிதறிவிடும்.

செப்பு அன்ன கொங்கை - தங்கக் கிண்ணம் போன்ற மார்புகள். மைப்புரை கண் - மைதீட்டிய கருவிழி. கங்கை - கண்ணீர். மனத்துக்கு - நினைப்புக்கு. உன்மத்தம் - பைத்தியம்.

நெஞ்சமே நீ என் பெறாது நின்று ஆர்க்கின்றதே-ஒன்றும் உனக்குக் கிடைக்க வில்லையா என் உள்ளமே! அதற்குத்தான் இப்படி ஆரவாரம் செய்கிறாயா! பேஷ் பேஷ், நன்றா யிருக்கிறது உன் காரியம்!

## 4

**கா**தலில் ஆற்றாமை பெருகப் பெருக உடம்பானது துரும் பாய் இளைத்துவிடும். புத்தியானது மனசை விட்டுக் கழன்று ஓடிவிடும்.

கையில் இறுக்கமாய்ப் போட்டிருந்த வளையல்கள் ஒன்றன் பின் ஒன்றாய்க் கழன்று விழுந்து விடும். வளையல் கழன்று விழுந்ததே பெண்ணுக்குத் தெரியாது.

அடிக்கடி பெண் கனவு காண்பாள். பகல் கனவாகக் கூட இருக்கும் அது.

கனவில் வந்து சல்லாபம் செய்து விட்டுக் காதலன் போவது போலக் கூட இருக்கும்.

அப்படிச் சல்லாபம் செய்து விட்டுப் போன காதலனே வளையலையும் உருவிக் கழற்றிக் கொண்டு போயிருக்கிறான் என்று கூட மயங்குவாள் பெண்.

கொசவம் வைத்து இறுக்கிக் கட்டிய சேலை அவிழ்வது கூடத் தெரியாமல் அப்படியே பித்துப் பிடித்தது போல இருப்பாள் ஆற்றாமைக்கு ஆளான பெண்.

இனி, முப்புரங்களையும் பிடிசாம்பலாய் எரித்தழித்த சிவ பெருமான் மேல் காதல் கொண்டு விட்டாள் பெண். ஆற்றாமைக்கும் ஆளாகி விட்டாள்.

பிரிவில் தவிக்கும் அந்தப் பெண்ணாக இருந்து உணர்ச்சியைக் கொட்டுகிறார் சேரமான் பெருமான் நாயனார்.

*புரம் மூன்றெரித்த*
*தேவனைத் தில்லைச்*
*சிவனைத் திருந்தடி*
*கைதொழு து,*
*தீவினை யேன் இழந்*
*தேன்கலை யோடு*
*செறிவளை யே!*

நிலைத்து நிற்கிறதாக ஒன்றும் இல்லை. நிலை பேறில்லாமல் எல்லாம் ஓடிக் கொண்டே இருக்கின்றன. அப்படி ஓட்டமும் நடையுமாக இருப்பதுதான் உலகம்.

இந்த அழகு உலகில் வருவது வந்து தான் தீரும். யாரும் அதைத் தடுக்க முடியாது. அதேபோல போவதும் போய்த் தான் தீரும் அதையும் தடுத்து நிறுத்த முடியாது.

என்னைவிட்டு நழுவுகிற வளையலும், சேலை முடிச்சும் அப்படித்தான்.

யார் தடுக்க அவற்றை!

இனிப் பாடலின் முழு உருவம்

*ஆவன யாரே*
*அழிக்கவல் லார்,அமை*
*யாஉல கில்*
*போவன யாரே*
*பொதியகிற் பார் புரம்*
*மூன்றெரித் த*
*தேவனைத் தில்லைச்*
*சிவனைத் திருந்தடி*
*கைதொழு து*
*தீவினை யேன் இழந்*
*தேன்;கலை யோடு*
*செறிவளை யே!*

*(கலை - ஆடை செறிவளை - இறுக்கமாய் இருந்த வளையல்)*

## 5

இனி, இன்பம் என்றால் ஒன்றுதான். இரண்டாவது மூன்றா வது என்பதெல்லாம் அதில் இல்லை.

ஆனால் எல்லாவற்றிலும் போலி என்கிற ஒன்று முளைத்து நிற்பது போல இன்பத்திலும் போலி என்கிற ஒன்று உண்டு.

உண்மையான இன்பம் எது. அதில் போலி என்பது எது என்பதை மிக எளிதில் கண்டு கொள்ளலாம்.

உண்மை இன்பம் கிடைத்து விட்டால் உடம்பு முழுவதும். உணர்ச்சி முழுவதும் அணு அணுவாக-மயிர்க்கால் தோறும் ஆனந்தம் பொங்கி வழியும்.

அதைத் தாங்க முடியாது. அதனால் தெருவுக்கே ஓடி வந்து விடுவான் மனிதன். வந்து நின்று உலகம் எல்லாம் கேட்கும்படி கூப்பாடு போட்டு அழைப்பான்.

இதோ நான் பெற்ற ஆனந்தம் உங்களுக்கும் உண்டு, பெற்றுக் கொள்ளுங்கள், பெற்றுக்கொள்ளுங்கள் என்று அள்ளி வழங்குவான். மூடி மறைக்க மாட்டான் ஆனந்தம் பெற்றவன்.

ஆனால் இன்பம் பெறாமல் அதன் போலியை அதாவது இன்பம் போன்ற வெறும் போதை மயக்கத்தைப் பெற்றவன் தனக்குக் கிடைத்த அல்ப சுகத்தையும் மூடி மறைப்பான்.

மற்றவர்களை எண்ணிப் பயப்படுவான். காரணம் இவன் தனித்தே நிற்கிறான். ஆனந்தம் பெற்றவர்களோ எல்லா ரோடும் சேர்ந்து கலந்து ஒன்றி நிற்கிறார்கள்.

உலகில் எங்கு யார் சிக்கலில் மாட்டித் தவித்தாலும் சரி, அந்தச் சிக்கலுக்கு இவர்களும் ஆளாவார்கள். வேதனைப் படுவார்கள். அதனால் சிக்கலை அவிழ்க்க இதோ வழி என்று காட்டுவார்கள்.

ஆனந்த மயமாக இருப்பதோடு கருணை மயமாகவும் இருக்கிறார்கள் அருளாளர்கள்.

சேரமான் பெருமாள் நாயனார் அருளாளர் அவருடைய அருள்வாக்கு எப்படிப் பாடலாய் எழுந்து வருகிறதென்று பாருங்கள்.

"உம்முடைய ஊழிக் கூத்தின் வேகத்தைத் தாங்க முடியாமல் விண்ணும் மண்ணும் நிலை குலைந்து விட்டன. பிறகும் ஆட்டத்தை நிறுத்த மாட்டேன் என்கிறீரே ஏன்?"

இரக்க உணர்வே உம்மிடம் இல்லையா?'' என்று இறைவனைப் பார்த்தே கேட்பதாகப் பொருள்.

இனிப்பாடல்

*கலங்கின மால்கடல்,*
*வீழ்ந்தன கார்வரை,*
*ஆழ்ந்தது மண்,*
*மலங்கின நாகம்,*
*மருண்டன பல்கணம்,*
*வானம் கைபோய்*
*இலங்கின மின்னொடு*
*நீண்ட சடைஇமை-*
*யோர்இரிந் தார்;*
*அலங்கனல் மாநடம்*
*யார்க்கினி ஆடுவ(து)*
*எம்இறை யே!*

*மால்கடல் - பைத்தியம் பிடித்துக் கூத்தாடுவது போல அலைகளைச் சிதறி ஆர்ப்பரிக்கும் சமுத்திரம்.*

*கார்வரை - மேகம் படிந்து கிடக்கும் கொடு முடிகளோடு கூடிய மலை. நாகம் - எட்டுத்திசை யானைகள். மலங்கின - திணறின. பல்கணம் - புல்லிலிருந்து நட்சத்திரம் வரை ஒவ்வொரு வர்க்கமும். மருண்டன - பதறிப்போயின. வானம் கைபோய் - வெட்டவெளியே செயலற்று. மின்னொடு நீண்ட சடை(யாய்) இலங்கன - ஒரே ஒளிப்பிழம்பாய், கற்றை கற்றையாய், சடைசடையாய் தீ நாக்குகளாக ஒளிவீசின. இமையோர் இரிந்தார் - தேவர்களே தடுமாறிவிட்டார்கள். எம் இறையே - எம்பெருமானே அலங்கு அனல் மாநடம் - செக்கச் சிவந்த செந்தீ மயமாக ஊழிக் கூத்தை இன்னமும் யாரை நோக்கி ஆடுகிறீர்?*

*குறிப்பு :* சேரமான் பெருமாள் நாயனாரின் பக்தி காதலாய்க் கனிகிறது. கனிந்து தாய்மைப் பண்போடு பரிவையும் பாசத்தையும் கொட்டுகிறது.

செய்யுளில் உள்ள தாளம், இசை, எதுகை, மோனை எல்லாம் ஒன்றாய் நின்று உணர்ச்சிக்கு உருவம் கொடுக்கின்றன.

பாடலைப் பாடப் பாட அது தெரியும்.

## 6

இனி, சுற்றி உள்ள (உலக) மக்களின் தாறுமாறான போக்குகள் சேரமான் பெருமாளின் உணர்ச்சியைக் கவ்விப் பிடிக்கின்றன. கசக்கிப் பிழிந்தே விடுகின்றன.

ஏன் இப்படி நிலை குலைந்து தடுமாறுகிறார்கள் மக்கள்? எளிமையாய், அழகாய். இன்பமாய் வாழ வழி இருக்கும் போது அதை விட்டு விட்டு, துன்பப்படு குழியில் விழுந்து துடிக்கிறார்களே ஏன்? என்று இரக்கப்படுகிறார் நாயனார்.

ஜனங்களைத் திரட்டி வைத்து அவர்களைப் பார்த்தே சொல்கிறார்.

ஆசைத் தீயை அணையுங்கள். பயப்படாதீர்கள். தொல்லைகள் எல்லாம் தூள் தூளாய்ச் சிதறி விடும். பேராசையை நீங்கள் உதறி எறிந்தால் போதும்.

*ஆறுமின் வேட்கை*
*அறுமின் அவலம்*

ஆனந்தத்துக்கு இவை தாம் பாதை. ஏணிப்படிகளும் இவைதாம்.

*இவை நெறி யா*
*ஏறுமின் வானத்து*
*இருமின் விருந்தாய்*
*இமையவர்க் கே*

ஞானிகளோடும் அடியார்களோடும் கூடிக்குலாவி ஆனந்தத்தில் திளைக்கத் திளைக்க எம்பெருமானே உங்கள்

முன் வந்து நிற்பான். அவன் தோளைப் பிடிக்கலாம் கட்டி அணைக்கலாம், முத்தம் கொடுக்கலாம், பாராட்டலாம், உபசரிக்கலாம்; பார்க்கப் பார்க்கக் கண்கள் குளிரும் பணி விடை புரியப் புரிய மனம் குளிரும்.

பிறகு, வெறுப்பு மறைந்து விடும், சினம் ஓடிவிடும். கைநிறைய வெண்ணெய் இருக்கும் போது, நெய் எங்கே, நெய் எங்கே என்று அலைகிறீர்களே, ஏன்!

*இனிப் பாடல்*

*கூறுமின் ஈசனைச்*
*செய்ம்மின்குற் றேவல்*
*குளிர்மின்கண் கள்*
*தேறுமின் சித்தம்*
*தெளிமின் அருளைச்*
*செறுமின் செற்றம்*
*ஆறுமின் வேட்கை*
*அறுமின் அவலம்*
*இவைநெறி யா*
*ஏறுமின் வானத்(து)*
*இருமின் விருந்தாய்*
*இமையவர்க் கே*

*கூறுமின் ஈசனை - எல்லாம் இறைவன் செயல் தான் என்பதை உங்களுக்கு நீங்களே மாறி மாறிச் சொல்லுங்கள். தெளிவு பிறக்கும் வரைச் சொல்லிக் கொண்டே இருங்கள். செற்றம் - கோபத்தை; செறுமின் - அழித்து விடுங்கள். வேட்கை - ஆசை. அவலம் - துன்பம்; இவை நெறியா - இது தான் பாதை இந்த வழியை விடாமல் மேலே மேலே போங்கள். இமையோர்க்கு விருந்தாய் வானத்து இரு மின் - அடியார்கள், சான்றோர்கள், ஞானிகள் இவர்களோடு கூடிக் குலாவி இருங்கள். அது தான் ஆனந்தம், வீடுபேறு. அதாவது மோட்ச சாம்ராஜ்யம் என்கிற வானுலகு அதுதான்.*

# 7

**வி**ளக்கை ஏற்றினால் போதும். வெளிச்சம் வந்து விடும். இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

விளக்கை ஏற்றுவதில் அப்படி என்ன சிரமம் இருக்கிறது.

ஆனந்தபரவசம் பெறுவதும் எளிதான காரியந்தான். இது தேவை இல்லை, வேண்டாம் என்று உதறி எறிவதில் என்ன சிரமம் இருக்க முடியும்?

அப்படி ஒரு நிலை வந்து விட்டால் போதும் பிறகு, நாமே ஆனந்தம் நமக்குள்ளும் ஆனந்தமாக இருக்கும். நம்மிடம் உள்ள ஒவ்வொரு அம் சமும் அளவிட முடியாத அற்புதங்கள் தாம். ஆனந்தச் சுரங்கங்களே தாம்.

அப்பொழுது பிறக்கிற தைரியம்தான் தைரியம். வீரம் தான் வீரம்.

ஆன்மவீரம், வீறு என்று சொல்லப்படும் அந்த ஞானச் செல்வம் எப்படிக் கணகண என்று ஒலிக்கிறதென்று பாருங்கள்.

*சிந்தனை செய்ய*
*மனம்அமைத் தேன்,செப்ப*
*நா அமைத் தேன்,*
*வந்தனை செய்யத்*
*தலைஅமைத் தேன்,கை*
*தொழ அமைத் தேன்,*
*பந்தனை செய்வதற்(கு)*
*அன்பமைத் தேன்,மெய்*
*அரும்பவைத் தேன்;*
*வெந்தவெண் நீற்றணி*
*ஈசற்(கு) இவையான்*
*விதித்தன வே!*

*செப்ப - சொல்ல. பாராட்டிப் புகழ. நா - நாக்கு. வந்தனை செய்ய - வணங்கி வழிபட. பந்தனை செய்ய - உரிமை கொள்ள. மெய் அரும்ப வைத்தேன் - புளகாங்கிதத்தில் - மயிர்க்கால் சிலிர்ப்ப வேர்வை பொடிப்ப உடம்பைப் பக்குவப்படுத்தி விட்டேன். வெந்த வெண்நீறு அணி ஈசற்கு - இவ்வளவும் யாருக்காக - தீயில் வெந்து நீறிய விபூதியை உடல் முழுதும் அள்ளிப் பூசிய சிவபெருமானுக்காகத் தான்.*

*குறிப்பு :* எத்தனை காரியங்கள். அத்தனையும் பழுதின்றி நடந்து விட்டன. அவ்வளவுக்கும் நம்மிடம் இருக்கிறது வசதி.

இந்தப் பெருமித உணர்ச்சி செய்யுளின் ஓசையோடும் தாளத்தோடும் உருண்டு புரண்டு விளையாடுகிறது.

மக்களிடம் பக்தி இயல்பாகவே இருக்கிறது. இறை உணர்வு, வழிபாடு எல்லாம் அவர்களோடு சேர்ந்தே கிடக்கின்றன.

ஹடயோகம் முதலியனவும், இயமம், நியமம் முதலியன வும் வந்து பக்தியைச் சீரழிக்கின்றன.

சேரமான் பெருமாள் நயனார் போன்றவர்கள் அந்தச் சீரழிவுகளுக்கு இடம் கொடுக்கவில்லை.

நாமும் இடம் கொடுக்கக்கூடாது.

# VIII திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும்

வணக்கத்துக்கும் மரியாதைக்கும் உரிய திருநாவுக் கரசர், காரைக்காலம்மையார் முதலிய சிவநேசச் செல்வர்கள் ஆயிரக் கணக்கில் பாசுரங்கள் அருளியுள்ளனர்.

சைவ ஞானிகளின் அருள்செயல்கள் பலவற்றை ஆயிரம் ஆயிரம் பாடல்களாகத் தொகுத்து பன்னிரு திரு முறை என்று பன்னிரெண்டு நூல்களை வகுத்து வைத்திருக் கிறார்கள்.

ஒவ்வொரு திருமுறையிலும் ஆயிரம் ஆயிரம் பாடல்கள்தாம் இருக்க வேண்டும் என்பது நியதி. ஆனால் திருமந்திரம், திருத்தொண்டர்புராணம் இவற்றில் மூவாயிரம் பாடல்கள்வரை உண்டு.

சில திருமுறைகள் ஆயிரத்துக்குச் சிறிது குறைந்தும் வரும்; கூடியும் வரும்.

பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையானது ஒன்பது சிவனடியார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு.

அந்த ஒன்பது மெய்யடியார்களில் திருமாளிகைத்தேவர் என்று ஒரு மகான். சேந்தனார் என்று இன்னொரு மகான்.

திருமாளிகைத் தேவர், சேந்தனார் ஆகிய இருவரும் ஒருவர் தான் என்பது சிலர் கொள்கை. அப்படி இல்லை அவர் வேறு; இவர் வேறு என்றும் ஒரு கொள்கை.

எது எப்படியானாலும் சரி, இருவர் பெயரிலும் பல திருப் பாக்கள் உள்ளன.

பாடல்களில் பக்தியும், வைராக்கியமும் பீறிட்டுக் கொட்டும்.

திருமாளிகைத் தேவர் திருவாவடு துறையில் அவதரித்த வர். பண்பாடுமிக்க சைவக் குடும்பத்திலே பிறந்தவர்.

சீலமும் சான்றாண்மையும் ஒளிர பக்திப் பரவசத்தில் திளைத்தவர்.

தேவர் என்னும் அடைப் பெயர் மூலம் இது விளங்கும்.

மேலும் செல்வாக்கு மிக்க வசதியோடு வாழ்ந்தவர் என்றும் தெரிகிறது. மாளிகை என்னும் சொல் மூலம் அது விளங்குகிறது.

அடைமொழியாகிய திருமாளிகைத் தேவர் என்னும் பட்டப் பெயர்தான் நிற்கின்றது. அவருடைய இயற்பெயர் என்னவென்று தெரியவில்லை.

திருமாளிகைத் தேவர் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார். இன்றைய விஞ்ஞான உலகத்தில் இந்த அற்புதங்கள் பற்றி சந்தேகம் வரலாம்.

ஆனாலும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பலர் இப்படிப்பட்ட அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

வெறுங்கையில் விபூதி வரவழைத்துக் கொட்டுகிறவர்கள், சந்தனத்தை வரவழைத்துப் பூசுகிறவர்கள், மோதிரங்களை வரவழைப்பவர்கள், சிவலிங்கங்களை எடுத்துக் காட்டுகிற வர்கள் மணலைப் பொன்னாய் சொரிய வைக்கிறவர்கள், தொப்பிக்குள்ளிருந்து ஆளுயர மாலையை எடுத்துக்

காட்டுகிறவர்கள் இப்படி நம் கண்முன் நடமாடத்தானே செய்கிறார்கள்!

விந்தையான இந்த வித்தைகளைப் பார்க்கிறவர்கள் மருட்சி அடைகிறார்கள். அந்த மருட்சியில் இவற்றை அற்புதம் என்கிறார்கள்.

உண்மையில் இவை அற்புதங்கள் இல்லை. இறை யருளுக்கும் இவற்றுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

இந்த வித்தைகள் எல்லாம் வெறும் ஏவலைச் சேர்ந்தவை. குறளிவித்தை என்று சொல்வார்கள்.

பிழைப்புக்காகச் சாதாரணமானவன் இந்த வித்தைகளைச் செய்தால் குறளிவேலை, கண்கட்டி வித்தை என்று பெயர். இதே தொழிலை ஒரு சாமியாரோ, செல்வாக்கு மிக்க பண்டாரம் பரதேசியோ செய்தால் அதற்கு சித்து - அற்புதம் என்றெல்லாம் பெயர்.

திருமாளிகைத் தேவரையும், அவர் போன்ற பக்தர்களை யும் இந்த வித்தைகளை வைத்துப் பார்க்கக் கூடாது. அவர் களது அருள் செயல்களை வைத்தே பார்க்க வேண்டும்.

அவர்கள் வாழ்க்கையில் மிளிர்ந்த அருளுடைமை, பொறையுடைமை, வேண்டாமை, ஈகை, முதலிய சான்றாண் மையை வைத்துதான் அவர்களைப் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய அருள் செயல்களின் மூலமாக - அவர்களுடைய திருப்பாடல்களின் மூலமாகவே அவர்களைப் பார்க்க வேண்டும்.

ஞானிகளையும் பக்தர்களையும் பார்க்க வேண்டிய முறை அது தான்.

இறைவனைக் கூட அப்படித்தான் பார்க்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

*கீதக் கண் ணாடியில்*
*கேட்டுநின் றேனே*

என்பது அவர் திருவாக்கு.

அவன் பூரணமாய் நிறைந்து நிற்பது அருளுடைமையில்- திருவருளில். அதாவது கருணைமயமான நீதியில் தான்.

ஆனாலும் அந்த நீதியின் வழியே பார்ப்பதைவிட அவனைப் பற்றிய பாடல்(கீதங்கள்) மூலம் பார்ப்பது தான் எளிது.

*நீதிக் கண் ணாடி*
*நினைவார் மனத்துளன்;*
*கீதக்கண் ணாடியில்*
*கேட்டுநின் றேன*

காலம், இடம், பொருள், தோற்றம், இருப்பு, மறைவு எல்லாம் அவன் மய்ந்தான். ஆனாலும் அவற்றின் மூலம் பார்த்தால் பிரயோசனம் இல்லை.

என்ன தான் நுணுகி நுணுகிப் பார்த்தாலும் அவனைக் கண்டுபிடிக்க முடியாது. அப்படியேப் பார்க்க முடிந்தாலும் தலை கீழாகத் தான் தெரிவான்.

நேருக்கு நேராகப் பார்ப்பதற்குரிய ஒரே இடம் அவனைப் பற்றிய அடியார்களின் திருப்பாடல்கள்.

*பூதக்கண் ணாடியில்*
*புகுந்திலன் போதுளன்,*
*வேதக்கண் ணாடியில்*
*வேறே வெளிப்படும்,*
*நீதிக்கண் ணாடி*
*நினைவார் மனத்துளன்*
*கீதக்கண் ணாடியில்*
*கேட்டுநின் றேனே!*

*(பூதம் - காலம் இடம், பொருள் என்னும் அண்ட பிண்ட சராசரங்கள்! புகுந்து இவன் - இவற்றுக்குள் அவன் நுழையவில்லை எல்லாமே அவன்தான் ஆனாலும் அவன் தான் நாம் என்பது ஒன்றுக்குமே தெரியாது. போது உளன் - காலதத்துவம் (போது-காலம்) வேதக் கண்ணாடி - சட்டம், விஞ்ஞானம் முதலிய ஆராய்ச்சிகள் வேறே வெளிப்படும் - விபரீதமாகவே தோன்றுவான்.)*

ஆனால் நீதிமான்களின் நினைவில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைப் பாடல்கள் மூலம் கேட்டு அனுபவிக்கலாம். அனுபவிக்க அனுபவிக்கத்தான் எதிரில் வந்து நிற்பான்.

இறைவனைப் போலத்தான் அடியார்களும் அவர்கள் வரலாறும் சரி, அவர்களுடைய அருமை பெருமைகளும் சரி அவர்கள் பாடிய பாடல்களில் தான் கிடக்கின்றன. அவைகளைப் பாடப் பாடத்தான் அவர்கள் யார் என்பது நமக்குத் தெரியும்.

குறளிவித்தைகளையும் ஏவல்களையும் வைத்து மகான்களைப் பார்க்கக் கூடாது. பார்த்தால் காட்சி தாறு மாறாகத்தான் தோன்றும்.

குறளிவித்தைகள் சாதாரண காரியம். நம் கண்ணுக்குத் தெரியாமல் எத்தனையோ உயிர்கள் - எடு பிடி வேலை செய்யும் ஆவிகள் வளிமண்டலத்தில் உலவுகின்றன. அவற்றை வசக்கி வேலை வாங்குவதற்குச் சில முறைகள் - பயிற்சிகள் உண்டு.

அவற்றை வைத்து வித்தை காட்டுகிறவர்கள் இவர்கள்.

ஞானிகள் இதை மிக மட்டமான காரியம் என்று ஒதுக்கி வைப்பார்கள். அவர்களுடைய சொல்லில் இதற்குக் கரித் தொழில் என்று பெயர்.

இனி, உயர்நீதி மன்ற நீதிபதிகளில் புகழ்மிக்க நீதிபதியாக இருந்தவர் ஒருவர். அவர் என்னிடம் சாமியார்களின் ஆற்றல் பற்றி அடிக்கடி புகழ்ந்து சொல்வார்.

"தங்கள் வேர்வையில் நனைந்த அழுக்கை வழித் தெடுத்து "இந்தாபிடி" என்று ஒருவன் கையில் அவர்கள் கொடுத்தால் போதும் அது தங்கக் கட்டியாக இருக்கும்" என்று ஒரு தடவை என்னிடம் சொன்னார்.

நான் கடகடவென்று சிரித்து விட்டேன். அவருக்கு சிறிது வருத்தத்தைக் கொடுத்து விட்டது அது. வருத்தத்தை மூடி மறைத்தபடியே, 'என்ன நினைக்கிறீர் இது பற்றி' என்று கேட்டார்.

நான் சொன்னேன்; கார்ப்பரேஷன்காரன் பல பகுதி களுக்குத் தண்ணீர் விட மாட்டேன் என்கிறான். ஏன் ஏன்றால் பற்றாக் குறை என்கிறான். ஜனங்கள் படாத பாடுபடுகிறார்கள்.

தண்ணீர் ஒழுங்காக வராத இடங்களில் அது ஒழுங்காக வரும்படி செய்யமுடியுமா சாமியாரால்? முடியும் என்று சொல்லுங்கள். அதற்குவேண்டிய ஏற்பாடுகளை நானே செய்கிறேன்''

இப்படி நான் சொன்னேனோ இல்லையோ திகைத்து விட்டார் நீதிபதி. மட்டமான விதண்டா வாதக்காரன் என்று என்னைச் சபித்திருப்பார்.

கரித்தொழில் என்கிற ஏவலால் சில சில்லறைக் காரியங் கள் தான் செய்யமுடியும்.

அற்புதம் நிகழ்த்தும் சித்தர் எத்தனை பேர் இருந்தார்கள்? அன்னியன் ஆட்சியை தடுக்க முடிந்ததா அவர்களால்.

ஜனங்கள் திரண்டெழுந்து தான் அடிமையை அகற்றினார் கள். கொடுங்கோன்மையைத் தகர்த் தெறிந்தார்கள்.

சாமியார்களாலும் முடியவில்லை. அவர்கள் சித்து விளை யாட்டுக்களாலும் முடியவில்லை.

ஆகவே மகான்கள் என்றைக்கும் மகான்கள் தாம். சாமியார்கள் என்றைக்கும் சாமியார்கள் தாம்.

அருளாளர்களை, கவிஞர்களை, தியாக மூர்த்திகளை அற்புதம் நிகழ்த்தும் வித்தைக்காரர்களாகப் பார்க்கக் கூடாது.

திருமாளிகைத்தேவர் நடத்தியதாகச் சொல்லப்படுகிற அற்புதங்களை நாம் விட்டு விட வேண்டும்.

அவருடைய பக்தியை - பரவசத்தை அது உருண்டு திரண்டு கவியாய் எழுந்து வருகிற அற்புதத்தை நாம் பார்க்க வேண்டும்.

இதோ ஒரு பாடல்.

"ஆணவம் முழுவதும் கரையும் படி ஆனந்த நடனம் ஆடும் அரசே! ஆடலரசே! உன்னை என்ன சொல்லிக் கூப்பிட நான்.

ஒன்றும் புரியவில்லை எனக்கு. உணர்ச்சி முழுவதும் தேனூறவைக்கிறாய், தித்திப்பைப் பருகிப் பருகி இன்புறும் உணர்வோ உன்னைக் காணமுடியாது தத்தளிக்கிறது.

கோடி சூரியப் பிரகாசமாகத் தான் இருக்கிறாய் நீ, ஆனாலும் கண்டு தெளிய முடியவில்லை உன்னை.

பளிங்கு மலை என்று உன்னைச் சொல்லவா, கருணையில் பூக்கும் கற்பகக் கனி என்று தான் உன்னைச் சொல்லவா?

எதை எதையோ சொல்லத் தோன்றுகிறது. ஆனால் அவ்வளவும் திகைத்துத் தான் நிற்கின்றன!"

*ஒளிவளர் விளக்கே!*
*உலப்பிலா ஒன்றே!*
*உணர்வுசூழ் கடந்ததோர்*
*உணர் வே!*
*தெளிவளர் பளிங்கின்*
*திரள்மணிக் குன்றே!*

*சித்தத்துள் தித்திக்கும்*
*தே னே!*
*அளிவளர் உள்ளத்(து)*
*ஆனந்தக் கனியே!*
*அம்பலம் ஆடரங்(கு)*
*ஆ க*
*வெளிவளர் தெய்வக்*
*கூத்துகந் தாயைத்*
*தொண்டனேன் விளம்புமா*
*விளம் பே.*

*உலப்புஇலா - திகட்டாத. அளிவளர் உள்ளம் - கருணை ஊறி ஊறிப் பெருகும் மனம். ஆடரங்கு - நடன சபை கூத்து உகந்தாயை - நட னத்தில் லயித்து ஒன்றி நிற்கும் பெருமானே உன்னை. தொண்டனேன் விளம்புமா விளம்பு - அடியவனாகிய என்னால் எப்படிக் கூப்பிட என்று தெரியவில்லை. உன்னை எப்படி முறை சொல்லி நான் அழைக்க வேண்டும். அதை எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் நீ*

*குறிப்பு :* அற்புதமான பாடல். சொற்கள் ஒவ்வொன்றும் மந்திரங்களாய் ஒலிக்கின்றன. இசையும் தாளமும் எப்படி அருள் பாலிக்கின்றன சொற்களுக்கு.

திருமாளிகைத் தேவரின் பக்திதான் இசையாய் வருகிறது. பரவசந்தான் தாளமாய் வருகிறது. இனி, திருமாளிகைத் தேவரின் பாடலில் மற்றொன்று.

ஒரே ஒளிப்பிழம்பாகச் சோதிமயமாக இருக்கிறான் இறைவன் இடத்தால் தடைபடாமல் - மேல் கீழ், திசை எல்லா வற்றையும் தன்னுள் வைத்துச் சுடரொளி வீசிப் பரந்த வண்ணமாக இருக்கிறான் பெருமான்.

அப்படி இருக்க இறைவனை முழுக்க முழுக்க யாரால் பார்க்க முடியும்?

இறைவனிடமிருந்து தோன்றி எழுகின்ற சிருஷ்டி தத்துவத்தால்(பிரமனால்) கூட இறைவனைப் பூரணமாகப் பார்க்க முடியாது.

காக்கும் கடவுளாகிய திருமாலாலும் அவனைப் பார்க்க முடியாது.

அப்படி விரிந்து பரந்த இறைவன் எனக்கு நண்பனாய் இருக்கிறான். என் கஷ்டங்களை நீக்கி என்னைத் தன்னவனாக ஏற்றுக் கொண்டு விட்டான்.

அவனை எப்படிப் பணிந்தேத்த நான்? ஒன்றுமே புரியவில்லை எனக்கு!

"பெருமானே அதையும் நீர்தான் எனக்குச் சொல்லித் தரவேண்டும்" என்கிறார் திருமாளிகைத் தேவர்.

இனிப்பாடல்

*இடர்கெடுத்(து) என்னை*
*ஆண்டுகொண்(டு) என்னுள்*
*இருள்பிழம்(பு) அறஎறிந்(து)*
*எழுந் த*
*சுடர்மணி விளக்கே!*
*உள்ஒளி விளக்கும்*
*தூயநற் சோதியுள்*
*சோ தீ!*
*அடல்விடைப் பாகா!*
*அம்பலக் கூத்தா!*
*அயனொடு மால்அறி*
*யா மைப்*
*படரொளி பரப்பிப்*
*பரந்துநின் றாயைத்*
*தொண்டனேன் பணியுமா*
*பணி யே.*

திருமாளிகைத்தேவரின் இந்த இரண்டு பாடல்கள் போதாதா வாழ்நாள் முழுவதும் வைத்து அனுபவிக்க!

இந்த இரண்டு பாடல்களிலும்தான் திருமாளிகைத் தேவரின் அறபுத சக்தி நிறைந்திருக்கிறது.

பாடப்பாட அனுபவிக்க அனுபவிக்க அந்த அற்புத சக்தி நமக்கும் வரும்.

இனி சேந்தனார் பாடல்.

சேந்தனார் வேறு திருமாளிகைத் தேவர் வேறு என்று சொல்கிறவர்கள் திருவெண்காட்டை ஒட்டியுள்ள திரு நாங்கூரில் அவதரித்தார் சேந்தனார் என்கிறார்கள்.

இவர் கணக்குப் பிள்ளையாகப் பட்டிணத்தடிகளிடம் பணி ஆற்றினார் என்றும், பட்டிணத்தார் கட்டளைப் படி பொக்கிஷத்திலிருந்த பட்டிணத்தார் செல்வம் முழுவதையும் ஏழை எளிய மக்களுக்கு வழங்கினார் என்றும் கதை.

பட்டிணத்தார் உறவினர்கள் அரசாங்கத்திடம் முறையிட அரசு இவரைச் சிறையில் அடைத்தது என்றும் பட்டிணத்தார் அருளால் பிறகு விடுதலை பெற்றார் என்றும் கதை தொடர்கிறது.

பட்டிணத்தார் துறவுக்குப் பின் சேந்தனார் குடும்பத்தோடு சிதம்பரம் வந்து தங்கினார் அங்கே விறகு வெட்டிப் பிழைத்தார்.

அந்தக் குறைந்த வருமானத்திலும் சிவனடியார் ஒரு வருக்கு ஒவ்வொரு நாளும் களி அமுது வழங்கினார். இப்படி எல்லாம் போகிறது கதை.

இனி சேந்தனார் என்கிற பெயர் அபூர்வம். செந் தேனானார் என்னும் சொல் தான் சேந்தனார் என்று திரிந்திருக்க வேண்டும்.

செந்தேனானார் என்பது இறைவனைக் குறிக்கும் திரு நாமங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

இன்னும் தேனப்பன் என்கிற சொல் சிலருக்குப் பெயராக வழங்குகிறதல்லவா?

செந்தட்டி என்று சிலருக்குப் பெயர் இருக்கிறது.

ஜெயந்தன், என்கிற சொல்லுக்கு மூலம் சேந்தன்தான்.

சேந்தன் என்னும் சொல் பற்றி அறிஞர் பெருமக்கள் ஆராய வேண்டும்.

சேந்தன் பூதனார் என்றும் ஒரு பெயர் இருக்கிறது.

கதை, ஆராய்ச்சி எல்லாம் அப்படி இருக்கட்டும். சேந்தனார் பாடலை இனிப்பார்க்கலாம்.

திடுதிப்பென்று குதித்து வந்து விடவில்லை மனிதன்.

தண்ணீரில் மிதக்கும் பாசியிலிருந்து செடி கொடி யிலிருந்து படிப்படியாய் அடிமேல் அடி எடுத்து வைத்து முன்னேறி வந்திருக்கிறான் மனிதன்.

ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு உயர்ந்து வர எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் ஆகி இருக்கும். ஏன், லட்சக்கணக்கான ஆண்டுகளே ஆகி இருக்கும்.

பூனையிலிருந்து ஆனையாவதற்கு யுகங்கள் பல கடந்திருக்கத்தானே செய்யும்.

படியாத - பகுத்தறிவில்லாத ஊமை மனிதன் எங்கே, இன்றைய மனிதன் எங்கே?

இந்த மாற்றம் நினைத்த மாத்திரத்தில் நிகழக் கூடியதா?

பல லட்சம் ஆண்டுகள் இயற்கையானது செழித்துச் - செழித்துக் கொழித்து கொழித்து அலசிப்புடைத்து உருவாக்கிய அற்புதம் அது.

புலியை எடுத்துக் கொண்டால் அழகான பிராணிதான். ஆற்றல் மிக்க பிராணிதான். அதன் வேகத்துக்கும் பாய்ச் சலுக்கும் ஈடுகொடுக்க முடியாது மனிதன்.

ஆனாலும் கடவுளைப் பற்றிய யோசனை புலிக்கு உண்டா? உண்மையை உணர வேண்டும் என்கிற ஆவலோ, வேகமோ புலிக்குக் கிடையாது.

அறிவும் இல்லை புலிக்கு. ஆனந்தமோ, அனுபவமோ ஒன்றுமே இல்லை புலிக்கு.

உண்மையை உணர்ந்து கற்காத மனிதனுடைய நிலையும் அப்படித்தான்.

இறைவனுடைய அருள், அனுபவம், ஆனந்தம் எல்லாம் உணர்ச்சியுள்ள ஞானமுள்ள மனிதனுக்குத்தான்.

அவர்களுக்குத்தான் தேனாகத் தித்திப்பான் இறைவன்.

*கற்றவர் விழுங்கும்*
*கற்பகக் கனியைக்*
*கரையிலாக் கருணைமா*
*கட லை*

*மற்றவர் அறியா*
*மாணிக்க மலையை*
*மதிப்பவர் மன் மணி*
*விளக் கை.*

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று அரக்கர் களையும் அவர்கள் வாழ்ந்த ஊரோடு சேர்த்து வைத்துக் கொளுத்தி விட்டான் இறைவன்.

அவனை அனுபவிக்க அனுபவிக்கத்தான் கண்ணுக்குக் குளுமை. மனதுக்கும் குளுமை.

இனிப் பாடலின் முழு உருவம்

*கற்றவர் விழுங்கும்*
*கற்பகக் கனியை,*
*கரை இலாக் கருணைமா*
*கட லை,*

*மற்றவர் அறியா*
*மாணிக்க மலையை,*
*மதிப்பவர் மனமணி*
*விளக் கை,*
*செற்றவர் புரங்கள்*
*செற்றஎம் சிவனைத்,*
*திருவீழி மிழலைவீற்-*
*றிருந் த*
*கொற்றவன் தன்னைக்*
*கண்டு கண்(டு) உள்ளம்*
*குளிரஎன் கண்குளிர்ந்*
*தன வே!*

பாடலைப் பாடப்பாட மனம் மட்டுமா, தேகம் முழுவதும் உருகும்.

IX

# திருமூலர்

## 1

மூவாயிரம் வருடங்கள் திருமூலர் இருந்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்றும், அந்தப் பாடல்களின் திரட்டே திருமந்திரம் என்றும் வரலாறு.

மூவாயிரம் ஆண்டுகள் ஒருவரால் இருக்க முடியுமா? அப்படியானால் அவர் வாழ்க்கையில் என்னென்ன சம்பவங்கள் நடந்திருக்க வேண்டும் அவை பற்றி ஒரு குறிப்புக் கூட இல்லை.

மூவாயிரம் வருடங்களில் நாட்டில் எத்தனை எத்தனையோ மாற்றங்கள் நடந்திருக்கும். அரசியலில், பொருளாதாரத்தில், கல்வியில், சமய வழிபாட்டில் என்னென்னவோ நிகழ்ந்திருக்க வேண்டும்.

அவை பற்றி ஒன்றுமே இல்லை திருமூலர் விஷயத்தில்.

ஆகவே திருமூலரைப் பற்றிய மூவாயிரம் ஆண்டு வெறும் உபசார மொழிதான். இந்திரனே, சந்திரனே என்று போற்றிப் புகழ்கிற வெறும் பாராட்டுப் பத்திரம்தான்.

ஆனாலும் இந்த உபசார மொழியில் ஓர் அனுபவம் இருக்கிறது.

அது என்ன?

திருமூலர் ஒரு பெரிய ஞானக் கடல். தத்துவஞானி. எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்.

பற்றற்ற ஞானி, கருணையே உருவானவர், அதனால் எதையும் தெள்ளத் தெளிய விளக்கிவிடும் வித்தகர் அவர்.

திருமூலருடைய கருத்திலோ, சொல்லிலோ பேரத்துக்கு இடமே இருக்காது. வெட்டொன்று துண்டிரெண்டு என்று விழும் சொல்லும் பொருளும்.

அரிய பெரிய தத்துவ நுட்பங்களை மிக எளிதாக நயமாக எடுத்து விளக்குவார் திருமூலர்.

அவருடைய வாக்கு மூலம் ஒவ்வொன்றும் அருளுரை தான். அதில் ஆடம்பரமோ, வருணனையோ, கற்பனையோ வந்து விஷயத்தை அமுக்காது.

தெள்ளத் தெளிந்த கண்ணாடி போலப் பிரகாசிக்கும் அவர் எடுத்துச் சொல்லும் ஒவ்வொரு உண்மையும்.

அறிவுக்கு எட்டாத நுணுக்கமான ஞானக் கருக்களைக் கூட உள்ளங்கை நெல்லிக் கனி போல அவர் காட்டிவிடுவார்.

அப்படி உல்லாசமாய், சொகுசாய்க் காட்டுவதற்கு தமிழ் அவருக்குக் கை கொடுக்கிறது.

திருமூலருடைய பாடல்களில் ஒன்று போதும் வாழ் நாள் முழுவதும் அனுபவித்து அனுபவித்துப் பாடிக் கொண்டே இருக்கலாம்.

குறைந்தது ஒரு வருடமாவது மாறி மாறிப் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டும்.

திருமூலருடைய ஞானக் களஞ்சியமான பாடல்களை அனுபவித்த முன்னோர்கள், "இத்தகைய பாடல்கள் தவம் செய்துதான் வந்திருக்க வேண்டும் அதுவும் யோகத்தில் அமர்ந்திருக்கும் மெய்ஞ்ஞானியிடமிருந்து ஆண்டுக்கொரு

பாடலாகத்தான் வந்திருக்க வேண்டும்'' என்று ஆனந்தப் பெருக்கோடு சொன்னார்கள்.

பாடல்களின் அற்புதத்தை நோக்கிச் சொன்ன சொல் அது. அதையே வரலாறாக்கி விட்டார்கள் பின் வந்தவர்கள்.

"திருமூலர் மூவாயிரம் ஆண்டு யோகத்தில் அமர்ந்திருந் தார். அந்த நிலையிலிருந்தபடி ஆண்டுக்கொரு திருமந்திர மாக மூவாயிரம் பாடல்களைப் பாடி முடித்தார்" என்று கதை யாகவே கட்டிவிட்டார்கள்.

கதையை விட்டுவிட வேண்டும். கதையானது சுட்டிக் காட்டும் மதிப்புரையை - விமர்சனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் நாம்.

இனி, திருமூலர் சிவபெருமானுடைய மிகமிக நெருங்கிய தொண்டரென்றும், திருக்கயிலாயத்தில் சிவபெருமான் கூடவே இருந்தவர் என்றும், அகத்தியர் குடியிருக்கும் பொதிகை மலையை அவர் நாடி வந்தாரென்றும் ஒரு கதை.

வரும் வழியில் தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறையை ஒட்டிய பகுதியில் ஒரு நிகழ்ச்சி.

பசுமாடுகள் பலவற்றை மேய்ச்சல் காட்டில் ஒருவன் விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பசுக்கள் மேல் அவனுக்கு அளவற்ற அன்பு. பசுக்களுக் கும் அவன் மேல் எல்லை இல்லா மோகம்.

மேய்ச்சல்காரன் திருமூலர் அவ்வழிவரும் நேரம் பார்த்து இறந்து போகிறான். பிணமாகக் கிடக்கும் மேய்ச்சல்காரனைச் சுற்றி பசுக்கள் கூடின. கண்ணீர்விட்டுக் கதறின.

இதைப் பார்த்தார் திருமூலர். அதிசயமாக இருந்தது முதலில். பிறகு பசுக்களின் மேல் பரிவு உண்டாகி விட்டது திருமூலருக்கு.

அவருக்குக் கூடுவிட்டுக் கூட பாயத் தெரியும் எப்படி யாவது இந்தப் பசுக்களின் துயரத்தைப் போக்க வேண்டும்.

இப்பசுக்களை பழைய படி மகிழ்ச்சியில் திளைக்கும்படி செய்ய வேண்டும் என்று தீர்மானித்து விட்டார் திருமூலர்.

ஒரு புதருக்குள் தம் உடலைப் போட்டு விட்டு மேய்ப் பாளன் உடலுள் பாய்ந்து புகுந்தார் திருமூலர்.

விழித்து எழுவது போல எழுந்தது மேய்ப்பாளன் மேனி.

கதறிய பசுக்கூட்டம் மகிழ்ந்து குதித்தன. வாலை மடக்கியும் வீசியும் நடனமே ஆடிவிட்டன.

மேய்ப்பாளன் உடம்புள் புகுந்த திருமூலர் மாலை நேரம் வந்ததும் பசுக்களை ஒன்று திரட்டினார். ஊருக்குள் கொண்டு வந்தார். மந்தைக்கு வந்ததும் தம்தம் வீடு நோக்கிப் போயின பசுக்கள்.

மேய்ப்பாளனாக நிற்கும் திருமூலரைக் கடைக் கண்ணால் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே போயின் பசுக்கள்.

திருமூலர் மேய்ச்சல் காட்டுக்கு வந்தார். புதர் புதராகத் தேடினார். அவர் போட்டு விட்டுப் போன உடம்பு கிடைக்க வில்லை.

"என்னடா இது. அநியாயமாக இருக்கிறதே" என்று திகைத்தார்.

அப்படியே திருவாவடுதுறை வந்தார். கோயிலை ஒட்டி இருந்த அரசமரத்தடியில் இருந்து தவம் செய்தார்.

மூவாயிரம் ஆண்டுகள்! மூவாயிரம் பாடல்கள் உதயம்! பாடல் ஒவ்வொன்றும் மந்திரம்தான் திருமந்திரமே தான்.

மேலே உள்ள விபரமும் கற்பனைதான். கற்பனைக்குள் கிடக்கிற குறிப்பை - சரித்திரக் குறிப்பை மட்டும் பார்க்க வேண்டும் அதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சைவ சமயத்தின் தாயகம் இமயமலைதான். இமய மலை யின் கொடுமுடியாகிய கைலாயம்தான் - அதாவது கைலாயத் தைச் சுற்றி உள்ள நேபாளம், திபெத், லடாக், காஷ்மீர்,

இமாச்சல் பிரதேசம் மற்றும் இமயமலை அடிவாரம் அவ்வள வும் சைவத்தின் இராசதானி.

இமயமலையின் விசாலமான முற்றத்தில் பிறந்து கயிலையங்கிரியைக் கட்டிப் புரண்டு வளர்ந்த சைவம் நாலா திசையிலும் கொடி வீசிப் பரவியது.

கிழக்கே அசாம், பர்மா, வழியாகச் சென்று சீனாவில்கூட விரிந்து படர்ந்தது. மேற்கே ஆப்கன் வழியாக நெடுந் தூரம் சென்றது. தெற்கே குமரி முனைவரைப் பரவி நிறைந்தது.

தமிழகம் வழியாகத் தான் மலேயா, ஜாவா, இலங்கை, சுமத்திரா, சயாம், இந்தோச்சீனா இங்கெல்லாம் சைவம் வேர் விட்டது.

வங்காளம் வழியாகவும் அது அங்கெல்லாம் பரவியது.

ராமாயணக் கதைகளும், பாரதக் கதைகளும் கீழை நாடுகளில் ஊடுருவிப் படர்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தது சைவம்.

நாலா திசைகளிலும் பல்வேறு நாடுகளுக்குச் சைவம் கொடி வீசிப் பரந்தது. ஆனாலும் தமிழகத்தில் தான் அதற்குத் திருத்தமான சமயப் பண்பும், வழிபாட்டு நெறிமுறைகளும் கிடைத்தன.

வானளாவிய கோபுரங்களும் கோயில்களும், தேரும், திருவிழாவும், தெப்பமும், உற்சவமும், தேவார, திருவாசகப் பாடல்களும் தமிழ் நாட்டில்தான் நிறைந்துள்ளன.

புலாலுண்ணாமை என்கிற சைவ நெறியை இன்றைக்கும் தமிழகம் ஒன்றில்தான் சைவம் கைக் கொண்டுள்ளது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாய்த் தமிழகத்துச் சான்றோர்களும் ஆன்றோர்களும் தங்கள் அனுபவங்களைச் சைவத்தில் பெய்து அதற்கு எங்குமில்லாத பொலிவை உண்டாக்கி இருக்கிறார்கள்.

அகத்தியர் வரவு, திருமூலர் வரவெல்லாம் வடக்கிலிருந்து சைவம் அலை அலையாக எழுந்து வந்த அதிசயத்தைக் குறிக்கும் அடையாளங்கள்தாம்.

தமிழகத்தில் திருவாவடுதுறை ஆதீனம் போல எத்தனையோ சைவ மடங்கள் இருக்கின்றன.

அத்தனை மடாதிபதிகளும் திருக்கயிலாய பரம்பரை என்று தான் தங்கள் பட்டத்தை இன்னும் தொடங்குகிறார்கள்.

அது மட்டுமல்ல தமிழகத்தைச் சேர்ந்த சைவ வேளாளர் குடும்பங்களைச் சேர்ந்த சொத்து சம்பந்தமான பத்திரங்களைப் பார்த்தால் – நூறுவருடம், நூற்று இருபது வருடத்துக்கு முந்திய பத்திரங்களைப் பார்த்தால் அவற்றில் கங்காகுலம் முத்துசாமிப் பிள்ளை, கங்காகுலம் ராமசாமி முதலியார் என்று இருக்கின்றன. திருக்கயிலாய பரம்பரை, கங்காகுலம் என்பன எல்லாம் எதைக் காட்டுகின்றன? வடகோடியிலிருந்து தென்கோடிக்குப் பரவியது சைவம் என்பதைத்தானே.

சைவத்தின் முக்கியமான சின்னம் ருத்திராட்சம். அது விளைவது நேபாளத்தில்தான்.

சைவத்தின் மூலநாயகர்கள் பசுவும் காளையுமே.

காளையை நந்தி என்று சொல்வார்கள்.

பசுபதி கோயில், நந்திகேஸ்வரம் (ஆவுடையார் கோயில்) என்றெல்லாம் ஆலயங்கள் இருக்கத்தானே செய்கின்றன.

இனி, பசுவை உயிரென்றும், நந்தி(காளை)யை உயிருக்குயிரான சிவன் (தெய்வம்) என்றும் சொல்வது சைவமரபு.

ஆவுடை நாயகம் என்பதன் பொருள் அதுதான். பசு உகந்தேறி, என்று சுந்தரர் பாடி இருக்கிறார் இறைவனை.

அதுமட்டுமல்ல, பசுவின் மடுவுக்குள் இறைவன் (சிவபெருமான்) புகுந்து நிறைந்துள்ளான் என்றும், அங்கிருந்த

படியே பால், தயிர், நெய், கோமயம், சாணம் இவற்றில் திருமஞ்சனம் ஆடுகிறான் என்றும் சொல்லி இருக்கிறது.

*"ஆன்என்பது தரும் ஐந்ததையும்*
*ஆடும்பெரு மானை"*

என பரஞ்சோதி முனிவர் பாடுகிறார்.

"பாலோ(டு) ஆன்ஐந்தும் ஆட்டுகந்தான்" என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளும் சொல்கிறார்.

பசு, காளை இவற்றின் சாணத்தை எருவாக்கி அனலி லிட்டு நீறாக்கிய(திரு) நீறுதான் சைவத்தின் மூலமந்திரம். தனிச் சின்னம்.

சைவமும் தமிழும் சம்பந்தப்பட்ட ஒரு வரலாற்றுக் குறிப்பு திருமூலர் யாத்திரையிலும் அவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததிலும் பொதிந்து கிடக்கிறது.

அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்கொண்டதோடு சரி.

அதை(வரலாற்றை)யே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

திருமூலர் பாடல்களை அனுபவிக்க வேண்டுமென்றால் வரலாற்றை - கதையை மறந்து விடவேண்டும்.

இனிப்பாடல்கள் பற்றிப் பார்க்கலாம்.

ஒரு சின்னஞ் சிறிய புல்லுக்குள் என்னென்ன விந்தைகள் நடக்கின்றன. நம்மால் அறிய முடிகிறதா? நமது உடம்புக்குள் நடக்கிற விந்தைகளும் அப்படி மர்மமாகவே இருக்கின்றன.

ஒரு பெண்ணின் கருவில் குழந்தை உருவாகி வருகிறது. மூக்கு, முகம், கண், உதடு, கை, கால், மண்டை, வயிறு, குடல் என்று வேலைபாடுகள் நடக்கின்றன.

அவ்வளவும் இணைந்து ஒரு தன்மைத்தாய் - குழந்தை யாய் - புத்தம் புதிய நறுமலராய் வருகிறது.

பசி, தாகம். சிரிப்பு, அழுகை, கோபம் இவ்வளவோடும் வருகிறது குழந்தை.

இப்படி ஓர் அற்புதம் கருவறை என்கிற உள்ளங்கை இடத்துள் எப்படி நடந்தது. யார் நடத்தியது?

தாயின் கருக்குழியில் வித்திட்டானே தந்தை அவனுக்குத் தான் தெரியுமா விபரம்?

வித்தை ஏற்று அது முளை விட்டுப் பயிராக இடம் கொடுத்தாளே தாய்; அவளுக்குத் தான் தெரியுமா?

*இட்டான் அறிந்திலன்,*
*ஏற்றவள் கண்டிலள்,*

சரி, போகட்டும். செயல்பாடு அல்லது விளைச்சல் என்று ஒன்று. அது பேரண்டம் முழுவதும் சலித்த வண்ணமாக இருக்கிறது. சலித்துச் சலித்து நவநவமாக உருப்படிகளை உண்டாக்கிய வண்ணம் இருக்கிறது.

சிருஷ்டி தத்துவம் என்பார்கள் அதை. திருமூலரோ தட்டான் என்று குறிப்பிடுகிறார் அதை.

அவனிடம் கேட்டால் எனக்கொன்றும் தெரியாது என்கிறான்.

*தட்டான் உணர்ந்தும்*
*பிறர்க்கு உரைத்திலன்.*

ஆனால் அணுவுக்குள் அணுவாய் நின்று இயக்குகிற இறைவன் அங்கும் நிறைந்துதான் இருக்கிறான்.

அவனிடம் எப்படிக் கேட்க?

இனிப்பாடலின் முழு உருவம்

*இட்டான் அறிந்திலன்*
*ஏற்றவள் கண்டிலள்,*
*தட்டான் அறிந்தும்*
*பிறர்க்கு உரைத்திலன்,*

*பட்டாங்கு செய்யும்*
*பரமனும் அங்குளன்;*
*கெட்டேன் இம் மாயையின்*
*கீழ்மைஎவ் வாறே!*

## 2

நம்முடைய அறிவின் யோக்யதை இவ்வளவு தான்! நம்மை உணர்வதற்கே, நம்முள் நடக்கும் காரியங்களைத் தெரிவதற்கே திறனற்ற இந்த மலட்டறிவை(மட்டும்) நம்பி வாழமுடியுமா?

முழுக்க முழுக்க இதை நம்பினால் நம் கதி அதோகதி தான்.

வண்டியை ஓட்டுவதற்கும், பிழைப்பை நடத்துவதற்குமே நம்முடைய படிப்பும் அறிவும் பயன்படும். உண்மை உணர்ச்சிக்கோ பண்பாட்டு நலனுக்கோ இவை பிரயோசனப்படா.

இது உண்மை. இந்த உண்மையைத் தெரியவேண்டும். தெரிந்தவர்கள்தாம் அறிஞர்கள். ஞானிகள்.

*அறிவறி(வு) என்றிங்(கு)*
*அரற்றும் உலகம்;*
*அறிவறி யாமை*
*யாரும் அறியார்;*
*அறிவறி யாமை*
*அறிந்தபின் யாரும்*
*அறிவு! மயமாய்*
*அமர்ந்திருப் பாரே.*

*அறிவு அறிவு என்று இங்கு அரற்றும் உலகம் - அதைத் தெரிந்துவிட்டேன் பார், இதைக்கண்டு கொண்டேன் பார் என்று ஆரவாரம் பண்ணி புத்தகங்களையும் புத்தி சாதுர்யங்களை யுமே வழிபடுகிறது உலகம்.*

*அறிவு அறியாமை யாரும் அறியார் - இந்த அறிவு வெறும் ஜடந்தான் என்பது ஒருவருக்கும் விளங்கவில்லையே!*

*அது விளங்கிவிட்டால் போதும் விளங்கின மாத்திரத்தி லேயே அறிவுமயமாய் அமர்ந்திருப்பார் - அவர்தான் ஞானம் ஞானம்தான் அவர்.*

*குறிப்பு :* ராக ஆலாபனையோடு ஒரு பாடலைப் பாடு கிறார் பாடகர். பாடலின் முகப்பிலுள்ள ஒன்றிரெண்டு வரிகளை - அதாவது பல்லவியை வளைத்து வளைத்துப் பாடுகிறார்.

விபரம் தெரியாதவர்கள், என்னடா இது சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே பாடகர் என்று நினைக்கலாம்.

ஆனால் விபரம் தெரிந்தவர்களுக்கு இதுதான் பாடும் முறை என்பது தெரியும்.

பல்லவியை அவர் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சாயலில் வைத்துப் பாடுவார். ஒவ்வொரு தடவையும் புதுப் புதுச் சங்கதிகள் அதில்விழும்.

உணர்ச்சி பாவத்தின் பல்வேறு நிறங்களை அந்தச் சங்கதிகள் காட்டும்.

திருமந்திரப்பாடல்கள் பல அந்த முறையில் அமைந் துள்ளன.

பாடல் முழுவதுமே அறிவு அறிவு என்று தொடங்கினா லும் ஒவ்வொரு முறைக்கும் ஒவ்வொரு புத்துணர்ச்சி பிறக்கிறது. உணர்ச்சியில் வைத்து அழுத்த அழுத்த ஒரே சொல்லுக்குப் பலபல உணர்ச்சிச் சாயல்கள் பிறக்கின்றன.

வேதமந்திரங்களும் கிட்டத்தட்ட இதே முறையில் தான் வருகின்றன.

"காற்றே எங்களுக்குப் பலம் கொடுப்பாயாக; காற்றே எங்கள் எதிரிகளைச் சின்னா பின்னம் ஆக்குவாயாக, காற்றே

எங்கள் புத்திக்கு ஒளி கொடுப்பாயாக" என்று தொடர்ந்து வரும்.

திருமூலர் பாடல்களிலும் வந்த சொல்லே (பல்லவியே) தொடர்ந்து வருவதால் தானோ என்னவோ மந்திரம் என்று பெயர் பெற்றுள்ளன.

## 3

தத்துவம் என்றால் உண்மை என்று பொருள். தத்துவ ஞானம் என்றால் உண்மை அறிவு என்று பொருள்.

தன்னை உணர்ந்து பார்க்கிறவர் தான் தத்துவஞானி.

நம் உடம்பில் நடக்கிற காரியங்கள், உணர்ச்சியில் உண்டாகிற காரியங்கள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும்.

நாடகம் பார்ப்பது போல ரசித்துப் பார்க்க வேண்டும்.

அன்பு, பொறுமை, கொடை, வீரம், பக்தி, நீதி என்றெல்லாம் உணர்ச்சியில் விளைகின்றன. அதனால் பலபல செயல்கள் நடக்கின்றன.

ஏன் இப்படி உண்டாகிறது என்று பார்க்க வேண்டும். என்னென்ன அதிசயங்களை எல்லாம் இவை நிகழ்த்துகின்றன என்று வியக்க வேண்டும்.

அதே போல ஆசை உண்டாகிறது. பேராசையே உண்டாகிறது. கோபம் வருகிறது. பொய், களவு, பித்தலாட்டம், ஏமாற்று, இப்படி எத்தனை எத்தனையோ பிசாசுகள் நம் உணர்ச்சியிலிருந்து உதித்து வருகின்றன.

அவற்றையும் ஆர்வத்தோடு பார்க்க வேண்டும். அவை நடத்துகிற வெறியாட்டங்களை எல்லாம் பார்த்துப் பார்த்து வியக்க வேண்டும்.

ஏன், இப்படி எல்லாம் உண்டாகின்றன என்று உணர்ந்து பார்க்க வேண்டும்.

மற்றவர்கள் காரியங்களை நம் காரியங்களில் வைத்துப் பார்க்க வேண்டும். எல்லாரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி தான். வித்தியாசம் இல்லை என்பது தெரியும்.

போகப்போக உயிரினம் முழுவதும் ஒரே மாதிரி தான். வித்தியாசம் இல்லை என்பதும் தெரிந்து விடும்.

அண்டபிண்டசராசரம் அவ்வளவும் ஒன்றுதான் என்பது தெரியத்தெரிய நான் என்பது கரைந்து விடும்.

அதற்கு வழி தன்னை உணரும் தன்னுணர்வுதான். உண்மை அறிவு பெற்றவர்கள் - அதாவது தத்துவ ஞானிகள்.

*தன்னை உணர்ந்திடும்*
*தத்துவ ஞானிகள்*

நம்மை உணர உணர நம்மிடம் விளைந்த காரியங்கள் நமக்குத் தெரியும். தவறுகளும் தெரியும். தவறின்மைகளும் தெரியும்.

தவறுகள் கழிவிரக்கத்தை உண்டுபண்ணும். மனதைத் தூய்மை படுத்திவிடும்.

அதனால் பழைய வினைப் பயன் காலாவதி ஆகிவிடும்

தூய்மை பெற்ற உள்ளம் தீமைக்கு இடம் கொடுக்காது. அதனால் மேற் கொண்டு வருகிற தொல்லைகளும் இல்லை.

*முன்னை வினையின்*
*முடிச்சை அவிழ்ப்பர்கள்,*
*பின்னை வினையைப்*
*பிடித்துப் பிசைவர்கள்;*

இவ்வளவும் தன்னுணர்வால் தான் கிடைக்கும். தன்னை உணர்வது எளிதான காரியந்தான். மிக மிக அரிதான காரியமுந்தான்.

அது எளிதான காரியமாக இருப்பதனாலேயே அதைப் பற்றி ஒருவரும் யோசிப்பதில்லை. தப்பித்தவறி ஒருவர்

இருவர் தன்னை உணரும் யோசனையில் ஈடுபடுகிறார்கள் என்றால் அது இறைவனுடைய அருளால் தான்.

இனிப்பாடலின் முழுஉருவம்

*தன்னை உணர்ந்திடும்*
*தத்துவ ஞானிகள்*
*முன்னை வினையின்*
*முடிச்சை அவிழ்ப்பர்கள்.*
*பின்னை வினையைப்*
*பிடித்துப் பிசைவர்கள்;*
*சென்னியில் வைத்த*
*சிவன்அரு ளாலே*

# 4

**த**ன்னுணர்வில் வெளிச்சம் பெருகப் பெருக 'நான்' என்கிற தனிமை ஒழிந்து போகும்.

கடவுள் தத்துவந்தான் அவ்வளவும் என்பது தெரியும். ஒவ்வொரு அணுவும் இறைவன் கொலுவிருக்கும் சந்நிதானந் தான் என்பதும் விளங்கிவிடும்.

அப்படியானால் நாம் இறைமயமேதான். நம்முடைய உடம்பும் உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவும் ஆலயமே தான்.

*இனிப் பாடல்*

*உள்ளம் பெருங்கோயில்,*
*ஊனுடம்பு ஆலயம்,*
*வள்ளல் பிரானார்க்கு*
*வாய்கோ புரவாசல்,*
*தெள்ளத் தெளிந்தார்க்குச்*
*சீவன் சிவலிங்கம்;*
*கள்ளப் புலன் ஐந்தும்*
*காளா மணிவிளக்கே!*

*பெருங்கோயில் - கருவறை, சீவன் சிவலிங்கம் - பூனையும் கடவுள் தான். யானையும் கடவுள் தான். தன்னுணர்வு பெற்றவர்களுக்கு (தெள்ளத் தெளிந்தார்க்கு) இது பற்றி விளக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு நன்றாகவே தெரியும் இது.*

ஆனாலும் ஒன்று சொல்ல வேண்டி இருக்கிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் ஐந்தும் அது வேண்டும் இது வேண்டும் என்று சதா நச்சரிக்கத்தான் செய்யும். உடன்படா விட்டால் திமிறும். அங்கே இங்கே என்று பாய்ந்து உழப்பும்.

அதற்காக ஐம்புலன்களையும் ஒழித்துக் கட்டி விட வேண்டியது தான் என்கிற செயலில் இறங்கக் கூடாது. தன்னுணர்வைப் பெருக்கப் பெருக்க - எல்லாம் இறைமயம் என்பது மனசை அழுத்த அழுத்த இந்த ஐந்துபுலன்களுமே மெய்ஞ் ஞானத் துக்கு வெளிச்சம் கொடுக்க ஆரம்பித்து விடும்.

*'கள்ளப் புலனைந்தும்*
*காளா மணிவிளக்கே''*

# 5

"ஆற்றுக்குள் இருந்து அரகராப் போட்டாலும், சோற்றுக் குள் இருக்கிறான் சொக்க நாதன்" என்பது பொன் மொழி.

நாம் இறைவன் மயம், உடம்பு, உணர்ச்சி எல்லாமே இறைவன் மயம் என்ற பிறகு உணவுமட்டும் தனியாகவா நிற்கும். அதுவும் தெய்வ மயந்தான்.

உடம்புக்கு உணவின் பிண்டம் என்று பெயர். உடம்பு முழுவதும் உயிர்மயம் இல்லை என்றால்,

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'' என்று சொல்லமுடியுமா?

எறும்பு முதல் யானைவரை உயிர்வர்க்கம் முழுவதுக்கும் உணவுதான் உயிர். உயிருக்கு உயிர் என்றால் அது உணவு தான்.

கடவுளே அன்னமயமாக(த்தான்) இருக்கிறான் என்கிறார் திருமூலர்.

அன்ன மயம் என்(று) அறிந்து கொண்டேனே'' என்பது அவர் வாக்கு.

இனி, நினைத்தால் போதும், என்ன என்று கேட்பார் கடவுள். அப்படி எங்கும் நிறைந்திருக்கிறார் பெருமான்.

*உன்னும் அளவில்*
*உணரும் ஒருவனை,*

நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் கட்புலனுக்குப் புலனாவதில்லை. பார்த்துவிட வேண்டுமே என்று தவியாய்த் தவிக்கிறது மனம்.

புத்தியிலிருந்து எழுந்த நூல்கள் - வேதங்கள் உள்ளிட்ட எல்லா நூல்களும் ஐயா, அரசே என்று கூப்பிட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆனால் அவன் நிறைந்தே இருந்தாலும் மறைந்தே இருக்கிறான்.

*பன்னும் மறைகள்*
*பயிலும் பரமனை''*

*தூண்டா விளக்காக - விளக்கொளியாக என் கூடவே இருக்கிறான் இறைவன்.*

அப்பேர்ப்பட்ட இறைவனை நான் கண்டு கொண்டேன், கண்ணாரக் கண்டு கொண்டேன் என்கிறார் திருமூலர்.

எப்படி?

*உன்னும் அளவில்*
*உணரும் ஒருவனைப்*

*பன்னும் மறைகள்*
*பயிலும் பரமனை,*
*என்னுள் இருக்கும்*
*இளையா விளக்கினை;*
*அன்ன மயம்என்று*
*அறிந்துகொண் டேனே.*

*குறிப்பு :* சகலமும் உணவு(அன்ன)மயமாகவே இருக்கின்றன.

அதனால் உண்பதும் உணவுதான், உண்ணப்படுவதும் உணவு தான்.

*"தின்றனை அனைத்தும்*
*அனைத்தும் நினைத் தின்றன"*

என்பது அருள்வாக்கு.

ஞானிகளின் அருளுரைக்கு விளக்கமாகப் பொருள் கூறுகிறது திருமூலரின் பாடல்.

# 6

உண்மையை நேருக்கு நேராகப் பார்க்கிறவர் திருமூலர். அனுபவிப்பதும் அப்படித்தான். ஆனந்திப்பதும் அப்படித் தான். ஆனந்தத்தை வெளியிடுவதும் அப்படித்தான்.

சுற்றி வளைத்து அங்கே இங்கே என்று அலை பாய மாட்டார் திருமூலர்.

தவசத்தைத் தரையில் கொட்டுகிறோம். சிதறியே கொட்டு கிறோம். கோழியும் குஞ்சும் வருகின்றன. மண்ணோடும் கல்லோடுந்தான் கிடக்கின்றன தவசமணிகள்.

ஆனாலும் குஞ்சும் கோழியும் தவசத்தை மட்டும் பட், பட் என்று கொத்தி எடுக்கின்றன. கல்லோ, மண்ணோ அதில் கலப்பதில்லை.

திருமூலர் காரியமும் அப்படித்தான்.

ஆனந்தமயமானவன் இறைவன். அவனுடைய திரு விளையாடலாகிய உலகங்கள், பொருள்கள், காரியங்கள் அவ்வளவும் ஆனந்தந்தான். ஆனந்த மயமேதான்.

இந்த உண்மை எப்படிக் குதித்தோடிக் கொண்டு கவியாய் வருகிறதென்று பாருங்கள்.

*ஆனந்தம் ஆடரங்கு,*
*ஆனந்தம் பாடல்கள்,*
*ஆனந்தம் வாச்சியம்,*
*ஆனந்தம் பல்லியம்,*
*ஆனந்த மாக*
*அகில சராசரம்*
*ஆனந்தம்; ஆனந்தக்*
*கூத்துகந் தானுக்கே.*

*ஆடரங்கு - நடனமாடும் இடம். பொன்னம்பலம், பக்தர்களின் உள்ளந்தான் பொன்னம்பலம், வாச்சியம் - குழல் முதலிய இசைக் கருவிகள் பல்லியம் - பலவகைப் பட்ட தாளக் கருவிகள்.*

*குறிப்பு :* திருமூலருடைய அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து தாண்டவம் ஆடுகின்றன கவியில். கையையும் காலையும் வீசியபடியே தாண்டவம் ஆடுகின்றன.

## 7

இறைவனுடைய நடனம் - திருவிளையாடல் எங்கும், எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கின்றது. அதனால் புதிது புதிதாக வந்து கொண்டே இருக்கின்றன உலகங்களும் பொருள்களும்.

அப்படியே போய்க் கொண்டும் இருக்கின்றன. ஒன்றும் நிலைத்து நிற்பதில்லை.

நிலைத்து நிற்க ஆரம்பித்து விட்டால் புதிய பொருள் களின் வரத்து நின்று விடும்.

பிறகு எங்கே போவது விளையாட்டுக்கு. ஆனாலும் போகிற பொருளை நினைந்து உயிரினம் வருந்துகிறது மனிதர் களை எடுத்துக் கொண்டால் வருந்துவதையே ஒரு காரியமாக வைத்துக் கொள்கிறார்கள்.

நாமும் போகத்தானே போகிறோம் என்கிற உண்மை மனசில் படமாட்டேன் என்கிறது.

வேண்டாத இந்த மயக்கத்தை விரட்டி அடிக்கிறார் திருமூலர்.

மரணமாவது ஒன்றாவது. எல்லாம் வரவு செலவுக் கணக்குத்தான் என்கிறார் திருமூலர்.

இனி, கல்க்கோட்டையை விட வலுவானது உடம்பு. அதனுள் நூற்றுக் கணக்கான - ஏன் ஆயிரக்கணக்கான அம்சங்களில் இறைவனுடைய அருள் செயல்படுகிறது.

உடம்பின் ஒவ்வொரு அணுவையும் இயக்குகிறது திருவருள்.

இயக்குவதை நிறுத்திவிட்டால் பார்த்தல், கேட்டல், உண்ணல், உறங்கல் முதலிய எல்லாக் காரியங்களுமே மாயமாய் மறைந்து விடுகின்றன.

அதோடு சரி ஆட்டம்

*முப்பதும் முப்பதும்*
*முப்பத்(து) அறுவரும்*
*செப்ப மதிலுடைக்*
*கோவிலுள் வாழ்பவர்;*
*செப்ப மதிலுடைக்*
*கோவில் சிதைந்தபின்*
*ஒப்ப அனைவரும்*
*ஓட்டெடுத் தாரே!*

*முப்பது + முப்பது + முப்பத்து அறுவர் - மொத்தம் தொண்ணூற்றாறு தத்துவங்கள். எண்ணற்ற தத்துவங்கள் உடம்பில் நின்று செயல்படுகின்றன. அவற்றை ஒருவகையாகத் தொகுத்துத் தொண்ணூற்று ஆறு என்று சொல்லி இருக்கிறது. செப்ப மதில் உடைக் கோயில் -உடம்பு. செம்மையாக - வலுவாகக் கட்டப்பட்ட கோட்டை கொத்தளங்கோடு கூடிய கோயில் போன்றது உடம்பு.*

*சிதைந்தபின் - உடம்பின் கட்டுக்கோப்பு உலைந்து போனதும். அனைவரும் ஓட்டெடுத்தனர் - தொண்ணூற்று ஆறுபேரும் ஓடியே போனார்கள்.*

*குறிப்பு :* எவ்வளவு காலம் உடம்போடு சேர்ந்திருந்தன தத்துவங்கள். விட்டுப் பிரியும் பொழுது வருந்தவில்லையே சரி, நம்மை விட்டுப் பிரிந்து போகின்றனவே தத்துவங்கள் என்று உடம்பாவது வருந்தியதா. இல்லையே

மனிதர்கள் ஏன் பிரிவில் துயருற வேண்டும்? கன்னத்தில் அறைவது போல் அடித்துக்காட்டுகிறார் உண்மையை திருமூலர்.

## 8

**ம**ரணபயத்தை மனிதர்களிடமிருந்து எப்படியாவது விரட்டி விட வேண்டும் என்று ஆத்திரப்படுகிறார் திருமூலர்.

அதனால் மரணத்தின் கோர விகாரங்களை எல்லாம் எடுத்தெடுத்து மனிதர்கள் முன் வைக்கிறார்.

சிரிப்பும் கும்மாளமுமாக ஒரே ஆட்டபாட்டத்தோடு எடுத்தெடுத்து வைக்கிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

"என்ன தடபுடலாக வாழ்ந்தான் இவன். பெயரில்தான் எத்தனை சிங்காரங்கள். எத்தனை பட்டங்கள்? எத்தனை எத்தனை அடை மொழிகள் பயல் பெயருக்கு முன்னால்!"

அவ்வளவும் பறந்தோடி விட்டன. பிணத்தைத் தூக்கு, பிணத்தைக் குளிப்பாட்டு, என்கிற நிலைக்கு ஆளாகி விட்டான் பயல்.

*பேரினை நீக்கி*
*பிணம்என்று பேரிட்டு*

*மலை போல நின்று அதிகாரம் பண்ணினான். நொடிப் பொழுதில் சிலைபோல - மண் பொம்மைபோல ஆகி விட்டான்.*

ஆசாமிபோனதில் குடும்பத்தார்க்குக் கவலைதான் கவலையை மறக்கவும் செய்தார்கள், ஆனாலும் தெருக் காரர்கள், ஊர்க்காரர்கள் விடுவார்களா?

சாரை சாரையாக ஓடிவருகிறார்கள். கட்டிப் பிடிக்கிறார் கள் குடும்பத்தார்களை. குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுகிறார்கள்.

பிறகு என்ன செய்ய சேர்ந்து ஒப்பாரி வைக்க வேண்டியது தான்? ஊரே அல்லோலகல்லோலப் பட்டு விட்டது. இப்படியே போனால் சரிப்பட்டு வராது என்று வயது வந்தவர்கள் தீர்மானித்தார்கள்.

பிணத்தை எடுத்துப் பாடையில் வைத்தார்கள் இடு காட்டில் விறகு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஆசாமியை அதில் இறக்கி வைத்தார்கள். எருவைமேலே போட்டு நாலாபுறமும் சேர்த்து அணைத்தார்கள். அவை சரிந்து விடாதபடி ஈரமண்ணைக் குழைத்து அப்பியும் விட்டார்கள்.

பிறகு கொள்ளி வைக்கிறவன் வைத்தான்.

ராஜாதி ராஜன் பிடி சாம்பலாய் நீறுகிறான். எல்லாரும் ஆற்றில் குளத்தில் இறங்கினார்கள். ஒன்று இரண்டு, மூன்று என்று நீரில் மூழ்கினார்கள்.

கரையில் ஏறும் பொழுதே நெல் விலை என்ன இப்படிச் சரிந்து விட்டது. தங்க விலை போற போக்கைப் பார்த்தாயா?

"என்ன பஞ்சாயத்துப் பேசுகிறான் மேலத் தெரு சுப்பையா - என்றெல்லாம் பேச்சு அடிபட்டது."

நாதியே இல்லாமல் வெந்து நீறாகிறான் மனிதன்.

*இனிப் பாடல்*

*ஊரெலாம் கூடி*
*ஒலிக்க அழுதிட்டுப்,*
*பேரினை நீக்கிப்*
*பிணம்என்று பேரிட்டுச்,*
*சூரையங் காட்டிடைக்*
*கொண்டுபோய்ச் சுட்டிட்டு:*
*நீரினில் மூழ்கி*
*நினைப்பொழிந் தாரே!*

# 9

மரணபயத்தின் குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டுகிறார் திருமூலர்.

மரணத்தைப் பற்றி ஏன் பயப்படுகிறீர்கள். கொஞ்சிக் குலாவ வேண்டும் அதை என்று மக்களுக்கு தெளிவு படுத்துகிறார்.

ஆனாலும் மக்கள் அலறுகிறார்கள். மரணத்தைப் பற்றிய பேச்சு வந்தாலே நடுங்குகிறார்கள்.

காரணம் என்ன?

மக்களிடம் அன்பு இல்லை. எல்லாரும் ஒன்று என்கிற உண்மை தெரிந்தால் அல்லவா அன்புவரும்.

உடம்போடு ஒட்டிப் பிறந்ததால் நான் என்பது வந்து விட்டது. நான் தனி என்பதும் வந்து விட்டது. தாய், தந்தையர், சாதி, மதம், ஊர், உறவு எல்லாம் தனிமைக்குப் போதை ஊட்டு கின்றன. பட்டம் , பதவி, சொத்து, சுகம், மனைவி, மக்கள்,

பெயர், புகழ் எல்லாம் சேர்ந்து நான் என்னும் தனிமைக்குக் கோட்டை கொத்தளங்களாய் அமைகின்றன.

அதனால் தனிமை உணர்ச்சி தடிக்கிறது. ஒருமை உணர்ச்சி தேய்கிறது.

பிறகு எப்படி அன்பு ஊறும்? உண்மையும் இல்லை அன்பும் இல்லை வறண்ட பாலைவனமாயப் போய் விட்டான் மனிதன்.

அதனால் பயந்தாங் கொள்ளியாகிவிட்டான் மனிதன்.

உயிருள்ள மனிதர்களைக் கண்டே பயப்படுகிறவன் செத்த பிணத்தைப் பார்த்து எப்படித் தைரியமாக இருப்பான்.

பயம் ஒழிய வேண்டும் என்றால் நான் சமுதாயத்தின் பிரிக்க முடியாத அங்கம் என்கிற உண்மை விளங்கவேண்டும்.

உடனே அன்பு பெருகும். மனிதன் தெய்வமாவது அப்பொழுது தான்.

திருமூலர் சொல்கிறார்.

*அன்பும் சிவமும்*
*இரண்டென்பர் அறிவிலார்;*
*அன்பே சிவம்என்ப(து)*
*ஆரும் அறிகிலார்;*
*அன்பே சிவம்என்ப(து)*
*ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய்*
*அமர்ந்திருப் பாரே!*

*குறிப்பு :* அற்புதமான பாடல். ஒவ்வொரு பாடலும் மந்திரந்தான். திருமந்திரமே தான்.

X

# பெரியாழ்வார்

## குழந்தையும் தெய்வமும்

## 1

பாண்டியநாட்டில், திருவில்லிபுத்தூரில் அவதரித்தவர் பெரியாழ்வார்.

கல்விக்கடல், ஞானக்களஞ்சியம், பக்திப்பெருக்கு, ஆனந்தத்தின் தொனி என்னும் அத்தனை பெருமைகளுக்கும் உரியவர் பெரியாழ்வார்.

ஆனாலும் மிகமிக எளிமையாகவே வாழ்ந்தார். திரு வில்லிபுத்தூரில் வடபத்திரர் ஆலயத்தை ஒட்டி சிறு நந்தவனம் அமைத்தார். அதை ஒட்டியே குடிசையைக் கட்டி அதில் வாழ்ந்தார்.

தினந்தோறும் நந்தவனத்துக்கு நீர் இறைப்பது, பாத்தி கட்டுவது, களை பறிப்பது, மலர்கொய்வது; மாலை தொடுப்பது, பெருமாளுக்கு சூட்டி அலங்கரிப்பது; பார்த்துப் பார்த்து ஆனந்தபரவசத்தில் திளைப்பது இப்படி அடக்கத்தின் அவதாரமாக வாழ்ந்தார் பெரியாழ்வார்.

இனி! சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் என்று சைவ மரபில் ஒரு தொடர் உண்டு.

தம்முடைய மனதை (சிந்தனையை) இறைவனிடம் சேர்த்து வைத்தவர்கள் என்பது அதற்குரிய பொருளில்லை.

நான் என்பதைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு செயல்களைப் பார்க்கவேண்டும். சாதாரணச் செயலாக இருந்தாலும் சரி, அரிய செயலாக இருந்தாலும் சரி.

கடவுள் தத்துவம் ஒன்றுதான் எல்லாவற்றையும் நடத்து கிறது என்பது தெரியும்.

எப்படி நடக்கின்றன. உண்டாகின்றன, மாறுதல் அடை கின்றன, மறைகின்றன அடடா, இவ்வளவுக்கும் மூல சக்தி ஒன்று இருக்கிறதே என்று யோசிக்க யோசிக்க நான் என்பது கரைந்துவிடும்.

எல்லாம் இறைவனுடைய செயல் (லீலாவிநோதம்)தான் என்பது தெரியும். அது மனசில் ஊன்றி நிற்கும். அப்பொழுது மனம் குழப்பம் நீங்கி இறைத் தத்துவமாய் மிளிரும்.

பூவில் மணம் நிறைந்திருப்பது போல மனம் முழுவதும் கடவுள் தத்துவமாய் நிறைந்திருக்கும்.

சித்தத்தைச் சிவன் (இறைவன்) பால் வைத்தல் என்பது அதுதான்.

பெரியாழ்வார் பரமபக்தர். அவர் ஒரு நாள் சூரியன் உதிக்கும் நேரம் ஒரு செடியில் துளிர்த்தல், தளிர்த்தல், அரும்புதல், விரிதல், மலர்தல், காய்த்தல், பழுத்தல் ஆகிய அவ்வளவையும் பார்த்தார். ஒவ்வொரு அணுவுக்குள்ளிருந் தும் இறைவன் அல்லவா நவநவமாக வெளிப்படுகின்றான் என்பதைக் கண்டுகொண்டார்.

அவ்வளவும் திருமாலின் (விஷ்ணுவின்) திருவிளை யாடல்தான் என்பது மனசில் அமர்ந்து நிறைந்துவிட்டது பெரியாழ்வாருக்கு. அவ்வளவுதான். சித்தத்தைத் திருமாலிடம் (இறைவனிடம்) வைத்த சித்தராகிவிட்டார் பெரியாழ்வார்.

அவருக்கு அதனால்தான் விஷ்ணு சித்தர் என்று பெயர். உண்மையை நேருக்கு நேராக ஆழ்வார் போல் பார்க்க வேண்டும். பார்த்துவிட்டால் போதும். ஆனந்த மயந்தான். பிறகு பட்டம், பதவி, அதிகாரம், எதிலும் மனம் ஓடாது.

நந்தவனம், புஷ்பம், பூக்குடல், பெருமாள், மாலை சார்த்தல் இவை போதும்.

அப்படி நிறைந்து நின்ற பெரியவர் பெரியாழ்வர். இனி அவருடைய பாடல்களில் சில :

## *குழந்தையும் தெய்வமும்*

தாயின் வயிற்றுள் தவமிருந்து குழந்தையாய் அவதரிக் கிறது கடவுள்தான்.

கவிஞனுடைய அனுபவ உணர்ச்சியாய் ஊறிக் கவிதையாக அவதரிப்பதும் கடவுள்தான்.

பெரியாள்வார் பாசுரம் ஒவ்வொன்றும் திருமாலின் திரு அவதாரமேதாம். ஆழ்வார்கள் பன்னிருவர், அவர்களில் மரியாதைக்கும் வணக்கத்துக்கும் உரிய மிக்க சிறப்புடைய ஒருவர்தாம் பெரியாழ்வார்.

அழகான பொருள்கள் உலகில் எத்தனையோ இருக் கின்றன. ஒரு புஷ்பத்தை எடுத்துக் கொண்டால் "அழகு கொலு விருக்கும் கோயில்" என்று சொல்லலாம் அதை.

நன்றாகப் பூத்து விரிந்த செந்தாமரை மலரையோ வெண் தாமரை மலரையோ பார்க்கிறோம். அதன் அழகில் சொக்கிப் போகிறோம். சில விநாடிகளாவது நாம் நம்மை மறந்து விடுகிறோம்.

அழகுக்கு அப்படி ஒரு சக்தி – 'நான்' என்பதைச் சுருட்டி மடக்குகிற சக்தி – இருக்கிறது.

இனி, அழகும் இளமையும் பூத்துக் குலுங்கும் ஒரு பெண்ணை அவள் காதலன் பார்க்கிறான். அவளும் அவனை ஆசையோடு பார்க்கிறாள். அவ்வளவுதான்; பையன் அப் படியே சொக்கி மயங்கி விடுகிறான்.

மெய், வாய், கண்,மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும், அவற்றின் செயல்களும் அப்படியே ஒடுங்கிவிடும் பையனிடம்.

அரிய யோக சாதனங்களின் மூலம் சித்தத்தை, ஒரு முனையில் நிற்க வைக்கும் ஞானிகளுக்குக் கூட புலன் உணர்வுகள் அப்படியும் இப்படியுமாகத் திமிறும். பையன் விசயத்தில் அப்படி எதுவுமே இல்லை.

கண்கள் அவளைப் பார்க்கும். வாய் பேசும். செவி கேட்கும் மூக்கோ வாசனையை முகரும். கை அவளைத் தொட்டுத் தொட்டுச் சுகம் காணும். ஆனாலும் அவனுடைய ஐம்புலன்களும் செயலற்றே கிடக்கும்.

காரணம் அங்கே 'நான்' என்பது இல்லை. அது அப்பொழுது கரைந்து விடுகிறது.

இனி, காதலன், காதலி, உற்றார், உறவினர், வேண்டியவர், வேண்டாதவர் எல்லாரையும் ஒரேடியாய் மயக்குகிற அற்புதம் ஒன்றிருக்கிறது. அதுதான் குழந்தை.

குழந்தையைப் பார்க்கப் பார்க்க கல் நெஞ்சும் கரைந்து விடும். குழந்தையின் பொக்கை வாயும் புன் சிரிப்பும் பட்டுப் போன்ற பாதங்களும் பிஞ்சு விரல்களும் நீல மணி போன்ற கண்களும் பார்ப்பவர்களை உருக்கி விடும்.

குழந்தை படுத்துத்தான் கிடக்கும். ஆனாலும் அது கையை உதறும். காலை உதறும். துள்ளி எழுவதற்கு அப்படியும் இப்படியும் புரளும். கூர்ந்து பார்க்கும். வாய் திறந்து சிரிக்கும். காலின் பெருவிரலை கை விரலால் பிடிக்கும். குப்புற விழும். மல்லாந்து படுக்கும். எல்லாம் அற்புதமாக இருக்கும்.

குழந்தையைப் பார்த்து அனுபவிக்கிறவர்களுக்கு நேரம் போவதே தெரியாது. அவசரமாய் டிக்கட் எடுக்கப் போகிறவர்கள் கூட அதை மறந்து விடுவார்கள். ரயில் நிலையம் பஸ் நிலையம் சினிமா கொட்டகை ஒன்றுமே ஞாபகத்தில் நிற்காது.

குழந்தையைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கும். "இது எங்கிருந்து வந்தது. எப்படி வந்தது?" என்று யோசிக்க யோசிக்க புளகாங்கிதமாக இருக்கும்.

“கடவுள் கொடுத்த செல்வம், அவர் கொடுத்த செல்வம், அவர் கொடுத்த வரப்பிரசாதம், தெய்வம் எடுத்த திரு அவ தாரம்!” என்று மனம் தெளியும்.

ஒரு பெண் கர்ப்பவதியாய் இருக்கிறாள். அவளைப் பார்க்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் இதயத்தில் ஒரு பரிவு உண்டாகும். “பிள்ளையும் தாயும் பழுதில்லாதபடி செளக்கிய மாய் இருக்க வேண்டும்” என்று அருள் உணர்வு சுரக்கும்.

இப்பொழுது பெண்ணானவள் தாயாகி விட்டாள். குழந்தை பிறந்து விட்டது. ‘குவா, குவா’ என்று குழந்தை சத்தம் போடுகிறது.

விபரம் தெரிந்தவுடன் எல்லாரும் ஓடி வருவார்கள். நாலா திசையிலிருந்தும், ஓடி வருவார்கள். பாவாடை கட்டிய சிறுமிகளிலிருந்து அறுபது எழுபது வயதைத் தாண்டிய மூதாட்டிகள் வரை ஒவ்வொருவரும் ஓடி வருவார்கள்.

உடைமாற்றம், அலங்காரம் ஒன்றையும் கவனிக்க மாட்டார்கள். தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்தவர்கள் கூட, மாவை வழித்துப் போடாமல் அப்படியே போட்டுவிட்டு ஓடி வருவார்கள்.

வேகமாக ஓடி வரும்பொழுது இன்னொரு பெண் மேல் மோதுவதும் உண்டு. குழந்தையைப் பார்க்கப் போகிற ஆனந்தத்தில் பெண்கள் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொள்வதும் உண்டு. கையில் உள்ள வாசனைப் பொடியும் எண்ணெயும் சிந்தி சகதி ஆவதும் உண்டு. அதில் வைத்த கால் வழுக்குவதும் உண்டு.

இந்த உல்லாசத்தையும் எக்களிப்பையும் நெடுகிலும் மக்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள். பெயர் சூட்டல், காது குத்தல், முடி எடுத்தல் என்றெல்லாம் விழா எடுத்தே அனு பவித்து வந்திருக்கிறார்கள்.

கவிஞர்களும் ஆனந்தமாய் அனுபவித்திருக்கிறார்கள். பக்தர்களும் ஞானிகளும் அப்படியே அனுபவித்து வந்திருக் கிறார்கள்.

பரமபக்தரும் ஞானியுமான பெரியாழ்வார் ஆனந்த மயமாய் அனுபவிக்கிறார். ஒரு பெண் தாயாகிற அற்புதம் ஒன்று, இறைவனே குழந்தையாக அவதரித்தான் என்னும்படி குழந்தை வந்த அற்புதம் ஒன்று, உற்றாரும், உறவினரும் துள்ளி மகிழும் அற்புதம் ஒன்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் பெரியாழ்வார்.

வடமதுரையில் வசுதேவருக்கும், தேவகிக்கும் மகனாகப் பிறந்து ஆயர்பாடியில் யசோதையிடம் வளர்ந்த கிருஷ்ண பகவானே இங்கே குழந்தையாக வந்து அவதரித்து விட்டான் என்று அனுபவிக்கிறார் பெரியாழ்வார்.

ராமேஸ்வரம் போகிற வழியில் இருக்கிறது மானாமதுரை. மானா மதுரைக்கு வடகிழக்கே இருபத்து ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது திருக்கோட்டியூர்.

வைஷ்ணவர்களுக்கு மிக முக்கியமான புண்ணிய ஸ்தலம் திருக்கோட்டியூர்.

தெய்வீகமான மூல மந்திரத்தைக் கண்டு தெரிந்த உடனேயே எல்லாரும் இதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற தயாளத்தில் கோபுரத்தில் ஏறிநின்று அந்த மந்திரத்தை ராமானுஜர் முழங்கினார். அந்த இடம்தான் இந்தத் திருக்கோட்டியூர்.

அதே திருக்கோட்டியூர் ஆயர்பாடியில் கிருஷ்ண பகவான் வந்து அவதரித்து விட்டான் என்று அனுபவிக்கிறார் பெரியாழ்வார்.

திருக்கோட்டியூர், ஆயர்பாடி, கிருஷ்ண பகவான் ஆயர்கள் எல்லாமே குழந்தையை அனுபவிக்கும் அனுபவத் தில் வருகிற ஆனந்த சொரூபங்கள்தாம்.

தாயின் ஆனந்தமயமான பார்வையோடு கவிஞர்களும் பக்தர்களும் சேர்ந்து பார்க்கிறார்கள்.

அப்படிப் பார்ப்பதால் சாதாரணக் குழந்தை தெய்வம் ஆகிவிடுகிறது.

இனிப் பாடலைப் பார்ப்போம்

குழந்தை பிறந்துவிட்டது என்று கேள்விப்பட்டார்களோ இல்லையோ, பெண்கள் தங்கள் காரியங்களை அப்படி அப்படியே விட்டுவிட்டு ஓடி வருகிறார்கள்.

பாடல்கள் கலிவிருத்தம் என்னும் இனத்தைச் சேர்ந்தவை.

தனா தன்னன
தன்னன தானன

*வண்ண மாடங்கள்*
*சூழ்திருக் கோட்டியூர்*
*கண்ணன் கேசவன்*
*நம்பி பிறந்தினில்*
*எண்ணெய் சுண்ணம்*
*எதிர்எதிர் தூவிடக்*
*கண்ண முற்றம்*
*கலந்தள(று) ஆயிற்றே!*

*குறிப்பு :* வரலாறு என்று ஒன்று இருக்கிறது. கலை, இலக்கியம், பக்தி, விவசயாம், வாணிகம், போர், காதல், ஞானம், விஞ்ஞானம் எல்லாவற்றினுடைய வரவு செலவும் அதில்தான் அடக்கம்.

---

*வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் - அழகிய மாட மாளிகைகள் நிறைந்த திருக்கோட்டியூர், கண்ணன் பிறந்தினில் கிருஷ்ண பகவானே அவதரித்து விட்டான். அவன் அவதரித்த அந்த வீட்டில், சுண்ணம் - வாசனைப்பொடி, கண்ண முற்றம் விசாலமான முற்றம் முழுவதும், கலந்து அளறு ஆயிற்று எண்ணெயோடு வாசனைப்பொடி சேர்ந்து தரையில் விழுந்ததால் எங்கும் ஒரே சேறும் சகதியும் ஆகிவிட்டது.*

மனிதன் என்றால் வரலாற்றின் அத்தியாயம் என்று பொருள். வரலாறு என்னும் மாகாவியத்தின் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு எழுத்தையும் மனிதனே விதியின் கையைப் பிடித்து எழுதுகிறான்.

அப்படிப்பட்ட மனிதன் பிறக்கிறான் என்றால் சாதாரண காரியமா? அவதார மகிமைதான். அதை மேளதாள முழக்கத்தோடு வரவேற்கிறது தமிழ். கைதட்டி வரவேற்கும் தமிழின் உல்லாசம் தாளத்திலும் இசையிலுமாய்ச் சேர்ந்து கிடக்கிறது. பாடப்பாட அது தரிசனம் கொடுக்கும்.

நான் முந்தி, நீ முந்தி என்று பெண்கள் ஓடி வருகிறார்கள். குழந்தை பிறந்த வீட்டின் உள்ளும், வெளியிலும் ஒரே நெரிசல். கூட்டம் கூடி விட்டதால் குழப்பம் வந்து விடுகிறது.

ஆவலோடு குழந்தையை எடுத்துப் பெண்டுகள் அனுபவிக்கிறார்கள். மற்றப் பெண்களும் குழந்தையை எடுத்துப் பார்க்கத் துடிக்கிறார்கள்.

புதிதாக வந்த பெண்கள் தாயைப் பார்க்கிறார்கள். தாயின் பக்கம் குழந்தையைக் காணவில்லை. "எங்கே போய் ஒளிந்து கொண்டான். உறியில் இருக்கும் வெண்ணெயைத் தேடிப் போய்விட்டானா?" என்றெல்லாம் நொடியும் மடக்குமாய் வருகிறது பேச்சு.

பேச்சின் உல்லாசத்தில் எல்லாருக்கும் ஒரு கிளு கிளுப்பு. அப்படியே சந்தோஷ மிகுதியில் ஒருவரை ஒருவர் அணைத்துத் தழுவிக் கொள்கிறார்கள். குழந்தையை எடுத்து ஆலிங்கனம் செய்கிற பாவனையில் பெண்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்கிறார்கள்.

முற்றத்தில் இளைஞர்களின் ஆட்டமும் பாட்டமும் ஒரே அமர்க்களந்தான்.

*ஓடு வார்விழு*
*வார், உகந்(து) ஆலிப்பார்,*

*நாடு, வார், நம்*
*பிரான் எங்குத் தான்என்பார்,*
*பாடு வார்களும்*
*பல்பறை கொட்டநின்(று)*
*ஆடு வார்களும்*
*ஆயிற்றப் பாடியே!*

குழந்தை பிறந்த உடன் தெருவில் உள்ளவர்கள் பக்கத்துத் தெருவில் உள்ளவர்கள் எல்லாரும் அவசரம் அவசரமாகக் வந்தார்கள். ஆரவாரமாய் இருந்தது வீடு.

குழந்தை பிறந்து இரண்டு நாள். மூன்று நாள் என்று ஆகிறது. பக்கத்து ஊர்களில் உறவினர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு குழந்தை பிறந்த விபரம் தெரிகிறது.

குடும்பத்தோடு அவர்கள் புறப்பட்டு வருகிறார்கள். மூட்டை முடிச்சுகளோடு புறப்பட்டு வருகிறார்கள். வெற்றிலைக் கட்டு, பழக்குலை, சர்க்கரைப் பொங்கல் இப்படி எதை எதையோ அவர்கள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

மகனைப் பார்க்க வேண்டும் பேரனைப் பார்க்க வேண்டும், மருமகனைப் பார்க்க வேண்டும், தம்பியைப் பார்க்க வேண்டும், மைத்துனனைப் பார்க்க வேண்டும் என்னும் ஆவலோடு வருகிறார்கள்.

---

*(ஓடுவர் விழுவர் - வருகிற வேகத்தில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து சாய்கிறார்கள். உகந்து ஆலிப்பர் - சந்தோஷத்தில் தழுவிக் கொள்கிறார்கள். நாடுவார் - குழந்தையை எடுத்துப் பார்க்கத் துடிக்கிறார்கள். நம்பிரான் எங்குத்தான் என்பார் - குட்டித் தெய்வம் எங்கே போய் ஒளிந்து கொண்டது என்று ஆவலோடு கேட்கிறார்கள். குழந்தை பிறந்த ஆயர்பாடியில் பாட்டும் ஆட்டமும் ஜாம் ஜாமென்று இருக்கின்றன)*

பிறந்த குட்டிப் பாப்பாவை வைத்து எதை எதையோ அவர்கள் உல்லாசமாகப் பேசி வருகிறார்கள். உல்லாசத்தில் சிரிப்பும் கும்மாளமும் கட்டிப் புரள்கின்றன.

விரிந்த முல்லை மலர்களைப் போல வெள்ளை வெளேர் என்று அப்பொழுது பற்கள் ஜொலிக்கின்றன.

பனையோலை, தென்னை ஓலை கொண்டு முடைந்த பாயை தலையில் போட்டிருக்கிறார்கள். வெயில் மழை இரண்டுக்கும் உபயோகம் அந்த ஓலைப்பாய்.

கையில் கம்பும் வைத்திருக்கிறார்கள். கோடாளி போன்ற கத்தியும் வைத்திருக்கிறார்கள்.

உற்றார், உறவினர்களாகிய ஆயர்கள் இப்படி வந்தார்கள். தலையில் வைத்திருந்த மூட்டையையும் தோளில் போட்டிருந்த நெய் உறியையும் எடுத்துக் குழந்தை முன் வைத்தார்கள். ஆரவாரித்து மகிழ்ந்தார்கள்.

பிறகு தலையில் போட்டு உடம்பை மூடி இருந்த ஓலைப் பாயை எடுத்துத் தரையில் போட்டார்கள். வரிசையாக உட்கார்ந்தார்கள். சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும், ததியோதனமுமாக விருந்துண்டார்கள்.

குழந்தையை வாழ்த்தி வாழ்த்தி விருந்துண்டார்கள்.

*கொண்ட தாள் உறி*
*கோலக் கொடுமழு*
*தண்டி னர், பறி*
*ஓலைச் சயனத்தர்,*
*விண்ட முல்லை*
*அரும்பன்ன பல்லினர்,*
*அண்டர் மிண்டிப்*
*புகுந்துநெய் ஆடினார்!*

# 2

பிரசவத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தாய் வீட்டார் தங்கள் வீட்டுக்குப் பெண்ணை, அழைத்துப் போவார்கள். பிரசவம் அங்கேதான்.

இரண்டு மூன்று பிரசவம் ஆனபின் புகுந்த இடத்தி லேயே பிரசவம் ஆவதும் உண்டு. அப்பொழுதும் பெண்ணின் தாய் - குழந்தையின் பாட்டி அங்கு முன் கூட்டியே வந்து விடுவாள்.

பாட்டியம்மாள்தான் தாய்க்கும் குழந்தைக்கும் உற்ற துணை. அவள்தான் பாதுகாவல்.

பிரசவ வீட்டில் தாய்க்கும் குழந்தைக்கும் பாட்டியம்மாள் செய்கிற காரியங்களையும், செய்முறைகளையும் பக்குவங் களையும் பார்த்தால் அதிசயமாக இருக்கும்.

என்ன துல்லியம், என்ன கணக்கு, என்ன பொறுமை, என்ன அடக்கம், எவ்வளவு ஞாபகசக்தி என்று வியந்து உருகி விடுவோம்.

அத்தனையும் ஒழுங்காக நடக்க வேண்டும். நெறி முறையோடு நட க்க வேண்டும். மஞ்சாடி கூடப் பிசகக் கூடாது.

பொறுப்பில்லாமல் போய்விட்டால் தாயும் இல்லை, குழந்தையும் இல்லை. மனுச வர்க்கத்தின் கதையே பிறகு அப்படி அப்படித்தான்.

---

*(உறி - நெய், பால் ஊற்றி, வைக்கும் கலையம். கொண்டதாள் உறி - கலையம் வைத்திருக்கிற கயிற்றுப் பின்னலோடு தோளில் போட்டு வந்தனர் ஆயர். மழு - கோடரி. கோலம் - அழகு. தண்டு - கம்பு, விண்ட - விரிந்த, அண்டர் - ஆயர், இடையர், மிண்ட நெருங்கி இருந்து, நெய் ஆடினர் - விருந்துண்டனர்)*

ஒவ்வொரு நாளும் குழந்தையை எடுத்துக் குளிப் பாட்டுவாள் பாட்டியம்மாள். அது ஒன்றைப் பார்த்தாலே போதும். பொறுப்பையும் நிதானத்தையும் எப்படிப் பெண் பாலரிடம் கொண்டு போய் ஒப்படைத்திருக்கிறது இயற்கை என்பது தெரியவரும்.

குழந்தையை எடுத்துக் கொண்டு அங்கணத்துக்குப் போவாள். சிறு பலகை ஒன்றில் உட்கார்ந்து கொள்வாள். தன் இரண்டு கால்களையும், நீட்டி ஒன்று சேர்த்துக் கொள்வாள். நீட்டிய கால்களில் குழந்தையை உட்கார வைப்பாள். குழந்தை யின் தலையில் எண்ணெய் வைத்து மெல்லத் தேய்ப்பாள். பிறகு குழந்தையின் கால்களையும், கைகளையும் நீட்டி நீவுவாள். எண்ணெய் வைத்துத் தேய்ப்பாள். மார்பு, முதுகு எங்கும் எண்ணெய் வைத்துத் தேய்ப்பாள்.

வெது வெது என்றிருக்கும் இளம் சூட்டு வெந்நீரை இரண்டு மூன்று செம்பு எடுத்து விடுவாள். அரைத்து வைத்த மஞ்சளைக் குழந்தையின் முகத்திலும் உடம்பிலும் பக்குவ மாய் பூசுவாள். வெந்நீரை விட்டுக் குளிப்பாட்டுவாள்.

கண்ணைத் துடைப்பாள். காதைத் துடைப்பாள், குழந்தை யின் மூக்கிலிருந்து சளி வெளிவரும்படி மூக்கைப் பிடித்து சிந்தி விடுவாள்.

இவ்வளவையும் குழந்தை எப்படித் தாங்கும். விம்மி விம்மி அழும். ஆனால் வெந்நீரை விடவிட அழுகை குறையும்.

குழந்தையைத் தாய் அணைத்துப் படுப்பாள். குழந்தை யின் கோபம் எல்லாம் ஆறிவிடும். பிறகு குழந்தையைத் தடவிக் கொடுத்தபடி யே அதன் கண்களை உற்றுப்பார்ப்பாள். குழந்தையும் தாயை ஆவலோடு பார்க்கும்.

அப்புறமும் குழந்தையைச் சேர்த்து அணைத்துக் கொள்வாள். குழந்தை கையையும் காலையும் உதறும்.

தாயைப் பார்த்து வாய் திறந்து சிரிக்கும் குழந்தை. அந்தப் பொக்கை வாய்க்குள்ளிருந்து என்னென்னவெல்லாமோ தெரியும். குழந்தை சிரிக்கக் சிரிக்க தாய்க்கு ஒரே அதிசயம். ஆனால் குழந்தையின் சிரிப்பில் என்னவெல்லாமோ தெரியும்.

தன்னையே அந்தச் சிரிப்பில் தாய் பார்த்துப் பரவசப் படுவாள். அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் ஒருசேர எதிரில் வந்து நின்றால் எப்படிப் பெருமிதம் உண்டாகும். அப்படி ஒரு பெருமிதத்துக்கே ஆளாவாள் குழந்தையின் சிரிப்பில் தாய்.

*கையும் காலும்*
*அமுக்கிக் கடாரநீர்*
*பைய ஆட்டிப்*
*பசுஞ்சிறு மஞ்சளால்*
*ஐய நாவழித்*
*தாளுக்குஅங் காந்திட*
*வையம் ஏழும்கண்*
*டாள்பிள்ளை வாயுளே!*

## 3

குழந்தை பிறந்து பதினோரு நாட்கள் ஆகிவிட்டன. விருந்தினர்கள் வந்து வந்து போகிறார்கள். தாய்க்கும் குழந்தைக்கும் மகிழ்ச்சித் தாளவில்லை. ஒருவரோடு ஒருவர் பார்வையாலேயே பேசிக் கொள்கிறார்கள். என்னென்னவோ பேசிக் கொள்கிறார்கள்.

---

*(கடாரநீர் - கொப்பரை அல்லது அண்டாவில் இருக்கிற நீர். பைய ஆட்டி - தண்ணீரை எடுத்து மெல்ல மெல்ல விட்டு நீராட்டி. ஐய - பக்குமாக நோவாமல் இதமாக. நாவழித்தாளுக்கு. நாக்கில் உள்ள கோழையை வழித்து எடுத்தாள் பாட்டி. அவளிடம் வாயைத் திறந்து அன்போடு காட்டியது குழந்தை. அங்காந்திட - வாயைத் திறக்க. அப்புறம் தாயிடம் வந்து சிரித்து மகிழ்ந்தது. குழந்தை சிரிக்கச் சிரிக்கத் தாயும் சேர்ந்து சிரித்தாள்.*

பன்னிரெண்டாவது நாளும் வந்து விட்டது. குழந்தைக்கு இன்று பெயர் வைக்க வேண்டும். உற்றார் உறவினர் எல்லாரும் கூடி இருக்கிறார்கள்.

குழந்தையை நீராட்டி அலங்காரம் பண்ணி இருக்கிறது குழந்தை படுத்திருக்கிறான். தவழ்வதற்கு உன்னி உன்னி முண்டுகிறான்.

குழந்தையை ஒவ்வொருவராகக் கையில் எடுக்கிறார்கள். பாட்டன்மார், பாட்டிமார், மாமன்மார், மாமிமார், தகப்பன், தாய் என்று கைமாறிக் கைமாறிப் போய் கொண்டிருக்கிறான் பையன்.

கோவர்த்தனம் என்னும் மகாபர்வத்தையே கையில் எடுத்து குடை போலத் தூக்கிப்பிடித்து கண்ணனைத்தான் அதே கண்ணனைத்தான் ஆயர்கள் எடுத்து எடுத்துக் கொடுத்தார்கள். ஊஞ்சலாட்டுவது போல் ஆட்டி மகிழ்ந்தார்கள்.

இப்படியாக நடந்தது பெயர் சூட்டுவிழா

*பத்து நாளும்*
*கடந்த இரண்டாம் நாள்*
*எத்தி சையும்*
*சயமரம் கோடித்து*
*மத்த மாமலை*
*தாங்கிய மைந்தனை*
*உத்தா னம்செய்து*
*உகந்தனர் ஆயரே!*

# 4

**கு**ட்டிப் பாப்பா - கண்ணன் பிறந்து ஆறு மாதங்கள் ஆகி விட்டன. இப்பொழுது பெற்றோர் வீட்டிலிருந்து குழந்தையும் தாயும் சொந்த வீட்டுக்கு வந்து விட்டார்கள்.

இனிமேல், "உன்பாடு, உன் பிள்ளை பாடு" என்று செல்லமாக அலுத்துச் சலித்துச் சொல்லிவிட்டு பாட்டியும் மாளும் அவள் குடும்பத்தாரும் அவர்கள் ஊருக்குப் போய் விட்டார்கள்.

அங்கொரு சமயம் இங்கொரு சமயம் என்று தகப்பனான வன் பிள்ளையைப் பார்க்கிறது உண்டு. கொஞ்சுவதும் உண்டு. விளையாடுவதும் உண்டு. ஆனால் குழந்தைக்கு தாய்தான் துணை. தாய்க்குக் குழந்தைதான் துணை.

குழந்தைக்கு இப்பொழுது வயது ஒன்றாகிவிட்டது 'தளதள' என்று வளர்ந்து வருகிறான் கண்ணன்.

குறும்பும் சேர்ந்தே வளர்கிறது. சேட்டையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்கிறது. படு சுட்டியாய் 'துறுதுறு' என்று ஆடுகிறான் பையன்.

'கண்' எங்கே என்று கேட்டால் போதும் ஒரு சிமிட்டுச் சிமிட்டி கண்ணைக் காட்டி விடுவான். மூக்கு எங்கே என்றால் ஒரு சுருக்குச் சுருக்கிக் காட்டுவான். வாய் எங்கே என்றால் போதும், அகலத் திறந்து காட்டுவான். உதடு எங்கே என்றால் குவித்துக் காட்டுவான்.

அம்மாவுக்குக் கண் எங்கே இருக்கிறது என்றால் வெட்கப்பட்டு குனிந்து தன்னையே காட்டிவிடுவான்.

இவ்வளவையும் எளிதில் படித்து விட்டான். நன்றாக ஞாபகத்திலும் வைத்துக் கொண்டான்.

குறும்பும் சேட்டையும் இவ்வளவோடு நிற்கவில்லை. தாயைப் பாடாய் படுத்துகிறான். ஒருவேலையையும் ஒழுங் காகப் பார்க்க விடமாட்டேன் என்கிறான்.

தண்ணீர்த் தொட்டியில் கையை விடுகிறான். கொதிக்கும் குழம்புச் சட்டிக்குள்ளும் கையைவிட நீட்டுகிறான்.

என்ன செய்வாள் தாய் பாவம்.

ஒவ்வொன்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறாள்.

ஒருநாள் அவளுக்கே கோபம் வந்து விட்டது. சமையல் காரியம் ஒன்றையும் பார்க்கவிடாமல் சண்டித்தனம் பண்ணினான் பையன்.

உப்பை அள்ளிக் காய்ச்சிய பாலில் போட்டான். மோரை எடுத்துக் குழம்புச் சட்டியில் ஊற்றினான். எண்ணெயைத் தண்ணீரில் கொட்டினான். தண்ணீரை நெய்யில் ஊற்றினான்.

ஒரு கயிற்றை எடுத்தாள். குழந்தையின் அரைஞாண் கயிற்றோடு சேர்த்துக் கட்டினாள். அதை அப்படியே கொண்டு வந்து வாசல் நிலையின் கொண்டியில் போட்டு முடிந்து விட்டாள்.

மரப்பாச்சி, கொலுப் பொம்மைகளை அள்ளி வந்து குழந்தையின் முன் போட்டு விட்டாள்.

விளையாட்டுச் சாமான்கள் ஒவ்வொன்றையும் எடுத்து மூலைக்கு ஒன்றாக விட்டெறிந்தான் பையன். எறிந்த சாமான்களை எடுப்பதற்கு அப்படியும் இப்படியும் தவழ்ந்து பார்த்தான். சில பொருள்கள் சிக்கின. சில பொருள்கள் சிக்கவில்லை.

கையில் சிக்கவில்லை என்றவுடன் பையனுக்கு ஆத்திரம் வருகிறது. அழுகையே வந்துவிடுகிறது. கத்துகிறான் கதறுகிறான். தரையில் குனிந்து முட்டுகிறான். சாமான்களை எடுத்து குழந்தையின் முன் போடுகிறாள் தாய். அவை மறுபடியும் சிதறுகின்றன.

அலுப்பு வருகிறவரை இப்படித்தான். சிதறுவதும், சேர்ப்பதும், அம்மா வந்து எடுத்து வைப்பதும் இப்படியாக இருக்கிறது.

குழந்தை அலுத்துப் போய்விட்டது. அப்படியே செங்கல் தரையில் படுத்து விட்டான் பையன். தலையணை ஒன்று எடுத்து வந்து குழந்தைக்குத் தலைக்கு வைத்தாள் தாய்.

இரண்டு முழந்தாள்களையும் தரையில் ஊன்றி, தலையணையில் முகத்தை வைத்து தூங்கிவிட்டான் பையன்.

இந்தக் காட்சியைப் பக்கத்தில் நின்று பார்த்துப் பார்த்து அனுபவித்தாள் தாய். அந்த வேளையில் அதே தெருவில் இருக்கிற சிநேகிதி ஒருத்தி அங்கு வந்தாள். அவளும் குழந்தை படுத்து உறங்குகிற கோலத்தைப் பார்த்து அனுபவித்தாள்.

பிறகு தாயிடம் கேட்டாள், "ஏனடி இவ்வளவு இளைத்து விட்டாய், துரும்பாய்ப் போய் விட்டாயே" என்று.

அதற்குத் தாய் சொல்லிய பதில் இதுதான் :

"இந்தப் பிள்ளையை வைத்துக் கொண்டு இளைக்காமல் என்ன செய்வது? இவன் அட்டகாசத்தைத் தாங்க வேண்டுமானால் இரும்பில்தான் பிரமதேவன் என்னைப் படைக்க வேண்டும்.

அரை நாழிகையாவது சும்மா இருக்கானா? இல்லை, அரை நாழிகையாவது தொட்டிலில் கிடந்து தூங்குகிறானா?

*கிடக்கில் தொட்டில்*
*கிழிய உதைத்திடும்*
*எடுத்துக் கொள்ளில்*
*மருங்கை இறுத்திடும்*
*ஒடுக்கிப் புல்கில்*
*உதரத்தே பாய்ந்திடும்*
*மிடுக்கி லாமையால்*
*நான்மெலிந் தேன்நங்காய்!*

*(கிடக்கில்... உதைத்திடும் - தொட்டிலில் படுக்கப் போட்டால் போதும். நாலே மிதிதான் தொட்டில் வேட்டி தும்பு தும்பாய்க் கிழிந்துவிடும். எடுத்துக் கொள்ளில் - தூக்கம் வரவில்லை போலும் என்று எடுத்து இடுப்பில் வைத்தாலோ, மருங்கை இறுத்திடும் குறுக்கெலும்பே ஒடிந்துவிடும் போல இருக்கிறது. காலாலும் கையாலும் அப்படி அடிக்கிறான். மருங்கு - இடுப்பு. ஒடுக்கிப்புல்கில் - மார்போடு*

*சேர்த்து அணைத்து வைத்தாலோ, உதரத்தே பாய்ந்திடும் - பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி மூர்க்கத்தனமாக வயிற்றில் நைநை என்று எத்துகிறான். உதரம் - வயிறு. மிடுக்கு இலாமையால் - அடியையும் மிதியையும் தாங்க வலுவில்லை. நான் மெலிந்தேன் - தேகம் இற்றுப் போய்விட்டது. நங்காய் சகியே!)*

*குறிப்பு :* குழந்தைகளை வளர்ப்பதில் மட்டும் அல்ல, குழந்தைகளை அனுபவிக்கிற காரியத்திலும் பெண்கள்தாம் அதிகாரிகள். ஆண்கள் வழிவிட்டு விலகி நிற்க வேண்டியது தான்.

கவிஞர்களை எடுத்துக் கொண்டால், அதில் ஆண்களும் உண்டு. பெண்களும் உண்டு. அவர்கள் யாராக இருந்தாலும் குழந்தைகளை நன்றாக அனுபவிப்பார்கள் தாய் போலவே அனுபவிப்பார்கள்.

ஆனால் உண்மையில் அவர்கள் கவிஞர்களாக இருக்க வேண்டும்.

பெரியாழ்வார் மாசற்ற ஞானி. பரம பக்தர். தெய்வீகக் கவிஞர். ஆகவே தாய் அனுபவிப்பது போலவே குழந்தையை அனுபவிக்கிறார்.

பெரியாழ்வாரின் அனுபவத்தைத் தாளத்திலும், இசையிலும் வைத்து அபிநயம் பிடித்துக் காட்டுகின்றன பாடல்கள்.

உண்மையான பிள்ளைத் தமிழ் (பாப்பாப்) பாட்டு கிடைத்து விட்டது தமிழுக்கு.

* * *

**இ**னி, சிருஷ்டி தத்துவம் என்பது நடந்து கொண்டே இருக்கிறது. பேரண்டம் முழுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது.

கோழி முட்டைக்குள் ஒரு சிரங்கை தண்ணீர்தான். மயில் முட்டைக்குள்ளும் ஒரு சிரங்கை தண்ணீர்தான்.

கோழி முட்டைக்குள்ளிருந்து கோழிக் குஞ்சுதான் வரும். மயில் முட்டைக்குள்ளிருந்து மயில் குஞ்சுதான் வரும்.

காலம் காலமாக இந்த ஞாபக சக்தி சிருஷ்டி தத்துவத் துள் நிறைந்து நிற்கிறது. இந்த ஞாபக சக்திதான் உயிர் வர்க்கத்தைப் பாதுகாக்கிறது. தாய்மை உணர்ச்சியாய் நின்று குழந்தைகளைக் காப்பாற்றுகிறது.

தன் குட்டிகளுக்கு பூனை எப்படிப் பாய்ச்சலைச் சொல்லிக் கொடுக்கிறது என்பதைப் பார்த்தாலே போதும், தாய்மை உணர்ச்சி விளங்கிவிடும்.

குட்டியை வயிற்றோடு சேர்த்து வைத்துக் கொண்டு கிளைக்குக் கிளை தாவிப் பாய்கிறது குரங்கு. பறவைகளோ நெடுந்தூரம் சென்று, இரையைச் சேகரித்து, நன்றாக மென்று, மாவும் கூழுமாக வாயில் போட்டு ஒதுக்கி வைத்துக் கொண்டு கூட்டிலிருக்கும் குஞ்சுகளுக்கு வந்து ஊட்டுகின்றன.

எல்லாம் அதிசயந்தான்.

தாயும் குழந்தையும் அதிசயந்தான். இந்த அதிசயத்தை அனுபவிக்க அனுபவிக்க பாஷையானது கவிகளைச் சொரியத்தானே செய்யும்.

## XI ஆண்டாள் காதலில் கனியும் பக்தி

பெரியாழ்வாரும் ஆண்டாளும் ஒருவர்தான் என்று அறிஞர் பெரு மக்கள் கருதுகிறார்கள்.

பெரியாழ்வார் நாயகி பாவத்தில் திருமால் மேல் பாடல்கள் பாடி மகிழ்ந்தார். அப்படிக் காதல் துறையில் திருமாலை நாயகனாக வைத்துத் தன்னை நாயகியாகக் கருதிப் பெரியாழ்வார் பாடும் பொழுது பெண்ணாக மாறிவிடுகிறார்.

காதல் வயப்பட்டு மோக வெறிக்கு உள்ளான இள நங்கையாகவே இருந்து பாடுகிறார்.

அப்படிப் பாடுகிறபொழுது ஆண்டாள் என்னும் பெண்பாற் பெயரையே புனை பெயராகத் தமக்கு ஆழ்வார் வைத்துக் கொள்கிறார்.

கண்ணனை (திருமாலை) குழந்தையா்க வைத்து தாயாக நின்று பாடும் போது அவர் பெரியாழ்வார். நாயகன் நாயகி பாவத்தில்ப் பாடும் போது அவர் ஆண்டாள்.''

இந்த முறையில் தம் கருத்தை விளக்குகிறார்கள் அறிஞர்கள்.

இனி, பெரியாழ்வார் வேறு, ஆண்டாள் வேறு. இருவரும் பரமபக்தர்கள். உத்தமக்கவிகள் என்றும் பலர் கருதுகிறார்கள்.

அப்படிக் கருதுகிறவர்கள் "ஆண்டாளும் பெரியாழ் வாரும் ஒருவர் என்றால், ஆழ்வார்கள் பன்னிருவர் என்கிற கணக்கு எப்படிப் பொருந்தும் என்று கேட்கிறார்கள்.

இப்படிக் கேட்கிறவர்கள் பெரியாழ்வாரின் மகள்தான் ஆண்டாள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதற் கிணங்க பெரியாழ்வாரைப் போலவே அவர் மகளும் பக்திப் பெருக்கிலும் கவிப் பெருக்கிலும் உருகிக் கரைகிறார் என்று சொல்கிறார்கள்.

இனி, பூர்வீக வரலாறைப் பார்த்தால் ஆண்டாள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்றும், நந்த வனத்தில் கண்டெடுக்கப்பட்ட குழந்தை என்றும், அந்தக் குழந்தையைச் சொந்த மகளாகப் பேணி வளர்த்தார் ஆள்வார் என்றும் கதை போகிறது.

தெய்வாம்சம் நிறைந்தவர் ஆண்டாள் என்றும், பூமா தேவியின் அவதாரம் என்றும் பிரிந்தவர் கூடுகிற மாதிரி நாயகன் நாயகியாக இருந்த திருமாலும் தேவியும் பழையபடி ஆண்டாலும் திருவரங்கநாதருமாகக் கூடினார்கள் என்றும் கதை போகிறது.

பறித்துத் தொடுத்த பூமாலையை முதலில் தாம் அணிந்து அழகு பார்த்த பின் திருமாலுக்கு ஆண்டாள் கொடுத்தார் என்பது கதை. அது எப்படியோ நமக்குத் தெரியாது. ஆனால் தாம் அனுபவித்து ஆனந்தித்து தம் கவிதையில் ஆண்டாள் கரைகிறார். பிறகு அதே கவிதையை எம்பெருமானுக்கு அர்ப்பணிக்கிறார்.

இனிப்பாடல்கள்.

வாழும் நெறிகாட்டி வாழ வைத்து உற்ற துணையாக இருக்கிறவர்களுக்கு ஆழ்வார் என்று பெயர். ஆள்வார் என்பது சிறப்பு நோக்கி ஆழ்வார் என வந்தது.

ஆள்வான் என்பது ஆண்பால் அதற்கு ஏற்ற பெண்பால் பெயர் ஆண்டாள்.

நன்னெறிகாட்டி வாழ வைக்கும் பெண் தெய்வம் என்பது தான் ஆண்டாள் என்னும் சொல்லுக்குரிய பொருள்.

❋ ❋ ❋

இனி, மனிதன் கண்டுபிடித்த காரியங்கள் அத்தனை யிலும் உயர்ந்தது திருமணம்.

கல்யாணம் ஆனபின்தான் முழுமனிதர் ஆக முடியும். அதுவரை ஆணும் அரை மனிதர்தான். பெண்ணும் பாதி ஆள்தான்.

இளைஞனையும் யுவதியையும் மாப்பிள்ளை பெண்ணாக மாற்றி விடுகிறது திருமணம். வாழ்க்கை என்னும் அற்புதத்தை நடத்தும் நாயகர்களாகவே அவர்களை உயர்த்தி விடுகிறது திருமணம்.

அன்பு, ஒழுங்கு, மரியாதை, வீரம், தியாகம் முதலிய பண்புகள் ஊறும் ஒளி ஊற்றுகளாக ஆணையும் பெண்ணை யும் ஆக்கி விடுகிறது திருமணம்.

மனிதர்களுக்கு ஒரு தெய்வ ஒளி கிடைக்கிறது. என்றால் அது திருமணம்தான்.

மணமும் ருசியும் நிறைந்த வாழ்க்கை என்னும் அற்புதத்தையே மனிதர்களுக்கு அள்ளிக் கொடுக்கிறது திருமணம். திருமணம் செய்து கொண்டவர்கள் அவதார மூர்த்திகள்தான். புத்தம் புதிய பிறவியே அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது.

அதனால் திருமண வாழ்க்கையை ‘குடிப்பிறப்பு’ என்று அருமையாய்ச் சொல்லி இருக்கிறார்கள்.

கல்யாண வீடு என்றால் அது கோலாகலமாக இருக்கும். உற்றார்களும் உறவினர்களும், நண்பர்களும் நாலா திசைகளிலிருந்தும் கல்யாண வீட்டை நோக்கி வருவார்கள். வீடு முழுவதையும் வெள்ளையடித்து வர்ணக் குழம்புகளால்

தீட்டி விடுவார்கள். அங்கங்கே பெரிய பெரிய காவிப் பட்டைகளை போடுவார்கள். முற்றம் முழுவதையும் தெருவையே வளைத்து பிரம்மாண்டமான கொட்டகை போடுவார்கள். சமையல் புரை சாப்பாட்டுப் புரை, வரவேற்புக் கூடம், மணவறை என் றெல்லாம் வகுத்து வைப்பார்கள்.

வர்ணப் பட்டைகளுடன் கோலம் போட்டி போடும் வண்ண விளக்குகளும், குலை வாழையும், பூ ஆரங்களும் எங்கு பார்த்தாலும் நிறைந்து ஒளிவீசும்.

குழை வைத்துக் கட்டிய கம்புகளில் வர்ணப்பட்டை அடித்து கால்களாக அங்கங்கே ஊன்றுவார்கள்.

தேவதைகள் நடமாடும் கோயில் போலவே காட்சி கொடுக்கும் கல்யாண வீடு.

கல்யாண வீட்டுக்குப் போவது, அங்குள்ள காட்சிகளை அனுபவிப்பது என்றால் ஆண்களுக்கு ஒரே உற்சாகம். பெண்களின் உற்சாகத்திலோ ஆனந்த வெறியே இருக்கும். குழந்தைகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

மாப்பிள்ளை, பெண், மணவறை, திருமண நிகழ்ச்சி, கூட்டம், வரவேற்பு, உபசரிப்பு அத்தனையும் கண்களுக்கு விருந்தாக இருக்கும். மனசுக்கும் விருந்தாக இருக்கும்.

மனதை விட்டு இந்தக் காட்சிகள். ஒரு போதும் விலகா.

கல்யாணத்தில் எத்தனையோ, வகைகள் உண்டு. 'உறவு முறை விட்டுப் போகக் கூடாதே' என்று நடக்கிற கல்யாணமும் உண்டு. 'இரு இரு உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று வஞ்சம் தீர்க்க நடத்துகிற கல்யாணமும் உண்டு.

எப்படி இருந்தாலும் சரி, திருமணம் என்னும் உயர் அட்டிகைக்கு பொறச்சரடாய் இருப்பது காதல்தான். மாப்பிள்ளை, பெண் இவர்களுடைய ஆர்வமும் அன்பின் வேகமுந்தான் மூலமந்திரம்.

பெண்ணும் மாப்பிள்ளையுந்தான் மூலவர்கள். அவர் களுடைய உணர்ச்சிளை நோக்கியே மற்றவர்களின் உள்ளங்கள் ஓடும்.

திருமண வைபவங்களை முன்னோர்கள் பக்தியோடு அனுபவித்திருக்கிறார்கள். வழிபடு தெய்வங்களுக்கும் திருமண விழாவைக் கோயில்களில் நடத்தி அனுபவித்து விடுகிறார்கள்.

* * *

**இ**னி, ஒரு பெண், பன்னிரெண்டு வயது கூட இருக்காது. பேதைப் பருவத்துச் சிறு பெண். தாயுடன் கோயிலுக்கு வந்தாள். உலகளந்தானாகிய நாராயண மூர்த்தியை வணங்கினாள். பெருமானின் அலங்காரத்திலும் அபிஷேகத்தி லும் உள்ளம் கரைந்தாள். தீபாராதனையில் பெருமானின் கோலமும் எழிலும் கோடி சூரியப் பிரகாசமாய் ஜொலித்தது.

உட்பிராகாரங்களைச் சுற்றியபடியே ஓர் இடத்தில் வந்து தாயும் மகளும் நின்றார்கள். அங்கே பெருமாளுக்கும் தேவிக்கும் திருக்கல்யாணம் நடக்கிறது.

பெற்றோர்களுடன் கல்யாண வீடுகள் பலவற்றுக்குப் போய் வந்தவள்தான் மகள். ஆனால் இன்று பார்க்கும் தெய்வத் திருமணம் அவள் உணர்ச்சியைப் பிசைந்து விட்டது.

வசம் அழிந்து போனாள் பெண். வீட்டுக்கு வந்ததே தெரியவில்லை. கல்யாணக் காட்சி அப்படி அப்படியே கண் முன் நடக்கிறது. பார்வையை அக்கம் பக்கம் திருப்ப முடியவில்லை.

பசிக்கவே இல்லை. சாப்பிட்ட மாதிரியே இருக்கிறது. தூக்கமும் வரமாட்டேன் என்கிறது. நீண்ட நேரம் ஆனபிறகு எப்படியோ கண்ணயர்ந்தாள்.

அப்பொழுது கனவுக்கு மேல் கனவுகள் வந்து கொண்டே இருக்கின்றன. நாராயண மூர்த்திக்கும் தனக்கும் கல்யாணம் உறுதியாகி விட்டதாக ஒரு கனவு! மாப்பிள்ளைக் கோலத்தில்

அவன் தன் ஊருக்கு வருவதாக இன்னொரு கனவு. கையைப் பிடித்து, கழுத்தில் தாலி கட்டுவதெல்லாம் கனவில் வந்துவந்து போகின்றன.

காலையில் நேரம் கழித்துத்தான் எழுந்தாள் பெண். கண்ட கனவு ஒவ்வொன்றும் நனவாகவே இருக்கிறது பெண்ணுக்கு.

பெண்ணுக்கு ஒரே ஆனந்தம். மயக்க வெறியோடு ஆனந்தத்தைத் தோழியிடம் சொல்கிறாள் பெண்.

எப்படி என்று பாடலில் பார்க்கலாம்

*வாரணம் ஆயிரம்*
*சூழவ லம்செய்து.*
*நாரணன் நம்பி*
*நடக்கின்றான் என்றெதிர்*
*பூரண பொற்குடம்*
*வைத்துப்பு ரம்எங்கம்*
*தோரணம் நாட்டக்க*
*ணாக்கண்டேன் தோழிநான்!*

சீர்வரிசைகளைக் சுமந்து கொண்டு பல யானைகள் எதிர் சேவை செய்து வரவேற்க, புது மாப்பிள்ளை பவனியாக வந்து இறங்குகிறான், நாராயண மூர்த்தியாகிய மாப்பிள்ளையை பூரண கும்ப மரியாதையோடு வரவேற்றார்கள். அவன் வரும் வழி எல்லாம் தோரண அலங்காரந்தான்.

மாப்பிள்ளை அழைப்பு, பெண்ணழைப்பு இரண்டும் கல்யாணத்தில் முக்கியமான அங்கங்கள். கல்யாணத்துக்கு முதல் நாளே மாப்பிள்ளையை அலங்கரித்து ஒரு சிறுபட்டினப் பிரவேசம் நடத்துவார்கள். விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மேளதாள முழக்கத்தோடு வீதி உலா வருவார் புதுமாப்பிள்ளை.

மாப்பிள்ளையின் முகவெட்டு, பார்வை, ஒய்யாரம், தோரணை ஒவ்வொன்னைறயும் பார்த்துப் பார்த்து அனுபவிப் பார்கள் ஜனங்கள். அவை ஒவ்வொன்றுக்கும் புதுப்புது அர்த்தம் கொடுப்பார்கள் பெண்கள்.

சிறுமியின் கனவில் இந்தப் பட்டினப்பிரவேசமும் தெரிகிறது. தோழியிடம் அது பற்றிச் சொல்கிறாள் பெண்.

*நாளை வதுவைம*
*ணம்என் றுநாளிட்டு,*
*பாளை கமுகு*
*பரிசுடைப் பந்தர்க்கீழ்*
*கோளரி மாதவன்*
*கோவிந்தன் என்பானோர்*
*காளை புகுதக்க*
*னாக்கண்டேன் தோழிநான்!*

திருமணம் நாளைக்கு என்று நிச்சயமாகிவிட்டது. புது மாப்பிள்ளை கட்டிளங்காளை போல் கம்பீரமாக நடந்து வருகிறான்.

அவனை அப்படியே பல்லக்கில் உட்கார வைத்து, அலங்கார தோரணம் கட்டிய வீதி வழியாக பட்டினப் பிரவேசம் நடத்தினார்கள்.

பல்லக்கில் சிங்கக்குட்டி உட்கார்ந்திருந்தது போல் இருந்தது மாப்பிள்ளையின் தோரணை.

கல்யாணம் மனசுக்குள்ளேயே நடக்கிறது பெண்ணுக்கு. அதனால் கண்களைத் திறந்தாலும் மூடிக்கொண்டாலும் கல்யாணம் ஒன்றே தெரிகிறது.

* * *

**இ**னி, மாப்பிள்ளை அலங்காரம் பெண்ணலங்காரம் இரண்டும் கல்யாணத்தில் முக்கியமான ஒன்று.

கல்யாணத்துக்கு என்ற தனி உடை உண்டு. தனித்த ஆபரணங்களும் உண்டு.

பட்டு, தங்கம், வைரம் ஆகியவை எல்லாம் கல்யாணத்தை வைத்தே பெருமை பெறுகின்றன. சந்தனம்,

புஷ்பம், தேங்காய், பழம், பன்னீர், குங்குமம், மஞ்சள், வெற்றிலை, பாக்கு முதலிய பொருள்கள் கல்யாணத்தோடு உறவாடி உறவாடி மங்கலம் பெற்றுவிட்டன. புனிதப் பொருள்களாய் உயர்ந்து விட்டன.

பெண்ணை அலங்கரிக்கத் தோழிமார் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வருவார்கள்.

தங்கக் கரை போட்ட பட்டுப் புடவையைப் பெண் ணுக்குக் கட்டி, உச்சி, முதல் உள்ளங்கால்வரை பொன்னா பரணம் பூட்டி அலங்கரிப்பார்கள்.

வாரி முடித்த பெண்ணின் முடியில் சிங்காரச்சடை போடுவார்கள்.

மழை மேகத்தில் மல்லிகை பூத்தால் எப்படி இருக்கும், அப்படி இருக்கும் பெண்ணின் கூந்தல். புஷ்பங்களால் ஆன அலங்காரம் அப்படி இருக்கும்.

மணங்கமழும் மலர் மாலையை ஒன்றன் மேல் ஒன்றாகப் பெண்ணின் கழுத்தில் போட்டு அழகுக்கு அழகு பார்ப்பார்கள்.

அந்த மாலைகள் ஆடி அசைய அசைய எழுந்து தலைகவிழ்ந்து நிற்பாள் பெண். மணவறையை நோக்கியே நிற்பாள்.

அப்படி நிற்பதைப் பார்த்தால் கோயிலில் எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் அம்மன் போலவே இருக்கும்.

பார்ப்பவர்கள் மனம் உருகிவிடும். கை எடுத்துக் கும்பிடத் தோன்றும்.

மாப்பிள்ளைக்கும் தோழர்கள் அலங்காரம் செய்வார்கள். ஆனால் பெண்ணின் அலங்காரந்தான் எல்லோரையும் பரவசப்படுத்தும்.

கல்யாணத்துக்கு முன்னாலேயே பெண்ணுக்கு அலங் காரம் செய்வது அடிக்கடி நடக்கும்; ஒத்திகை நடப்பது போலவே நடக்கும்.

மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருகிறார் என்றால் இப்படி ஓர் அலங்காரம். இனி, கல்யாணத்துக்கு உறுதி பண்ண மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள். அப்பொழுதும் இப்படி ஓர் அலங்காரம்.

உறுதி பண்ணியதும் மாப்பிள்ளை வீட்டார் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மஞ்சள் எல்லாம் வைத்து அதன்மேல் ஒரு பட்டுப்புடவையையும் வைப்பார்கள். பட்டுக்கு மேலே புத்தம் புதிய மணமாலையையும் பூப் பந்தையும் வைப்பார்கள்.

இரண்டு கைகளாலும் தாம்பளத் தட்டை எடுத்து, பெண் வீட்டாரிடம் கொடுப்பார்கள்.

அந்தப் பட்டுக்கு நிச்சயதார்த்தப்பட்டு என்று பெயர் 'மந்திரக்கோடி' என்று முன்னோர்கள் சொல்லி வந்தார்கள்.

அந்தப் புடவையைப் பெண்ணுக்குக் கட்டி விடுவார்கள் தோழிமார். பிறகு பூப்பந்தை பெண்ணின் தலையில் வைத்து, மலர் மாலையைக் கழுத்தில் போட்டு விடுவார்கள்.

பெண்ணானவள் பெரியவர்களின் காலில் விழுந்து வணங்குவாள். கையால் வாய்பொத்திப் பணிவாள். பெரியவர் களின் உள்ளத்தில் பரிவும் பாசமும் பொங்கும். பக்திப் பரவசத்தோடு பெண்ணை ஆசீர்வதிப்பார்கள் அவர்கள்.

நமது கதாநாயகிக்கு வரக்கூடிய மாப்பிள்ளையோ ஸ்ரீமந் நாராயண மூர்த்தி. அவனுக்கு தாய் என்று யாரைச் சொல்வது? தகப்பன் என்று யாரைச் சொல்வது?

அவனுக்குப் பெண் கேட்டு வருகிறவர்களோ தேவர்கள். இந்திரன் தலைமையில் சீர் வரிசையோடு வருகிறார்கள். தேவர்கள். பெண் கேட்டு வந்த தேவர்களுடன் தெய்வ லோகத்து நங்கையரும் வந்தார்கள்.

அவர்களில் ஒரு பெண்தான் நிச்சயதார்த்தப் புடவை யைப் பெண்ணுக்குக் கட்டி விட்டாள். வாசம் மிக்க மலர் மாலையைப் பெண்ணின் கழுத்தில் சூடியதும் அவள்தான்.

அப்படி வருகிறது பெண்ணுக்குக் கனவு... இனிபாடல்

*இந்திரன் உள்ளிட்ட*
*தேவர்கு ழாம்எல்லாம்*
*வந்திருந், தென்னை*
*மகட்கேசி மந்திரித்து*
*மந்திரக் கோடிஉ*
*டுத்தி மணமாலை*
*அந்தரி சூட்டக்க*
*னாக்கண்டேன் தோழீ நான்!*

இந்திரன் தலைமையில் தேவர்களே வந்து கல்யாணத் துக்கு உறுதி பண்ணினார்கள். தேவலோகத்து நங்கை தான் எனக்கு நிச்சயதார்த்தப் புடவையைக் கட்டிவிட்டு மலர் மாலையைக் கழுத்தில் போட்டாள்.

* * *

**இ**னி, கல்யாண வீட்டை அடையாளம் காட்டுவது மேளச்சத்தம்தான். நாதசுரத்திலிருந்து வருகிற தேவகானம் செவி வழியே தேனாக ஓடும். பாலாகப் பாயும். தேனும் பாலும் கலந்து மனசைத் தித்திக்க வைக்கும்.

மேள முழக்கத்தில் கல்யாண வீட்டு வேலை ‘மளமள’ என்று நடக்கும். பெண்களும் ஆண்களும் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்வார்கள். இளைஞர்களும் குழந்தை களும் அங்கும் இங்குமாய் ஓடி ஆடி விளையாடுவார்கள்.

சந்தனத்தைக் கரைப்பது, பன்னீரைக் கலக்குவது, விளக்குகளைப் பொருத்துவது, மணவறை அலங்காரம், மணவறைப் பொருள்களை கொண்டு வந்து சேர்ப்பது, கோலம் தோரணம், முளை அரிசி எல்லாவற்றையும் உற்சாகத்தோடு செய்வார்கள் பெண்கள்.

முகூர்த்த நேரம் கூடி வருகிறது. மேளம் கொலுகட்டி முழங்குகிறது . மாப்பிள்ளை அலங்காரம் முடிந்து விட்டது.

கைலாகு கொடுத்துத் தோழர்கள் மாப்பிள்ளையை அழைத்து வருகிறார்கள்.

இளம் நங்கையர் தங்கள் இரண்டு கைகளாலும் தட்டை ஏந்தி இருக்கிறார்கள். தட்டில் முளை அரிசிக் கிண்ணங்களும், சுடர் விளக்குச் சட்டிகளும் இருந்து பிரகாசிக்கின்றன.

பெண்கள் பல்லாண்டு பாடி வரவேற்க கட்டிளங்காளை போல நடந்து வருகிறான் புது மாப்பிள்ளை.

*"கதிரொளி தீபம்க*
*வசம்உ டனேந்தி*
*சதிரிள மங்கையர்*
*தாம்வந் தெதிர்கொள"*

வட மதுரை மன்னனாகிய கோவிந்தன் மணவறையில் ஏறினான். அங்கே போட்டிருந்த மணித் தவிசுகள் இரண்டில் ஒன்றின் மேல் உட்கார்ந்தான்.

குருக்கள்மார் எதிரே இருக்கிறார்கள். அவர்கள் சில சடங்குகளை மாப்பிள்ளைக்குச் செய்தார்கள்.

அப்பொழுது பெண்ணுக்கும் அலங்காரம் முடிந்து விட்டது. தோழிமார் பெண்ணை மணவறைக்கு அழைத்து வந்தார்கள். பெண்ணுக்கும் சில சடங்குகளை குருக்கள்மார் செய்தார்கள்.

உடனே கம்பீரமாக எழுந்து நின்றான் மணமகன். மணவறையை விட்டு இறங்கினான்.

உற்றாரும் உறவினரும் நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். அவர்களில் வயதானவர்கள் பலர். பண்பாளர்களும், ஒழுக்க சீலர்களும், அறிஞர்களும் நிறையப் பேர் அங்கங்கே இருக்கிறார்கள்.

சிங்கக்குட்டி போல மிடுக்கோடு அவர்கள் முன் வந்தான். பணிவோடு குனிந்தான். அவர்களுடைய திருப்பாதங்களைக் கையால் தொட்டு கண்ணில் ஒற்றி வணங்கினான்.

அவன் வணங்க வணங்க அவர்கள் ஆசிகளைப் பொழிந்தார்கள். இந்த அரிய காட்சியைப் பார்த்து விருந்தினர் கள் மனம் நெகிழ்ந்தார்கள்.

மாப்பிள்ளையின் சிறப்பையும் அந்த சிறப்புக்குள்ளே பூத்துக் குலுங்குகிற பெருந்தன்மையையும் கண்டு கண்டு களிப்புற்றார்கள்.

பெண்களின் உத்சாகத்துக்கு அளவே இல்லை. எல் லாரையும் விட பரவசத்துக்கு ஆளானவள் மணப் பெண் தான்.

'தன் கைகளைப் பிடித்து தனக்கு வழிகாட்ட வந்திருக்கும் இவன் எவ்வளவு பெரியவன்? எவ்வளவு பண்பாளன்?' என்று நினைத்துப் பெருமிதப் பட்டாள் கல்யாணப் பெண்.

அப்படிப் புதுப்புதுப் பட்டைகளோடு வருகிறது கனவு.

*கதிரொளி தீபம்க*
*வசம்உ டனேந்தி*
*சதிரிள மங்கையர்*
*தாம்வந் தெதிர்கொள,*
*மதுரையார் மன்னன்அ*
*டிநிலை தொட்டெங்கும்*
*அதிரப் புகுதக்க*
*னாக்கண்டேன் தோழிநான்!*

அகல் விளக்குகளும் முளை அரிசிக் கிண்ணங்களும் வைத்த தட்டுகளை ஏந்தியபடியே இளம் கன்னியர் மாப்பிள்ளையை வரவேற்றனர். மணமகனோ திருமணத்துக்கு வந்த பெரியவர்களை வணங்கி ஆசி பெறுகிறான்.

பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து மணவறையில் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க விருந்தினர்களுக்கு ஒரே ஆவல்.

மற்றவர்கள் கண்டு கொள்ள முடியாதபடி மெல்ல மெல்ல பெண்ணை ஒட்டுகிறான் மாப்பிள்ளை. ஒருவரை ஒருவர்

ஒட்டும் அளவுக்கு உரசி வருகிறான் பையன். பெண்ணோ குனிந்த தலை நிமிர வில்லை.

ஆனாலும் எப்படியோ ஓரம் சாரமாய் மாப்பிள்ளையை அடிக்கடி கடைக் கண்களால் பார்த்துக் கொள்கிறாள். அவள் அதரங் களின் ஓரமாய் இளம் புன்முறுவல் நெளிந்து சுழித்து ஓடுகிறது.

விருந்தினர்களுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும். அவர்களுக்குப் பசி ஓடிவிடுகிறது.

மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மாறி மாறி குருக்கள் மார் சடங்குகள் நடத்துகிறார்கள். அவர்கள் பண்ணுகிற காரியம் விநோதமாக இருக்கிறது.

தம்பதிகளை கையை விரி என்கிறார்கள். பிறகு மூடு என்கிறார்கள்.

இதை எடு என்கிறார்கள். பிறகு அதைப்போடு என்கிறார்கள்.

இப்படித் தொந்தரவு பண்ணினாலும் சிலசில காரியங் களை உபயோகமாகவும் செய்கிறார்கள் குருக்கள்மார்.

மாப்பிள்ளையைப் பெண்ணுக்கும், பெண்ணை மாப்பிள்ளைக்கும் காப்புக் கட்டச் சொல்கிறார்கள். மாலை மாற்றச் சொல்கிறார்கள்.

ஒருவர் கையை ஒருவர் பிடிக்கச் சொல்கிறார்கள்.

மணவறையைச் சுற்றிவரச் சொல்கிறார்கள். ஒருவர் கையை ஒருவர் இறுகப்பற்றிக் கொள்கிறார்கள். இதைப் பார்த்த கூட்டம் ஆரவாரித்துப் பொங்குகிறது. மேள முழக்கம் விண்ணையும் மண்ணையும் தழுவி ஆலிங்கனம் பண்ணுகிறது.

பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை திருநாண் பூட்டினான். கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது.

ஊஞ்சல் நலுங்கு, பரதநாட்டியம், பட்டினப் பிரவேசம் எல்லாம் இனிமேல்தான். விருந்து உபசரிப்பு எல்லாம் பிரமாதம்.

அக்கினி சாட்சியாக மணமகளுக்குத் தாலிகட்டி அவள் கையைப் பிடித்தான் மாப்பிள்ளை.

பிறகு என்ன செய்தான்?

அம்மியின் மேல் பெண்ணின் காலை தன் கையால் பிடித்து, மெல்ல எடுத்து வைத்தான் மாப்பிள்ளை. இதை மறக்க முடியுமா பெண்ணால்?

கையால் காலை எடுத்து வைத்தவன் யார்? அவனுடைய கை எப்பேர்பட்ட கை?

*இம்மைக்கும் ஏழேழ்பி*
*றவிக்கும் பற்றாவான்,*
*நம்மைஉ டையவன்*
*நாராய ணன்நம்பி:*
*செம்மைஉ டையதி*
*ருக்கையால் தாள்பற்றி*
*அம்மிமி திக்கக்க*
*னாக்கண்டேன் தோழீநான்!*

இந்த இப்பிறவிக்கு மட்டுமல்ல, ஊழி, ஊழிக் காலமாய் அத்தனை பிறவிகளுக்கும் துணையாய் நின்று நம்மைக் ‘காத்தவன் நாராயணமூர்த்தி. அவனே என் கையைப் பிடித்தான்.

அதுமட்டுமா, சகல நலன்களும் நிறைந்த தன் தங்கக் கரத்தால் என் காலையே பிடித்து அம்மிமேல் தூக்கி வைத்தான்.

யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்.

நாவில் வட்டம் போட்டுக் கொண்டே இருக்கும் பாடல்கள். பாடப்பாட நாவில் தேனூறும். பருகப்பருக ஆனந்தம்தான்.

*

## XII மதுரகவி ஆள்வார்

### கண்ணிநுண் சிறுத்தாம்பு.

## 1

தமிழ் நாட்டின் தென்கோடியில் உள்ளது திருநெல் வேலி மாவட்டம். அம்மாவட்டத்தின் தென் கிழக்கே உள்ளது திருக்கோளூர். ஒதுக்குப்புறத்தில் உள்ள சிறிய ஊர்தான் திருக்கோளூர்.

நம்மாள்வார் அவதரித்தது திருக்குருகூர் (ஆள்வார் திருநகர்). அது பெரிய ஊர், அதன் பக்கம் இருக்கிறது திருக் கோளூர்.

மதுரகவி ஆள்வாரைப் பெற்றெடுத்த பெருமை வாய்ந்த ஊர் திருக்கோளூர்.

மதுரகவி ஆள்வாருக்கு நம்மாள்வாரைவிட வயது அதிகம். வேதம், வேதாந்தம், வியாகரணம் எல்லாம் மதுர கவிக்கு அத்துபடி.

பெரிய பெரிய ஜாம்பவான்களாய் இருந்த பண்டிதர்கள், பாகவதர்கள் எல்லாம் மதுரகவி என்றால் வாயைப் பொத்திக் கொள்வார்கள்.

அவ்வளவு விற்பன்னராகத் - தத்துவப் புலியாக விளங்கினார் மதுரகவி.

நம்மாள்வார் சைவ வேளாளர் குலத்தில் அவதரித்தார். மதுரகவி ஆள்வாரோ அந்தணர் குலத்தில் அவதரித்தவர்.

இனி, ஆயிரம் வருடங்களுக்கு முன் தத்துவ விசாரனைகளும் அது சம்பந்தமான தர்க்க விவாதங்களும் நம் நாட்டில் மண்டிப் பெருகின.

அதுவும் இன்றைய உத்தரப் பிரதேசத்தில் கூட்டம் கூட்டமாய் இருந்தார்கள் வியாக்யானகர்த்தர்கள்.

தத்துவ விசாரணையில் ஈடுபட மதுரகவிக்கு ஆசை வந்து விட்டது. வியாக்யானப் புலவர்களுடன் கலந்து உறவாட வடதேசம் புறப்பட்டுவிட்டார் மதுரகவி.

அந்தக் காலத்தில் நடந்துதான் போக வேண்டும் மதுரகவி ஆள்வாரும் அப்படியே நடந்து போனார். அதனால் பல பிரதேசங்களைக் கண்டு களித்தார்.

பல இடங்களிலும் வாழ்ந்த பலதிறப்பட்ட மக்கள். அவர்களுடைய பழக்க வழக்கங்கள், வாழ்க்கை, அதனுள் ஊடுருவிக் கிடக்கும் பக்தி எல்லாவற்றையும் நேராகப் பார்க்க முடிந்தது மதுரகவியால்.

உண்மையைப் பார்க்கப் பார்க்க உணர்வுக்குத் தெம்பு உண்டாகியது. அதனால் வெறும் ஏட்டுப் படிப்பு, ஆராய்ச்சி இவற்றால் உண்டான பாண்டித்யம் எல்லாமே இளக ஆரம்பித்தன. கொஞ்சம் கொஞ்சமாக இளக ஆரம்பித்தன.

ஒவ்வொரு சம்பவத்தையும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உணர்வோடு பார்க்க வசதி ஏற்பட்டது. ஆள்வாருக்கு. அதனால் எல்லாம் கடவுள் மயம் என்னும் உண்மை தெளிவு பட்டது.

இந்த உண்மையை எளிமையாகவும் இனிமையாகவும் எடுத்து விளக்குகின்ற பாசுரங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அட்டா பக்கத்து ஊரில் இருக்கிற நம்மாள்வார் பாடிய பாசுரங்கள் எவ்வளவு உன்னதமானவை, அவற்றை மதிக்காமல்

இவ்வளவு தூரம் வந்து விட்டோமே என்று மறுகினார் மதுரகவி.

அதனால் மேலும் மேலும் மெய்யுணர்வு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

தர்க்கம், ஆராய்ச்சி சாஸ்திரம், வியாகரணம் எல்லாம் கரைந்து விட்டன. நம்மாள்வாரின் பாடல்கள் ஒவ்வொன்றும் தெய்வ அவதாரமாய்க் கண்முன் வந்து நின்றன. வானத்துக்கும் பூமிக்கும் ஒரு ஜோதி நிற்பது போலவே இருந்தது மதுரகவி ஆள்வாருக்கு.

மதுரகவி ஆள்வார் அயோத்தி வந்து சேர்ந்தார். ராமச்சந்திமூர்த்தியை வணங்கி வழிபட்டார். பண்டிதர்கள் பலர் அங்கங்கே உபதேசம் பண்ணுகிறதையும் பார்த்தார். பண்டிதர்களின் பிரசங்கத்தால் அலுத்துப் போனார் ஆள்வார்!

சுற்றி வளைத்து எதை எதையோ அளந்து கொட்டுகிறார்களே இவர்கள். விஷயத்துக்குள் வந்து நிற்க முடியவில்லையே இவர்களால். ஆனால் நம்மாள்வாரோ இரண்டே வரிகளில் அநாயசமாக எவ்வளவு பெரிய உண்மையையும் படிய வைத்து விடுகிறாரே! அடடா, அந்தப் பாடல்களில் தான் எத்தனை சொகுசு எத்தனை நளினம், எளிமை தான் எப்படி இனிமைதான் எப்படி?

பாட்டென்றால் நம்மாள்வார் பாட்டுத்தான் பாட்டு.

ஞானி என்றால் அவர் ஒருவர்தான், இப்படி ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டார் மதுரகவி.

அயோத்தியில் இருப்புக் கொள்ளவில்லை மதுரகவிக்கு மளமளவென்று திருக்கோளூருக்கே வந்து விட்டார்.

நம்மாள்வாரையே மனசில் நிறுத்தித் தியானித்து வந்ததால், இதயம் முழுவதும் வெளிச்சம் நிறைந்திருந்தது. அந்த வெளிச்சம் நடந்து வந்த பாதை முழுவதும் படர்ந்து வழி காட்டியது.

அப்படியே திருக்குருகூர் (ஆள்வார் திருநகர்) வந்தார் நம்மாள்வாரைத் தரிசித்தார். ஆனந்தக் கண்ணீர் விட்டார் பரம சிஷ்யனாசி விட்டார் நம்மாள்வாருக்கு.

நம்மாள்வார் தான் மதுரகவிக்குக் கண்கண்ட தெய்வம். போகிற இடங்களில் எல்லாம் நம்மாள்வார் பாடல்களையே பாடிப்பாடி விளக்கினார் மதுரகவி.

நம்மாள்வார் பரமபதம் சென்ற பின் அவருக்குக் கோயில் கட்டினார். நித்திய வழிபாடுகள் நடத்தினார். தேர் திருவிழாவுக் கெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டார்.

அது மட்டுமா?

நம்மாள்வாரையே தெய்வமாக வழிபட்டார். நம்மாள்வார் மேலேயே பாசுரங்கள் பாடினார். இது ஓர் அதிசயம். இன்னொரு அதிசயம் இவர் பாடிய பாடல்கள் பதினொன்று தான்.

பதினோரு பாசுரங்கள். அதுவும் பகவான் மேல் இல்லை. ஆள்வார் மேல் பாடியது தான். ஆனாலும் ஏனைய ஆள்வார் கள் போலவே இவரும் ஆள்வராகிவிட்டார். பன்னிரெண்டு ஆள்வார்களில் இவரும் ஒருவராகி விட்டார்.

உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் நம்மாள்வாருக் காகவே அர்ப்பணம் செய்த பரம பக்தர் மதுரகவி. இனி அவர் பாடிய பாசுரங்களில் சிலவற்றைப் பார்க்கலாம்.

## 2

**ஆ**யர்பாடியில் வெண்ணெய் திருடி உண்டவன் கண்ணன். அதனால் தயிர் கடையும் மத்தால் அடிபட்டான். தாம்புக் கயிற்றால் கட்டப்பட்டான். உரலோடு உரலாகக் கட்டி வைக்கப் பட்டான் கண்ணன். இறைவனே இப்படி ஒரு நிலைக்கு ஆளானால் அதைத் திருவிளையாடல் என்று தானே சொல்ல வேண்டும். இப்படி எல்லாம் மாய விளையாட்டு விளையாடுவதனால் தான் அவனுக்கு மாயன் என்று பெயர்.

கண்ணனாக அவதாரம் எடுத்ததும் திருவிளையாடல் தான். அதே கண்ணன் நம்மாள்வாராக அவதரித்ததும் திருவிளையாடல் தான்.

இந்த உண்மையை நான் கண்டு கொண்டேன் என்கிறார் மதுரகவி. கண்டு கொண்டதால் என் நெஞ்சம் முழுவதும் இனிக்கின்றது என்கிறார்.

இந்த அனுபவத்தைச் சொல்லச் சொல்ல என் நாவில் தித்திப்பு ஏறுகிறது. அமுதமாக ஊறுகிறது என்கிறார்.

இப்படிச் சொல்லி ஆடிப்பாடுகிறார் மதுரகவி. இனிப் பாடல்.

"தானன தன்னன
தானன தானன
*கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்*
*பண்ணி யபெரு மாயனே! பாரினில்*
*நண்ணி யகுரு கூர் நம்பி என்றக்கால்*
*அண்ணிக் கும் அமு(து) ஊறும்என் நாவுக்கே"*

*(கண்ணி நுண் சிறுதாம்பு - கண்ணி கண்ணியாகப் பின்னப்பட்ட கயிறு கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் உரலோடு சேர்ந்து கட்டுப்பட கிருஷ்ணாவதாரம் எடுத்த திருமால் தான். பாரினில் நண்ணிய திருக்குருகூர். உலகில் உள்ள ஊர்களில் எல்லாம் இனிய ஊராக விளங்கும் குருகூர். நம்பி என்றக்கால் - அந்தக் குருகூரில் அவதரித்த நம்மாள்வாரும் திருமாலின் திருவிளையாடல்தான் என்பது விளங்கிவிட்டால் விளங்கியதைச் சொல்ல ஆரம்பித்தால் அண்ணிக்கும் - தித் திக்கும், நாவில் அமிர்தம் ஊறும்.)*

*குறிப்பு :* பக்திரசம் பாடலில் சொட்டுச் சொட்டென்று சொட்டுகிறது. தேனாய்ச் சொட்டுகிறது.

## 3

**மே**லும் சொல்கிறார் மதுரகவி:

"என் கண்கண்ட தெய்வம் நம்மாள்வார் தான் இது சத்தியம். இந்த உண்மையைச் சொல்லச் சொல்ல எனக்குப் புளகாங்கிதம் உண்டாகிறது. நம்மாள்வாரின் பாடல்களைத் தெருத் தெருவாக நான் பாடவேண்டும் அதற்கு ஏற்றபடி ஆடவேண்டும். அதுதான் எனக்கு ஆனந்தம். அப்படித்தான் நான் செய்து வருகிறேன்."

*"நாவி,னால் நவிற்(று) இன்பம் அது எய்தினேன்;*
*மேவி, னேன்அவன் பொன்னடி மெய்யம்மையே;*
*தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி*
*பாவின் இன்னிசை பாடித் திரிவனே''*

*(நவிற்று இன்பம் - சொல்லச் சொல்ல உண்டாகும் சுகம். மெய்ம்மையே - இது சத்தியம், தேவு - தெய்வம், பாவின் பாடல்களின். எய்தினேன் - பெற்றேன். மேவினேன் - சரணம் என அடைந்தேன்.)*

*குறிப்பு :* மேடை ஏறிக் கூடி இருக்கும் மக்களுக்குச் சொல்வது போல இருக்கிறது பாட்டு.

## 4

**ப**க்தியைப் பற்றி வைதீகத்துக்கு என்ன தெரியும்? அந்தணர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்த ஒருவரை "நீரே தெய்வம்" எனச் சரணாகதி அடைந்தால் அதைத் தாங்க முடியுமா வைதீகர்களால்.

ஆத்திரப்பட்டார்கள். புத்திமதி சொன்னார்கள். அரட்டிப் பார்த்தார்கள். மிரட்டியும் பார்த்தார்கள்.

ஒன்றுக்கும் மசியவில்லை மதுரகவி.

நீ பிராமணனே இல்லை என்று மதுரகவியை ஒதுக்கி வைத்தார்கள். நீ மிலேச்சன், புலையன், ராட்சசன் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி மதுரகவியைத் திட்டினார்கள். பிறகு ஜாதியை விட்டே தள்ளி வைத்து விட்டார்கள் மதுரகவியை.

ஒன்றும் விளங்கமாட்டேன் என்கிறதே பண்டிதர்களுக்கு. அது தான் பாண்டித்யமோ என்று அனுதாபப் பட்டார் மதுரகவி.

இறைவன் நம்மைச் சோதிக்கிறான் என்று நினைத்தார். இறைவனுக்கு உகந்த சோதனைப் பொருளாக அல்லவா நாம் இருக்கிறோம் என்று மகிழ்ந்தார்.

தங்கத்தைத் தானே புடம் போட்டு எடுப்பார்கள். பித்தளையை யாராவது அப்படிச் செய்வார்களா என்று பெருமிதம் அடைந்தார். அதனால் தீவிரம் அடைந்தது பக்தி.

அது எப்படி வாய் திறந்து பேசுகிறது என்று பாருங்கள்.

*"நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்*
*புன்மை யாகக் கருதுவர் ஆதலின்;*
*அன்னை, யாய் அத்த,னாய் என்னை ஆண்டிடும்*
*நன்மை, யான்சட, கோபன்என், நம்பியே!"*

*(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் - சகல சௌகர் யங்களும் நிரம்பப் பெற்ற (வேதப்) பிராமணர்கள். புன்மை யாகக் கருதுவர் - அற்பனிலும் அற்பன் என்று தான் என்னைப் பற்றி முடிவு கட்டி இருக்கிறார்கள். அன்னை தாய், அத்தன் - தந்தை, தாயும் தந்தையுமாய் நின்று நம்மாள்வார் என்னை ஆதரிக்கிறார். நான் ஏன் கவலைப் படவேண்டும்?)*

உண்மையைச் சொல்லி விட வேண்டும் என்றும் ஆத்திரத்தில் கூட்டம் கூட்டி மேடைபோட்டுப் பேசுவதைப் போல் மதுரகவி சொன்னா ர். கடைசியாக மேடையை விட்டு இறங்குவதற்கு முன் உள்ளம் உருகி, உயிர் உருகி, கண்ணீர் மல்க ஒன்று சொல்கிறார்.

"பெரியோர்களே! தாய்மார்களே! குருகூர் நம்பி (நம்மாள்வார்) எனக்கு மட்டுமல்ல, உங்கள் ஒவ்வொரு வருக்கும், உலக மக்கள் எல்லாருக்குமே உள்ள உடன் பிறப்பாவார் (அன்பன்)

தன்னைத் தஞ்சம் என்று அடைந்தவர்களுக்கோ குருகூர்ப் பிரான் தன்னையே கொடுத்து விடுகிறார்.

அந்த மாபெரும் புருஷனின் அடைக்கலப் பொருளாகும். பாக்கியம் எனக்கு கிடைத்தது. அதனால் நான் சொல்வதை நம்புங்கள். மோசம் போக மாட்டீர்கள் நன்மையே விளையும்''

*இனிப்பாடல்*

*“அன்பன், தன்னை, அடைந்தவர் கட்கெல்லாம்*
*அன்பன், தென்குரு கூர்நகர் நம்பிதன்*
*அன்ப,னாய்மது ரகவி சொன்ன சொல்*
*நம்பு வார்பதி வைகுந்தம் காண்மினே!''*

என் சொல்லை நம்புகிறவர்கள் வைகுந்த பதவி (பேரானந்த நிலை) பெறுவார்கள். அதை நீங்களே உங்கள் அனுபவத்தில் பார்க்கத்தான் போகிறீர்கள்.''

இப்படிச் சொல்லி விட்டு மேடையை விட்டு இறங்குகிறார் மதுரகவி ஆள்வார்.

நம்மாள்வார் வாழ்க, மதுரகவி வாழ்க என்று ஆர்ப்பரிக் கிறது கூட்டம்.

*குறிப்பு :* தமிழும் பக்தியும் மாப்பிள்ளையும் பெண்ணும் போல. பார்ப்பதற்கு இரண்டு பேராகத் தெரிந்தாலும் உண்மை யில் ஒருவர் தான் என்னும் உண்மை கொஞ்சிக் குலாவுகின்றன பாடல்களில்.

மதுரகவி போல ஒருவர் இருந்தால் போதும் பக்தி பரவசம், ஆனந்தம் மூன்றும் தடபுடலோடு எழுந்து நிற்கும்.

வேண்டாதனவற்றையெல்லாம் காலடியில் போட்டு நசுக்கி விடும் அந்தப்பக்தி.

குருமூர்த்தத்துக்கு வேறு என்ன வேண்டும், ஆனந்த மயமாய்ச் சுடர் விட்டுப் பிரகாசித்த படியே வீற்றிருக்க வேண்டியதுதான் குருமூர்த்தம். பாடல்களில் அவ்வளவையும் பார்க்கிறோம்.

## XIII பெரியபுராணம் போதிக்கும் சமத்துவம்

**கொ**டுமைகளுக்கெல்லாம் பிறப்பிடம் சாதிவெறி. அது ஆணவத்தின் விஷக்கொடுக்கு.

சாதிவெறி என்பது அணைக்க முடியாத ஒரு கொடுந்தீ. அதை அருளாளர்கள் பக்தி என்னும் மழைவெள்ளத்தின் மூலம் அணைக்க முயல்கிறார்கள்.

பெரியபுராணம் சாதிவெறி என்கிற தீக்கொழுந்தை பக்தி என்னும் புனித நீரால் அணைக்கிறது. சமத்துவம் என்னும் ஞானச் சுடராக எழுந்து நிற்கிறது.

கிட்டத்தட்ட எழுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குமுன் சென்னையை அடுத்த குன்றத்தூரில் பிறந்தார் சேக்கிழார் என்னும் அருண்மொழித்தேவர்.

அருண்மொழித்தேவரின் தந்தையார் பெயர் வெள்ளியங் கிரி முதலியார்.

வெள்ளியங்கிரி என்னும் பெயர் தற்பொழுது கொங்கு நாட்டில் தான் அதிகப் பழக்கம். தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் கைலாசம் பிள்ளை, கைலாச ஐயர், கைலாச முதலியார் என்றுதான் அந்தப் பெயர் நடமாடுகிறது.

---

**09.02.99 ல் அன்னிய நாடுகளுக்கான அலைவரிசையில் தூத்துக்குடி வானொலியில் பேசியது.**

இனி, அருண்மொழித்தேவரின் தாயார் பெயர் அழகாம்பிகை.

அழகம்மை என்றுதான் இருந்திருக்கும் பெயர். அது எப்படியோ மாறிவிட்டது அப்படி.

இனி, சேக்கிழார் பாடியது பெரியபுராணம். பொதுவாகப் புராணம் பாடுகிறவார்கள். அதோடு நிற்க மாட்டார்கள். வேறு பல நூல்களையும் பாடுவார்கள். ஆனால் சேக்கிழாரோ பெரியபுராணம் ஒன்றோடு நின்றுவிட்டார்.

பெரியபுராணம் என்பது பின்னால் வந்த பெயர். ஆதியில் அதற்குத் தொண்டர் புராணம் என்றுதான் பெயர்.

சேக்கிழார் பிறந்தது சாதாரண குடும்பம்தான். கல்வி கேள்விகளிலோ, அரசியல் அதிகாரத்திலோ, அரசுப் பணியிலோ தடபுடலாகப் பெயர் பெற்ற குடும்பம் என்று சொல்ல வழி இல்லை.

ஆனாலும் கல்வி கேள்விகளில் வல்லவராகிவிட்டார் சேக்கிழார்.

பலபல நூல்களை ஐயம் திரிபறக் கற்றார். கற்றது மட்டுமல்ல, கற்றவற்றில் எது உண்மை, எது போலி என்பதையும் கண்டார்.

கண்டது மட்டுமா? இதுதான் உறுதியானது என்று உண்மையை அனுபவித்தார் வாழும் நெறி என்பது இது தான் எனத்தெளிந்தார்.

நம்பினபடியே நடந்தார்.

தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்களும் அடியவர்களின் வரலாறுகளுமே சேக்கிழார் கற்ற கல்வி. அதிலும் சிவனடியார்கள் பற்றிய வரலாறுகளை மிக்க ஈடு பாட்டோடு கற்றார் சேக்கிழார்.

சிவனடியார்களின் பக்தியும் ஊக்கமுமே சேக்கிழாருக்கு விருப்பப் பாடமாக அமைந்தன.

அடியவர்களின் வரலாற்றில் சேக்கிழார் கண்ட உண்மை இதுதான், சாதிவேற்றுமையும், அதன் மூலம் வரும் மேல் கீழ் என்பதும் பித்தலாட்டம்.

அடியார் திருக்கூட்டத்தில் இந்த வேற்றுமைக்கு இடமே கிடையாது.

உண்மையான அடியவர்கள் இந்தப் பித்தலாட்டத்தைப் பஞ்சமாபாதகம் என்று வெறுத்துத் தள்ளிவிட்டார்கள்.

பக்தியின் மூலம் அந்தக் கொடிய நஞ்சைக் கரைத்து அமிர்தமாக வடித்தெடுத்து விட்டார்கள்.

சமத்வம் என்னும் தேவாமிர்தமாகவே வடித்தெடுத்து விட்டார்கள்.

அந்தச் சமத்வத்தையே கண்ணாகக் கண்டார் சேக்கிழார். அதையே பொருளாக வைத்துத் தொண்டர் புராணத்தை இயற்றினார் சேக்கிழார். சேக்கிழார் காலத்தில் படிப்புக்கு வசதி கிடையாது.

மருத்துவம், பொறியியல், விலங்கியல், உயரியில் என் றெல்லாம் கல்வியில் பிரிவுகள் இல்லை.

அச்சும் கிடையாது, மின்சாரவிளக்கும்கூட இல்லை.

அரண்மனை போன்ற கல்விக் கூடங்கள், விரிவுரையாளர் கள், பேராசிரியர்கள், செய்தித்தாள், வானொலி, பாடப்புத்தகம், தேர்வு, தேர்வின் முடிவு என்றெல்லாம் ஒன்றுமே இல்லை.

பாடல்கள்தாம் பாடம், அகல்விளக்குத்தான் வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதி எழுதிப் படித்தவர்தான் சேக்கிழார்.

இப்படி எல்லாம் சிரமப்பட்டுப் படிக்க வேண்டி இருந்த தால் படிப்பே வேண்டாம் என்று பலர் ஒதுங்கி விட்டார்கள்.

சிலர் மட்டும் ஆர்வத்தோடு படித்தார்கள், படிப்பில் ஓர் ஆவேசம் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால் தான் ஆர்வம் வரும்.

உண்மையைக் காணவேண்டும் என்கிற ஆர்வம் காதலாய் அப்பொழுதுதான் கசியும். அது தீராக் காதலாகவே ஊறும்.

சேக்கிழாருக்கு ஆர்வமும் வேகமும் கல்வியில் உண்டாயின.

கற்றுவல்ல அறிஞராய் ஆன்றவிந்தடங்கிய சான்றோ ராய்த் திகழ்ந்தார் சேக்கிழார்.

சேக்கிழாரின் புலமையையும் பண்பட்ட இதயப் பாங்கை யும் தொடர்ந்து கேள்விப்பட்டு வந்தான் அநபாயன் என்னும் சோழ மன்னன்.

அவருக்கு அரசாங்கப் பதவி கொடுத்தான் மன்னன். படிப்படியாக முன்னேறி சோழ சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியாகவே உயர்ந்து விட்டார் சேக்கிழார்.

சாதாரண நிலையிலிருந்து இப்படி ஓர் அசாதாரண நிலைக்கு உயர்ந்து விடுகிறார்கள் சிலர். இந்த வாய்ப்பு பலருக்குக் கிடைப்பதில்லை.

ஏன் இந்த வினோதம் என்று பலரும் திகைக்கிறார்கள்.

கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் உண்மை பளிச்சென்று புலப்படும்.

மற்றவர்களிடம் இல்லாத ஓர் அம்சம் - பரிவுணர்ச்சி ஏதோ ஓர் உருவத்தில் இவர்களிடம் நிச்சயம் இருக்கும். சேக் கிழார் காலத்தில் சாதிவேற்றுமைகள் அதிகம். எண்ணற்ற சாதிகள். அதில் எண்ணற்ற உயர்வு தாழ்வுகள்.

இந்த வேற்றுமையிலிருந்தும் உயர்வு தாழ்வுகளிலி ருந்தும் பலபல கொடுமைகள் தோன்றின.

ஞானத்திலும் சீலத்திலும் ஒருவன் எவ்வளவு சிறந்திருந் தாலும் சரி அவன் குலத்தாரைத் தவிர மற்ற இனத்தார் யாரும் அதைக் கண்டு கொள்ளவே மாட்டார்கள்.

கண்டுகொள்ளாதது மட்டுமல்ல "அந்தச் சாதியா? அதில் பிறந்தவன் எப்படி மனுசனாகலாம்?'' என்று வயிறு எரிவார்கள்.

தலை எடுக்க விடாமல் எப்படி எல்லாம் புதைகுழியுள் போட்டு மூடவேண்டுமோ அப்படி எல்லாம் போட்டு அவனை மூடியே விடுவார்கள்.

இதைவிட அநியாயம் - பஞ்சமாபதகம் உலகில் வேறு ஏதாவது உண்டா

இல்லை, இல்லவே இல்லை.

ஆனாலும் ஒன்று உண்டு.

அது என்ன?

தங்கள் குலத்தைச் சேர்ந்த தறுதலை ஒருவன் ஏதாவது ஒரு துறையில் அரைகுறையாகத் தெரிந்திருப்பான்.

அதுபோதும் அந்த இனத்தாருக்கு. அவனைக் கலை உலகக் காவலன் என்பார்கள். உலகுய்ய வந்த உத்தமன் என்பார்கள்.

எல்லாம் அறிந்த இனியவன் என்றும், அறிவின் ஒளி என்றும், ஆற்றலின் பிறப்பிடமென்றும் அவனைப் போற்று வார்கள்.

உண்மையை மறைப்பது குற்றம். அதைவிடக்கொடுங் குற்றம் பொய்யை மெய்யென்று ஜோடிப்பது.

இந்த அநியாயங்கள் ஒவ்வொன்றாய் சேக்கிழாரின் பிஞ்சு உள்ளத்தில் வந்து விழுந்தன. நஞ்சுதடவிய கூரிய அம்புகள் போல் அவருள்ளத்தைக் குத்திக் குதறின.

அதனால் நிம்மதி போய்விட்டது சேக்கிழாருக்கு. நிம்மதிக்காகவே தலயாத்திரையை மேற்கொண்டார் சேக்கிழார்.

பல கோயில்களில் வழிபாடு செய்தார். கும்பகோணத்தை ஒட்டிய திருநாகேஸ்வரம் கோயிலுக்கும் வந்தார்.

அங்குதான் அவருக்கு ஓர் உறுதி கிடைத்தது. சிவனடியார்களின் வரலாற்றைக் கதையாக அமைத்துப் பாடுவது. அதன் மூலம் சாதி வேற்றுமையற்ற சமத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவது என்னும் உறுதி பிறந்தது.

இளம் வயதில் முளைத்து வாலிபத்தில் தளிர்த்துத் துளிர்த்த சமத்துவ உணர்ச்சி அமைச்சரான பிறகு காய்த்துக் கனியத் தொடங்கியது .

சிவனடியார்களின் வரலாறுகளோ "எங்களைக் கதைகளாக உருவாக்குக - பிறகு பாடல்களாகச் சொரிக" என்று சேக்கிழாரை வற்புறுத்தின.

அப்படித்தவமிருந்து பெற்றெடுத்த குழந்தை தான் திருத்தொண்டர்புராணம்.

❋ ❋ ❋

**அ**ந்தணர் குலத்தில் பிறந்தவர் ஞான சம்பந்தர். வேதம், ஓமம், யாகம் என்கின்ற சடங்குகளிலேயே தோய்ந்து கிடக்கிற குடும்பம் அது. ஆனாலும் அவற்றை எல்லாம் உதறி எறிந்து விட்டு வெளியே வந்தவர் சம்பந்தர்.

“இதோபார் இறைவனை!" என்று தமிழிலும் தமிழிசையிலும் வெளிப்படுத்திக் காட்டியவர் ஞானசம்பந்தர். அவருடைய வரலாறு சேக்கிழார் இதயத்தைக் குழைத்துக் குழைத்துப் பிசைந்தது.

அதுமட்டுமா? மட்டமான குலத்தவர் என்று வெறுத்து ஒதுக்கப்பட்ட பாணரை - யாழ்ப்பாணரை தமக்கு நிகராக வைத்து உபசரித்தார் ஞானசம்பந்தர்.

தான்வேறு - பாணர்வேறு அல்ல என்று வாழ்நாள் முழுவதும் உணர்த்தினார் ஞானசம்பந்தர்.

அந்த ஞானசம்பந்தரின் வரலாறு மனசைவிட்டு விலகுமா? கண்ணக்குள்ளேயே நிற்கத்தானே செய்யும்.

இனி திருநாவுக்கரசரோ வேளாண் குலத்தவர். அப்பூதி யடிகளோ அந்தணர். ஆனாலும் அப்பூதியடிகளுக்குக் கண்கண்ட தெய்வம் திருநாவுக்கரசுதான்.

திருநாவுக்கரசை நேருக்கு நேராகப் பார்த்ததில்லை அப்பூதியடிகள். அப்படி இருந்தும் திருநாவுக்கரசு மேல் பக்தி பெருகியது அப்பூதியடிகளுக்கு.

தம் வீடு, பசு, காளை, மூத்தமகன், நடுவுள்ள மகன், இளையமகன், தண்ணீர்ப்பந்தல், மோர்ப்பந்தல், தென்னந் தோப்பு, வயல் எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே வைத்தார்.

அந்தப் பெயரை நினைப்பதிலும். உச்சரிப்பதிலும், பார்ப்பதிலும் அப்பூதியடிகள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

சாதிச்சழக்குகள் மண்டிக்கிடந்தன சமுதாயத்தில் அதே சமுதாயத்தில் அவற்றை வேரறுக்கவந்த சமத்துவமும் அங்கங்கே முளைவிடத்தான் செய்தன.

ஆனால் நல்லனவற்றை முளையிலேயே கிள்ளி எறியும் வேலைகளையும் சிலர் தொடர்ந்து செய்துதான் வந்தனர்.

இவ்வளவையும் பார்த்தார் சேக்கிழார். பார்த்துப் பார்த்து வியப்புற்றார்.

இனி, சுந்தரமூர்த்தி நாயனாரோ ஆதிசைவர் குலத்தில் பிறந்தவர்.

அளவுக்கு மீறி ஆசாரத்தைக் கடைப் பிடிப்பவர்கள் ஆதிசைவர்கள்.

அப்படி இருந்தும் கணிகையர் குலப் பெண்மணியைக் காதலித்தார் சுந்தரர்.

காதலித்ததோடு நிற்கவில்லை. காதலித்த பெண்ணைக் கல்யாணமும் செய்து கொண்டார் சுந்தரர்.

சேற்றில் முளைத்த செந்தாமரை போலச் சாதிச்சழக்குகள் நிறைந்த சமுதாயத்திலேயே சமுத்துவமும் பூத்துக் குலுங்கியது.

அதைக்கண்ட சேக்கிழாருக்கு அதன்மேல் பக்தியே உண்டாகிவிட்டது. திருஞானசம்பந்தர் புராணம், திருநாவுக் கரசர் புராணம், சுந்தரமூர்த்திநாயனார் புராணம் என்று படலம் படலமாக உருவெடுத்து வந்தது சேக்கிழாரின் அனுபவ உணர்ச்சி.

* * *

**இ**னி பக்தர்கள் என்றால் - அடியார்கள் என்றால் அவர் களுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. லட்சோபலட்சம் பேர் இருப்பார்கள் பக்தர்கள்.

உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் பக்தி காரண மாக அர்ப்பணித்தவர்களோ ஆயிரம் ஆயிரம்.

தொடர்ந்து வந்து தங்களைத் தாக்கிய இன்னல்களை எல்லாம் அடக்க ஒடுக்கமாக ஏற்றுக்கொண்டு, உறுதி தளராமல் அவர்கள் வாழ்ந்தார்கள்.

பொறையுடைமை என்றால் அதுதான்.

அந்தப் பொறையுடைமையில் தான் அருளாளர்களின் காதல் மயமான பக்தி ஜெகஜோதியாய் ஒளிர்ந்தது.

அத்தனை பக்தர்களுக்கும் அடையாளமாக ஒரு சில பக்தர்களை எடுத்து அறுபத்து மூவர், நால்வர் என்றெல்லாம் தொகுத்து பக்தியை அனுபவித்திருக்கிறார்கள் மக்கள்.

கதைகளாகவும் நாடகங்களாகவும் போட்டு அனுபவித் திருக்கிறார்கள் மக்கள்.

இசை, தாளம், நடனம் எல்லாம் சேர்ந்து பக்திக்குப் பாடல் என்கிற உருவம் கொடுக்கின்றன. கண்ணப்ப நாயனார் கதை, திருநாளைப்போவார் (நந்தனார்) கதை, திருநீலகண்ட நாயனார் கதை ஆகியவற்றை தம்மை மறந்து மக்கள் அனுபவிப்பதைச் சேக்கிழார் கண்டார்.

இவர் வேடரென்றோ, இவர் புலையர் என்றோ இவர் குயவர்தானே என்றோ ஒருவரும் சாதி வித்தியாசம் காட்டவில்லை.

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் இவர்களுடைய கதை களை எப்படி எப்படி அனுபவித்து ஆனந்தமடைந்தார்களோ அப்படி அப்படியே கண்ணப்பர் முதலியவர்களுடைய கதைகளையும் அனுபவித்து ஆனந்தித்தார்கள் மக்கள்.

இந்தக் காட்சி சேக்கிழாரின் கண்களுக்குக் குளுமை ஊட்டியது. அதைவிட அவருடைய இதயத்துக்கு குளுமை கொடுத்தது.

கண்ணப்பர் முதலியோரின் வரலாற்றையும் அழகிய கதைகளாக வடித்தெடுத்துப் பெரிய புராணத்தில் சேர்த்துக் கொண்டார்.

ஞானசம்பந்தர் அந்தணர் குலம், அப்பர் வேளாளர் இனம், சுந்தரரோ ஆதிசைவர்.

அந்தக்காலத்தில் இவர்களுடைய குலம் எல்லாம் மிகமிக முன்னேறிய குலம்.

உயர்ந்த கல்விமான்கள் இவர்கள். சிறந்த சிந்தனை யாளர்கள் இவர்கள். தெய்வ அருள் பெற்றுக் கவியாய்ப் பூத்துச் சொரிந்தவர்கள் இவர்கள்.

தமிழகம் எங்கும் அடைபட்டுக் கிடந்த கோயில்களைத் திறந்து மக்கள் வழிபட்டு மகிழச் செய்தவர்கள் இவர்கள். மூடிய கோயில்களைத் திறப்பதற்காகவே மக்களை ஒன்று திரட்டினார்கள் இவர்கள்.

சைவத்தை மறந்து, தமிழை மறந்து, தமிழ்ப் பண் பாட்டையே இழந்து எப்படி எப்படியோ திரிந்த லட்சோப லட்சம் பேரைப் பழையபடி தமிழர்களாக வாழ வைத்தவர்கள் அந்தத் தியாக மூர்த்திகள்.

சமணப் பிடியிலிருந்து தமிழையும் தமிழர்களையும் விடுவித்தவர்கள் இந்த உத்தமர்கள்.

இப்படி எத்தனை எத்தனையோ பெருஞ் சிறப்புக்களுக்கு உரியவர்கள் ஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள்.

ஆனால் கண்ணப்பர், திருநாளைப் போவார், திருநீல கண்டர் ஆகியவர்களிடம் அப்படி ஒன்றும் இல்லை.

தாம் உண்டு தம் காரியம் உண்டென்று எளிமையாய் வாழ்ந்தவர்கள் இவர்கள்.

இறைவன் பால் வைத்த உறுதியான ஈடுபாடு என்கிற ஒன்றுதான் அவர்களிடம் இருந்தது.

அந்த ஒன்றை வைத்தே அவர்களை உலகறியச்செய்து விட்டார் சேக்கிழார்.

ஞானசம்பந்தர் முதலியவர்களுக்கு உரிய பெருமை களும் சிறப்புகளும் இவர்களுக்கும் உண்டு என்கிற உரிமையை நிலை நாட்டியவர் சேக்கிழார்.

மேலும் அதிபத்தர் என்பவர் பரதர்குலத்தைச் சேர்ந்தவர். வலையில் விழும் மீன்களில் முதல் மீனை இறைவனுக்குக் காணிக்கையாகப் படைத்து வந்தார் அதிபத்தர்.

அதிபத்தரைச் சோதிக்க இறைவனே திருவிளையாடல் புரிந்தார். அதாவது வலையில் ஒரு மீன் மட்டும் விழும்படி செய்தார். பலபல நாட்கள் அதே சோதனையைத் தொடர்ந்து செய்தார் பெருமான்.

நுண்மாண் நுழைபுலம் இல்லாத அதிபத்தரோ அந்த மீனையும் இறைவனுக்கு அர்ப்பணித்து வந்தார். தொடர்ந்து அப்படியே செய்து பட்டிணியும் கிடந்தார்.

அதிபத்தர் காரியம் அவ்வளவு தான் ஆனாலும் அவரை அருளாளர்கள் வரிசையில் நிறுத்தி சமத்துவத்தைக் காட்டு கிறது பெரிய புராணம்.

அதேபோல ஆனாயர்(இடையர்) கலியர்(செக்காட்டு பவர்) திருக்குறிப்புத்தொண்டர்(வெளுப்பவர்) நேசர் (நெசவாளி) முதலிய பலரும் சாதாரண நிலையில் உள்ளவர்கள் தாம்.

அவர்களை எல்லாம் திருநாவுக்கரசர் போன்ற ஆதரவாளர்களின் வரிசையில் வைத்து வேற்றுமையை ஒழித்துக்கட்டியது பெரியபுராணம்.

சாதி வேற்றுமை, நாகரீக வேற்றுமை, செல்வ வேற்றுமை, புகழ் வேற்றுமை எல்லாவற்றையும் தட்டி நொறுக்கி சமத்துவக் கொடியைத் தூக்கிப் பிடிக்கிறது பெரிய புராணம்.

சேக்கிழார் பாடிய வெரியபுராணத்தில் சமத்துவ ஞானம் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவீசுகிறது.

இவர் அந்தணர் என்றோ, இவர் புலையர் என்றோ அரு ளாளர்களிடம் வித்தியாசம் காட்டவில்லை இறைவன்.

காளை வாகனத்தில் ஏறி அம்மையப்பனாய் ஞான சம்பந் தரின் பக்தியில் உருகிக் கரைகிறார் பெருமான். திருக்கயிலை யிலும் சம்பந்தருக்கு இடம் அருளிவிடுகிறார் எல்லாம் வல்ல சிவபெருமான்.

பெருமான் சம்பந்தருக்கு எப்படிக் காட்சி கொடுத்துப் பாராட்டி ஆனந்த நிலை அருளினாரோ, அப்படியே கண்ணப்பருக்கும் செய்கிறார்.

அத்தனை மெய்யடியார்களுக்கும் அப்படி அப்படியே நடக்கிறது இறையருள்.

சாதி வித்தியாசம் இறைவனிடம் இல்லை. அப்படியானால் அது மனிதர்களிடம் எப்படி இருக்கலாம்?

இந்தச் சிந்தனையில் எழுந்தது தான் பெரியபுராணம் அது போதிப்பது சமத்துவம் ஒன்றைத்தான். ஆனால் பெரிய புராணத்தில் உள்ள பாடல்களில் கவிச்சுவை அவ்வளவாக இல்லை.

ஆனாலும் வேற்றுமையை வேரறக்களைந்து எல்லாரும் மனிதர்கள்தாம் என்னும் ஒருமை உணர்ச்சியை ஊட்டுகிறது பெரியபுராணம்.

அதனால்தான் அப்பர் சுந்தரர், காரைக்கால் அம்மையார், சம்பந்தர், மாணிக்கவாசகர், திருமூலர் முதலிய அருளாளர்கள் பாடிய திருமுறைகளின் வரிசையில் பெரியபுராணமும் ஒரு திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசியல் செல்வாக்கு மட்டுமல்ல சமத்துவம் என்னும் திருவருள் செல்வாக்கும் சேர்ந்துதான் சேக்கிழாரை உயர்த்தி யது: ஞான சம்பந்தர் போன்ற அருளாளர்கள் வரிசையில் இணைத்து வைத்திருக்கிறது சேக்கிழாரை.

பல்லவர் மரபைச் சேர்ந்த ஒருவன் காடவர்கோன் என்பது அவன் பெயர்.

தன்னுடைய செல்வத்தை வல்லாம் போட்டு மாபெரும் கோயில் ஒன்று சிவபெருமானுக்குக் காஞ்சிபுரத்தில் கட்டினான். அதற்குக் கும்பாபிஷேகம் நடத்த நாளும் குறிப் பிட்டு வைத்தான்.

கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் இரவு மன்னனுடைய கனவில் சிவபெருமான் தோன்றி,

“அன்பனே! நாளை உன்னுடைய கும்பாபிஷேகத்தில் நாம் எழுந்தருள முடியாது. காரணம் திருநின்ற ஊரில் பூசலார் என்னும் அன்பன் ஒரு கோயில் கட்டி இருக்கிறான்.

அதற்கும் நாளைத்தான் கும்பாபிஷேகம். அங்கு எழுந்தருள்கிறோம் நாம்.

"பின்னொரு நாளில் நீ குட முழுக்கு நடத்து வருகிறோம் என்றார் பெருமான்."

மன்னன் துணுக்குற்றான், விடிந்ததும் விடியாததுமாகத் திருநின்ற ஊருக்குப் பரிவாரத்தோடு வந்தான். பூசலார் கட்டிய கோயில் எங்கே இருக்கிறது என்று விசாரித்தான்.

அப்படி ஒன்றும் கோவில் கட்டுமானம் நடைபெற இல்லையே என்றனர் ஊரார்.

திகைப்புற்ற அரசன் பூசலாரிடமே வந்தான். விபரம் கேட்டான் பூசலார் சொன்னார்.

"கல் கோவில் கட்ட என்னிடம் ஏது பணம்? ஆனாலும் பக்தி உணர்ச்சியால் ஒரு கோயில் கட்டி இருக்கிறேன்.

பெருமானுக்கு ஓர் ஆலயம் எழுப்ப வேண்டுமே என்னும் ஆர்வத்தில் மனத்தாலேயே பணத்தைத் திரட்டினேன். செங்கல், சுண்ணாம்பு, சாந்து தயாரித்தேன்.

மனத்தை வைத்தே மண்டபம், உண்ணாழி, கருவறை, வெளிப்புறம், கோபுரம், தூண், மதில், நந்தவனம், நீராழி எல்லாம் வகுத்துவிட்டேன்.

அதே மனத்தாலேயே இன்றைக்குக் குட முழுக்கும் நடத்தி விட்டேன்" என்றார்.

அதிசயம் தாங்க முடியாத மன்னன் பூசலார் காலில் விழுந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

இப்படி ஓர் அற்புதக் கதை பெரியபுராணத்தில், அதே போல அப்பூதியடிகள் கதை.

சாக்கிய நாயனார், இளையான் குடிமாற நாயனார், திருமூலர், வாயிலார், எறிபத்தநாயனார், மெய்ப் பொருள் நாயனார் இவர்களுடைய வரலாறுகளும் உண்ண உண்ணத் தெவிட்டாத அமிர்தமாக இருக்கின்றன.

கதைகளின் அமைப்பும், போக்கும், அற்புதமான முடிப்பும் நம்மை வியக்கவைக்கின்றன.

தற்காலத்துக் கதாசிரியர் சொல்கிறார்களே மாடர்ன் டெக்னிக்'' என்று, அப்படி ஓர் அதிசய உத்தியில் சொன்னது சொன்னபடி நின்று பேசுகின்றன கதைகள்.

தோசையைத் திருப்பிப் போடுவது போல அற்புதமாய் விஷயத்துக்கு உருவம் கொடுத்து நினைத்த இடத்தில் நினைத்தபடி முடிகிறது கதை.

டியூமாப்பசான், ஆண்டான் செகாவ் போன்றவர்கள் சிறுகதையில் அதி அற்புதமான உருவத்தைப் படைத்தவர்கள் என்று சொல்வார்கள்.

பெரியபுராணத்தில் உள்ள மேலே சொன்ன கதைகளிலும் அப்படி ஓர் அதி அற்புதமான உருவம் நிறைந்துள்ளது.

இந்தக்கதைகளைப் பள்ளிக் குழந்தைகள் பாடமாகப் படிக்க வேண்டும்.

பெரியவர்களுக்கு நாடகம் போட்டு ஊர் ஊராகக் காட்ட வேண்டும். வில்லுப்பாட்டு முதலிய துறைகளில் நடமாட வேண்டும் கதைகள்,

அப்படி யார் செய்கிறார்கள்?

இனி, காலத்துக்கு ஒவ்வாத கதைகள் சிலவும் பெரிய புராணத்தில் உள்ளன.

அந்தக் கதைகளை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள் பலர்.

எடுத்துக் கொண்டு அவற்றுக்கு வேண்டாத வியாக் யானம் பண்ணித் தெய்வீக முலாம் பூசுகிறார்கள் அவர்கள்.

மற்றும் சிலரோ "பார்த்தீர்களா, பார்த்தீர்களா? பெரிய புராணத்தின் லட்சணத்தை இது ஒரு கதையா? இதை நம்பலாமா?" என்று குத்திக் குதறுகிறார்கள்.

படாதபாடுபடுகிறது பெரிபுராணம்.

வேண்டாதவற்றை நீக்கி வேண்டியவற்றைப் பாது காக்குகிற புத்தி வேண்டும். அது இருந்தால் போதும்.

தொல்லைக்கு இடமே இல்லை.

# XIV பெரியபுராணமும் கவிப்பண்பும்

நான் பிறந்து வளர்ந்தது சிறிய பட்டிக்காடு (குக்கிராமம்) தான். ஆனாலும் அதில் சாவடி ஒன்று இருந்தது. எப்பொழுதும் பத்துப் பதினைந்துபேர் அதில் குழுமி இருப்பார்கள்.

கோடுகள் இழுத்துக் கட்டங்கள் போடுவார்கள். களம் அமைப்பார்கள். புளியமுத்து வேப்பமுத்து பொடிப்பொடிக் கற்கள் இவற்றையே நாய், புலி என்று வைத்துக் கொள்வார்கள்.

அப்படி வைத்துக் காய்களை நகர்த்தும் ஆட்டத்துக்குப் பதினைந்தாம் புலி என்று பெயர்.

சிலர் அப்படி ஆட்டம் போடுவார்கள். சிலர் ஊர்க்கதை பேசுவார்கள்.

வேறு சிலரோ பாரதம், ராமாயணம் இவற்றிலிருந்து கருத்துப் பரிவர்த்தனை செய்து கொண்டிருப்பார்கள்.

பகல் பொழுது இப்படிக் கழியும். இரவு வந்து விட்டால் சாவடியில் ஒரு பாரதக்கதையை (வசனத்தில்தான்) ஆனாலும் அதை ராகம் போட்டு வாசிப்பார் ஒருவர்.

ஊர் மக்கள் பலர் ஆண், பெண், சிறுவர் எல்லாருமே கூடி இருந்து கதையை அனுபவித்துக் கேட்பார்கள்.

வெளியூரைச் சேர்ந்த புலவர்கள்-கவிராயர்கள் என்று சிலர், சில சமயம் வருவார்கள்.

அவர்கள் நல்ல வித்வான்களாக இருந்தால் அவர்களைக் கொண்டு ராமாயணம் பிரசங்கம் பண்ண ஏற்பாடாகும்.

ராமாயணப் பிரசங்கம் தொடர்ந்து நடக்கும். ஒரு மாதம் ஒன்றரை மாதம் என்றுகூடத் தொடர்ந்து நடக்கும்.

வந்திருந்து பிரசங்கம் கேட்டவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சுண்டல் கொடுப்பார்கள். தாளிதம் ஆன கடலைச் சுண்டல் கமகம என்று மணக்கும். இரண்டு கைநிறைய சுண்டல் கிடைக்கும்.

பட்டாபிஷேகத்தன்று நெய்யொழுகும் சர்க்கரைப் பொங்கலும் சுண்டலோடு சேர்த்துக் கொடுப்பார்கள். சில சமயம் வெண் பொங்கல், சர்க்கரைப்பொங்கல், சுண்டல், வடை என்று தடபுடலாக இருக்கும்.

என்னுடைய ஊரில் இருந்ததுபோலவே பல ஊர்களில் சாவடி, கதை, பிரசங்கம் என்று நடந்து வந்தன.

இந்தச் சாவடிகளுக்கு ராமாயணச் சாவடி என்பது தான் பெயர்.

பாரதக்கதை வசனம், கம்பராமாயணம் பாடல்கள், விளக்கங்கள் இப்படித்தான் சாவடிகளில் நடந்தன.

அபூர்வமாகச் சில இடங்களில் சில சமயங்களில் திருவிளையாடல் புராணமும் பிரசங்கம் செய்யப் பட்டது.

நளவெண்பாவையோ, நைடதத்தையோ, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றையோ பிரசங்கம் பண்ணி நான் பார்த்ததும் இல்லை. கேட்டதும் இல்லை. பெரியபுராணம் கந்த புராணம் போன்ற நூல்களின் கதையும் அப்படித்தான்.

பிரசங்கம் பண்ணும் புலவரின் பக்கத்தில் ஒருவர் இருப்பார். அவருக்குக் கையாள் என்று பெயர், கற்றுக்குட்டி என்றும் சொல்வார்கள்.

அவர்தான் முதலில் பாடலை எடுத்து நிறுத்தி அழகாகப் பாடுவார். தோடி,நாத நாமக்கிரியை, வசந்தா, பைரவி, சங்கராபரணம், அடாணா முதலிய ராகங்களில் பாடலை எடுத்து அவர் பாடப் பாட சபை அப்படியே உருகிவிடும்.

கற்றுக்குட்டி பாடி நிறுத்தியவுடன் பிரசங்கியார் பாடலைப் பூட்டுப் பூட்டாகக் கழற்றுவார். இரண்டிரெண்டு சீர்களாகவோ, மும்மூன்று சீர்களாகவோ உருவி எடுப்பார். ஏதாவது ஒரு ராகம் போட்டபடி தான் எடுப்பார். பிறகு அவற்றுக்கு நேர் உரைபுகன்று கதை கண்ணிகளோடு அலங்காரமான விளக்கவுரை சொல்லி முடிப்பார்.

பொழுது போவதே தெரியாது. அப்படி ரசமாக இருக்கும் பாடல்களும் விளக்கங்களும்.

1932 – 33ஆம் வருடத்திலேயே கவிராயருக்குக் கையேடு வாசிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அதற்கும் முன்னால் அதாவது 1930 - 31 வருடத்தி லிருந்தே பாரதக் கதையை வசனத்தில் ராகத்தோடு வாசிக்கிற வாய்ப்பும் கிடைத்துவிட்டது.

ஒன்பது பத்து வயதுச் சிறுவன் இப்படி சந்தத்தில் கதையைச் சொல்கிறானே என்று ஊர் மக்கள் வியந்தார்கள்.

அவர்களுடைய வியப்புத்தான் கையேடு வாசிக்கிற அளவுக்கு முன்னேற வைத்தது.

அது மட்டுமல்ல, தரமான கவிராயர்கள் ராமாயணப் பிரசங்கத்துக்குக் கிடைக்கவில்லை என்றால் "நீயே ராமா யணத்தைச் சொல்லப்பா" என்று ஊரார் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

நானும் கதை சொல்லி வியாக்யானம் பண்ணினேன். ஆனால் புலவர் பெருமக்கள் போல் அவதாரத்திலிருந்து பட்டாபிஷேகம் வரை முறைப் படி தொடர்ந்து சொல்ல வில்லை நான்.

எனக்கு விளங்கிய பாடல்கள் ஆறு காண்டங்களிலும் அங்கங்கே ஒன்றிரெண்டாகக் கிடந்தன. அவற்றை எடுத்துத் தான் விளக்கம் கொடுத்தேன்.

கேட்பவர்களுக்கு இந்த முறை பிடித்து விட்டது. அதனால் என் பெயர் பக்கத்து ஊர்களிலும் பரவியது. இந்த வேளையில் அப்பாவுப் பிள்ளை என்று ஒரு தண்டா முண்டாப் பேர் வழி வந்தார்.

அப்பாத்துரைப் பிள்ளை என்கிற பெயர் தான் அப்பாவுப் பிள்ளை என்று சுருண்டு விட்டது.

அவர் என் ஊருக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தி லுள்ள வெயிலு கந்தபுரம் என்னும் ஊர்க்காரர்.

நிகண்டு, அகராதி, புராணங்கள். பட்டினத்தார், தாயு மானவர், தேவாரம், திருவாசகம் ஆகியவை எல்லாம் அவருக்கு அத்துப்படி.

முரட்டுச் சைவபக்தர், அணுவளவு கூட விட்டுக் கொடுக்க மாட்டார் சைவத்தை.

காராச்சேவு போட்டு பல ஊர்க்கடைகளுக்கு விற்பனை செய்தவர். அந்த வியாபாரத்தில் நல்ல சம்பாத்யம். வயதான பின் சேவு வியாபாரத்தை மக்களிடம் ஒப்படைத்து விட்டார். அதனால் சைவம் அவரை கெட்டியாக இறுகப் பற்றிக் கொண்டது.

சைவ வைணவ விவாதம் என்றால் அதில் அப்பாவுப் பிள்ளையின் சொற்கள் கார சாரமாக இருக்கும். அதனால் காராச் சேவு அப்பாவுப் பிள்ளை என்றே பேச ஆரம்பித்து விட்டார்கள் ஊரார்.

எழுபது வயதைத் தாண்டிய காராச் சேவு அப்பாவுப் பிள்ளை கைத்தடியை ஊன்றிய படியே என்னைத்தேடி பதின் மூன்று பதினான்கு வயதே ஆன என்னைத் தேடி ஊர்விட்டு ஊர்வந்தார்.

வந்தவேகத்தில் என்னைப் பார்த்து" நீ ஒரு சைவன் தானடா?" என்று கடுகடுப்போடு கேட்டார்.

"ஒழுங்கான சைவப் பயல் கம்பனைக் கையாலே தொடுவானாடா? முட்டாள்! இனிமேல் அதைத் தூக்கிக் குப்பைக் குழியில் போட்டுவிட்டு பெரியபுராணத்தைப்படி, கந்தபுராணத்தைப்படி" என்று பொரிந்து தள்ளினார்.

அந்த வேகத்தில் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை காராச் சேவுப் பிள்ளை, விறுவிறு என்று ஊரை நோக்கிக் கிளம்பி விட்டார்.

அப்பாவுப் பிள்ளைக்காகப் பெரியபுராணத்தைப் படித்தேன், மாறி மாறிப் படித்துப் பார்த்தேன். கவி, கவிநயம் என்று ஒன்றுமே விளங்கவில்லை எனக்கு.

பெரியபுராணத்தில் கதை இருந்தது. ஏதோ விஷயமும் இருந்தது. செய்யுள்கள் இருந்தன, எதுகை, மோனை, சீர், தளை, அடி, தொடை என்கிற யாப்பும் அதன் கூறுபாடுகளும் இருக்கவே செய்தன. ஆனால் கவி என்பதாக ஒன்றும் தென்படவில்லை எனக்கு.

மனசைத் தொட்டு உறவாடுகிற கவி என்பது என் பார்வைக்கு புலப்படவே இல்லை.

சேக்கிழார் பெருமானின் வருணனைகளும் கற்பனை களும் கூட ஏனோ தானோ என்று தான் இருந்தன.

ஏமாந்து நின்றதுதான் மிச்சம். இது முதல் அனுபவம். இது நடந்தது 1935 - 36ஆம் வருடத்தில். அதற்குப் பதின்மூன்று பதனான்கு வருடங்கள் கழித்து அதாவது 1950ஆம் ஆண்டை ஒட்டி நடந்த ஒரு நிகழ்ச்சி.

அப்பொழுது நான் கழுகு மலை என்னும் ஊரில் - முருகப் பொருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஊரில் தமிழாசியராக இருந்தேன்.

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துக்கும், பக்த கோடிகளின் விழாக்களுக்கும் உகப்பான ஊர்கழுகுமலை.

அப்பொழுது பிச்சைக் குட்டி என்னும் நண்பர் சாத்தூரில் இருந்தார். அவர் பிறந்து வளர்ந்தது கோவில் பட்டி. ஆரம்பத் தில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு ஹோமியோபதி டாக்டராகத் திகழ்ந்தார்.

பிச்சைக்குட்டி சுறுசுறுப்பானவர். துறுதுறு என்றிருப்பார். சும்மா இருக்கவே மாட்டார். ஏதாவது புதிய புதிய துறைகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலே யுமே கண்ணும் கருத்துமாக இருப்பார்.

ஹோமியோபதி சிகிச்சை முறையில் பல பல உத்தி களைக் கையாண்டவர் அவர். அது நல்ல பலனைக் கொடுத்தது. அதனால் சாத்தூர் வட்டாரம் முழுவதிலும் டாக்டரையா, டாக்டரையா என்றே பிச்சைக் குட்டியின் பெயர் தொனித்துக் கொண்டிருந்தது. மருத்துவத் தொழிலை நடத்திக் கொண்டே வில்லுப்பாட்டுக் கலையில் பல நவீன முறை களைக் கையாண்டு வெற்றி பெற்றார் பிச்சைக் குட்டி.

எளிய கதையை எளிய தமிழில் எளிய தாளத்தில் வைத்து அற்புதமான காரியங்களைச் செய்து சாதிக்கிறது வில்லுப் பாட்டு.

இரண்டு மணி நேரம் மூன்று மணிநேரம் என்று நடக்கும் வில்லுப்பாட்டு. அதை ஒரு தடவை கேட்டால் போதும். நம்முடைய மனம் முழுவதையும் ஆதிக்கம் பண்ணிக் கொண்டிருக்கிற அச்சம் நம்மை விட்டு ஓடிவிடும்.

பயம் ஒழிந்த பிறகு மிச்சம் என்ன? ஆனந்தம் ஒன்று தான். அதிபயங்கரமான ரத்த வெறி பிடித்த காளி கூளி முதலிய பாத்திரங்களின் கொடூரங்களைக் காட்டியே நமது பயத்தை விரட்டி அடித்து விடுகிறது வில்லுப்பாட்டு.

இது தென் பாண்டி நாட்டுக்கே - அதுவும் திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களுக்கே உரிய கலை.

சுடலை மாடன் கதை, முத்து மாரியம்மன் கதை, சொரி முத்தையன் கதை, கருப்பன்கதை, பூதத்தான்கதை, சின்னத் தம்பி கதை என்கிற முறையிலேயே வில்லுப்பாட்டு நடந்து வந்தது.

காந்தி மகான் கதை, இந்திய சுதந்திர வரலாறு என்று புதுமையைப் புகுத்தி நாடு முழுவதும் ஜெயக்கொடியை நாட்டி விட்டது பிச்சைக் குட்டியின் வில்லுப்பாட்டு.

முத்தாரம்மன் கோயில், துர்க்கையம்மன் கோயில், பேச்சியம்மன் கோயில், என்று அதனதன் முற்றத்தில் பந்தல் போட்டுத்தான் நடந்து வந்தது வில்லுப்பாட்டு.

அதைப் பெரிய பெரிய இசையரங்குகள். கருந்தரங்குகள், இலக்கிய மன்றங்கள். கழகங்கள். மீனாட்சியம்மன் கோயில் போன்ற பெரிய பெரிய கோயில்களில்கூட வைத்து அரங்கேற்றி நடமாட விட்டார் பிச்சைக்குட்டி.

காலத்துக்கு ஒவ்வாத முரட்டுத் தாளங்களை வில்லுப் பாட்டிலிருந்து களைந்தெறிந்தார். அமைதியாகப் புரட்சி பண்ணி ஆக்கம் பல பண்ணும் உத்தமக் கதைகளை எடுத்துக் கொண்டார்.

ஆனால் விறு விறுப்போ, வேகமோ, கம்பீரமோ கொஞ்சம் கூடக் குறையாதபடி பார்த்துக் கொண்டார் பிச்சைக் குட்டி.

* * *

இனி, 1950 - 51 என்று நினைக்கிறேன். கேரளத்தில் ஐயப்ப சுவாமி சந்நதியில் சிறு அசம்பாவிதம் ஒன்று நடந்து விட்டது.

அதனால் ஐயப்பசுவாமியின் விக்ரகத்தை வைத்துக் கொண்டு தமிழகம் எங்கும் திருஉலா வந்தார்கள் பக்த கோடிகள்.

உயர்திரு. சர். பி.டி.ராஜன் அவர்கள் தாம் ஐயப்பசுவாமி பவனிக்கு மூலநாயகன்.

தமிழகத்தின் ஒவ்வொரு முக்கிய ஊரிலும் தங்கி இளப்பாறும் உலா. அங்கே பக்தர்களுக்கு ஆனந்தபரவசம் ஏற்பட வில்லுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தார்கள், திரு. ராஜன் அவர்கள்.

பார்வதி கல்யாணம், சீதா கல்யாணம், மீனாட்சியம்மை திருமணம், பிட்டுக்கு மண் சுமந்த கதை, மாணிக்கவாசகர் (நரியைப் பரியாற்றிய) கதை என்று வில்லுப்பாட்டுக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அந்தக் கதைகளுக்குப் பாடல்கள் எழுதிக் கொடுக்கும் படி என்னிடம் பிச்சைக் குட்டி சொன்னார்கள். அப்படியே எழுதிக் கொடுத்தான்.

கதையும், பாடல்களும், வில்லுப் பாட்டும் தமிழகம் முழுவதும் சிறப்பான பெயர் பெற்றன.

ஐயப்ப சுவாமி திருவுலா கரூர், குளித்தலை வழியாக திருச்சியில் ஒரு நாள் முகாம் இட்டது.

திருச்சி தேசியக் கல்லூரித் திறந்தவெளியரங்கில் வில்லுப் பாட்டுக் கச்சேரி.

ரசிகமணி, டி.கே. சிதம்பரநாத முதலியார் தற்செயலாக அன்று திருச்சியில் இருந்தார்கள். திரு. ராஜன் அவர்கள் டி.கே.சியை அழைத்து வந்து வில்லுப் பாட்டு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும்படி செய்து விட்டார்கள்.

மாணிக்கவாசகர் கதை தான் அன்றைய வில்லுப் பாட்டு. கதையையும் பாடல்களையும் வெகுவாக அனுபவித்து அருமையாய்ப் பாராட்டி இருக்கிறார்கள் டி.கே.சி.

விழா முடிந்த பின் டி. கே.சியைச் சந்தித்த பிச்சைக்குட்டி கதையும் பாடலும் சண்முக சுந்தரம் கொடுத்தவை என்று சொல்லி விட்டார்.

ஒரு மாதம் கழித்து நான் தற்செயலாக ரசிகமணி, டி.கே. சியைப் பார்த்தேன். அப்பொழுது என்னை வெகுவாகப் பாராட்டிவிட்டு, பெரியபுராணத்திலும் உயர்தரமான கதைகள் இருக்கின்றன. அப்பூதியடிகள். வாயிலார், பூசலார், சுந்தர மூர்த்தி நாயனார் இப்படி இருக்கின்றன கதைகள்.

அவற்றையும் வில்லுப்பாட்டில் வைத்து அரங்கேற்றுங் கள் என்று சொன்னார்கள்.

அதற்காகப் பெரியபுராணம் முழுவதையும் முதலி லிருந்து கடைசிவரைப் பல தடவை படித்துப் பார்த்தேன்.

ஆனாலும் கவிநயம் என்கிற பலன் கிடைக்கவில்லை எனக்கு. டி.கே.சி சொன்ன கதை நலம் கிடைத்தன!

கவி என்றால் அதில் உயிர் இருக்க வேண்டும். உணர்ச்சி மயமாக இருக்க வேண்டும் உயிர். அதற்குத் தான் ஒளி என்று பெயர். சிருஷ்டி(விளைச்சல்) என்கிற ஒன்று இருந்தால் தான் அதில் ஒளி பிறக்கும்.

தாயின் உதரத்துள் குழந்தை ஒன்று இருக்கிறது. மூக் கென்றும், கண்ணென்றும், பாதம் என்றும், கன்னம் என்றும் கை என்றும், புன் முறுவல் என்றும், நெற்றி என்றும், புருவம் என்றும் அதற்கு வைத்தது யார்.

தானே உண்டான அற்புதம் அது. அருளால் விளைந்த அற்புதம் அது. சிருஷ்டி தத்துவம் என்றால் அது தான். அப்படி விளைந்து சொரியும் அருள்ஒளி பெரியபுராணத்தில் இல்லை.

ஆனாலும் கடலில் முக்குளித்து வண்டி வண்டியாய்ச் சிப்பிகளைக் கரையில் வந்து குவிக்கிறார்கள்.

சிப்பிகளைச் சோதித்துப் பார்க்கப் பார்க்க முத்துகள் - ஜாதி முத்துக்கள் பத்தோ பதினைந்தோ என்றுதான் தேறுகின்றன.

மிச்சம் அவ்வளவும் சோடைகள். சொங்குகள் தாம் தெய்வ ஒளி பெற்ற அரிய முத்துக்கள். பத்தோ பதினைந்தோ போதாதா? ஒன்றிரெண்டு கிடைத்தாலே போதும்.

அப்படிக்கடலில் விளைந்த ஜாதி முத்துக்கள் போல பெரியபுராணத்தில் அற்புதமான கவிகள் சில கிடக்கின்றன.

அவற்றை இனிப் பார்க்கலாம்.

மனந்தான் இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில். மனதுள் உணர்ச்சியோடு உணர்ச்சியாய் ஒன்றி நிற்கும் பெருமானை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டும்.

அது கடினமான காரியம். அதைப் போலக் கடினமான காரியம் வேறொன்றும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அதைப் போல எளிதான காரியமும் வேறொன்றும் இல்லை.

நம்முடைய உடம்பு, உணர்ச்சி, செயல், சொல் இவற்றைக் கவனித்துப் பார்த்தாலே போதும். ஒவ்வொன்றுக்குள்ளிருந்தும் புதிய புதிய ஒளி பிறந்து வந்து கொண்டிருக்கும். அதுதான் அறிவு. ஞானம் என்பதும் அதுதான், அந்த ஞான ஒளியை நோக்க நோக்க பெருமான் காட்சி கொடுப்பான்.

பிறகு அந்தக் காட்சியை மறக்க முடியுமா?

ஆனந்தமாக இருக்கும் வாழ்க்கை காற்றில் பஞ்சு மிதப்பது போல் உல்லாசமாக மிதந்து ஊஞ்சலாடும் வாழ்க்கை.

பக்தி இருந்தால்போதும் எல்லாம் வலுவாக முடிந்து விடும். பக்தி தான் இறைவனுக்கு உகந்த நைவேத்யம்(அமுது படி)

*இனிப்பாடல்*

*மறவாமை யான்அமைந்த*
*மனக்கோயில் உள்ளிருத்தி,*
*உறவாதி தனை உணரும்*
*ஒளிவிளக்குச் சுடரேற்றி,*

*இறவாத ஆனந்தம்*
*எனும்திரு மஞ் சனம் ஆட்டி,*
*அறவாணர்க்(கு) அன்பென்னும்*
*அமுதமைத்(து) அர்ச் சனைசெய்வார்.*

*மறவாமையான் அமைந்த மனக்கோயில் - ஒவ்வொரு செயலும் இறைவனுடைய காரியந்தான் என்று உணர்ந்து அனுபவிக்கிற மெய்யுணர்வு. உறவாதிதனை உணரும் ஒளி - ஏன் எப்படி என்பதற்குத் தன்னையே உரை கல்லாக வைத்துப் பார்க்கும் பக்குவம். இறவாத - புதிது புதிதாக விளைகிற அறவாணர் - இறைவன். அன்பென்னும் அமுது - பக்தி என்னும் நைவேத்யம்.*

*குறிப்பு :* அற்புதமான பாடல். அமிர்தம் எழுந்து வருவது போல பக்தியானது எழுந்து வருகிறது பாடலில் பக்தியைப் பற்றிய பாடலைப் பார்த்தோம். இனி, பக்தர்களைப் பற்றிய பாடல் ஒன்றைப் பார்க்கலாம்.

பக்தர்களுக்கு நிகர் பக்தர்தான் 'பெரிய பண்ணை யாரையோ, வியாபாரியையோ அவர்களுக்கு நிகராகச் சொல்ல முடியுமா?'

ஆடம்பரம் மிக்க அமைச்சர்கள், நீதிபதிகள், அரசர்கள் கூட அவர்கள் தூசி விலை பெறமாட்டார்கள்.

பெருமையால் தம்மை ஒப்பார். இனி, எல்லாம் இறைவன் மயம் என்று கண்டவர்கள் அவர்கள். அந்த உண்மை உணர்வுதான் பக்தி(அன்பு)யாக அவர்களிடம் ஊறுகிறது. அந்த ஆனந்தத்திலேயே திளைக்கிறார்கள் அவர்கள்.

*"ஒருமையால் உலகை வெல்வார்"*
*"அன்பினால் இன்பம் ஆர்வார்"*

*இனிப் பாடலின் முழு உருவம்*

*பெருமையால் தம்மை ஒப்பார்,*
*பேணலால் எம்மைப்பெற் றார்,*

*ஒருமையால் உலகை வெல்வார்,*
*ஊனமேல் ஒன் றும்இல் வார்,*
*அருமையால் நிலையில் நின்றார்,*
*அன்பினால் இன்பம்ஆர் வார்,*
*இருமையும் கடந்து நின்றார்.*
*இவரை நீ அடைவாய் என் று.*

*குறிப்பு :* சுந்தரமூர்த்தி நாயனார் பரமபக்தர். அவருக்கே அடியார்களின் சிறப்பை இப்படி எடுத்து விளக்குகிறார் சிவபெருமான்.

"பேணலால் எம்மைப் பெற்றார் - உபசரித்து உபசரித்து எம்மையே தம் வயம் ஆக்கிக் கொண்டவர்கள் அவர்கள். ஆகவே அவர்களிடம் கொஞ்சம் பணிந்து குனிந்து நடந்து கொள்ள வேண்டும் நீ" என்று பக்குவமாகப்புத்திமதி சொல்கிறார் பெருமான்.

என்னிடம் விளையாடுவது போல அவர்களிடம் நடந்து கொள்ளக் கூடாது என்பதைக் குறிப்பால் கோடு கிழித்துக் காட்டி விட்டார் பெருமான்.

காரணம் பக்தர்களுக்குத் தான் உண்மையானது தெரியும். மற்றவர்கள் தெரிவதெல்லாம் உண்மையைப் பற்றிய வியாக் யானங்களைத்தான்.

ஒரு குழந்தைக்கு முன்னால் மயிலிறகு ஒன்றைப் போட்டால் போதும். அப்படியே தன்னை மறந்து - தன்னையே இழந்து மயிலிறகோடு ஒன்றிவிடும் குழந்தை.

அப்படி உள்ளொளி கொண்டு பார்க்கிறவர்கள் அடியார்கள். ஐம்புலன்களும் அங்கே இங்கே என்று ஓடா. பார்வையோடு பார்வையாக ஒன்றிவிடும். மனம், சித்தி,புத்தி, விகாரம் எல்லாம் அப்படி அப்படியே.

காமக்குரோத லோபங்களே கரைந்துவிடும். ஒரே அதிசய மாக - ஆனந்தமாக இருக்கும் காட்சிகள் ஒவ்வொன்றும்.

ஒவ்வொன்றையும்' இறைவனுடைய ஆனந்த நடனமாகக் கண்டு அனுபவிக்கிறவர்கள் அவர்கள்.

*இனிப்பாடல்*

*ஐந்துபேர் அறிவும்*
*கண்களே ஆக,*
*அளப்பரும் கரணங்கள்*
*நான்கும்*
*சிந்தையே ஆகக்,*
*குணம்ஒரு மூன்றும்*
*திருந்துசாத் துவிகமே*
*ஆக;*
*இந்துவாழ் சடையான்*
*ஆடும்ஆனந்த*
*எல்லைஇல் தனிப்பெரும்*
*கூத்தின்*
*வந்தபேர் இன்ப*
*வெள்ளத்துள் திளைத்து*
*மாறிலா மகிழ்ச்சியின்*
*மலர்ந்தார்.*

இப்படி எல்லாம் உண்மையோடு ஒன்றித் திளைக்கிற அடியார்களிடம் லாபம், நஷ்டம் என்கிற கணக்கு வழக்கு தலைகாட்டுமா? அதுவேண்டும், இதுவேண்டும் என்று எதன் பின்னாலாலது அவர்கள் மனம் ஓடுமா? இல்லை, இவர்களிடம் இத்தனை செல்வம் குவிந்திருக்கிறதே, இத்தனை இத்தனை அதிகாரங்கள் கொடி கட்டிப் பறக்கின்றனவே இவர்களிடம், இவர்களை அனுசரித்துப் போவதுதான் முறை என்று அவர்களுக்குச் சலாம் போட்டு உறவாடவேண்டும் என்கிற புத்தி தான் வருமா?

இறைவனே அவர்கள் கூட இருக்கிறான். வேறு என்ன தேவை அவர்களுக்கு?

*இதோ பாடல்*

*கேடும் ஆக்கமும்*
*கெட்ட திருவினார்,*
*ஓடும் செம்பொனும்*
*ஒக்க நோக்குவார்,*
*கூடும் அன்பினில்*
*கும்பிட லேஅன்றி*
*வீடும் வேண்டா*
*விறலின் விளங்கினார்*

*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் - லாப நஷ்டம் இல்லாத ஆனந்தத்தையே செல்வமாகப் பெற்றவர்கள். அவர்களுக்கு அவர்களை ஒத்த அன்பர்(பக்தர்)கள் தாம் தேவை. அவர்களோடு ஒன்றித் திளைக்கத் திளைக்க ஆனந்தம் ஊற்றெடுத்துப் பெருகும். அதுதானே மோட்சம்.*

வேறு ஒன்றையும் அவர்கள் மோட்சம் என்று நினைக்க மாட்டார்கள்.

கண்ணாடிபோல் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக் கிறவர்கள் ஞானி (அடியார்)கள். அதன் வழி உண்மையைக் கண்டுகளிக்கிறார்கள். அவர்களுடைய பெருமையை அவர்களைப் போன்ற அருளாளர்களால் தான் சொல்ல முடியும்.

என்னால் எப்படி அது முடியும் என்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

*ஈர அன்பினர்*
*யாதும் குறைவிலார்*
*வீரம் என்னால்*
*விளம்பும் தகையதோ!*

இனி, மெய்யடியார்கள் நிறைந்து வழியும் இடம் திருவாரூர். அடியார்கள் இருக்கும் இடத்தில் ஆட்டமும் பாட்டமுமாக இருக்கும் உள்ளம் உருகி அவர்கள் பாடப்பாட கல்வி அறிவில்லாத பாமரனுக்கும் மனசில் ஏறி நிற்கும் பக்தி. பாடலும் இசையும் தாளமும் கைகோத்து உடன்வரும்.

அப்படியானால் கிளிகளைப் பற்றியும் மைனாக்களைப் பற்றியும் சொல்லவா வேண்டும்? அவைகளே பாடுகின்றன!

*இனிப் பாடல்*

*உள்ளம் ஆர்உரு*
*காதவர் ஊர்விடை*
*வள்ள வார்திரு*
*ஆரூர் மருங்கெலாம்*
*தெள்ளும் ஓசைத்*
*திருப்பதி கங்கள் பைங்*
*கிள்ளை பாடுவ*
*கேட்பன பூவைகள்.* (உள்ளம் ஆர்)

*ஊர்விடைவள்ளலார் - சிவபெருமான். காளைவாகன மூர்த்தியாகிய சிவபெருமான். விடை - காளை. பூவை - மைனா.*

இனி, இசையோடும் தாளத்தோடும் பொருந்திய பாசுரங்கள் காதில் விழவிழ மனம் தூய்மை பெறும் பளிங்குபோலத் தெளிந்து நிற்கும் மனம்.

இனி, எங்கும் நிறைந்த திருவருள் தான் இறைவனுடைய திருப்பாதம். ஆனந்த நடனந்தான் அண்ட பிண்ட சராசரம். சகல சக்திகளுக்கும் ஊற்றுக் கண்ணாக இருக்கிறது திருப்பாதமும் திருநடனமுமே.

இந்த உண்மை கவியாக எழுந்து வருகிறது.

*ஞாலம் உய்ய*
*நட(ம்) மன்றுள் ஆடின,*

*காவன் ஆருயிர்*
*மாளக் கறுத்தன,*
*மாலை தாழ்குழல்*
*மாமலை யாள்செங்கை*
*சீல(ம்) மாக*
*வருடச் சிவந்தன. (ஞாலம்உய்ய)*

*(மாமலையாள் - பார்வதித்தாய்)*

பெரியபுராணத்திலுள்ள இத்தகைய கவிச் செல்வங்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். இந்தக் கவிகள் செய்கிற காரியத்தை எந்த ஒரு வித்தையாலும் செய்ய முடியாது.

பெரியபுராணத்தில் உண்மையான பாடல்கள் குறைவுதான்.

ஆனால் அனுபவிக்கிறவர்களுக்கு அவைபோதும்.

பாடல்களைவிட பெரியபுராணத்தில் கதைகள் அதிகம்.

காலத்துக்கு ஏற்ற கதைகள். கருத்தைத் திருத்தும் கதைகள்.

ரயிலடி, சினிமாக்கொட்டகை, பூங்கா, தேனீர்விடுதி, யுவன், யுவதி என்று சொன்னதையே சொல்லிச் சொல்லிச் சமுதாயத்தைக் கெடுக்கிற கதைகள் இல்லை பெரியபுராணம்.

விஷத்தை முறித்து அமிர்தத்தை ஊற வைக்கும் கதைகள் பெரியபுராணம்.

## XV பட்டினத்தார்

## 1

பட்டினத்தார் என்னும் சொல் காதில் விழுந்தால் போதும் சும்மா இருக்க முடியாது தமிழனால்.

“காதற்ற ஊசியும் வாராது காண் நம் கடைவழிக்கே” என்கிற வரியையோ,”ஒருமடமாதும் ஒருவனும் ஆகி” என்னும் சந்தப் பாடலையோ முனங்க(முரல) ஆரம்பித்து விடுவான்.

பட்டினத்தாருடைய குலம் என்ன கோத்திரம் என்ன, அவருடைய கல்வித் தகுதி எப்படி, வரவு செலவு என்ன, பழக்க வழக்கம் எப்படி என்னும் வரலாறு, பற்றி எல்லாம் அலட்டிக் கொள்ளமாட்டான் தான்.

பட்டினத்தார் என்றால் அவருடைய பாடல்தான், ஏதாவது ஒரு பாடலே போதும், அந்தப் பாடலின் ஒரு பகுதி கூடப் போதும்.

வாழ் நாள் முழுவதும் அவனுக்கு அது இன்பத்தை ஊட்டிக் கொண்டே இருக்கும்.

குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டுவது போல ஊட்டிக் கொண்டே இருக்கும் பாடல்.

பட்டினத்தார் பாடலில் அப்படி ஓர் ஈடுபாடு தமிழ் மக்களுக்கு.

கடலுக்குள் முத்து விளைவது போலல்லவா விளைந்து வந்திருக்கிறது ஒவ்வொரு பாடலும்.

அடடா! அந்தப் பாடல்களில் தான் என்ன குளுமை, என்ன ஜொலிப்பு, உண்மை என்றால் - உண்மையின் மாசற்ற மெய்ம்மை என்றால் அதை அப்படியே கையில் எடுத்துக் காட்டும் பட்டிணத்தார் பாடல்.

கடவுள் தத்துவத்தைப் பற்றி பட்டிணத்தார் சொல்வதைப் பாருங்கள்.

*எட்டுத் திசையும்,*
*பதினாறு கோணமும்,*
*எங்கும் ஒன்றாய்*
*முட்டித் ததும்பி*
*முளைத்தோங்கும் சோதி...*

இப்படி எந்த மொழியிலாவது அனுபவ நிலை, அருள் வாக்காக வந்திருக்கிறதா?

வசனத்தில் கூட இது போன்று இதர மொழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளே, வெளியே, மேலே, கீழே, தெற்கே, வடக்கே என்கிற கிளைகளே இல்லாமல் ஒன்றாய்-ஒன்றே ஒன்றாக இருக்கிறது கடவுள் தத்துவம்.

அதற்குத்தான் உண்மை என்று பெயர். அந்த உண்மைக்கு உணர்ச்சி பாவம் என்கிற உருவத்தைக் கொடுத்து அனுபவிக்கிறது தமிழ். பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறது தமிழ்.

"முட்டித் ததும்பி முளைத்தோங்கும் சோதி, என்று பாடிப் பாடி அனுபவிக்கிறது தமிழ்.

கடவுள் தத்துவம் என்ற ஒன்று தான். அது தான் அண்ட சராசரம் அவ்வளவுமாக விளைந்தது.

இதை 'முளைத்து ஓங்கும் சோதி' என்று வாயாரப் போற்றுகிறது தமிழ்.

அவ்வளவும் அதுதான் அதைத் தவிரவேறொன்றும் இல்லை.

சமுத்திரம் ஒன்றுதான். அந்த ஒன்று தானே பல்லாயிரக் கணக்கான அலைகளாக எழுந்து நிமிர்கிறது.

அத்தனை அலைகளிலும் சமுத்திரம் தானே நிறைந்து நிற்கிறது.

இது தான் உண்மை. இதில் ஒளிவு மறைவு இல்லை. தகடு தத்தம் இல்லை.

பரமாணுவிலிருந்து பேரண்டம் முடிய அவ்வளவிலும் நிறைந்து முட்டுகிற உண்மை மனித மூளையை மட்டும் வந்து முட்ட மாட்டேன் என்கிறது.

உணர்ச்சியில் வந்து உண்மையை ஒட்டவிடாமல் தடுத்து விடுகிறது மனித மூளை. அதாவது ஆணவம்.

இல்லை என்றால் பேரண்டம் முழுவதுமாக விளைந்து நிமிர்ந்து நிற்கும் கடவுளுக்கு நான் தான் பிரதிநிதி (தரகன் - வழிகாட்டி) என்று சொல்லத் துணிவு வருமா?

இந்தப் பூசைப் பெட்டிக்குள் தான் கடவுள் இருக்கிறார் என்று இரண்டு மூன்று விக்கிரகங்களை எடுத்து வைத்து கிணு கிணு என்று மணியை ஆட்டத்தான் முடியுமா?

கிராதகர்கள் என்றால் இந்தப் போலிப் பக்தர்கள் தான்.

என்ன கொடுமை வேண்டுமானாலும் இவர்கள் செய்வார்கள்.

பஞ்சமாபாதகர்கள் இவர்கள் என்கிறார் பட்டிணத்தார்.

இனிப் பாடலின் முழு உருவம். கட்டளைக் கலித்துறை

*எட்டுத் திசையும்*
*பதினாறு கோணமும்*
*எங்கும்ஒன் றாய்*
*முட்டித் ததும்பி*

*முளைத்தோங்கும் சோதியை*
*மூடரெல் லாம்*
*கட்டிச் சுருட்டித்தன்*
*கக்கத்தில் வைப்பர்,*
*கருத்தில் வையார்;-*
*பட்டப் பகலை*
*இரவென்று கூறிடும்*
*பாதக ரே*

நாவை விட்டு இறங்காது பாடல், பாடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

பாடப்பாட ஆணவம் இளகும், மெழுகாய் இளகும் ஆணவம் இளக இளக மெய்யுணர்வு வந்து மூளையை ஒட்டும். மண்டைக் கொதிப்பு ஓடிவிடும். தாமரைத்தடாகம் போலத் தண்ணென்று குளிர்ந்து விடும் மூளை.

## 2

**இ**ன்னொரு பாட்டு

ஒரே ஒரு (பரம்) பொருள் கோடானுகோடி வஸ்துகளாய் விளைவது அற்புதந்தான்.

ஒன்றுக்கொன்று மாறான முரண்பட்ட பொருள்களாகவும் அது விளைகிறது.

தங்கமும் அதுதான் பித்தளையும் அதுதான். நஞ்சும் அது தான் அமிர்தமும் அதுதான். புலியும் அதுதான் மானும் அது தான் என்றால் ஆச்சர்யமாகத் தானே இருக்கும்?

கடவுள் ஒருவர் தான், அவர் தான் ஆணாகவும் இருக்கிறார் பெண்ணாகவும் இருக்கிறார் என்றால் வியப்புக்குக் கேட்கவா வேண்டும்.

ஆணாகவும் பெண்ணாகவும் மட்டும் இல்லை, ஓர் ஆணுக்கு ஒரு பெண்தான் உயிரென்றும், ஒரு பெண்ணுக்கு

ஓர் ஆண் தான் உயிரென்றும் சேர்த்து வைக்கிற உறவாகவும் இருக்கிறார்.

அந்த உறவில் விளையும் பலனாகவும் இருக்கிறார்.

ஆண்மையும் அவர்தான் பெண்மையும் அவர்தான். தாய்மையும் அவர்தான், பிள்ளையும் அவர்தான்.

அற்புதம் என்றால் இதுவல்லவா அற்புதம், அதிசயம் என்றால் இதுவல்லவா அதிசயம்.

> *"இங்கு ஒன்றோடொன்றை*
> *முட்டுவிப் பானும் முயக்குவிப்பானும் முயன்றவினை*
> *காட்டுவிப் பானும்"*

இனி நாம் வாழ் நாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறோம்.

காலை, நண்பகல், மாலை, இரவு என்று ஒவ்வொரு நாளும் நான்கு தடவை ஐந்து தடவை கூடச் சாப்பிடுகிறோம்.

முதலில் சாப்பிட்ட உணவு அப்படியே கிடந்தால்- கிணற்றில் போட்ட கல்போலக் கிடந்தால் பிறகு சாப்பிட முடியுமா?

சாப்பிடச் சாப்பிட ஜீரணம் ஆகிவிடுகிறது உணவு, ரத்தம், சதை, மூளை என்று ஆகிவிடுகிறது உணவு.

ஜீரணம் ஆவதால் மறுபடி மறுபடி சாப்பிட வேண்டி இருக்கிறது.

பலவகைப்பட்ட பண்டங்களை-காய், கனி, தானியம், பருப்பு, நெய், தேன், எல்லாவற்றையுமே கூழாக அரைப்பது எது? சாறாக வடிப்பது எது? ரத்தமாக மாற்றுவது எது? கண்ணென்றும் மூக்கென்றும், கை என்றும், காலென்றும், யோசனை என்றும், உணர்ச்சி என்றும் உருவாக்குவது எது?

நாமா இவ்வளவும் செய்கிறோம். பேரண்டம் முழுவதும் ஆனந்த நடனம் ஆடும் பெருமானல்லவா அணுவுள் அணு வாயிருந்து இவ்வளவையும் நடத்துகிறான்.

தாயாக இருந்து வேளா வேளைக்கு ஊட்டுகிறான் அவன்.

இனி வாணவேடிக்கை, கரகாட்டம், மந்தை நாடகம், தேரோட்டம், என்று விடிய விடியப் பார்க்கிறோம்.

உத்சாகமாகவே பார்க்கிறோம்.

சிரிப்பும், கும்மாளமுமாக, ஆரவாரமும் உல்லாசமுமாக இருக்கினறன ஆட்டங்கள்.

ஆனால் விழா முடிந்து வீட்டுக்கு வரும் போதே கண்ணைத் தழுவுகிறது தூக்கம் உடையை மாற்றி கட்டிலில் உட்காருவதற்குள் கட்டி அணைத்துக் கொள்கிறது தூக்கம்.

இந்த உறக்கம் எங்கிருந்தது? எப்படி வருகின்றது. எப்படிப் போகின்றது.

யாருக்குத் தெரியும் இது பற்றி.

பெற்றதாயாக இருந்து தாலாட்டி உறக்கம் காட்டுகிறான் பெருமான்?

அப்படி அவன் உறக்கம் காட்டாவிட்டால் உயிர்க்குலம் தழைக்க முடியுமா?

இருந்த இடம் தெரியாமல் பட்டுப் போகும் உயிர்க் குலம் முழுவதும். உயிராவதும் அவன்தான் அதைப் பாதுகாப்பதும் அவன் தான்.

*இனிப்பாடல்*

*ஊட்டுவிப் பானும்,*
*உறங்குவிப் பானும் இங்(கு)*
*ஒன்றோடொன் றை*
*மூட்டுவிப் பானும்,*
*முயக்குவிப் பானும்,*
*முயன்றவி னை*
*காட்டுவிப் பானும்,*
*இருவினைப் பாசக்*

*கயிற்றினவ ழி*
*ஆட்டுவிப் பானும்*
*ஒருவன்உண் டேதில்லை*
*அம்பலத் தே*

ஆணவம் என்னும் கயிற்றைப் பிடித்துத் தொங்கும்படி செய்கிறான் அம்பலவாணன்.

கூடவே அந்த(க்'கயிற்றுத்) தொட்டிலை ஆட்டுவது போல ஆட்டிக்கொண்டே இருக்கிறான்.

அதுதான் அவனுக்கு விளையாட்டு. நாமோ கயிற்றில் தொங்கும் பொம்மை.

மறுபடிபாடலைப் பாருங்கள். மாறிமாறிப் பாருங்கள். பார்க்கப் பார்க்க பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று புதுப் புதுவர்ணங்களில் ஜொலிக்கும் உண்மை.

மேளம், தாளம், நடை, சஞ்சாரம் என்று தமிழும் நவ நவமாய்க் கோலம் போடும் பாடலில்.

## 3

இன்னொரு பாடல்

உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர்.

அப்படியானால் எவ்வளவு பெரிய பொறுப்பு அவரிடம்?

தலைவிதியின் குடுமியைப் பிடித்தே ஆட்டுகிற அளவுக்கு அதிகாரம் இருக்கிறது அவரிடம். ஆனாலும் ஒரு சிக்கலான வழக்கு. அதை நடத்துகிற காலத்தில் ஒன்றிரெண்டு சில்லறை வழக்குகளும் குறுக்கிடுகின்றன.

இது தவிர பொது நலன் கருதி விசாரணைக் கமிஷன் களுக்கும் அவர் தலைவராக இருந்தார்.

வேலைப் பளு ஏற ஏற பொறுமை குறைய ஆரம்பித்து விட்டது.

பார்க்க வரும் நண்பர்களிடம் கூட கலகலப்பாக இருக்க முடியவில்லை அவரால்.

எதை எடுத்தாலும் எரிச்சல்தான். வேலைக்காரன், காரோட்டி, வழக்கறிஞர், உதவியாளர்கள் எல்லாரிடமும் கடுகடு என்றே இருந்தார்.

பேரன் பேத்திகளிடம் கூட அரட்டலும் மிரட்டலும் தான்.

கோடை வெயிலில் நடந்து வந்தது போல அலுத்துக் கொள்வார்.

தொந்தரவு, தொந்தரவு, என்று துவள்வார்.

ஒன்றிரெண்டு பணி கூடிய மாத்திரத்திலேயே தாங்க முடியவில்லை மனிதர்களால். துவண்டு தளர்ந்து விடு கிறார்கள் மனிதர்கள்.

ஆனால் பேரண்டம் முழுவதும் எத்தனை காரியங்கள். எத்தனை எத்தனை பிரச்சனைகள்.

அணுவிலிருந்து பிரமாண்டமான நட்சத்திரங்கள் வரை அவ்வளவிலும் எத்தனை விவகாரங்கள்.

எத்தனை எத்தனை நெறி முறைகள் - சட்ட திட்டங்கள் - அதாவது தத்துவங்கள்? அவ்வளவும் ஒன்றாய் நின்று செயல்படுகின்றன.

அத்தனை தத்துவங்களையும் கையில் வைத்துக் கொண்டு மஞ்சாடி கூடப் பிசகாமல் காரியத்தை நடத்துகிறான் பெருமான்.

எப்பொழுதாவது அவன் கோபப்பட்டதுண்டா? வருத்தப் பட்டதுண்டா? ஆனந்தக் களிப்பில் நடனம் ஆடிக் கொண்டே இருக்கிறான் பெருமான்.

அந்தப் பெருமாளைப் பார்த்தாலே போதும் துன்பங்கள் எல்லாம் ஓடிவிடும்.

உண்மையை உணர்ந்து அவனைக் கண்டு களிக்க எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் கண்கள்?

*இதோ வருகிறது பாட்டு.*

*அத்தனை, முப்பத்து*
*முக்கோடி தேவர்க்(கு)*
*அதிபதி யை,*
*நித்தனை, அம்மை*
*சிவகாம சுந்தரி*
*நேசனை, எம்*
*கர்த்தனைப், பொன்னம்-*
*பலத்தாடும் ஐயனைக்*
*காணக்கண் கள்*
*எத்தனை கோடி*
*யுகமாய்த் தவங்கள்*
*இயற்றின வோ!*

*அத்தன் - அடிப்படையான மூலநாயகம். நெறி முறைகளை - தத்துவங்கள் தேவர்கள் என்று சொல்வது கவிமாபு. எண்ணிறந்த தத்துவங்கள் என்பது கருத்து.*

இனி இன்னொரு பாட்டு

கூப்பிட்டால் போதும். உடனே என்ன என்று கேட்கிறார் பெருமான்.

நினைத்தால்போதும், உடனே எதிரில் வந்து நிற்கிறார். காதலியைச்சுற்றிச் சுற்றிவரும் காதலன், போல நம்மையே சுற்றிச் சுற்றி வருகிறார் பெருமான்.

அப்படி இருந்தும் பெருமானை நினைக்க ஏன் யோசனை வரமாட்டேன் என்கிறது.

காரணம் பணவெறி.

பணம் முக்கியம்தான். அது இல்லை என்றால் ஒன்றும் இல்லை. வாழவே முடியாது மனிதனால்.

ஆனால் எவ்வளவு பணம் நமக்குத்தேவை என்கிற கணக்குத் தெரிய வேண்டாமா மனிதனுக்கு? சாப்பாடு முக்கியம்தான்.

சாப்பாடு இல்லை என்றால் மூச்சே நின்று விடும்.

ஆனால் எவ்வளவு தேவை என்று தெரியாமல் உள்ளே உள்ளே உணவை தள்ளிக் கொண்டே இருந்தால் என்ன ஆவது நிலை.

சாப்பாடு இல்லை என்றால் வாழவே முடியாதே என்பதற்காக அண்டா அண்டாவாக உணவைத் தயாரித்து யாராவது பாங்கில் டெபாசிட் பண்ணி வைக்கிறார்களா?

இல்லை, பூமியில் பெரிய குழி தோண்டி அதில் நிலவறை அமைத்து அவியல், பொரியல், சாதம், சாம்பார், இட்லி, வடை, சட்னி, மிளகாய்ப் பொடி என்று சேமித்து வைக்கிறார்களா?

அப்போதைக்கப்போதுதானே தயார் பண்ணிச் சாப்பிடுகிறோம் ஆகாரத்தை.

பொட்டணம் கட்டி வைப்பதில்லையே.

அப்படி இருக்க பணத்தை மட்டும் பொட்டணம் கட்டி ஏன் வைக்க வேண்டும்?

பணம் பணம் என்று அதன் பின்னால் ஓட ஓடத் தரித்திரம் தான்!

அந்தத் தரித்திரப்புத்தி தான் இறைவனைப் பற்றிய சிந்தனையை முளைக்கவே விடாமல் தடுக்கிறது.

பணம் வேண்டும். அதை வைத்து ஆரோக்கியமாக வாழ வேண்டும் சுத்தமாக வாழ வேண்டும்.

அதற்காக உழைக்க வேண்டும். தேவையானவற்றுக்குச் செலவு செய்ய வேண்டும் மிச்சத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும்.

தேங்கக் கூடாது பணம்.

ஜீரணம் ஆகாமல் வட்டியும் முதலுமாகப் பணம் பெருகப் பெருக நோய்தான்.

தெய்வ நம்பிக்கை - அதாவது மெய்யுணர்வு வர வேண்டும் என்றால் மேலே குறிப்பிட்ட நோயை முதலில் ஒழித்துக் கட்டவேண்டும்.

அதாவது பணத்தைக் குவித்து வைப்பதிலுள்ள பைத்தியம் - வெறி ஒழிய வேண்டும்.

இது தான் ஞானிகள் கண்ட முடிவு.

எப்படி இது கவியாய் எழுந்து வருகிறது என்று பாருங்கள்.

*வா துற்ற திண்புயர்*
*அண்ணா மலையர்*
*அலர்ப்பதத் தைப்*
*போ துற்றெப் போ தும்*
*புகலுநெஞ் சே! இந்தப்*
*பூதலத் தில்*
*தீ துற்ற செல்வமும்,*
*தேடிப் புதைத்த*
*திரவிய மும்,*
*காதற்ற ஊசியின்*
*வாரா து காண்நம்*
*கடைவழிக் கே!*

*(வாது உற்ற திண்டியர் - மல்யுத்தம் பண்ணிப்பண்ணி இறைவனின் தோள்கள் உருண்டு திரண்டு கல்லாய் இருகிவிட்டன. வாது - சண்டை. யாரோடு சண்டை? மனிதனுடைய பைத்தியத்தோடு தான்! போது உற்று - பூக்களைச் சொரிந்து புகலு நெஞ்சே - பாசுரங்களைப் பாடு மனமே பாடு. மறக்காமல் அடிக்கடி (எப்போதும்) பாடு.*

*தீது உற்ற செல்வம் - கொடுமைக்குக் காரணமான பணவெறி காது அற்ற ஊசியின் - காதறுபட்ட ஊசிபோல வாராது - சேர்ந்து வராது.)*

*குறிப்பு :* மரணம் நிச்சயம். செல்வமோ துணையாக வராது. பிறகு ஏன் சேமித்து வைக்க வேண்டும்? இந்த வியப்பு கணகண என்று ஒலிக்கிறது பாடலில்.

எதுகையும் மோனையும் வியப்பை அப்படியே கையில் எடுத்துக் காட்டுகின்றன.

பட்டினத்தார் உள்ளம் கருணை பொங்கும் உள்ளம். அதனால் மற்றவர்கள் செயலைத் தம் செயலாகப் பாவிக்கிறார்.

தம் மனதுக்குப் புத்திமதி சொல்வது போலச் சொல்கிறார். (கஸ்தூரிபா) காந்தி நிதி என்று ஒரு கோடி ரூபாய் சேர்ந்தது. ஐம்பது வருடத்துக்கு முன் ரூபாய் ஒரு கோடி என்றால் அது பிர்மாண்டமான தொகை தான்.

இந்தப் பணத்தை என்ன பண்ணுவது என்று நேரு தலைமையில் ஆலோசனை நடந்தது.

வல்லபாய்படேல், ராஜேந்திரபிரஸாத், அபுல்கலாம் ஆஸாத் போன்ற தலைவர்கள் இது சம்பந்தமாக விவாதித் தார்கள்.

திட்டவட்டமாக ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. அவர்களால் வினோபாவின் யோசனையைக் கேட்கலாம் என்று அணுகினார்கள்.

நீங்கள் தான் வழி காட்டவேண்டும் என்று வேண்டினார் கள்.

நான் சொல்லியபடி செய்வீர்களா என்றார் வினோபா! அப்படியே செய்கிறோம். இது உறுதி என்றார்கள் தலைவர்கள்.

அப்படியா என்று சிரித்தார் முனிவர். பிறகு சொன்னார்.

“பாங்கியில் கிடக்கிற தொகையை ஒரு ரூபாய் நாணய மாக முதலில் மாற்றுங்கள். பிறகு அதை ஒரு பெரிய ஓடத்தில் ஏற்றுங்கள்.

பத்துப்பதினைந்து பேர் பணமூட்டைகளோடு ஏறிக் கொள்ளுங்கள்.

கடலிலோ கங்கை போன்ற நதியிலோ ஓடம் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

ஓடத்தில் இருக்கிறவர்கள் ஒவ்வொரு ரூபாயாக எடுத்து நீரில் போடவேண்டும்.

ஒரு ரூபாய் கூட மிச்சம் இல்லை என்னும் நிலை வந்த பிறகு தான் திரும்பி வரவேண்டும்"

இப்படி யோசனை சொன்னார் முனிவர் அரண்டு போனார்கள் தலைவர்கள். ஆனாலும் அசடு வழியக் கள்ளச்சிரிப்பு (புன்முறுவல்) பூத்துக்கொண்டார்கள்.

இன்னும் விளங்கவில்லையே என்று பரிதாபப்பட்ட முனிவர் கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னார்.

பணத்தை என்ன செய்கிறது என்று கூடத்தெரிய வில்லையே உங்களுக்கு.

நாட்டையே நிர்வாகம் பண்ணும் தலைவர்கள் நீங்கள். உடனுக்குடன் மிச்சப்பணத்தைச் செலவழித்து விட வேண்டும் என்பது கூடவா உங்களுக்குத் தெரியவில்லை.

செலவழிக்காமல் பணமானது வட்டியும் முதலுமாகப் பெருகினால் ஒழுக்கச் சிதைவும், கொடுமையுமே விளையும் என்பது கூட உங்களுக்குத் தெரியாதா?

இப்படிக் கேட்டு விளக்கினார் முனிவர்.

செலவழிக்காமல் பணத்தைப் பேங்கில் போட்டால் பேங்குக்காரன் வட்டி கொடுப்பான்.

வட்டித்தொகையைச் செலவழிக்க அறக்கட்டளை முளைக்கும். அறக்கட்டளை தர்ம விரோதமான காரியங் களுக்குத்தான் பயன்படும்.

தப்பித் தவறி ஓரளவு நல்ல காரியத்துக்கு உதவுகிற தென்றால் அது வேண்டியவர்கள் யாரென்று பார்த்து உதவும்.

அதில் லஞ்சம், பித்தலாட்டம் கூட முளைக்கும்.

அறக்கட்ளையில் உறுப்பினராகப் போட்டி வேறு, பொறாமை வேறு.

பகைமை வளர்ந்து கொண்டேபோகும்.

அறக்கட்டளைக்கு ஞாயம் முக்கியம் இல்லை. சுயநலமே முக்கியம் என்று ஆகிவிடும்.

இனி பேங்குக்காரன் அந்தத் தொகையை அதிக வட்டிக்குக் கொடுப்பான்.

இப்படிப் பல பேருடைய சேமிப்புப் பணத்தில் சம்பாத் யம் பண்ணுகின்றன பேங்குகள்.

உடலுழைப்பே இல்லாமல் வந்து குவியும் லாபத் தொகையைக் கொண்டு தனி ராஜ்யங்களை நடத்தும் பாங்குகள்.

வந்த பணத்தைச் செலவு செய்யாமல் திரட்டத்திரட்ட தொல்லைதான்.

எல்லா வழிகளிலும் இடையூறும் வேதனையுந்தான் மிஞ்சும்"

இப்படி விளக்கம் கொடுத்தார் முனிவர்.

தலைவர்களுக்கு உண்மை விளங்கி விட்டது மளமள வென்று தொகையைச் செலவு செய்து விட்டார்கள்.

மருத்துவ நிலையம், கல்வி, அனாதை ஆஸ்ரமம் என்று பல வழிகளில் செலவாகி விட்டது. ஒரு கோடி ரூபாயும்.

மோட்டாரில் பழுது ஏற்பட்டால் அதை நிறுத்தி அதன் பிறகு தான் பழுது பார்க்கவேண்டும்.

மோட்டாரை ஓட்டிக் கெண்டே பழுது பார்க்க முடியாது பணவெறியிலிருந்து விடுபட்டவர்கள் தான் அது பற்றி விளக்க வேண்டும்.

பணவெறியில் ஈடுபட்டுக்கொண்டே அதன் தீமை பற்றிச் சொற்பொழிவாற்றுவது எடுபடாது.

விநோபா விடுதலை பெற்றவர். அதனால் அவர் சொல்லியது விளங்கியது.

பட்டிணத்தாரும் விடுதலை பெற்றவர். அதனால் அவர் வாக்கும் அருள்வாக்காக இருக்கிறது.

பட்டிணத்தார் பெரும் தனவந்தார். திரை கடலோடித் திரவியம் சேர்த்த குடும்பத்து வழித்தோன்றல்.

அவருடைய இயற்பெயர் பிள்ளை(யார்) என்பது. அந்தக் காலத்தில் பிள்ளையார் என்று பெயர் வைப்பார்கள்.

ஆளுடைய பிள்ளையார் என்று ஞான சம்பந்தருக்குப் பெயர். அதையே இந்தக் காலத்தில் குழந்தைசாமி என்று பெயர் சூட்டுகிறோம்.

பட்டிணத்தார் என்பது குடிப் பெயர்.

நகரங்களில் அதுவும் கடற்கரையை ஒட்டிய நகரங்களில் கடைபோட்டுப் பணம் ஈட்டுகிற கூட்டத்துக்குப் பட்டிணத்தார் என்று பெயர்.

அது தான் நகரத்தார் என்று தற்போது மாறி இருக்கிறது.

விவசாயத்தின் மூலம் பெருந்தனக் காரர்களாக இருந்தவர்களுக்குப் பண்ணையார் என்பது இக்கால வழக்கு அந்தக் காலத்தில் அவர்களுக்கு நாட்டார் என்பது பெயர்.

தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுதும் நாட்டார் என்று ஒரு பிரிவினர் (இனத்தார்) இருக்கிறார்கள்.

நாட்டார் போல நகரத்தார்.

இனி, பட்டிணத்துப் பிள்ளையார் பெரும் பணக்காரர். அவ்வளவு பணத்தையும் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்கிவிட்டார் அவர்.

அந்த அளவுக்கு நம்மால் வாரி வழங்க முடியாது. இருப்பதை எல்லாம் மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டால் 'அடுத்தாற்போல் நம் கதி என்ன?' என்கிற பயம் நம்மிடம் உண்டு.

அது ஒன்றும் தப்பில்லை.

ஆனால் அளவுக்கு மீறிச் சேர்க்கக் கூடாது.

நீதியை, நேர்மையை, அன்பை, மெய்யுணர்வைத் தடுக்கிற அளவுக்குப் பணத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது.

அது ஒன்றில் கவனமாக இருக்க வேண்டும் நாம்.

செல்வம் தேங்கினால் அது தீதுற்ற செல்வமேதான்.

## 4

இனி, இன்னொரு பாடல்.

கரையிலிருந்து கடலைப் பார்க்கிறோம்.

கப்பலொன்று கடலில் மிதந்து வருகிறது. முதலில் தெரிவது கொடி. மரத்தின் உச்சி. பிறகு அதன் நடுப்பகுதி. கப்பல் கரையை நோக்கி நெருங்க நெருங்க கொடி மரத்தின் முழு உருவமும் கப்பலின் மேல் தட்டும் தெரியும்.

அதன் பிறகும் கரையைப் பார்த்துக் கப்பல் வர வர கப்பல்கள் நடுப்பகுதி, அடிப்பகுதி ஒவ்வொன்றும் தெரியும்.

இறை உணர்வும் அப்படித்தான்.

அன்பு, அருள், நீதி, பொறையுடைமை இவை நெஞ்சில் ஊற ஊற மெய்யுணர்வு முளைவிடும்.

பிறகு அதில் இலைவரும். பிறகு துளிர்க்கும், தளிர்க்கும் பூக்கும், காய்க்கும். தேன் சொட்டும் கனிகளாகவே விளைந்து விடும் சத்தியப் பயிர்.

கற்பக விருட்சமாகவே நம் கண்முன் வந்து நிற்கும் மெய்யுணர்வு.

எடுத்த எடுப்பிலேயே ஏன் முழுவதும் தெரியவில்லை என்று கேட்கக் கூடாது.

உலகம் ஏன் உருண்டையாக இருக்கிறது. தட்டையாக இல்லாமல் எப்படி உருண்டையாக இருக்கலாம் என்று கேட்பதற்கு நாம் யார்?

மெய்யுணர்வு தெளிந்து நிற்க வேண்டும். ஆடாமல் அசையாமல் நிற்க வேண்டும்.

அப்பொழுது தான் எல்லாம் இறைவன் செயல். தெய்வ மயம். நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை என்பதும் தெரியும்.

நாமே இல்லை என்பதும் விளங்கும். அப்பொழுதுதான் பொங்கிப் பூரிக்கும் ஆனந்தம்.

கரைபோட்டு நிறுத்த முடியாது ஆனந்தத்தை! உலகம் எல்லாம் கேட்கும்படி கூப்பாடு போட்டு அரற்றிச் சொல்லத் துடிக்கும் மனம்.

அனுபவங்களை - அனுபூதி நிலைகளை - உண்மையைச் சொல்லச் சொல்ல அவை விண்ணுக்கும் மண்ணுக்குமாக எதிரொலிக்கும்.

இனி, எப்படி வருகிறது பட்டிணத்தார் அனுபவம் என்று பாருங்கள். அடடா வெறும் சைபராகக் கிடந்ததை அல்லவா நான் நான் என்று குதிக்க வைக்கிறான் பெருமான்.

அப்படிச் சொல்வது கூடச் சரி இல்லை.

தானே பலவகையான கோலங்களைத் தரித்துக் கொண்டு ஒவ்வொன்றையும் நான் நான் என்று கூப்பாடு வைக்கிறான் பெருமான்.

நீ வேறு, நான் வேறு என்று துண்டுபடுத்தி ஆட வைக்கிறான்.

*ஏதும் இலாத எம்மை*
*பூட்டி வைத்தார்.*

கண்ணை வைத்து, காதை வைத்து, கை கால்களை வைத்து ஓர் உருப்படியாக்கி விட்டார். பிறகு நான் என்று தனிமைப்படவும் பண்ணி விட்டார்.

இவ்வளவும் செய்தது யார். 'கச்சி ஏகம்பர்'

இவ்வளவுதானா?

கூத்தாட்டுப் பாவை போல ஒட்டுப் போட்டு வைத்த எனக்கு மனசில் அன்பு ஊறும்படி செய்தார்.

அதற்காக மூர்த்தியாய் அவதாரம் எடுத்து ஒவ்வொரு ஊரிலும் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார்.

இதோபார் என்னை என்று இனம் காட்டி நிற்கிறார். அன்பு ஊறினால் சும்மா இருக்குமா மனம்.

மலர்களைப் பறிக்கின்றன கைகள். பெருமான் மேல் உச்சி முதல் உள்ளங்கால் வரை மலர்களைக் கொண்டு சொரிகின்றன அதே கைகள்.

*காட்டிவை தாம்தம்மை*
*யாம்கடிப் பூப்பெய்ய,*
*ஈட்டிவைத் தார்கச்சி*
*ஏகம்பர் ஏதும்*
*இலாதஎம் மைப்*
*பூட்வைத் தார்*

அதுமட்டுமா, நீதாண்டா நமக்கு ஏற்ற தோஸ்து என்று என் தோள் மேலேயே கைபோட்டார்.

எப்படி வேண்டுமானாலும் பாடு. நீ பாடப் பாட எமக்கு உச்சி குளிருகிறது என்றார்.

சும்மா முடியுமா பாட? அதற்குவேண்டிய அருளையும் ஆற்றலையும் அள்ளி அள்ளி எனக்கு வழங்கினார்.(பாட்டி வைத்தார்)

அவரை நினைந்து நினைந்து உருகுகிறேன். உருகி உருகிப் பரவுகிறேன்.

*இனிப்பாடலின் முழு உருவம்*

*காட்டிவைதாம் தம்மை*
*யாம்கடிப் பூப்பெய்ய,*
*காதல்வெள் ளம்*

*ஈட்டிவைத் தார்கச்சி*
*ஏகம்பர், ஏதும்*
*இலாதஎம் மைப்*
*பூட்டிவைத் தார்தமக்(கு)*
*ஆம்அன்பன் என்று,*
*பதிற்றுப்பத் தும்*
*பாட்டிவைத் தார்;பா-*
*வித்தொழு வாம்அவர்*
*பாதங்க ளே*

உத்சாகம் ஏறஏற கடைசி வரியால் அதைத் தாங்க முடிய வில்லை.

"பாட்டி வைத்தார் பரவித்தொழுவாம் அவர் பாதங்களே" என்பது டங்டங்கென்று தாளம் போட்டுக் கொண்டு,

*'பாட்டிவைத் தார்பர*
*வித்தொழு வாம்அவர்*
*பாதங்க ளே*

என சீருக்குச் சீர் குதித்துக் குதித்துத் தாவி விளை யாடுகிறது.

*கடிப்பூ - வாசனையோடு கூடிய மலர்கள். ஈட்டி வைத்தார் - பெருக்கிவிட்டார். கச்சி ஏகம்பர் - காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதராய்க் கொலு விருக்கம் இறைவர் பதிற்றுப்பத்து - நூறுபாடல்கள். நூறுபாடல்கள் கொண்டநூல் ஒன்றை பாட்டி வைத்தார் - பாடும்படி அருள்பாலித்தார். பாத்தொழுவாம் - போற்றி வணங்குவோம்.*

## 5

இனி, செல்வத்தைத் தெய்வமாக மதிக்கிறவர்கள் ஞானிகள்.

செல்வத்தின் அருமை பெருமையை அறிந்தவர்கள் அவர்கள்.

'அடடா' இந்தப் பணத்தைக் கொண்டு எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கலாம். அதன் மூலம் அத்தனை பேர் குடும்பங்களிலும் விளக்கேற்றிவைக்கலாமே என்று துடிக்கிறவர்கள் ஞானிகள். பண ஆற்றலால் கலைகளை வளர்க்கலாம், சுகாதாரத்தைப் பெருக்கலாம். கோயில்கள் கட்டலாம், நந்தவனங்கள் வைக்கலாம், ஏழை எளியவர் களுக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்று ஆசைப் படுகிறவர்கள் ஞானிகள்.

செல்வத்தைக் கொண்டு இந்த மண்ணுலகையே பொன்னுலகாக்கி விடலாமே என்று ஆசையோடு பார்க்கிற வர்கள் ஞானிகள்.

அப்படிப் பார்க்கிற ஞானிகளுக்கல்லவா செல்வத்திடம் நிறைந்திருக்கிற தெய்வாம்சம் இன்னதென்று தெரியும்.

செல்வத்தைத் திருமகள் என்றும் திருமகள் கடாட்சம் என்றும் அவர்களால் தான் மதிக்க முடியும்.

இப்படி மக்களின் நலனைச் செல்வத்தில் பார்க்காமல் தன்னலம் ஒன்றையே பணத்தில் பார்க்கிறவன் தரித்திரம்.

அவன் பணத்தை நிலைக் கண்ணாடியாக வைத்து அதில் தன் முகத்தையே பார்த்துப் பார்த்துக் களிப்பான்.

பழைய சோறு, பழந்துணி, அழுகல்காய், கனி, புளித்த பால், மோர் இவற்றை கூட ரூபாய் அணா பைசாகவாகவே அவன் பார்ப்பான்.

அப்படி ஒரு கூட்டம். பெருங்கூட்டம் அது.

எல்லாவற்றையும் விற்று விற்று பணத்தைக் கட்டுக் கட்டாகச் சேர்ப்பார்கள். பிறகு அடுக்குவார்கள்.

பூமியில் குழிதோண்டி நிலவறை கட்டுவார்கள். அதில் கொண்டு போய் நோட்டுக் கட்டுகளை அடுக்கிவைப்பார்கள்.

நிலவறையை மூடி விடுவார்கள். அதையும் அதனுள் கிடக்கும் நோட்டுக் கட்டுகளையுமே எண்ணி எண்ணி அவற்றுக்குக் காவல் புரிவார்கள்.

மனம் முழுவதும் நோட்டுக்களாகவே நிறைந்து விடும். பணத்தை நிலவறையில் போட்டுப் புதைத்துப் பூதம் போல் காவல் காக்கிறவன் தானே தரித்திரன்.

செல்வத்தின் மணமும் ருசியும் அவனுக்குத் தெரிந்திருந் தால் அதை மண்ணுக்குள் போட்டு மூடுவானா?

அப்படி மூடிப் பாதுகாக்கும் கயவர்களின் தரித்திரப் புத்தியைத் தான் ஞானிகள் வெறுக்கிறார்கள்.

இது மடத்தனம், மாயை, கயமை என்றெல்லாம் சாடு கிறார்கள்.

செல்வத்தைக் கொண்டு வீட்டை நாட்டை மங்கள மயமாக்கும் புண்ணியவான்களை ஞானிகள் மதிப்பார்கள். இனி, மண்ணுக்குள் போட்டு பணத்தை மூடி மறைக்கும் பேதைமையை விடக் கொடிய திமிர் என்னவென்றால் பணம் வரவர அதைக்கட்டி அணைத்து அப்படியே பாங்கியில் கொண்டு போய்ச் சேர்ப்பது.

சேர்த்துச் சேர்த்து கணக்கில் தொகையை ஏற்றுவது. அதைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்பது.

அவசியம் ஏற்பட்டால் ,கொடிய செயல்களுக்கு அந்தத் தொகையிலிருந்து எடுத்துச் செலவழிப்பது.

இதையும் விடப் பஞ்சமா பாதகம் ஒன்று உண்டென்றால் அது இதுதான்.

பணம்(வருவாய்) வரவர அதில் மஞ்சாடி அளவு கூட மற்றவர்களுக்கு வழங்கமாட்டான். உழைத்துக் கொண்டு வந்து சேர்க்கும் பணியாளர்களுக்குக் கூட உதவமாட்டான்.

வரவரக்கட்டுக் கட்டாகத் திரட்டுவான் அரிப்பான் பொறுக்குவான்.

திரண்டு வருகிற ஒவ்வொரு தொகைக்கும் வீடு, நிலம், தோப்பு என்று வாங்கி வாங்கிச் சொத்தாக குவிப்பான்.

இவற்றை நிர்வாகம் பண்ண முரடர்களையே பணியாளர் களாகப் போட்டுக் கொள்வான்.

அந்த அடியாட்கள் துணையுடன் கேடுகள் என்று என்னென்ன உண்டோ அவ்வளவையும் செய்வான்.

அருள்மயமான ஆனந்தமயமான் செல்வம் என்கிற தேவதையையே திருட்டுத் தனமும் கொடுமையும் நிறைந்த பிசாசாக மாற்றி விடுகிறான் பணவெறிபிடித்த தரித்திரன்.

இந்தத் தரித்திரப்புத்தியையே ஞானிகள் வெறுக்கிறார்கள். வெறுப்பதில் என்ன தவறு இருக்கிறது?

❄ ❄ ❄

இனி, நல்லார் என்றால் கற்றறிந்த மேதைகள். அதாவது சான்றோர்கள்.

சான்றோர்களிடம் வறுமை வந்து சேர்ந்து விட்டால் அது தாங்க முடியாத கொடுமை.

அதை விடக் கொடுமையானது மூடனிடம் இருக்கிற செல்வம் என்கிறார் குறளாசிரியர்.

*நல்லார்கண் பட்ட*
*வறுமையின் இன்னாதே;-*
*கல்லார்கண் பட்ட*
*திரு.*

*இன்னாது - கொடுமையானது. திரு - செல்வம். நல்லவனிடம் வந்த வறுமை அவனையும் அவன் குடும்பத்தையும் மட்டுமே வாட்டும். ஆனால் மூடனிடம் சேர்ந்த செல்வமோ மனித குலத்தையே வாட்டி வதைத்து விடும்.*

பஞ்சம், பசி, சோம்பல், களவு, கொலை, கற்பழிப்பு, பொய், பித்தலாட்டம் எல்லாவற்றுக்கும் காரணம் என்ன?

கொடியவனிடம் குவியும் செல்வந்தான்.

செல்வம் என்றால் எப்பொழுதும் சமுதாயத்தோடு உருண்டு புரண்டு விளையாடிக் கொண்டே இருக்க வேண்டும்.

போக்கற்ற சாக்கடை போல அங்கங்கே தேங்கி நின்று விடக் கூடாது.

செல்வத்தைச் செல்ல விடாமல் கட்டிப் போட்டுக் காவலில் வைக்கிறவன் கொடியவன்.

சமூக விரோதி என்றால் அவன்தான். அவனுடைய இழி நிலையைச் சுட்டிக் காட்டுவது தானே ஞானிகளின் அருட்பணி. தெய்வத்திருப்பணி என்றால் அதுதான்.

பட்டிணத்தார் போன்ற ஞானிகள் அந்தத் திருப் பணியையே செய்கிறார்கள்.

அவர்கள் பாடல் ஒவ்வொன்றும் கோயில், கோயிலில் குடியிருக்கும் மூர்த்தி, மூர்த்தியின் தரிசனம் கொடுக்கும் பேரருள்.

ஞானிகள் செல்வத்தை மதிக்கிறார்கள். தரித்திரத்தை வெறுக்கிறார்கள். தரித்திரனோ செல்வத்தை அவமானப் படுத்துகிறான். தரித்திரத்துக்குச் சூட தீபாராதனை பண்ணு கிறான்.

இதுபோலத்தான் இன்பநிலையும். அறம் பொருள் இன்பம் என்பதுதானே வரிசை.

இந்த வரிசையில் பொருளை அடுத்து நிற்கும் இன்பத்தின் நிலையும் பரிதாபந்தான்.

பொருளின் கதி தான் இன்பத்துக்கும். ஒரு பெண்ணும் ஆணும் ஒரு மனப்பட்டு சேர்ந்து அனுபவிக்கும் ஆனந் தத்தை விட இன்பம் வேறு ஒன்று உண்டா?

இந்த உலகத்தில் மட்டுமல்ல, பேரண்டம் முழுவதிலுமே இதற்கு நிகரான இன்பம், ஆனந்தம் வேறொன்றும் இல்லை.

அப்படியானால் கணவனைத் தெய்வமாக மதிக்க வேண்டும் மனைவி.

மனைவியையோ தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் பரம்பொருள் என்று மதிக்க வேண்டும் கணவன்.

கணவன் மனைவியரிடையே உண்மையில் அப்படி ஒரு மரியாதை இருக்குமானால் அணுவளவு கோளாறு கூட உலகில் உண்டாகாது.

ஒரு பெண் தன் கணவனைத் தவிர மற்ற எல்லா ஆடவர் களிடமும் சகோதரியாக அன்பு செலுத்த வேண்டும். தாயாக ஆதரவு தரவேண்டும்.

கணவனிடம் மட்டும் பெண்மை ஒளிர வேண்டும். மற்றவர்களிடமெல்லாம் தாய்மையே ஜொலிக்க வேண்டும்.

ஆடவனும் அப்படித்தான். தன் மனையாளைத் தவிர ஏனைய பெண்டிர் அத்தனை பேரும் தன் உடன் பிறந்த சகோதரிகள். பெற்றெடுத்த தாய்மார்கள் என்று பழக வேண்டும்.

இப்படி ஒரு தெளிவும் உறுதியும் இருந்தால் கோளாறு உண்டாகுமா?

ஆண்களும் பெணகளும் கள்ளம் கபடம் இல்லாமல் சிரித்து மகிழ்ந்து உல்லாசமாய் வாழவேண்டிய உலகம் ஒருவரை ஒருவர் பார்க்கப் பயப்படுகிறது. பேசப்பயப் படுகிறது. பழகப் பயப்படுகிறது.

காரணம் என்ன? பெரும்பாலான ஆண்களும் பெண் களும் பழகுகிற பழக்கத்தில் உறுதி குலைந்து தளர்ச்சிக்கு ஆளாகிவிடுகிறார்கள்.

அமிர்தமயமான உறவு நஞ்சாகிவிடுகிறது. காதற் பெண்டிர், காமக் கிழத்தியர், பரத்தையர், வரைவின் மகளிர் என்று பெண்களில் கூட்டம் கூட்டமாய்ப் பெருகி விடுகிறார் கள். ஆண்களிலோ மைனர், டம்பாச்சாரி, பொறுக்கி, கயவன், என்று பட்டாளம் பட்டாளமாய் அலைகிறார்கள்.

உலகில் உள்ள காவல் நிலையங்களில் பெரும் பாலானவை இவர்களுக்காகத்தான் இருக்கின்றன.

ஆன் பெண் உறவில் மரியாதையும், பக்தியும், நேர் மையும் முழுக்க முழுக்க இருந்தால் தெளிவு இருக்கும். உறுதி இருக்கும். அன்பு ஊறும், ஆனந்தம் பெருகும்.

அவை தேயத்தேய சமுதாயத்தில் தடுமாற்றம், எரிச்சல், பகைமை, கொடுமை எல்லாம் தொடர்கின்றன.

உலகில் ஆடவரும் பெண்டிரும் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள்.

பட்டினத்தார் போன்ற ஞானிகள் அவர்களை வெறுக்க வில்லை.

கூட்டத்தோடு கூட்டமாய் இருந்து கொண்டே நெறிமுறை கெட்டு இழி செயலில் ஈடுபடும் ஆடவர், பெண்டிரைத்தான் ஞானிகள் வெறுக்கிறார்கள்.

இன்னும் கொஞ்சம் ஊடுருவி நோக்கினால் அவர்கள் செய்யும் இழி செயலைத்தான் அதட்டிக் கண்டிக்கிறார்கள். இழி செயல் புரியும் கயவர்கள் மேல் கொண்ட கழிவிரக்கம் காரணமாக அவர்களைக் கூடவெறுக்கவில்லை, அவர்கள் செயலையே வெறுக்கிறார்கள் என்பது விளங்கும்.

அப்படியானால் ஆடவர்களை விடப் பெண்டிரை மட்டும் குறிவைத்து இவர்கள் ஏன் அருவருப்புக் காட்ட வேண்டும்?

இப்படி ஒரு கேள்வி எழலாம்.

சமுதாய நிலை, குலவிருத்தி என்பதெல்லாம் குழந்தை களை லட்சியமாக வைத்துத்தான் இருக்கின்றன.

மானிட வர்க்கத்தின் கதியே குழந்தைகளை வைத்துத் தான். குழந்தைகளோ முழுக்க முழுக்கத் தாயை நம்பியே வாழ்கின்றன வளர்கின்றன.

குழந்தைகளுக்கு தந்தையின் ஆதரவு ஒரளவுக்குத்தான் உச்சி முதல் உள்ளங்கால்வரை குழந்தைகளின் அத்தனை நிலைகளுக்கும் தாய்தான் முழுக்க முழுக்க ஆதாரம்.

ஆடவன் கெட்டால் அந்தக் கேடு அவனோடு சரி. பெண் கெட்டால் குழந்தைகள் அநாதைகளாகிவிடுவார்கள். குடும்பம் சின்னாபின்னமாகி விடும்.

அப்படியே போகப் போக மானிட வர்க்கம் முழுவதும் ஆதரவற்ற அநாதை ஆகிவிடும்.

உலகமே அநாதை ஆசிரமமாக மாறிவிட்டால் வேறு என்ன இருக்கிறது.

அப்படியொரு விபரீதம் நடக்கக் கூடாதே என்கிற வேகத்தில் இயற்கையானது மகிழ்ச்சியும் உல்லாசமும் நிறைந்த பெண்களின் உணர்ச்சியோடு உணர்ச்சியாக கூச்சத்தையும், நாணத்தையும், ஓர் அபூர்வமான பயத்தையும் சேர்த்து வைத்திருக்கிறது. மிக்க பொறுமையோடும் கவனத்தோடும் பொதிந்து சேர்த்து வைத்திருக்கிறது இயற்கை.

மானிடகுலம் முழுவதையுமே பெண்களிடம்தான் ஒப்படைத்திருக்கிறது.

இந்த அருமையையும் பெருமையையும் கண்ணாரக் கண்டவர்கள் ஞானிகள்.

பெண்களுடைய சிறு தவறும் பெரும் விளைவுகளை உண்டு பண்ணும் என்பதை உணர்ந்துதான் அவர்களை உயர்ந்தவர்களாக மதிக்கிறார்கள்.

மரியாதைக்குரிய பொருள் தடம்புரள்கிற பொழுது தானே எரிச்சல் வரும்.

பெண்களைக் குறிவைத்து ஞானிகள் கண்டிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் மேல் ஞானிகள் வைத்திருக்கும் மரியாதையும் நம்பிக்கையுமேதான்.

மற்றப்படி பெண்களை இகழ்ந்து பேச வேண்டும் என்கிற மூடத்தனம் ஞானிகளிடம் கிடையவே கிடையாது.

❖ ❖ ❖

இனி, பெண்களை மதித்தார்கள் என்றால் அவர்களுடைய உணர்ச்சிகளையும் பண்புகளையும் மதித்தார்கள் என்பதுதான் பொருள்.

ஒரு சின்னஞ் சிறிய பேதைப் பெண். அவளுடைய இதயத்தில் அன்பு எவ்வளவு திடமாய் ஊறுகிறது? அதில் தான் எவ்வளவு தூய்மை? எவ்வளவு தியாகம்? இப்படிப் பார்க் கிறார்கள் ஞானிகள்.

அவர்களை உருக்கி விடுகிறது பெண்ணின் தூய காதல். காதலைப் பேணிப் பாதுகாக்கும் பெண்களின் பொறை யுடைமை, தியாகம்,ஏக்கம், தவிப்பு எல்லாம் சேர்ந்து ஞானிகளைப் பரவசப்படுத்துகிறது.

பரவச உணர்ச்சி எப்படிப் பாடலாய் வருகிறது என்று பாருங்கள்.

காதல் வேகத்தில் ஒரு பெண் பேசுவதாக விஷயம் "தில்லை நடராஜப் பெருமானைக் காளை வாகனத்தில் வைத்து வீதி உலா நடத்துகிறார்களே, என் தெரு வழியாக, ஏன் வீட்டு வழியாக அந்த உலாவை நீங்கள் ஏன் நடத்தக் கூடாது."

"நடராஜப் பெருமானின் அருள் கொழிக்கும் திரு முகத்தையும் ஆனந்தச் சிரிப்பையும் பார்த்து நான் ஆறுதல் அடைவதில் உங்களுக்கு என்ன கேடு?"

நடராஜப் பெருமானைத்தான் நான் உற்ற துணை என்று நம்பி இருக்கிறேன். இது உங்களுக்குத் தெரியத்தானே செய்யும்? தெரிந்தும் ஏன் அநியாயம் செய்கிறீர்கள்.

*இனிப்பாடல்*

*ஆனே று போந்தால்*
*அழிவுண்டோ? அன்புடைய*
*நானேதான் வாழ்ந்திடினும்*
*நன்றன்றோ-வானோங்கு*
*வாமாண் பொழில்தில்லை.*
*மன்றைப் பொலிவித்த*
*கோமானை இத்தெருவே*
*கொண்டு.* (*ஆனே று .....*)

*ஆனேறு - காளை போந்தால் - பவனி வந்தால் இத்தெருவே கொண்டு போந்தால் - இந்த வழி நடத்திக் கொண்டு வந்தால்- அழிவு உண்டோ - என்ன கேடோ உங்களுக்கு?*

*வான் ஓங்கிவாம் - வானளாவி அதன் முகட்டையே அணைக்கப்பார்க்கும். பொழில் - சோலை.*

அற்புதமான பாடல்.

இனி, பதம்பார்த்து, பக்குவம் பார்த்து கிண்டி இறக்குவார்கள் அல்வாவை.

முறுகிவிடக்கூடாது. இறுகிவிடவும் கூடாது அதே நேரத்தில் அரைவேக்காடு குறைவேக்காடு என்று பச்சை வாடையும் அடிக்கக் கூடாது.

அப்படி ஒரு கணக்கில் - இளகி நெய் கக்குகிற நேரம் பார்த்து அல்வாவை இறக்குவார்கள்.

தமிழும் அப்படித்தான்.

பெண்ணின் தவிப்பை, ஏக்கத்தை, காதல் மயக்கத்தை இசையிலும் தாளத்திலும் பக்குவமாய் வைத்து உருவாக்கு கிறது. பாடலாய் எடுத்துக் கொடுக்கிறது தமிழ்.

பெண்ணின் இதயப் பாங்கை இப்படி அனுபவித்து ஆனந்தத்தில் எடுத்துச் சொல்லும் பட்டிணத்தாரை பெண் களின் விரோதி என்று சொல்லலாமா?

விபரம் தெரியாமல் பேசுகிற பேச்சு அது.

இதே போல இன்னொரு பக்தர் அவரும் பட்டிணத்தார் போன்ற ஞானச் சுடர்தான்.

அவரும் பெண்மையிலுள்ள தெய்வப் பொலிவைக் கண்டு மகிழ்ந்து சொல்கிறார்.

பேரண்டம் முழுவதையும் நெறிமுறைப்படுத்துகிறவன் இறைவன். அதற்காக நுட்பமான பல தத்துவங்களோடு (வானவர் சுற்றத்தோடு) ஊடாடித் திளைக்கிறவன் பெருமான்.

பிர்மாண்டமான நட்சத்திரக் கூட்டங்களின் (கதிர்வட்டம்) இயக்கங்களும் அவன் மயந்தான்.

பக்தர்கள் பரவிப்பாடும் பாடல் (நான்மறை)களின் முடிவும் அவன் தான்.

நமக்காகத் திருக்கழுக்குன்றத்தில் வந்து எழுந்தருளி நிற்கிறான் அவன்.

காளை வாகனத்தில் ஏறி வீதி உலா வருகிறான் அவன்.. என் வீட்டு முற்றத்தில் வந்து நிற்பானா?

அவன் வந்து நிற்கும் கோலத்தைக் கண்டு நான் பரவசப் பட்டால் அல்லவா என் பெண்மைக்கு வாழ்வு.

இப்படித்தவிக்கிறாள் பெண்

*பாடல் - கட்டளைக் கலித்துறை*

*பெற்றத்தி வேவரு*
*கோலமும், தானும்,என்*
*பெண்மைஉய் ய-;*
*முற்றத்தி லேவந்து*
*முன்நிற்கு மோ?முது*
*வானவர் தம்*
*சுற்றத்தி லே கதிர்*
*வட்டத்தி லே, தொல்லை*
*நான்மறை யின்*
*அற்றத்தி லே, கழுக்*
*குன்றத்தி லேநிற்கும்*
*அற்புத னே!*

ஞானிகள் என்றால் செல்வத்தை மதிப்பார்கள்.

பெண்களை மதிப்பார்கள், குடும்பத்தை மதிப்பார்கள், குழந்தைகள், ஆரோக்கியம், படிப்பு, பண்பாடு, வாழ்க்கை, எல்லாவற்றையும் மதிப்பார்கள்.

தெய்வத்தை மதிப்பது போலவே இவற்றையும் மதிப்பார்கள். எதுவானாலும் சரி அதில் உண்மை இருக்க வேண்டும்.

பொய்யென்றால் அவர்களுக்குப் பிடிக்காது. பக்தியில் கூட பொய் என்றால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் அதை.

பட்டிணத்தார் ஒரு பெரும் ஞானி. மாசற்ற மெய்ஞ்ஞானி.

இந்த உலகத்தின் மேலும், மக்கள் மேலும், வாழ்க்கையின் மேலும் அவர் கொண்ட தீராக் காதலை அவருடைய ஒவ்வொரு சொல்லும் காட்டுகின்றன.

ஒளிவு மறைவு இல்லாமல் நேருக்கு நேர் நின்றே காட்டுகின்றன.

அப்படியானால் அவர் ஏன் துறவு பூண்டார்? என்று கேட்கத் தோன்றும்.

வாழ்க்கையின் முதல் காட்சியில் உண்மையோடு வாழ்ந்து எல்லா நலன்களையும் துய்த்து அனுபவித்தார் பட்டினத்தார். உணர்ச்சியோடும் உண்மையோடும் அனுபவித்த தால் ஆனந்தம் பொங்கியது அவரிடம்.

அந்த ஆனந்தத்தை மற்றவர்கள் பெற வழிகாட்ட வேண்டாமா? அனுபவத்தை எடுத்துச் சொல்ல வேண்டாமா?

அதற்காகத் தான் கடைசிக் காட்சியை துறவறத்தில் வைத்துக் கொண்டார்.

நானோர் பரதேசி என்று தெம்மாங்கு பாடி. பண்டாரக் கோலத்தில் அலையும் பரதேசித் துறவறம் அல்ல பட்டிணத்தார் துறவறம்.

ஞான விளக்கைக் கையிலேந்தி உலகம் முழுவதற்கும் உய்யும் வழி காட்டும் வீரத்துறவறம் அது.

அதற்கு அவர் அருள் வாக்கே (பாடல்களே) அத்தாட்சி.

❋